# நமது கிராமம்

டீ.ஜேசுதாசன்



சென்னைவாழ் பொற்றைநகர் மக்கள் நலச்சங்கம்
10, நேருநகர், அரும்பாக்கம், சென்னை - 600106



# நமது கிராமம்



## ம. ஜேசுதாசன்


**வெளியீடு**

**சென்னைவாழ் பொற்பைநகர் மக்கள் நலச்சங்கம்**

10, நேருநகர், அரும்பாக்கம், சென்னை - 600106

போன் - 044-23635688

# நூல்குறிப்பு


நூல் பெயர் - **நமது கிராமம்**

வகை - வரலாறு

ஆசிரியர் - ம. ஜேசுதாசன்



முன்னாள் தலைவர், தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி
N-6, ஹார்மோனியல் ஹோம்ஸ்கேப்
2/137, மவுண்ட் பூந்தமல்லி சாலை,
காட்டுப்பாக்கம், சென்னை - 600056.
தொலைபேசி - 044-43856429, 9444408351



உரிமை - வெளியிடுவோருக்கு



பதிப்பு - முதல் பதிப்பு 2016

பக்கங்கள் -

நன்கொடை - ரூ.100/-

அச்சிட்டோர் -

வெளியீடு **சென்னைவாழ் பொற்பைநகர் மக்கள்நலச் சங்கம்**
10, நேருநகர், அரும்பாக்கம்,
சென்னை - 600106
தொலைபேசி - 044-23635688

தொடர்புக்கு - ம. ஜேசுதாசன், 9444408351
**V.R.A**. ஜெயராஜ், 9444151369
வி. எட்வின் காமராஜ், 9444059848
J.A. ரவிஷ்டர், 9994333483
D.தாசன், 9444216566
D.சிலுவைத்துரை, 9840160122
J.பீற்றர் ஜோசப், 9940095279

# பொருளடக்கம்


பக்கம்

ஆசிரியர் முன்னுரை 1

பதிப்புரை 3

வாழ்த்துரை 4

அணிந்துரை 5

1. பொத்தக்காலன்விளை கிராமத்தின் வரலாற்று சுருக்கம் 7

2. பொத்தக்காலன்விளை பெயர் வந்த வரலாறு 12

3. பொத்தக்காலன்விளை கிராமத்தின் வெளி உலகத் தொடர்பு 14

4.பொத்தக்காலன்விளையில் பணியாற்றிய குருக்கள் 16

5. பொத்தக்காலன்விளை கிராமத்தில் கல்வி மற்றும் ஆன்மீகப்

. பணியாற்றிய புனித அன்னம்மாள் சபை கன்னியர்கள் 23

6. திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் அருட்பணி.பபியான் ஜோசப்

அடிகளாரின் வரலாற்றுச் சுவடுகள். 25

7. பொத்தக்காலன்விளையில் புனித வின்சென்ட் தே பால் சபை 28

8. ஒரு கொடி மரத்தின் வரலாறு 30

9. பொத்தக்கலன்விளையின் உள்ளாட்சி நிர்வாகம் 34

10. பொத்தக்காலன்விளையின் கொழும்பு தொடர்பு 37

11. பொத்தக்காலன்விளையின் மருத்துவர்கள் 42

12. பொத்தக்காலன்விளையின் ஆசிரியைகள் 46

13. பொத்தக்காலன்விளையின் ஆசிரியர்கள் 51

14. பொத்தக்காலன்விளையின் அரசுப் பணியாளர்கள் 56

15. நிலமக்காரர் மரிய சவரிமுத்து நாடார் 62

16. பரஞ்சோதி முக்கந்தர் 66

17 .ஞானாதிக்கம் உபதேசியார் 70

18. Y. வியாக அந்தோணி கணக்க பிள்ளை 75

19. தாவீது அண்ணாவியார்

20. தந்தை சிலுவை அந்தோணி அடிகளார்

21. தந்தை லூர்து மணியும் புதிய ஆலயப் பணியும்

22. கல்வித் தந்தை பீற்றர் ராஜா

23. பொத்தக்காலன்விளையின் முதல் பட்டதாரி

24. பொத்தக்காலன்விளையின் சாதனையாளர்

25. பொத்தக்காலன்விளையிலிருந்து  ஒரு கலெக்டர்


26. பொத்தக்காலன்விளை கிராமத்தின் இன்றைய தொழிலதிபர்கள்

27. பொத்தக்காலன்விளை கிராமத்தில் தோன்றிய குருக்கள்

28. பொத்தக்காலன்விளை கிராமத்தில் தோன்றிய அருட்சகோதரிகள்

29. பொத்தக்காலன்விளை திருத்தலமான வரலாறு

# ஆசிரியர் முன்னுரை



2010-ஆம் ஆண்டு பொத்தக்காலன்விளை பங்கு தனது பவளவிழா ஜுபிலியை (75-வது ஆண்டு விழா) கொண்டாடியது. அதன் நினைவாக ஒரு மலர் வெளியிடப்பட்டது. அந்தமலரில் பொத்தக்காலன்விளை கிராமத்தின் வரலாறு பற்றியும் அதில் வாழ்ந்து சாதனைகள் படைத்த சாதனையாளர்கள் பற்றியும் கட்டுரைகள் இடம்பெற வேண்டும் என்று அன்றைய பங்கு குருவானவருக்கு ஒரு குறிப்பு எழுதி அனுப்பினேன். ஆனால் அதை பங்கு குருவானவரோ மலர் குழுவினரோ கண்டு கொள்ளவில்லை. எனக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அன்றே நான் ஒரு முடிவுக்கு வந்தேன். பொத்தக்காலன்விளை என்ற எனது சிற்றூரின் பெருமையை வெளி உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற அந்த முடிவை செயல்படுத்துவதற்கு வாய்ப்பை எதிர்பார்த்து காத்து இருந்தேன். அந்த வாய்ப்பும் வந்தது. புதிய பங்குக் குருவானவர் வடிவில். அருட்தந்தை ஜோசப் ரவிபாலன் பொறுப்பேற்றதும் அவரை சந்தித்து 'திருக்கல்யாணத்தாய்' இதழில் நமது ஊரைப் பற்றியும் ஊர்ப் பெரியவர்கள் பற்றியும் கட்டுரைகள் எழுதும் என்னுடைய விருப்பத்தை தெரிவித்தேன். அவரும் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்று தொடர்ச்சியாக எழுத உற்சாகப்படுத்தினார். ஆரம்பத்தில் நான்கு கட்டுரைகள்தான் எழுத நினைத்திருந்தேன். ஆனால் வாசகர்களின் வரவேற்பும், எதிர்பார்ப்பும் என்னைத் தொடர்ந்து எழுத வைத்தது. 18 கட்டுரைகள் எழுதினேன். இவற்றைப் படித்த "நாடார்முரசு" ஆசிரியர் அந்த இதழுக்கும் பொத்தக்காலன்விளை கிராமத்தின் வரலாறு பற்றி எழுதும்படி கேட்டுக் கொண்டார்.

'திருக்கல்யாணத்தாய்' இதழில் வெளியான தொடர் கட்டுரை நிறைவு பெற்றதும், இவற்றையெல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டால் நன்றாக இருக்கும் என்ற கருத்து பரவலாகப் பேசப்பட்டது. இந்த நிலையில் கடந்த ஆண்டு ஊர்த்திருவிழாவின் போது தம்பி காமராஜ் என்னை சந்தித்து இதே கருத்தை ஆழமாகப் பதிவு செய்தார். அதோடு இந்த புத்தகம் வெளியிடுவதற்கு ஆகின்ற செலவு முழுவதற்கும் தானே பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறினார். இது

என்னை சிந்திக்க வைத்ததோடு மற்றவர்களிடமும் இது தொடர்பாக கருத்துப் பரிமாற்றம் செய்யவும் தூண்டியது. நான் தொடர்பு கொண்ட அனைவரும் இந்தத் திட்டத்தை வரவேற்றார்கள். அதோடு இன்னொரு கருத்தையும் கூறினார்கள். அதாவது இந்தப் புத்தகத்தை 'சென்னைவாழ் பொற்பை நகர் மக்கள்நலச் சங்கம்' வெளியிடுவதாக இருக்க வேண்டும் என்பது. இந்தக் கருத்தை சங்கக் கூட்டத்தில் முன் வைத்த போது எல்லோரும் ஒரே மனதோடு ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து நடந்த கூட்டங்களில் மேலும் கருத்து பரிமாறப்பட்டு புத்தகம் எவ்வாறு அமைய வேண்டும், புதிய கட்டுரைகள் எவை இடம் பெற வேண்டும் போன்றவை தீர்மானிக்கப்பட்டன.

இந்த புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரைகள் பெரும்பாலானவை 'திருக்கல்யாணத்தாய்' மாத இதழில் வெளிவந்தவை. ஒரு கட்டுரை 'நாடார் முரசு' இதழில் வந்தது. என்னைப் பற்றிய கட்டுரை தவிர மற்ற கட்டுரைகள் எல்லாமே நான் எழுதியவை. அவற்றில் கூறப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் கருத்துக்கள் எல்லாவற்றிற்கும் நானே பொறுப்பு. இந்தப் புத்தகத்தில் பொத்தக்காலன்விளை கிராமத்தைப் பற்றிய முழு விபரமும் இருப்பதாக நான் கருதவில்லை. நேரில் கண்டு பங்கு பெற்ற சம்பவங்களையும், நிகழ்வுகளையும் மற்றும் காலம் காலமாக வாய்வழி வந்த வரலாற்றையும் எழுத்து வடிவில் கொண்டு வந்த முதல் முயற்சி இது என்றே கூறுவேன். முழு வரலாற்றையும் வெளிக்கொணர்வதற்கு மேலும் காலமும், முயற்சியும் தேவை. இதை பின்னால் வருகிற யாரேனும் எடுத்துக் கொண்டால் மகிழ்ச்சியடைவேன்.

இந்தக் கட்டுரைகள் எழுதுவதற்கு உதவியவர்கள் ஏராளம் பேர். முதியவர்கள் முதல் சிறியவர்கள் வரை, படித்தவர்கள் முதல் படிக்காதவர்கள் வரை, ஆசிரியர்கள், ஆசிரியைகள் என பலரை பேட்டி கண்டு தகவல் சேகரித்தேன். எல்லோருடைய பெயர்களையும் இங்கே குறிப்பிட வேண்டுமானால் இடம் கொள்ளாது. உதவிய எல்லா நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். புத்தகம் வெளிவர வேண்டும் என்ற கருத்தை தொடங்கி வைத்து அதற்கான செலவையும் ஏற்றுக் கொண்ட தம்பி காமராஜ்க்கு என்னுடைய சிறப்பு நன்றி. சென்னைவாழ் பொற்பைநகர் மக்கள் நலச் சங்கத்தின் பொறுப்பாளர்கள் திரு. V.R.A. ஜெயராஜ், திரு .D. தாசன், திரு. பீட்டர் ஜோசப், திரு. ரவிஷ்டர் மற்றும் திரு. ஜெயக்கொடி ஆகியோருக்கும் என்னுடைய நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

– ம. ஜேசுதாசன்

**திரு. V. எட்வின் வி.காமராஜ்,**
செயலாளர்,
சென்னை வாழ் பொற்பைநகர் மக்கள் நலச்சங்கம்.



## பதிப்புரை

நமது கிராமத்தைப் பற்றி அண்ணன் ஜேசுதாசன் அவர்களுடைய தொடர் கட்டுரை திருக்கல்யாணத்தாய் இதழில் வெளிவந்தபோது மகிழ்ச்சி அடைந்தவர்களில் நானும் ஒருவன். நமது கிராமத்தின் பழம் பெருமைகளைப் படிக்கும்போது பெருமையாக இருந்தது. நமது கிராம மக்களில் பலர் விரும்பிப் படித்து வந்த கட்டுரைத் தொடர் அது. அந்தத் தொடர் கட்டுரை நின்றபோது பலர் ஏமாற்றமடைந்தனர். அந்த அளவுக்கு மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அவை பழைய பேப்பர் கடைகளுக்குச் சென்று அழிந்துவிடக் கூடாது என்றும், நமது இல்லங்களில்வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் அவற்றைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தை வரவேற்றார்கள். அதோடு இன்னொரு கருத்தையும் கூறினார்கள். அதாவது, அந்தப் புத்தகத்தை சென்னைவாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கம் வெளியிட வேண்டும் என்ற கருத்தையும் கூறினார்கள். இந்த கருத்தை சங்கத்தில் வைத்த போது செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும் ஒருமனதாக வரவேற்று ஏற்றுக் கொண்டார்கள். அதோடு திருக்கல்யாணத் தாய் இதழில் வெளிவராத மேலும் பல கட்டுரைகளும் தகவல்களும் சேர்க்கப்பட்டு ஒரு முழு வரலாற்றுப் புத்தகமாக வெளிவருகிறது. பொத்தக்காலன்விளை கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் இந்தப் புத்தகத்தை படித்து தங்கள் இல்லத்தில் வைத்து பாதுகாக்க வேண்டுமென்பது எங்கள் நோக்கம். அதனால் இந்த புத்தகத்திற்கு விலை ஏதும் நிர்ணயிக்கவில்லை. எல்லா இல்லங்களுக்கும் இலவசமாகக் கொடுக்கப்படும். மேலும் கூடுதல் பிரதி வேண்டுவோர் ஒரு பிரதிக்கு ரூ.100/- நன்கொடை கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இந்தப் புத்தகம் சம்பந்தப்பட்ட எல்லா உரிமையும் சங்கத்திற்கே சேரும். இந்தப் புத்தகத்தில் காணப்படும் கட்டுரைகளையோ தகவல்களையோ தங்களுடைய பிரசுரங்களில் பிரசுரிக்க விரும்புவோர் சங்கத்தின் முன்அனுமதி பெற வேண்டும். பொத்தக்காலன்விளை கிராமத்தில் பிறந்து வாழ்ந்து மரித்த அனைத்து முன்னோர்க்கும் இந்த புத்தகத்தை அர்ப்பணிக்கிறேன்.

வாழ்த்துக்களுடன்...
எட்வின் வி. காமராஜ்

**Dr.R.Joseph Ravi Balan,** D.Th.,M.A.,B.Ed.,
Parish Priest & Correspondent of R.C.Schools



**The Shrine of Thirukalyana Matha**
Pothakalanvillai - 628702
Satankulam Taluk,Tuticorin District
Tamilnadu,India
Tel : 04639 - 261230, Mob : 9444684799
Email : jravibalan@hotmail.com

# வாழ்த்துரை



**அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய திரு. ஜேசுதாசன் அவர்களுக்கு**

சென்னை வாழ் பொற்பை நகர் நலச் சங்கம் கடந்த எட்டு ஆண்டுகளாக மிக அற்புதமான முறையில் செயல்படுவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். சங்கத்தின் உறுப்பினர்கள் யாவரும் தாய் மண்ணின் மீது கொண்டுள்ள மிகுந்த பற்றின் காரணமாக ஒரே குடும்ப உணர்வுடன், எடுத்துக்காட்டான ஒற்றுமையுடன் செயலாற்றி வருகிறீர்கள் என்பதை மற்றவர்கள் சொல்லி நான் தெரிந்து கொண்டேன் என்றில்லை. சென்ற ஆண்டு நான் நம் மக்களைச் சந்திக்க சென்னைக்கு வந்து, அங்கே ஏறக்குறைய பத்து நாட்கள் தங்கியிருந்த போது, ஒன்றுபட்டு, ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும், உங்கள் சங்க உறுப்பினர்கள் நடந்து கொண்டதை நானே நேரடியாகப் பார்த்து மகிழ்ந்தேன். இந்த சங்கத்திற்கு சிறப்பான, பொறுப்புள்ள, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தலைமை இருப்பது குறித்து நம் திருக்கல்யாண மாதா மூலம் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

உங்கள் சங்கத்தின் சார்பாக, தலைவராகிய நீங்கள் முன் நின்று நூல் ஒன்றை உருவாக்கியுள்ளீர்கள். உங்களுக்கு என் அன்பார்ந்த வாழ்த்துக்களும், பாராட்டுக்களும், நம் திருத்தலப் பங்காகிய பொத்தக்காலன்விளையில் பிறந்து, தங்களின் அறிவாற்றல் மற்றும் தனித்திறமையை பயன்படுத்தி, தங்களின் பிறந்த மண்ணுக்கு பெருமையைத் தேடி தந்துள்ளவர்களின் எண்ணிக்கை ஏராளம் என்று சொன்னால் அது மிகையாகாது. நீதி, நேர்மையுடன் வாழ்ந்து, நியாயமான முறையில் சாதனைகளைப் படைத்து வரலாறு நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். அந்த வகையில் நீங்கள் எழுதியுள்ள நூல் ஓர் அருமையான வரலாற்றுப் பதிவேடு.

1935 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நம் பங்கு பல ஆண்டுகளாக ஒரு சாதாரணமானப் பங்காகத் தான் இருந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் ஒரு மறைமாவட்டத் திருத்தலமாக உருவெடுத்து, நம் மறைமாவட்டத்து ஆயரின் சிறப்பு அங்கீகாரத்தைப் பெற்று, இன்று வீர நடை போட்டுக் கொண்டிருக்கிறது. இது ஒரு பங்குத் தந்தையின் சாதனையா? அல்லது ஒரு தனிக்குடும்பத்தின் சாதனையா? அல்லது ஒரு தனி மனிதனின் சாதனையா? இல்லை, நிச்சயமாக இல்லை. இது கடவுளின் சாதனை!!! ஒட்டுமொத்த பங்கு மக்களின் சாதனை!!! இந்த உண்மை நீங்கள் வரைந்துள்ள நூலில் மிளிர்ந்து கொண்டிருக்கிறது என்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் வெளியிடும் நூல் நம் ஊரின் புகழை, தனித்தன்மையை மற்றும் பெருமையை , தொடர்ந்து எடுத்துரைக்கட்டும்! இந்த நூலை வாசிக்கிறவர்கள் புதிய வரலாற்றினைப் படைத்திட வீறுகொண்டு எழுந்து செயல்படட்டும்! மீண்டும் ஒருமுறை உங்கள் யாவருக்கும், மிகக் குறிப்பாக, சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கத்தினருக்கு, என் இனிய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் வழங்கி மகிழ்கிறேன்.

அன்பும், ஆசீரும்!

# அணிந்துரை



அன்பிற்குரியவர்களே!

"நமது கிராமம்" என்ற தலைப்பில் நமது ஊர் பொத்தக்காலன்விளையைப் பற்றிய ஆராய்ச்சி, சிறப்பு மற்றும் அபரீவிதமான வளர்ச்சியைப் பற்றியும் நம் ஊர் மக்களின் அன்பைப் பற்றியும், நம் ஊரின் பாதுகாவலியாம் "அன்னை திருக்கல்யாண மாதா"வின் மகிமையையும், சிறப்புகளையும், ஆசீர்வாதங்களையும், அறிந்து கொள்ளவும், வெளியூர்களில் தொழில் செய்தும், வேலை செய்தும் வாழுகின்ற நம் ஊர் மக்களின் வளர்ச்சி பற்றியும் நாம் அறிந்திராத அரிய, பெரிய காரியங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி நமக்காக "நமது கிராமம்" என்ற பெயரில் புத்தக வடிவில் வெளியிட்டுள்ள ஆசிரியரும், நமது சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கத்தின் தலைவருமான, திரு M. ஜேசுதாசன் அவர்களையும், இப்புத்தகத்தை வெளியிட பெரிதும் உதவிய நமது சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கத்தின் செயலாளர் திரு. V. எட்வின் காமராஜ் அவர்களையும், "நமது கிராமம்" உருவாக உதவிய அனைத்து நல் உள்ளங்களையும் மனதார பாராட்டுவோம்.

நம்முடைய அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றுமாகும். நம்முடைய வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது நான்காவது அடிப்படையான பாராட்டு ஆகும். நாம் பிறருக்குக் கொடுக்க கூடிய சிறந்த கொடை பாராட்டு. நாம் ஒருவர், ஒருவரை மனதாரப் பாராட்டும் போது அதனை அவர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். பாராட்டு என்பது வார்த்தை வடிவில் வசந்தம் என்கிறார் அறிஞர் ஒருவர். பிறரின் குறைகளைப் பார்க்காமல் நிறைகளைப் பாராட்ட முன் வர வேண்டும். மற்றவர்களை வாழும் போது வாழ்த்துவோம். அப்படிப்பட்ட பாராட்டு மற்றவர்களை மகிழ்ச்சியடைய செய்வதோடு நம்மையும் மகிழச் செய்கிறது. நாம் பிறரை உண்மையாக பாராட்டும் போது அது அவர்கள் வாழ்வை மாற்றுகின்ற சக்தியாக விளங்குகின்றது. பாராட்டு என்பது ஒரு சிறந்த மந்திரம். அது நம் வாழ்வில் மாற்றத்தையும் வெற்றியையும் எளிதாகப் பெற்றுத் தரும். நாம் ஒருவர் ஒருவரை மனதாரப் பாராட்டி பாராட்டு பெறுவோம்.

அவ்வழியில் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் தான் நமது சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கமாகும். அதன் அடிப்படையில் சென்னையில் வசிக்கின்ற நமது கிராம மக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒற்றுமையோடு வாழ வேண்டும். ஒருவருக்கொருவர் நாம் பகிர்ந்து வாழவும், அனைவரும் முன்னேறவும், நமது ஊரின் பெருமைகளை இந்த உலகம் அறியும் வண்ணம், அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படவும், நம் அன்புத்தாய் அன்னை திருக்கல்யாண மாதாவின் மகிமைகளையும், தாயின் வழியாக நாம் பெற்றுக் கொண்ட அற்புதங்களையும், அதிசயங்களையும், ஆசீர்வாதங்களையும் இந்த உலகம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 9ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. சென்னையில் வாழ்ந்து

வருகின்ற நமது கிராம மக்கள் அனைவரும் திரு.M. ஜேசுதாசன் தலைமையில் முதன் முதலாக ஒன்றுகூடி நமக்கு ஒரு சங்கம் அமைக்க முடிவு செய்தோம். சென்னையில் வசிக்கின்ற நமது கிராம மக்கள் ஆண், பெண் அனைவரையும் தேடி அவர்கள் வசிக்கின்ற இடத்திற்குச் சென்று, அனைவரையும் ஒருங்கிணைத்து ஆரம்பிக்கப்பட்டது தான் நமது சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் சங்கம். ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இந்நாள் வரை ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அன்றைய நாளில் நமது கிராம மக்கள் சென்னையில் தனித்தனியாக வசிப்பவர்கள் அனைவரும் ஒன்று கூடுகிறோம். சங்க வளர்ச்சிக்காகவும், நம் ஊர் பெருமைகளையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு கலந்து ஆலோசனை செய்வதும், கருத்துக்களை பகிர்ந்து கொள்வதும், நம் உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்வதும் நமக்கு மகிழ்ச்சி தருகின்றது. மேலும், தொழில், கல்வி, உறவு, நாட்டு நடப்பு, நம் கிராம வளர்ச்சி போன்ற எல்லா காரியங்களையும் பகிர்ந்து கொள்வதும், ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வதும், அனைவரும் நட்புறவு கொண்டு வாழ நம் சென்னை வாழ் பொற்பை நலச் சங்கம் மூலதனமாக அமைந்துள்ளது என்பதை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் வருடத்தில் ஒரு நாள் இன்ப சுற்றுலா ஏற்பாடு செய்து செல்வது நம் உள்ளத்திற்கும், உறவுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. வருடத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துமஸ் விழா, புத்தாண்டு விழா மற்றும் சங்க ஆண்டு விழா என முப்பெரும் விழாவைக் கொண்டாடுகிறோம். அன்றைய நாள் முழுவதும் சென்னையில் வாழும் நமது கிராம மக்கள் அனைவரும் ஒன்றுகூடி, நம் உறவுகளை சந்தித்து மகிழ்வதும், அனைவரும் பகிர்ந்து உண்பதும் நமக்கு மிகுந்த உற்சாகத்தையும், உத்வேகத்தையும் சங்கம் நமக்கு அளிக்கின்றது. அன்றைய நாளில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம், நிகழ்ச்சிகளும், காலாண்டர் பரிசுப் பொருட்கள் என அனைத்து நிகழ்ச்சிகளும் பசுமரத்தாணி போல நம் உள்ளத்தில் பதிய வைக்கிறது. தொழில் செய்ய கடனுதவி, ஏலச் சீட்டு மூலம் நம் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதுடன், சங்கம் வளர்ச்சி அடையவும் ஏதுவாக உள்ளது. சங்கம் வளர்ந்து, இன்று நம் சங்கம் செயல்பட அலுவலகம் திறக்கப்பட்டு, சங்கத்தை நாடி வருபவர்களுக்கு அது புகலிடமாக அமைந்துள்ளது.

ஆக மொத்தத்தில், நம் சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கம் நமது கிராமத்திற்காகவும், நம் கிராம மக்கள் அனைவரின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காகவும், நமது அன்புத்தாய் திருக்கல்யாண மாதாவின் புகழை உலகம் முழுவதும் பரப்பவும் செயல்பட்டு வருகின்றது. நமது சங்கத்தை உள்ளடக்கிய நமது கிராமம் என்றென்றும் வளர்ந்து விளங்கவும், மக்கள் அனைவரும் சுபிட்சமாகவும், மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் வாழவும், செய்யும் தொழில் வளரவும், பணி புரியும் இடத்தில் அமைதியும், என்றும் நல்ல உடல், உள்ள சுகத்தோடு வாழவும், நம் தாயாம் திருக்கல்யாண மாதா வழியாக இறைவன் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

**இப்படிக்கு**

V.R.A. **ஜெயராஜ்** (துணைத்தலைவர்)

சென்னைவாழ் பொற்பைநகர் மக்கள்நலச் சங்கம்

# பொத்தக்காலன்விளை கிராமத்தின் வரலாற்றுச் சுருக்கம்

சாத்தான்குளத்திற்கு கிழக்கே முதலூர் அருகில் 7வது கிலோ மீட்டரில் உள்ளது பொத்தக்காலன்விளை கிராமம். இந்த கிராமத்தில் சுமார் 900 வீடுகள் உள்ளன. கிராமத்தில் வசிக்கின்ற அனைவரும் நாடார் இனத்தைச் சேர்ந்த கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். இங்கு எழுந்தருளியுள்ள திருக்கல்யாண மாதா ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. மாதத்தின் முதல் சனி அன்று இந்த ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடக்கிறது. இந்த சிறப்பு பிரார்த்தனையில் தொடர்ந்து பங்கெடுத்து பக்தியுடன் அன்னை மரியாளை வேண்டினால் உடனடியாக திருமணம் நடக்கும் என்றும், குழந்தை இல்லாத தம்பதியருக்கு குழந்தை பேறு கிடைக்கும் என்றும் மக்கள் நம்புகிறார்கள். இதனால் முதல் சனிக்கிழமை அன்று நடக்கும் பிரார்த்தனையில் கலந்து கொள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும், கேரளாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தருகிறார்கள். இந்த கிராமத்தின் வரலாறு மிகவும் சுவாரசியமானது. இதோ அந்த வரலாறை படியுங்கள்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது ஆங்கிலிக்கன் சபையை சேர்ந்த கிறிஸ்தவ மிஷனரிகள் தென் தமிழ்நாட்டிற்கு வந்து நாடார் சமுதாயத்தை குறிவைத்து தங்கள் மறைபணியை ஆற்றி வந்தார்கள். அதன் பலனாக ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், சாத்தான்குளம் மற்றும் நாங்குநேரி பகுதிகளைச் சேர்ந்த நாடார்கள் பலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார்கள் . சில இடங்களில் கிராமம் முழுவதுமே கிறிஸ்தவ மதத்தைத் தழுவியது. அவற்றில் சாத்தான்குளம் அருகில் உள்ள முதலூரும் ஒன்று. அதே சமயம் ஏற்கெனவே கத்தோலிக்க கிறிஸ்தவ சபை பரவி இருந்த கடற்கரை கிராமங்களில் இருந்து அந்த சபையின் கோட்பாடுகளை உள்நாட்டில் நாடார் சமூகத்தினரிடையே பரப்பும் முயற்சியும் நடந்து கொண்டிருந்தது.அதன் தாக்கமாக முதலூர் கிராமத்திலிருந்து ஐந்து, ஆறு குடும்பங்கள் வெளியேறி அருகிலிருந்த பனங்காட்டில் ஒரு புதுக்குடித்தனத்தை அமைத்தார்கள். அவர்களின் வழிகாட்டியாக போதகர் ஹெலன் என்பவர் திகழ்ந்தார். அதனால் அந்தப் புதுக்குடித்தனத்திற்கு போதகர் ஹெலன்விளை எனப் பெயரிட்டார்கள். அவர்கள் வணங்கிய இயேசு கிறிஸ்துவின் தாயான அன்னை மரியாளுக்கு அங்கே பனை ஓலையால் ஆன ஒரு

குடிசைக் கோவிலையும் கட்டினார்கள். ஊரின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ளவும், ஊரில் நடக்கும் குற்றச் செயல்களை பேசித் தீர்க்கவும் முக்கந்தர் என்ற ஒருவரை நியமித்தார்கள். கோவில் வழிபாட்டை நடத்திச் செல்ல உபதேசியார் என்ற ஒருவரையும் நியமித்தார்கள். இந்த இருவருடைய மேற்பார்வையில் கிராமம் பல வகையிலும் முன்னேறியது. கத்தோலிக்க கிறிஸ்தவ மத கோட்பாடுகளை சொல்லித் தரவும் மக்களை வழி நடத்தவும் அவ்வப்போது பக்கத்து ஊர்களிலிருந்து மத போதகர்கள் வந்து போய் இருந்தார்கள். போதகர் ஹெலன்விளை என்ற பெயர் காலப்போக்கில் உருமாறி பொத்தக்காலன்விளை என்றாகிவிட்டது.

முக்கந்தர் - உபதேசியார் என்ற இரட்டையருடைய நிர்வாகத்தில் ஊரில் அமைதி நிலவியது. தொழில் பெருகியது. ஊரைச் சுற்றி ஆயிரக்கணக்கான பனை மரங்கள் இருந்தன. இந்த பனைமரங்களைப் பக்குவப்படுத்தி பதனீர் எடுத்து அதன் மூலம் கருப்பட்டியும், கற்கண்டும் பெருமளவில் உற்பத்தியாயின. இதனால் பக்கத்து ஊர்களிலிருந்தும் மக்கள் இங்கு வந்து குடியேற ஆரம்பித்தார்கள். ஊர் பெரிதானது. தேவைகளும் பெருகின. ஊரில் இருந்த மாதாவின் ஓலைக் குடிசை ஆலயத்தை எடுத்துவிட்டு புதியதாக ஒரு ஆலயத்தைக் கட்ட தீர்மானித்தனர். அதற்கு முன்னோடியாக ஊரிலிருந்த வசதி படைத்த நிலமக்காரர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்ட தானமாகக் கொடுக்க முன் வந்தார்கள். நிலமக்காரர் கொடுத்த நிலத்தில் 1850ம் ஆண்டு வாக்கில் சுமார் 300 பேர் அமரக்கூடிய அளவில் ஒரு புது ஆலயத்தைக் கட்டினார்கள். அந்த ஆலயம் கட்டுவதற்கு வெளியார் யாரிடமிருந்தும் நன்கொடை பெறவில்லை. ஊர் மக்களுடைய முழு பங்களிப்பாலும், உடல் உழைப்பாலும் உருவானது அந்தக் கோவில்.

மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த இந்த மக்களின் பார்வையில் படிப்படியாக மாற்றம் தோன்றியது. கல்வியின் அவசியத்தை உணர ஆரம்பித்தார்கள். பனைத்தொழிலை மட்டும் நம்பியிராமல் வியாபாரத்திலும் கால் பதிக்க ஆரம்பித்தார்கள். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல இளைஞர்கள் கடல் கடந்து இலங்கையிலுள்ள கொழும்பு நகருக்கு சென்று பெரும் செல்வம் சேர்த்தார்கள். இந்த நிலை 20-ஆம் நூற்றாண்டு முழுவதும் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் பொத்தக்காலன்விளை கிராமத்தில் பெரும்பாலான ஆண்கள் கொழும்பு நகரில் வியாபாரம் செய்யும் நிலை இருந்தது. இது 1980 வரை நீடித்தது. இவ்விதம் கொழும்பு சென்று வியாபாரம் மூலம் செல்வம் சேர்த்தவர்களில் குறிப்பிடத்

தக்கவர்கள் திரு. அன்னகுருஸ் நாடார் சகோதரர்கள், ஞானபிரகாசம் நாடார் சகோதரர்கள், சந்தனசிலுவை நாடார் சகோதரர்கள், கங்காணியார் என்ற மிக்கேல் நாடார், சூசை நாதன் மற்றும் ஐயாக்குட்டி நாடார் அவர்கள்.

1926 ஆம் ஆண்டு முதன்முதலாக ஆரம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. 1930 ஆம் ஆண்டு புனித அன்னம்மாள் கன்னியர் மடத்தின் இல்லம் ஒன்று நிறுவப்பட்டது. அவர்களுடைய முயற்சியால் பெண்களுக்கென தனியாக 1932 ஆம் ஆண்டு இன்னொரு ஆரம்பப் பள்ளிக்கூடம் துவங்கப்பட்டது. இவற்றால் பெண்கள் கல்விக்கு ஒரு பெரும் உந்துதல் கிடைத்தது. கிராமத்தில் உள்ள அனைத்து சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க ஆரம்பித்தார்கள். கிராமத்து ஆரம்பப் பள்ளியில் 5-ஆம் வகுப்பு முடித்தும் மாணவ, மாணவியர் அருகில் உள்ள சாத்தான்குளத்திற்கு நடந்து சென்று அங்கு இருந்த நடுநிலைப் பள்ளியில் 6,7 மற்றும் 8- ஆம் வகுப்பு படித்தார்கள்.

அந்த காலக்கட்டத்தில் 8-ம் வகுப்பு தேர்வு பொதுத் தேர்வாக இருந்தது. 8-வது வகுப்பு தேர்வு முடிந்ததும் E.S.L.C என்ற சர்டிபிக்கட் கொடுப்பார்கள். அதைத் தொடர்ந்து 2 ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்றால் ஹையர் கிரேடு என்ற ஆசிரியப் பணியை செய்யலாம். அவ்விதம் E.S.L.C முடித்த பெண்களெல்லாம் அடைக்கலாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் தரங்கம்பாடி போன்ற ஊர்களில் தாங்கள் நடத்தி வந்த ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கு அனுப்பி ஆசிரியைகளை உருவாக்கினார்கள். அந்த காலத்தில் இவ்விதம் கிராமத்தில் பெண்கள் பலர் ஆசிரியைகளாகத் தேர்ச்சி பெற்று பொத்தக்காலன்விளை கிராமத்தில் மாத்திரம் அன்றி மற்ற கிராமங்களிலும் கல்வி சேவை ஆற்றினார்கள். இதனால் கல்வி கற்காத பெண்களே அந்த கிராமத்தில் இல்லை என்ற நிலை உருவானது. 1932-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடம் 1952- ஆம் ஆண்டு நடுநிலைப் பள்ளிக்கூடமாகவும், 1986- ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

கிராமத்தின் மக்கள் தொகை பெருகியது. வசதிகளும் பெருகின. பனைத் தொழிலும் படிப்படியாக மறைந்து வியாபாரம் பிரதானத் தொழிலாக மாறியது. புதிதாக ஒரு ஆலயம் எழுப்ப வேண்டுமென்று குரல் மேலாங்கியது. அதன் விளைவாக 1945-ஆம் ஆண்டு மாதாவின் புதிய ஆலயத்திற்கு அடித்தளம் போடப்பபட்டது. ஏறத்தாழ 25 ஆண்டுகள் புதிய ஆலயப் பணி நடந்து இறுதியாக 1971-ஆம் ஆண்டு புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு வழிபாட்டுக்காக திறந்து

வைக்கப்பட்டது. சுமார் ஆயிரம் பேர் அமரக்கூடிய இந்த ஆலயம் கட்டுவதற்கு வெளி ஆட்களோ, திருச்சபை சம்பந்தப்பட்ட எந்த நிறுவனமோ நன்கொடை கொடுக்கவில்லை. முழுக்க முழுக்க ஊர் மக்களுடைய நன்கொடையாலும், உடல் உழைப்பாலும் உருவானது. சிறுவர்கள், பெண்களும் உழைத்தார்கள். ஆலயத்தின் உயரத்திற்கு சமமாக 46 அடி உயரமும், ஆறு சக்கரமும் உள்ள ஒரு தேர் உருவானது. பின்னர் 1987- ஆம் ஆண்டு பழையத் தேர் உடைக்கப்பட்டு, புதிதாக அதே அளவு உயரம் உள்ள முழுவதும் தேக்கு மரத்தால் ஆன புதிய தேர்ச் சப்பரம் கட்டப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 14- ஆம் தேதி முதல் 23- ஆம் தேதி வரை பத்து நாட்கள் மாதாவின் திருவிழா கொண்டாடப்படுகிறது. அந்த விழாவில் மாதாவின் திருவுருவம், ஜோடிக்கப்பட்ட தேர் சப்பரத்தில் ஏற்றப்பட்டு, தேர் வீதிகளில் பவனி வருவது மிகச் சிறப்பு அம்சம். இந்த தேர் சப்பரப் பவனியில் கிறிஸ்தவர் அல்லாத பிற மதத்தினரும் கலந்து கொண்டு தங்களுடைய நேர்ச்சைக் கடனை செலுத்துவது வாடிக்கை.

பொத்தக்காலன்விளை ஒரு சிறிய கிராமமாக இருந்தாலும் அங்கு பிறந்து சாதனைகள் படைத்த பிரபலங்கள் பலர் உள்ளனர். பேராசிரியர் ஜேசுதுரை அவர்கள் அந்த கிராமத்தின் முதல் பட்டதாரி ஆவார். 1955-ல் பட்டப்படிப்பை முடித்த அவர், பின்னால் முதுகலை பட்டப்படிப்பையும் முடித்து பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியிலும் பின்னால் சென்னை வைஷ்ணவா கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். அவருடைய துணைவியார் திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தின் முதல் நீதிபதி என்ற கவுரவத்தைப் பெற்றார். இந்திய ரிசர்வ் பேங்க்-ல் பெரிய பொறுப்பு ஏற்று பின்னர் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் சேர்மனாக பொறுப்பு ஏற்று சரித்திரம் படைத்த இந்த கட்டுரை ஆசிரியரும் இந்த ஊரில் பிறந்து வளர்ந்தவர்கள்தான். அவருடைய முயற்சியாலும், சாதுரியமான அணுகுமுறையாலும்தான் இன்று அந்த வங்கி நிர்வாகம் நாடார் சமுதாயத்தினரிடம் தொடர்ந்து நடந்து வருகிறது. 2008- ஆம் ஆண்டு நடந்த ஐ.ஏ.எஸ் தேர்வில் வெற்றி பெற்றவர்களில் ஒருவரான ஜரின் சிந்தியா என்ற பெண்மணி பொத்தக்காலன்விளையை சேர்ந்த திரு. பீற்றர் ஜோசப் அவருடைய மகளாவார். இவர் இப்போது மத்திய பிரதேச மாநிலம் பெர்காம்பூர் மாவட்டத்தின் கலெக்டராக பணியாற்றுகிறார். இவர்களைத் தவிர மேலும் பலர் தொழில் அதிபர்களாகவும், பெரும் வணிகர்களாகவும் உழைத்து முன்னேறியுள்ளனர். திரு. V.காமராஜ் சென்னையில் எஞ்சின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் நடத்தி பெரிய தொழில் அதிபராகவும் பொதுக் காரியங்களுக்கு தாராளமாக உதவும் உபகாரியாகவும் திகழ்கிறார். திரு. D.தாசன்

சென்னை கவரப்பேட்டையில் இரும்பு மற்றும் கட்டிட பொருட்களின் மொத்த வியாபாரியாக இருக்கிறார். திரு. தொம்மை அந்தோணி கோடம்பாக்கத்தில் சூப்பர் மார்க்கெட் நடத்துகிறார். திரு. தாமஸ் இரும்பு பொருட்களில் மொத்த வியாபாரமும் , திரு. தா.சேவியர் அம்பத்தூர் தொழில்பேட்டையில் பிளாஸ்டிக் பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலையும் நடத்தி வருகிறார்கள். திரு. ஜேசுதுரை தாம்பரம் பகுதியிலும், திரு. ரவிஷ்டர் கும்மிடிப் பூண்டியிலும் காய்கறி மொத்த வியாபாரத்தில் கொடிக் கட்டிப் பறக்கிறார்கள். திரு.Y.V.அவர்கள்குமாரர் V.R.A. ஜெயராஜ் அரசுப் பொதுப் பணித்துறை காண்ட்ரக்ட்டுகள் எடுத்து பல ஆண்டுகளாக பெயரும், புகழும் சேர்த்துள்ளார். இன்னும் பலர் பொள்ளாச்சி, ஒட்டன்சத்திரம், வெள்ளக்கோவில் போன்ற இடங்களில் பல ஆண்டுகளாக வியாபாரம் செய்து பெயரோடும், புகழோடும் இருக்கின்றார்கள். படித்து பட்டம் பெற்று அரசு துறைகளிலும், தனியார் துறைகளிலும் உயர்ந்த பதவி வகித்து ஓய்வு பெற்றவர்கள் பலர் உள்ளனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு.பீற்றர் ஜோசப், திருமதி. மேரி சரோஜா, திரு. ஸ்டீபன்ராஜ், திருமதி. லூசியா மேரி மற்றும் இருதய தாசன் போன்றோரைக் குறிப்பிடலாம். திரு.பீற்றர் ஜோசப் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் சார் செயலாளராகவும், அவரது துணைவியார் திருமதி. மேரி சரோஜா அவர்கள் மாவட்ட கல்வி அதிகாரியாகவும் பணியாற்றி இன்று ஓய்வில் உள்ளனர். திரு. ஸ்டீபன் ராஜ் மாவட்ட வணிகவரி அதிகாரியாகவும், அவரது துணைவியார் திருமதி. லூசியா மேரி தமிழ்நாடு அரசு துணைச் செயலாளராகவும், திரு. இருதயதாசன் பெடரல் வங்கியில் மேலாளராகவும் திறம்பட பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளனர். திருமதி. எட்வின் நிர்மலா கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் நர்சிங் கல்லூரியின் முதல்வராக பணியாற்றி வருகிறார். இந்த கிராமத்திலிருந்து சென்னை வந்து தொழில் செய்வோர் மற்றும் பணியில் இருப்போர் என 220 பேருக்கு மேல் உள்ளனர். இவர்கள் “சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கம்” என்ற பெயரில் சங்கம் அமைத்து ஒற்றுமையோடும், பரஸ்பர ஒத்துழைப்போடும் வாழ்கிறார்கள். தொழில் நிமித்தம் வெளியூர்களில் வாழ்ந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் கிராமத்தில் நடக்கின்ற மாதாவின் திருவிழா நாட்களில் சொந்த கிராமத்திற்கு வந்து திருவிழா கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த கிராமத்தின் வரலாறும் அந்த மக்களின் இன்றைய நிலையும் உண்மையில் எல்லோரையும் பிரம்மிக்க வைக்கக்கூடியது.

> சிறிய கிராமமாக இருந்தாலும்
> அங்கு பிறந்து சாதனைகள்
> படைத்த பிரபலங்கள் பலர்

# பொத்தகாலன்விளை பெயர் வந்த வரலாறு

பொத்தகாலன்விளையில் எழுந்தருளியுள்ள திருக்கல்யாண மாதாவின் ஆலயம் திருத்தலமாக அறிவிக்கப்பட்டிருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. காரணம் நான் பிறந்து, வளர்ந்து ஓடி ஆடி விளையாடிய என்னுடைய இளமைக் காலத்தைக் கழித்த பூமி அது. அங்கே ஓங்கி வளர்ந்து கண்களுக்குக் காட்சியாக இருக்கும் மாதாவின் ஆலயம் அஸ்திவாரம் இடப்பட்டு அர்ச்சிக்கப்பட்ட நாள் வரை அதன் வளர்ச்சியைக் கண்கூடாக கண்டது மாத்திரமல்ல, அதன் ஒவ்வொரு ஏற்ற நிலையிலும் பங்கெடுத்தவர்களில் நானும் ஒருவன். அந்த ஊர் சிற்றூராக இருந்தாலும் பல வகைகளில் பெயரும், புகழும் பெற்ற ஊர். அந்த பெயரும் புகழும் பெற அரும்பாடுபட்டு உழைத்து சாதனை படைத்தவர்கள் பலர். இன்றைய நவீன நிர்வாகக் கலைக்கு சமமாக அந்தக் காலக்கட்டத்திலும் பிரம்மிக்கத்தக்க வகையில் கிராமத்தை நிர்வாகம் நடத்திய பெரியவர்கள் பலர் வாழ்ந்த ஊர். அவற்றையெல்லாம் இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்வது அவசியம். அதை உணர்ந்ததின் விளைவு தான் இந்தக் கட்டுரை. முதலில் நான் எழுதப்போவது பொத்தக்காலன்விளை என்ற பெயர் வந்த கதை பற்றியது.


கத்தோலிக்க கிறிஸ்துவ மதம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் போர்த்துக்கீசிய மிஷனரிகளால் தென்தமிழ்நாட்டின் கடற்கரை கிராமங்களுக்கு கொண்டுவரப்பட்டது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். பின்னாளில் 19 – ம் நூற்றாண்டின் துவக்கத்தில் (சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால்) ஆங்கிலேயர் ஆட்சி வேரூன்ற ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த மிஷனரிகள் தென் தமிழ்நாட்டிற்கு வந்து, அந்த சபையை பரப்ப பெரும் முயற்சி எடுத்தார்கள். அவர்களில் முக்கிய பங்கு வகித்தவர் பிஷப் கால்டுவெல் ஆவார். இவர் இடையன்குடியை தலைமை இடமாகக் கொண்டு நாடார் சமூகத்தினரை ஆங்கிலிக்கன் சபைக்கு மதம் மாற்றுவதில் பெரும் பங்கு ஆற்றினார். அவர் எழுதிய திருநெல்வேலி கெசட்டியர் என்ற புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார், ‘சாத்தான்குளம் அருகில் ஒரு சிறிய கிராமம். அனைவரும் நாடார்கள். எங்களுடைய முயற்சியால் அங்கு வாழ்ந்த அனைத்து குடும்பங்களும் ஒரே நாளில் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். நாடார் சமுதாயத்திலிருந்து முதன் முதலாக ஒரு கிராமம் முழுவதும் எங்கள் சபைக்கு மாறினதால் அந்த ஊருக்கு ‘முதலூர்’ எனபெயரிட்டோம்’

என்று பிஷப் கால்டுவெல் குறிப்பிடும் ஊர் நம்மூர் அருகே உள்ள தற்போதைய முதலூர் என்பதில் சந்தேகமில்லை.



அதே சமயத்தில் கடற்கரை கிராமமான மணப்பாட்டிலிருந்து கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை உள்நாட்டில் பரப்புவதற்காக உபதேசிமார்களும், போதகர்களும் முயற்சி எடுத்து சொக்கன்குடியிருப்பில் ஒரு தலத்தை ஆரம்பித்துள்ளனர் . பிற்காலத்தில் அங்கு ஒரு கத்தோலிக்க குருவானவரும் இணைந்து நாடார் சமுதாத்தினரிடையே மறைபணி ஆற்றி வந்துள்ளார். அதன் தாக்கம் முதலூரிலும் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவு அங்கு ஆங்கிலிக்கன் சபைக்கு மதம் மாறிய 5 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி போதகர் ஹெலன் என்பவரது தலைமையில் அருகில் இருந்த பனங்காட்டில் ஒரு புதிய குடியேற்றத்தை நிறுவியுள்ளனர். அங்கு பனை ஓலையால் வேயப்பட்ட ஒரு மாதா கோவிலையும் நிறுவி மாதாவை வழிபட்டு வந்துள்ளனர். அந்த குடியேற்றத்திற்கு ''போதகர் ஹெலன்விளை'' என்று பெயரிட்டுள்ளனர். சொக்கன்குடியிருப்பில் இருந்த குருவானவர் இந்த “போதகர் ஹெலன்விளை” க்கு வந்து அங்கு இருந்த மக்களுக்கு கத்தோலிக்க மதக் கோட்பாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் கற்றுக் கொடுத்துள்ளார். இதைப்பற்றி தனது நாட்குறிப்பிலும் மறைமாவட்டத்திற்கு எழுதிய மடல்களிலும் குறிப்பிட்டுள்ளார். இந்த “போதகர் ஹெலன் விளை” தான் மக்களின் வாயில் நுழைந்து வெளியே வரும்போது ''பொத்தக்காலன்விளை''யாக உருமாறி மறுபிறவி பெற்றுள்ளது. இவ்வாறு பெயர்மாறிய கிராமங்கள் பல உள்ளன. பொத்தக்காலன்விளை ஊருக்கு மேற்கே விஜய நாராயணபுரம் என்ற ஊர் ‘வெசலாமரம்’ என்றும் கிழக்கே நாராயணன் குடியிருப்பு நரையன் குடியிருப்பாகவும் தெற்கே ‘பால் ஐயர் புரம்’ போலையார்புரமாக மாறி மக்களால் அழைக்கப்படுதலும் இதற்கு நல்ல உதாரணங்கள். இது தான் உண்மை. மற்றபடி அந்தக்காலத்தில் பலருக்கு யானைக்கால் வியாதி பரவி பலர் பெருத்த காலோடு இருந்ததால் பொத்தக்காலன்விளை என்று பெயர் வந்ததாக கூறுவது அபத்தம். உண்மை அல்ல.

## பொத்தக்காலன்விளை கிராமத்தின் வெளி உலகத் தொடர்பு



பொத்தக்காலன்விளை கிராமத்திற்கு கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தை கொண்டு வந்ததில் மணப்பாட்டைச் சேர்ந்த பரதகுல மதப் பணியாளர்களுக்கு பெரும் பங்கு உண்டு. அப்படி மதப்போதனைகளையும் மதக் கோட்பாடுகளையும் கொண்டு வந்த சிலர் இந்த கிராமத்திலேயே குடியேறியுள்ளனர். பல ஆண்டுகளாக இந்த மக்களோடு வாழ்ந்துள்ளனர். அவர்களில் ஒருவர் மிக்கேல் அண்ணாவியார். இவர்தான் புனித செபஸ்தியாரின் வாழ்க்கை வரலாற்றை அந்தக் காலத்தில் வழக்கத்தில் இருந்த தெருக்கூத்து முறைப்படி நாடகப் பாடலாக எழுதி இங்கு இருந்த அண்ணாவியாருக்கு கற்றுக் கொடுத்திருக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது. மணப்பாட்டு பரதர்கள் இங்கு வாழ்ந்ததற்கு அடையாளமாக இரண்டு குருசடிகள் சொல்லப்படுகிறது. கிராமத்தின் கிழக்கே அமைந்துள்ள கல்லறைத் தோட்டத்தில் எல்லா குருசடிகளும் கிழக்கு- மேற்காக இருக்க இரண்டு குருசடிகள் மட்டும் வடக்குத் தெற்காக இருக்கக் காணலாம். இந்த இரண்டும் பிற சமூகத்தினரின் கல்லறைகள் என வாய்மொழியாகச் சொல்லப்பட்டு வருகிறது. அவற்றில் எந்த எழுத்தும் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறலாம். அவை இரண்டும் அந்தக் காலத்தில் வாழ்ந்து மரித்த இரண்டு பிரபலமான மனிதர்களின் கல்லறையாக இருக்க வேண்டும். கிராமத்தின் மற்ற பிரபலங்களான முக்கந்தர் மற்றும் உபதேசியார் இவர்களின் கல்லறைகள் தனியாகக் காணக்கிடக்கின்றன. ஆக, மணப்பாட்டில் இருந்து வேதம் போதிக்க வந்து இங்கு செல்வாக்குடன் வாழ்ந்து மரித்த பரதர்களோடு நமது கிராம மக்களுக்கு தொடர்பு இருந்துள்ளது தெரியவருகிறது.

மணப்பாட்டு பரதர்கள் நமது கிராமத்திற்கு வந்து வாழ்ந்ததற்கு இன்னொரு அடையாளமும் காணக்கிடக்கிறது. சுமார் 150-200 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதி பதிவு செய்யப்பட்ட நிலப்பத்திரங்களில் பரதர்களுக்கு உரிய 'பர்னாந்து' என்கிற பெயர் காணப்படுகிறது. உதாரணத்திற்கு பாக்கியம் முக்கந்தர்

வகையராக்கள் வாங்கி அனுபவித்த ‘காத்தர்விளை’ ‘பேஞ்சான்விளை’ போன்ற நிலங்களின் மூலப்பத்திரங்களில் இந்த விதமான பெயர்கள் காணப்படுகின்றன. காலப்போக்கில் அவர்களின் வாரிசுகளுக்கு பனைத்தொழில் தெரியாததாலும் வேறு வாழ்வாதாரம் இல்லாததாலும் இடம் பெயர்ந்து சென்றிருக்கலாம்.

இதே போன்று நமது கிராமத்திலிருந்து ஒரு சிலர் வெளி ஊர்களுக்கு சென்று வேதம் போதித்து மதப் பணியாற்றிய நிகழ்வுகளும் நடந்தேறியுள்ளன. ஞானாதிக்கம் உபதேசியாரின் குடும்பத்திலிருந்து பலர் கட்டப்பாடு, ஏரல், பிரகாசபுரம் மற்றும் பழவேற்காடு, நக்கத்துரவு போன்ற கிராமங்களுக்கு குடிபெயர்ந்து சென்றுள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக தொம்மை அந்தோணி நாடார் என்பவர் பொத்தக்காலன்விளையிலிருந்து குடும்பத்தோடு குடிபெயர்ந்து திருநெல்வேலிக்கு வடக்கே உள்ள புளியம்பட்டி என்ற கிராமத்தில் குடியேறினார். புளியம்பட்டி சென்ற அந்த குடும்பம் அங்கு புனித அந்தோணியாருக்கு ஒரு ஆலயம் கட்டுவதற்கும், அந்த புனிதருக்கு ஒரு தேர் சப்பரம் செய்யவும் உதவியிருக்கிறது. இது 19-ஆம் நூற்றாண்டின் நடுவில், அதாவது சுமார் 175 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததாக ஒரு வாய்வழி வரலாறு கூறுகிறது.



வெளியூரிலிருந்து நேர்ச்சை கொடுக்க வரும் பக்தர்களின் வசதிக்காக நமது திருக்கல்யாண மாதாதிருத்தலத்தில் திருக்கல்யாண மாதா அசன பாத்திர வாடகை சென்டர்அமைந்துள்ளது. இங்கு அசனம் கொடுக்க வரும் பக்தர்கள் அசனம் செய்வதற்கு தேவையான அனைத்து பாத்திரங்களையும் குறைந்த வாடகையில் பெற்றுக்கொள்ளலாம்.

# பொத்தக்காலன்விளையில் பணியாற்றிய குருக்கள்

பொத்தக்காலன்விளை கிராமம் 1935-ம் ஆண்டு தனிப்பங்காக அறிவிக்கப்பட்டது. அதற்குமுன் சொக்கன்குடியிருப்போடும் சாத்தான் குளத்தோடும் இணைக்கப்பட்டு அவற்றின் துணைப் பங்காக இயங்கி வந்தது. 1935 முதல் இன்றுவரை (2016) பங்குக் குருவாகப் பணியாற்றிய குருக்கள் பற்றிய சிறு குறிப்புடன் இங்கே வரிசைப்படுத்தியுள்ளோம்.

### தந்தை ஸ்தனிஸ்லாஸ் பங்காரு (1935-49)

முதல் பங்குக் குருவானவர்; வயதில் முதிர்ந்தவர். கிட்டத்தட்ட ஓய்வு எடுக்க வேண்டிய நிலையில் பங்குப் பொறுப்பை ஏற்றார். இறைபக்தி மிக்கவர். கிராமத்தின் எல்லா மக்களாலும் மதிக்கப்பட்டவர், போற்றப்பட்டவர். பங்கில் புதிய ஆலயம் கட்டுவதற்கு திட்டம் தீட்டி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டியவர். புனித அன்னம்மாள் சபை கன்னியர்கள் காலடி எடுத்து வைப்பதற்கும் அவர்கள் நிர்வாகத்தில் புனித வளனார் பெண்கள் ஆரம்பப் பள்ளிக்கூடம் கொண்டு வருவதற்கும் காரணகர்த்தாவாக இருந்தவர்.

### தந்தை மஸ்கரனாஸ் (1949-53)

தூத்துக்குடியின் பிரபலமான குடும்பத்தில் பிறந்தவர். நெடிதுயர்ந்த தோற்றம். சிம்மக்குரல்; பார்ப்பவர் எவரையும் அடங்கி ஒடுங்க வைக்கும் உருவத் தோற்றம். பிடிவாதமும் முன்கோபமும் நிறைய உண்டு. இதனால் பல சர்ச்சைகளில் சிக்கினார். புதிய ஆலயக் கட்டிடத்தின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி அதனை தரை அளவிற்கு உயர்த்தினார். தூய வளனார் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தியது இவரது சாதனை. இவருடைய பணிக் காலத்தில் கிராமம் இரண்டாகப் பிளவுப்பட்டு இருந்தது துரதிர்ஷ்டம்.

### தந்தை சிலுவை அந்தோணி (1953-65)

கிராமத்தின் எல்லா நிலை மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இளங்குருவானவர், குருப்பட்டம் பெற்றபின் கொடுக்கப்பட்ட முதல் பங்குப்

பொறுப்பு என்றாலும் அனுபவம் இல்லாதவர் என்ற குறை தெரியாத அளவிற்கு பங்குப் பொறுப்பை திறம்பட கையாண்டார். பிளவுபட்டு நின்ற கிராமத்தை ஒன்றாக்கிய பெருமை இவரைச் சார்ந்தது. 12 ஆண்டுகள் தொடர்ந்து ஒரு பங்கில் பணியாற்றுவது மறைமாவட்டத்தில் மிக அரிது. அந்தப் பெருமையும் இவருக்கு உண்டு. புதிய ஆலயக் கட்டிடப் பணி மிக வேகமாக வளர்ந்து உச்ச மட்டம் வரை வந்தது. டோமும் மேற்கூரையும் கட்ட வேண்டிய நிலையில் துர்திஷ்டமாக கட்டிடம் எங்கும் வெடிப்புகள் தோன்றிட, கட்டிடப் பணிகள் அப்படியே நின்று விட்டன.

### தந்தை லூர்துமணி (1965-70)

இளம் வயது குருவானவர். துடிப்பானவர். கேட்பவர்களின் முழுக் கவனத்தையும் தன்பால் ஈர்க்கக்கூடிய நாவன்மை கொண்டவர். நின்றுபோன ஆலயக் கட்டிட வேலையை என்ஜினியர்களின் ஆலோசனைகளை ஏற்று மிகத் துணிவுடன் திரும்பவும் கையில் எடுத்தவர். அதை வெற்றிகரமாக நடத்தியும் காட்டினார். பலிபீட மேல்பகுதி டோமையும் மேற்கூரையையும் கட்டி முடித்தார். இனி கோவில் தரை வேலையை முடித்துவிட்டால் ஆலயத்தை மக்களின் வழிபாட்டிற்கு திறந்துவிடலாம் என்ற நிலையில் மறைமாவட்ட நிர்வாகத்தால் இடம் மாற்றப்பட்டார்.

### தந்தை மரிய காகு ( 1970 - 72 )

பார்த்தவுடன் கையெடுத்து கும்பிடுகிற மாதிரி தோற்றமுடையவர். பழைய காலத்து கத்தோலிக்கக் குருக்களின் பாரம்பரியத்தில் வந்தபடி நீண்ட தாடி வைத்திருந்தார். வெண்தாடி வேந்தர் என்று அழைத்தார்கள் இளைஞர்கள். புதிய ஆலயத்தில் தரைதளம் அமைக்காமலே மறைமாவட்ட ஆயரின் ஆசியோடு ஆலயத்தை அர்ச்சித்து வழிபாட்டிற்கு திறந்து வைத்தார். திறந்து வைத்த ஒரு ஆண்டிற்குள் தரைத்தளத்தையும் பதிக்க வைத்தார். அந்நாட்களில் புரையோடிப் போயிருந்த கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலையும் மக்களின் குடிப்பழக்கத்தையும் எதிர்த்துப் போராடிப் பார்த்தார். வெற்றி பெறவில்லை. தன்னுடைய ஆதங்கத்தையும் இயலாமையையும் வெளிப்படுத்தும் விதமாக ஆலயத்தில் ‘எனது அன்பான குடிமக்களே’ என்று அழைத்து தனது மறை உரையை ஆரம்பிப்பார். பெரிதாக சாதிக்க முடியவில்லை என்ற ஏமாற்றத்தோடு இடம் மாறிச் சென்றார்.

## தந்தை ராஜரீகம் (1972-76)

பட்டதாரி குருவானவர். புதிய ஆலய பணியில் சிறிதும் பெரிதுமாக இருந்த பாக்கி வேலைகளை நிறைவுபடுத்தினார். ஆலய பலிபீடத்தை அழகுப் படுத்தினார். புதிய ஆலயத்தின் முன்னால் பதிக்கப்பட்டுள்ள கொடிமரத்தை சந்தனச் சிலுவை நாடார் உதவியுடன் கட்டி முடித்தார்.

## தந்தை ரெத்தினராஜ் (1976-78)

இளைஞர்கள் மத்தியில் பிரபலமானவர். இளைஞர்களை ஒன்று திரட்டி சமுதாய பணி ஆற்றியவர். வந்த வேகத்திலேயே பணிமாற்றம் பெற்று சென்று விட்டார்.

## தந்தை பிரான்சிஸ் (1978-79)

மிகவும் எளிமையானவர். எல்லோரிடமும் அன்புடன் பழகி நற்பெயர் பெற்றார். அன்பிரவு பிரார்த்தனை நடத்தி, மக்கள் கூட்டம் பெருகச் செய்தவர். இந்த காலக்கட்டத்தில் ஆலயத்திற்கு பகல் வேளையில் பிரார்த்தனை செய்வதற்காக வரும் மக்கள் கூட்டம் பெருகியது. தந்தையும் பெரும்பாலும் ஆலயத்தின் உள்ளே இருந்து அங்கு வரும் மக்களுடைய குறை கேட்டறிந்து அதற்காக இறைவனிடம் மன்றாடுவார். மன்றாட்டுக்குப் பின் திருத் தண்ணீரைத் தெளித்து ஆசீர்வதிப்பார். இந்தப் பழக்கம் மக்களை பெரும் அளவில் ஆலயத்திற்கு அழைத்து வந்தது. தந்தை பிரான்சிஸ் அவர்களின் அந்த அணுகுமுறைதான் பிற்காலத்தில் இந்த இடத்தை ஒரு திருத்தலமாக அறிவிக்க தூண்டுகோலானது என்றால் மிகையாகாது.

## தந்தை நவமணி ( 1979-82 )

தந்தை மரிய காகு அடிகளார் போலவே வயதில் முதியவர். பல பெரிய பங்குகளில் திறம்பட பணியாற்றிவிட்டு ஒரு வகையில் ஓய்வு எடுக்கும் விதமாக இந்த சிறிய கிராமத்தில் பணியாற்ற அனுப்பப்பட்டவர். நமது ஊரின் பழைய ஏட்டுகளை எடுத்து உபகார மாதா என்று இருந்த பெயரை திருக்கல்யாண மாதா என்று பெயரிட்டு பழைய சம்பிரதாயங்களை நடைமுறைக்கு கொண்டு வந்தவர். மறைமாவட்ட முதலாயர் திபூர்ஸியுஸ் ரோச் ஆண்டவர் மேல் மிகுந்த மதிப்பும்,

மரியாதையும் வைத்திருந்தார். அதன் காரணமாகவே துணைப் பங்கான கொழுந்தட்டு கிராமத்தின் பெயரை ரோச் ஆண்டவர்புரம் என பெயர் மாற்றம் செய்ய பெரும் முயற்சி செய்தார். வெற்றி பெறவில்லை. நமது கிராமத்தின் தெற்கு எல்லையில் புனித அந்தோணியார் பெயரில் ஒரு சிற்றாலயம் அமைக்க உதவினார்.

## தந்தை லூர்துமணி (1982-85)

இரண்டாவது முறையாக தந்தை லூர்து மணி அவர்கள் பங்கு குருவானவராக வந்தது ஒரு தெய்வச் செயல் என்றே கூற வேண்டும். நின்று போன புதிய ஆலயப் பணியை துணிச்சலுடன் மீண்டும் ஆரம்பித்து வெற்றியுடன் முடித்தவர் மீண்டும் ஒரு துணிச்சலான பணியை கையில் எடுத்தார். ஊரில் இருந்த பழைமையான தேர்ச்சப்பரம் வலுவிழந்து ஒடிந்து விடும் நிலையில் இருந்தது. மறைமாவட்ட நிர்வாகம் அதைப் புதுப்பிக்க விரும்பாத நிலையிலும் தந்தை துணிச்சலுடன் தனிமனிதனாக நின்று புதியதோர் தேர்ச்சப்பரத்தை உருவாக்கினார். இது அவருடைய பெரும் சாதனைகளில் ஒன்றாகும்.

## தந்தை பீட்டர் ராஜா (1985-91)

பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர். எளிமையானவர். ஒரு உண்மையான துறவி போல வாழ்ந்தவர். வாழ்பவர். பிரச்சனைகள் நிறைந்த, யாரும் போக விரும்பாத பல பங்குத் தலங்களுக்கு மறைமாவட்ட நிர்வாகத்தால் அனுப்பப்பட்டு வெற்றியுடன் திரும்பியவர். சென்ற இடங்களில் எல்லாம் புதிய ஆலயமும், பள்ளிக்கூடமும் கட்டி சாதனைகள் படைத்தார். நமது ஊரிலும் அன்றைய நாளில் யாரும் சாதிக்க முடியாத, இன்றும் எல்லோர் நினைவிலும் நிற்கின்ற ஒரு காரியத்தை செய்தார். கிராமத்தில் இயங்கி வந்த நடுநிலைப் பள்ளியை தரம் உயர்த்தி, அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியாக மாற்றினார். இது ஒரு சாதாரண செயலாகத் தோன்றலாம். அது உண்மை இல்லை. அந்த ஆண்டு இவ்விதம் அரசு தரம் உயர்த்தி கொடுத்தது இரண்டே இரண்டு பள்ளிகள் தான். அவற்றில் நமது ஊர்ப் பள்ளியும் ஒன்று. அதோடு தமிழ்நாடு அரசு புதிதாக அரசு உதவி பெறும் தனியார் பள்ளிக்கு அனுமதி கொடுப்பதில்லை என்ற புதிய

கொள்கையையும் அறிவித்தது. இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அது எத்தகைய இமாலய சாதனை என்று. இந்த சாதனையை படைப்பதற்கு தந்தை தனியொரு மனிதனாக எடுத்துக் கொண்ட முயற்சிகளை பட்டடியலிட முடியாது. அதற்காக நமது கிராமம் என்றும் அவருக்குக்கடமைபட்டிருக்கும்.

### தந்தை ரெக்ஸ் (1991-94)

இவரும் பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர். இளைஞர். பணியாற்றிய மூன்று ஆண்டுகளில் நமது கோவிலில் இரட்டைக் கோபுரத்தைக் கட்டி முடித்தவர். கோபுரத்தின் நடுவில் இயேசு ஆண்டவர் சுரூபத்தை நிறுவியவர் இவரே.

### தந்தை சேவியர் அருள்ராஜ் (1994-99)

இளைஞர். துடிப்பானவர். நாவன்மை கொண்டவர். எல்லோரையும் கவரும் வண்ணம் மறையுரை ஆற்றக் கூடியவர். வழிபாட்டு முறையில் சில நடைமுறைகளைப் புகுத்தி, அனைவரையும் இறைவழிபாட்டில் ஈடுபடச் செய்தவர். முதன்முதலாக ஆலயத்திற்கு வர்ணம் பூசி அழகுறச் செய்தவர். ஆலயம், தந்தையர்கள், அருட்சகோதரிகள் தங்குமிடம் இவற்றை சுற்றி மதில் சுவர் கட்டியெழுப்பியது இவருடைய பெரிய சாதனை. மதில் சுவர் கட்டியதால் ஆலய வளாகம் மிக அருமையாகக் காட்சி அளித்தது. ஆலயத்தின் முன்னால் எழுப்பப்பட்டுள்ள மண்டபம் மற்றும் நுழைவுவாயில், லூர்து மாதா கெபி கட்டி அழகுறச் செய்து சின்ன ஜெருசலேம் என நமது ஆலயத்திற்கு பெயர் வந்தது இவரால் தான்.

### தந்தை இருதயராஜா ( 1999-2004)

இவருடைய பணிக் காலத்தில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட அஸ்திவாரம் போடப்பட்டது.

### தந்தை அருள் தனசீலன் (2004-09)

இளைஞர். பங்கு நிர்வாகத்தில் முன் அனுபவம் இல்லை. அதனாலோ என்னவோ தேவையில்லாமல் பல சர்ச்சைகளில் சிக்கினார். இசையில் நல்ல

ஆர்வம் உண்டு. அதனால் உறவலைகள், அற்புதத் தாயே, அழகிய தாயே என முதன்முதலாக நமது பங்கில் மூன்று இசைத் தட்டுகளை வெளியிட்டு, நம் திருக்கல்யாண மாதாவின் பெயர் பரவ முதல் காரண கர்த்தாவானார். தொடர்ந்து திருக்கல்யாண மாதாவின் அற்புதக் கெபி கட்டி திறந்து வைத்தார். தேர் நிறுத்துவதற்காக புதிய தேர்ப்பறை மற்றும் அசன மண்டபமும், திருத்தலப் பயணிகள் தங்கும் விடுதிகள் மற்றும் புதியப் பள்ளிக்கூடக் கட்டிடம் அமைக்கப்பட்டது. முதன்முதலாக இரவு கண்விழிப்பு செபம், முதல் சனிக் கிழமை நிகழ்வுகள் இவரது காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் இவரது தலைமையில் அன்னையின் புகழ்பரப்பும் பணிக்குழு-வை ஆரம்பித்து அன்னையின் புகழ் பரவ, ஆலயம் வளர  உறுதுணையாக இருந்தார் என்பது பெருமைக்குரியது.

### தந்தை பபியான் ஜோசப் (2009-14)

வெளி மாநிலமான பீகாரில் மறை பணியாற்றிய அனுபவம் உண்டு. இந்த ஐந்து ஆண்டுகளில் வளர்ச்சி பணிகள் அதிக அளவில் நிறைவேறின. அரைகுறையாக நின்று போன பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. பழையக் கோவில் கட்டிடம் இடிக்கப்பட்டு கோவில் வளாகம் விரிவாக்கப்பட்டது. அசன அறையும், குருக்கள் தங்கும் அறைகளும் கட்டி முடிக்கப் பட்டன. பங்கு அலுவலகமும், ஆலயப் பொருட்கள் விற்பனைக் கூடமும் கட்டப்பட்டது. ஆலயத்தைப் பற்றி வெளியிடங்களில் விளம்பரம் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து வெளியூர்களில் இருந்து ஆலயத்திற்கு வரும் மக்கள் கூட்டம் பெருகியது. முதல் சனிக்கிழமை சிறப்பு ஆராதனை அறிமுகப்படுத்தப்பட்டது. எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக பொத்தக்காலன்விளை திருக்கல்யாணத் தாய் ஆலயம் ஒரு திருத்தலமாக திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது. திருக்கல்யாணத் தாய் என்ற மாத இதழ் தொடங்கப்பட்டது. இந்த வளர்ச்சித் திட்டங்களுக்கு எல்லாம் மூலமாக செயல்பட்டது தந்தை பபியான் ஜோசப் அவர்கள். பொருளுதவியும், விளம்பர உதவியும் அளித்தது திரு. எட்வின் காமராஜ் அவர்கள். கோவில் வருமானமும் பல மடங்கு பெருகியது.  மாதாந்திர வரவு செலவு கணக்குகளை வெளியிடும்

முறை அமுல் படுத்தப்பட்டது. முதல் முறையாக பங்குப் பேரவை அமைக்கப்பட்டது. மொத்தத்தில் இந்த ஐந்து ஆண்டு காலம் ஒரு பெரிய திருப்பு முனையாக அமைந்தது.

**தந்தை ஜோசப் ரவிபாலன் (2014 முதல் )**

பக்கத்து ஊரைச் சேர்ந்தவர். இறையியலில் டாக்டர் பட்டம் பெற்றவர். குரு மடத்தில் குரு மாணவர்களுக்கு பாடம் நடத்திய பேராசிரியர். பங்கு நிர்வாக அனுபவம் இல்லை என்றாலும் நமது பங்கின் நிர்வாகத்தை கண்டிப்புடனும், பாரபட்சமின்றியும் நடத்தி வருகிறார். ஆலய வழிபாட்டு முறைகளில் பல மாற்றங்களை அறிமுகப்படுத்தி நல்ல வரவேற்பைப் பெற்றார். ஆலயத்தின் மேற்கூரை பல ஆண்டுகளாக சரி செய்யப்படாமல் இருந்த நிலையில் தற்பொழுது பங்கு மக்களின் உதவியோடும், ஒத்துழைப்போடும் அது சரி செய்யப்பட்டு, ஆலய உள் அமைப்பு புதுப் பொலிவோடு காட்சி அளிக்கிறது.இந்த திருத்தலத்தின் வரவு செலவுகளை ஒவ்வொரு மாதமும் வரிசைப்படுத்தி அச்சடித்து எல்லா பங்கு மக்களுக்கும் தெரியப்படுத்தும் முறையை தீவிரமாக கடைப்பிடித்து வருகிறார். ஒவ்வொரு மாத இறுதியிலும் ஒரு கணிசமான கையிருப்பு காட்டும் குருவானவர். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆலய வருமானம் சுமார் ஐம்பது லட்சத்துக்கும் மேலாக உயர்ந்தது.



## பொத்தக்காலன்விளை கிராமத்தில் கல்வி மற்றும் ஆன்மீகப்பணி ஆற்றிய புனித அன்னம்மாள் சபை கன்னியர்கள்




பொத்தக்காலன்விளை கிராமத்தில் கல்வி அறிவு இல்லாத எழுத படிக்க அறியாத பொது மக்களே இல்லை என கூறலாம். அதிலும் குறிப்பாக பெண்களிடையே கடந்த 20-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து கல்வி அறிவு பரவலாகக் காணப்பட்டது. இதற்கு அடிப்படை காரணம் அந்தக் கிராமத்தில் ஒரு தளம் அமைத்து கல்வி பணியாற்றிய திருச்சி புனித அன்னம்மாள் சபை கன்னியர்கள். 1930 ஆம் ஆண்டு அந்த சபையின் தளம் ஒன்று கிராமத்திலே நிறுவப்பட்டது. அருட்சகோதரி அல்போன்ஸ் மற்றும் அருட்சகோதரி தோனா மரியம்மாள் என்ற இரு சகோதரிகள் அடைக்கலாபுரத்தில் இருந்து வந்து புனித அன்னம்மாள் சபையை துவக்கி வைத்தார்கள். சாலை வசதியும் போக்குவரத்து சாதனங்களும் இல்லாத அந்த காலக்கட்டத்தில் அவர்கள் இருவரும் அடைக்கலாபுரத்தில் இருந்து கால்நடையாக நடந்து வந்து தங்களது பணியை துவக்கினார்கள். 1932 ஆம் ஆண்டு புனித வளனார் பெண்கள் ஆரம்பப் பள்ளிக்கூடம் சபை இல்லம் உள்ளேயே ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பள்ளிக்கூடம் மறைமாவட்ட நிர்வாகத்திற்கு உட்பட்டது ஆனாலும், பள்ளியின் அன்றாட நிர்வாகத்தை சபையினரே நடத்தி வந்தார்கள். ஆரம்பத்தில் தலைமை ஆசிரியையும், பிற ஆசிரியைகளும் பெரும்பாலும் சபையைச் சேர்ந்த கன்னியர்களே இருந்தனர். தொடர்ந்து இவர்கள் ஆற்றிய கல்விப் பணி மகத்தானது. ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இந்த சபையைக் கட்டிக்காத்து வழிநடத்திய தலைமை அருட்சகோதரிகளை இங்கே பட்டியலிட்டு பெருமைப்படுகிறோம்.

**1. அருட்சகோதரி அல்போன்ஸ்**

**2. அருட்சகோதரி இஸ்பிரித்து சாந்து மேரி**

**3. அருட்சகோதரி பிரிஜித் மேரி**

**4. அருட்சகோதரி சலேத் மேரி**

5. அருட்சகோதரி ரீட்டா மேரி

6. அருட்சகோதரி தமியான் மேரி

7. அருட்சகோதரி சகாய மேரி

8. அருட்சகோதரி சேவியர் இசபெல்லா மேரி

9. அருட்சகோதரி புரோகிகளா மேரி

10. அருட்சகோதரி மார்ட்டீன் தெரஸ்

11. அருட்சகோதரி மெக்தலித் மேரி

12. அருட்சகோதரி திர்புலிஸ் மேரி

13. அருட்சகோதரி நெர்ஸஸ் மேரி

14. அருட்சகோதரி கிளாவர் மேரி

15. அருட்சகோதரி கிறிஸ்டோபர் மேரி

16. அருட்சகோதரி டென்னிஸ் மேரி

17. அருட்சகோதரி எட்மி

18. அருட்சகோதரி ஜூதித் மேரி

19. அருட்சகோதரி ஜெரோமி லில்லி

20. அருட்சகோதரி எலிஸ்கோ

21. அருட்சகோதரி அமலி

22. அருட்சகோதரி அனுஸ்காரியுஸ்

23. அருட்சகோதரி விவியான்

24. அருட்சகோதரி லூர்து குழந்தை தெரஸ்

25. அருட்சகோதரி உவின்ஸ்டன்

26. அருட்சகோதரி அன்னம்மாள்

27. அருட்சகோதரி அமலா

28. அருட்சகோதரி மிக்கேலம்மாள்

29. அருட்சகோதரி டாமியுஸ்

30. அருட்சகோதரி பிலோமினாள்

# திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்
# அருட்பணி. பபியான் ஜோசப் அடிகளாரின் வரலாற்றுச்சுவடுகள்



இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

**அன்னையின் ஆலயத்தில் பணிவாழ்வு ஆரம்பம் :**

திருக்கல்யாண மாதா ஆலய 16 -வது பங்குத்தந்தையாக அருட்பணி . பபியான்ஜோசப் அடிகளார் 28-05-2009 அன்று பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் ஆலய வளர்ச்சியானது அசுர வேகத்தில் முன்னேற்றம் கண்டது. அன்னைக்கு " அருள் தரும் இமயம்" என்ற பட்டத்தை சூடி " இணைந்து செபிப்போம், இணைந்து பணி செய்வோம் " என்ற தாரக மந்திரத்தோடு பொத்தக்காலன்விளையின் அனைத்து மக்களையும் ஒருங்கிணைத்து ஆலயத்தை வழிநடத்திய விதம் மறைமாவட்டத்திற்கே முன்னோடியாக திகழ்ந்தது.

**முதல் சனி பக்தி முயற்சி :**

அருட்பணி. அருள் தனசீலன் அடிகளார் காலத்தில் தொடங்கப்பட்ட முதல் சனி பக்தி முயற்சிகள் எதிர்பார்த்த அளவு வெற்றியடையவில்லை. பின்னர் அருட்பணி. பபியான் ஜோசப் அடிகளாரின் பெருமுயற்சியால் முதல் சனி பக்தி முயற்சிக்கு புத்துயிர் ஊட்டப்பட்டது. வெளியூர் பக்தர்கள் மதிய உணவுக்கு கஷ்டப்படுவதைக் கண்டு முதலில் ரொட்டியும், பின்னர் பார்சல் உணவும் ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டன. பின்னர் முதல் சனி நாட்களில் ஆலயத்தை நோக்கி கேரளா, கடற்கரை கிராமங்கள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து ஆர்ப்பரிப்போடு அலைகடலென மக்கள் கூட்டம் வருவதை கண்ட தந்தையவர்கள் பங்கிலிருந்து அனைவருக்கும் மிகப்பிரமாண்ட முறையில் மதிய உணவிற்கு ஏற்பாடு செய்தார்கள். மேலும் வழிபாடு நேரங்களில் மக்கள் வெயிலில் வாடுவதைக் கண்ட தந்தையவர்கள் மிகவும் பிரமாண்டமான முறையில் தட்டியால் பந்தல் அமைக்க ஏற்பாடு செய்தார்கள். முதல் சனிக் கென்று சிறிய சப்பரம் செய்யப்பட்டு அன்னையின் சொரூபம் ஆலயத்தைச் சுற்றி பவனியாக எடுத்து வரப்படுகிறது. முதல் சனிக்கிழமைகளில் காலை முதல் இரவு வரை பல்வேறு வழிபாட்டு பக்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோடு முதன்

முறையாக மலையாள மொழியில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இந்த பக்தி முயற்சிகள் மற்றும் தந்தையவர்களின் அயராத உழைப்பே 12-02-2013 அன்று அன்னையின் ஆலயமானது திருத்தலமாக நிலை உயர்த்தப்படுவதற்கு காரணம் ஆயிற்று.

**அன்னையின் புகழ் அகிலம் அறிய :**

அன்னையின் புகழை உலகம் முழுவதும் பறைசாற்றும் விதமாக 22-01-2010 அன்று திருக்கல்யாணத் தாய் மாத இதழ் வெளியிடப்பட்டது. 23.01.2010 அன்று திருக்கல்யாண மாதா இணையதளம் தொடங்கப்பட்டது. மேலும் தமிழகம் முழுவதும் மட்டுமன்றி கேரளாவிலும் மிகப்பிரம்மாண்டமான அளவில் அன்னையின் புகழ் போற்றும் டிஜிட்டல் பேனர்கள், கட்அவுட்கள் மற்றும் செய்தித்தாள், தொலைக்காட்சி விளம்பரங்கள் அன்னையின் புகழை அகிலம் அறியச் செய்தன. மேலும் அன்னையின் புகழ் போற்றும் பாடல்கள் குறுந்தகடுகளாகவும் வெளியிடப்பட்டன.

**ஆன்மீகமும், ஆலயமும் :**

தந்தையவர்களின் காலத்தில் ஆலய வளர்ச்சியும் வழிபாடும் ஊக்குவிக்கப்பட்டது. ஜனவரி 2010ல் ஆலயத்தின் டோமின் உட்புறம் வர்ணம் பூசப்பட்டு ஏழு திருவருட்சாதனங்கள் உட்பட ஓவியங்கள் பொருத்தப்பட்டன. நவம்பர் 2010-ல் ஆலயம் முழுவதும் CFL பல்புகளால் ஜொலித்தது. பிப்ரவரி 2011ல் ஆலய பயன்பாட்டிற்காக பெரிய ஜெனரேட்டர் வாங்கப்பட்டது. 30.05.2011ல் ஆலய வளாகத்தில் உள்ள லூர்து அன்னை கெபியில் கல்லறை ஆண்டவர் சொரூபம் நிறுவப்பட்டு இருபுறமும் அழகிய நீரூற்று வேலைப்பாடுகளுடன் அன்னையின் கெபியானது பூஞ்சோலையாக அழகுப்படுத்தப்பட்டது. மேலும் பக்தர்களின் வசதிக்காக புனித அன்னாள் மடத்தை ஒட்டி மிகப்பிரம்மாண்டமான அளவில் புனிதப் பொருட்கள் விற்பனை நிலையமும், தெற்கு வாசலை ஒட்டி பங்கு அலுவலகமும் திறக்கப்பட்டன. 25.12.2011 ல் ஆலய முகப்பில் புதிய ஓவியங்களுடன் வர்ணம் பூசப்பட்டது.


தந்தையவர்கள் காலத்தில் ஒவ்வொரு திருவிழாவின் போது இரண்டு அல்லது மூன்று ஆயர்களை அழைத்து திருவிழாவிற்கு மெருகூட்டினார்கள். மேலும் நம் மறைமாவட்டத்திற்கு மட்டுமன்றி தமிழகத்தில் உள்ள அனைத்து பங்குகளுக்கும் முன்மாதிரியாக விளங்கும் வண்ணம் பங்கின் வரவு செலவானது மாதந்தோறும் அச்சிடப்பட்டு திருக்கல்யாணத்தாய் மாத இதழில் வெளியிடப்பட்டது.

**பக்த கோடிகளுக்காக :**

16.09.2010 அன்று அசனச் சாவடியின் இரண்டாம் மாடி கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு 24.01.2011 அன்று பயணிகள் இல்ல மேற்புற ஹால் திறக்கப்பட்டது. அக்டோபர் 2011ல் அசனச்சாவடி முன்பு திருப்பயணிகள் வசதிக்காக பெரும் பொருட்செலவில் ஷெட் போடப்பட்டது. ஜனவரி 2012ல் திருப்பயணிகள் பயன்பாட்டிற்காக மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி திறக்கப்பட்டது. திருவிழாவின் போது கூடும் திருப்பயணிகளின் வசதியை முன்னிட்டு ஆண் பெண் இருபாலருக்கும் மேல்நிலைப் பள்ளியின் இருபுறமும் தனித் தனியே கழிவறை மற்றும் குளியலறை வசதிகள் நவீன முறையில் அதிக எண்ணிக்கையில் ஏற்படுத்தப்பட்டன. திருப்பயணிகளின் பாதுகாப்பை முன்னிட்டு மேல்நிலைப் பள்ளியின் மேற்கு மற்றும் வட புறங்களில் காம்பவுண்ட் சுவர் பெரிய அளவில் போடப்பட்டதோடு பக்தர்கள் மற்றும் மாணவ மாணவியர் வசதிக்காக மேல்நிலைப் பள்ளியில் இரண்டு சைக்கிள் ஷெட்டுகள் பெரிய அளவில் கட்டப்பட்டன.

**நிறைவாக:**


தந்தையவர்களின் காலத்தில் ஆலய வளர்ச்சி மற்றும் அன்னையின் புகழினைக் கண்டு தமிழ்நாடு, கேரளா மட்டுமன்றி பல்வேறு மாநிலங்களிலும் பொத்தக்காலன்விளை கிராமம் எங்கு உள்ளது என்று கேட்கக்கூடிய அளவுக்கு வளர்ச்சி அடைந்தது என்றால் அது மிகையல்ல. தந்தையவர்கள் ஐந்து ஆண்டுகளில் ஏற்படுத்திச் சென்ற சுவடுகள் பின்னாளில் வரக்கூடிய தந்தையர்களுக்கு எளிதில் பயணிக்கக்கூடிய பாதையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.



*திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் அமைந்துள்ள புதுமை நீரூற்று மையம் கூறும் செய்திகள்...*

- ★அன்னை ரதத்தில் கோபுரம் மீது இறங்கி ஆசீர் அளித்த காட்சி
- ★பனைமர காட்சி பாரம்பரிய தொழிலை நினைவூட்டுகிறது.
- ★ஆரம்ப கால ஆலய மணி புளிய மரத்தில் ஒலிக்கப்பட்ட காட்சி
- ★ஆலய வளாக பாரம்பரிய கிணற்றின் காட்சி

# பொத்தக்காலன்விளையில் புனித வின்செண்ட் தே பால் சபை



பொத்தக்காலன்விளை கிராமத்தில் அமலோற்பவமாதா சபை, திருக்குடும்ப சபை, நற்கருணை வீரர் சபை போன்ற பக்த சபைகள் பல நன்றாக இயங்கி வருகின்றன. இவை எல்லாமே தங்கள் உறுப்பினர்களின் ஆன்மீக நல்வாழ்விற்காக துணை நிற்பவை. இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நோக்கத்தோடு ஒரு குழு நமது கிராமத்தில் பணியாற்றி வருவது பலருக்கு தெரியாத ஒன்றாக இருக்கலாம். அது தான் புனித வின்செண்ட் தே பால் சபை. ஏழ்மையில் வாழ்வோர், ஆதரவற்றோர், சமுதாயத்தால் கைவிடப்பட்டோர் இவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது தான் இந்த சபையின் நோக்கம். அவ்வித உன்னத நோக்கத்தோடு பல ஆண்டுகளாக நமது கிராமத்தில் செயல்பட்டு வரும் வின்செண்ட் தே பால் சபையைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

புனித வின்செண்ட் தே பால் ஐரோப்பாவின் பிரான்ஸ் நாட்டில் 1581 -ஆம் ஆண்டு பிறந்து 1660-இல் மரித்த ஒரு புனிதர். சமுதாயத்தில் மேல்பட்ட குடும்பத்தில் பிறந்த அவர் இளம் வயதில் குருவானவராகப் பட்டம் பெற்றார். ஏழ்மை, பசி, பட்டினி என்பவற்றை அறியாதவர். ஆனால் அவரைச் சுற்றி வறுமையிலும், பசியிலும் பலர் வாடுவதைப் பார்க்கிறார். இவர்களுடைய பசியைப் போக்கவும், கைவிடப் பட்டோர், ஆதரவற்றவர்களை காப்பாற்றவும் இல்லங்கள் திறந்தார். மற்ற வசதி படைத்தவர்களிடமும் சென்று உணவுப் பொருட்கள், ஆடைகள் பெற்றுத் தெருக்களில் பசியிலும், குளிரிலும் வாடும் மக்களுக்கு உதவினார். இவர் இறந்த பிறகு இவரது பெயரால் 1838- ஆம் ஆண்டு பிரடெரிக் ஓசானாம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது தான் வின்செண்ட் தே பால் சபை என்ற அமைப்பு. இந்த அமைப்பு கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வாழும் இடமெல்லாம் கிளைகளை ஆரம்பித்து 'உதவி தேவைப்படுவோருக்கு உதவுவது' என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றது.

பொத்தக்காலன்விளை கிராமத்தில் தந்தை ராஜரீகம் பங்குத்தந்தையாக இருந்தபோது 1974-ம் ஆண்டு வின்செண்ட் தே பால் சபையின் கிளை ஆரம்பிக்கப்பட்டது. 12 நபர்கள் தீவிர உறுப்பினர்களாக சேர்ந்தனர். திரு.ம.சிங்கராயன் தலைவராகவும், திரு.ஜேசுதுரை துணைத்தலைவராகவும்,

திரு.ஜோசப் ஆசிரியர் செயலாளராகவும், திரு.சந்தனமரியான் ஆசிரியர் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். அன்றிலிருந்து இன்றுவரை தவறாமல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தவறாமல் கூட்டம் நடத்துகிறார்கள். கூட்டத்தில் உறுப்பினர்களிடமிருந்து ரகசிய நன்கொடை வசூலிக்கப்படுகிறது. இந்த இரகசிய நன்கொடை எல்லா உறுப்பினர்களும் கொடுக்க வேண்டுமென்பது விதிமுறை. இவ்வாறு வசூலிக்கப்படும் இரகசிய நன்கொடை மூலம் வருடத்திற்கு ஏறக்குறைய ரூ.25,000 வருவதாக கூறுகிறார்கள். அதுபோக, எல்லா உறுப்பினர்களும் வீட்டில் அரிசி சேமித்து சபையிடம் அளிக்க வேண்டும். மேலும்,வசதி படைத்த குடும்பங்களிடமிருந்தும் தனிநபர்களிடமிருந்தும் நன்கொடை வசூலிக்கப்படுகிறது.


மேற்குறிப்பிட்ட மூன்று வழிகளிலிருந்தும் கிடைக்கும் வருமானத்திலிருந்து உதவி தேவைப்படுவோரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதம் 4 படி அரிசியும் ரூ.200-ம் அன்பளிப்பாக அளிக்கிறார்கள். தற்போதுள்ள நிலையில் இவ்வாறு 13 குடும்பங்கள் பயனடைவதாக அறிகிறோம். மேலும் திருநாள் சமயத்தில் 11 குடும்பங்களுக்கும் 35 தனிநபர்களுக்கும் புது ஆடைகள் விநியோகிக்கப்படுகின்றன.பள்ளிக்கூடங்கள் திறக்கும் சமயத்தில்மாணவர்களுக்கு (அரசுத்திட்டங்களில் பயன்பெறாதவர்) இலவசப்புத்தகம் நோட்டுப்புத்தகம் மற்றும் யூனிபார்ம் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு,சபையின் தலைமை அலுவலகம் வழியாக 11 நபர்களுக்கு நபருக்கு ரூ.5000/- வீதம் வட்டியில்லா சிறு கடன் கொடுத்து உதவியுள்ளனர். வங்கிகள் வழியாகவும்,நிதி நிறுவனங்கள் வழியாகவும் தொழில் செய்வோருக்கு கடன்கள் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளனர். இந்தத் திட்டங்கள் மூலம் பலன் பெற்றவர்களில் பிற சமூகத்தினரும் அடங்குவர்.

> இந்த தொண்டு நிறுவனம் ஒரு வித மௌன புரட்சி என்றே கூற வேண்டும்...

இந்த சபையின் உலகத் தலைமை இடம் ஆஸ்திரேலியாவில் உள்ளது. இந்திய நாட்டின் தலைமை இடம் பம்பாயில் உள்ளது. மறைமாவட்ட அளவில் உள்ள வட்டார சபை உவரியில் உள்ளது. நமது பங்கில் உள்ள கிளை சபை இந்த அமைப்போடு உலக அளவில் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு காலக்கட்டத்தில்,தலைமை அலுவலகம்,நமதூர் கிளையைச் சேர்ந்த 7 ஆதரவற்ற குடும்பங்களை சுவிகாரம் எடுத்து அவர்களுக்கு மாதம் ரூ.400/-வீதம் 4 ஆண்டுகள் தொடர்ந்து உதவி செய்துள்ளனர். எந்தவித ஆரவாரமும் விளம்பரமும் இன்றி நடைபெறும் இந்த தொண்டு ஒரு மௌன புரட்சி என்றே கூறவேண்டும். இந்த சபையின் இன்றைய தலைவர் மிக்கேல் ஜேம்ஸ், துணைத் தலைவர் மரிய வர்கீஸ்,செயலாளர் செல்வி கிங்க்ஸிலின், பொருளாளர் பெலிக்ஸ் அந்தோணி ஆசிரியர்.

# ஒரு கொடி மரத்தின் வரலாறு

தமிழ்நாட்டிலுள்ள எல்லா கத்தோலிக்க கிறிஸ்துவ கோயில்களின் முன்பும் ஒரு கொடி மரம் நட்டப்பட்டு கொடியேற்றுவது ஒரு பாரம்பரிய வழக்கம். சில இடங்களில் கொடிமரம் பலமான அஸ்திவாரத்தோடு நிரந்தரமாக நிறுவப்படுகிறது. சில இடங்களில் அவ்வப்போது தேவைக்கேற்ப ஒரு கொடிமரம் நடப்பட்டு விழா முடிந்ததும் அந்த கொடிமரம் அகற்றப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. நமது கிராமத்தைப் பொறுத்தமட்டில், புதிய ஆலயம் கட்டுவதற்கு முன்பு ஒரு மரபு பின்பற்றப்பட்டது. சுமார் 30 அடி உயரமுள்ள தேக்கால் ஆன ஒரு பருமனான மரம் பாதுகாக்கப்பட்டு வந்தது. அதோடு சுமார் 20 அடி உயரமான பருமன் குறைந்த ஒரு நுனியில் சிலுவையுடன் கூடிய இன்னொரு மரமும் இருந்தது. இரண்டு மரங்களையும் இணைக்கும் விதத்தில் வட்டமான வண்டி சக்கரம் போன்ற ஒரு சாதனம் ஒன்றும் இருந்தது. இந்த மூன்று மரச் சாமான்களும் சாமியார் பங்களாவை ஒட்டிக்கட்டப்பட்டிருந்த நீளமான தாழ்வாரத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. ஜனவரி மாதம் வரும் திருக்கல்யாணத் தாயின் திருநாளுக்குமுன்னால் இந்த மரச்சாமான்கள் பத்திரமாக எடுக்கப்பட்டு தண்ணீரால் சுத்தப்படுத்தப்படும். சரியாக ஜனவரி 13-ம் தேதி கோயிலின் முன்பு தரையில் ஆழமான குழி தோண்டி பெரிய மரம் நடப்படும். பின்பு பெரிய மரமும், சின்ன மரமும் சக்கரத்தால் இணைக்கப்பட்டு அடுத்த நாள் கொடி ஏற்றுவதற்கு தயாராக இருக்கும். பெரிய மரம் தரையில் சரிந்து விழாமல் இருப்பதற்காக மரத்தின் நான்கு பக்கங்களிலும் தரையிலிருந்து சக்கரம் வரை கயிற்றால் கட்டப்பட்டிருக்கும். திருவிழா முடிந்து சில நாட்களுக்குப் பிறகு கொடிமரங்கள் தரையிலிருந்து இறக்கப்பட்டு மீண்டும் அவற்றின் இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும்.



புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டாலும் சில ஆண்டுகள் (1971-லிருந்து 1974 வரை ) மேற்சொன்ன முறை பின்பற்றப்பட்டது. 1974-ம் ஆண்டு துவக்கத்தில் நமது கிராமத்தைச் சேர்ந்த பெருவணிகர் சந்தனச் சிலுவை நாடார் அன்றைய பங்குத்தந்தை ராஜரீகம் அடிகளாரை அணுகி நிரந்தரமான ஒரு புது கொடிமரம் தான் செய்து தருவதாகக் கூறினார். பங்குத் தந்தையும் அனுமதி தெரிவிக்க அதற்கான வேலைகள் ஆரம்பமாயின. முதல் வேலையாக சந்தனச் சிலுவை நாடாரும், பங்குத் தந்தையும் நாகர்கோவில் அருகே உள்ள மயிலாடி சென்று 33 அடி நீளமான ஒரு கல்லை தேர்வு செய்தார்கள். கல்லும் ஊருக்கு வந்து சேர்ந்தது. கல்லை நிறுத்துவதற்கு அஸ்திவாரம் பார்வரை தோண்டப்பட்டது. பரஞ்சோதி முக்கந்தர் தலைமையில் மரிய காகு அடிகளாரால் மந்திரிக்கப்பட்ட முதல் அஸ்திவாரக்கல் பதிக்கப்பட்டது. அதே சமயம் 19 அடி உயரமுள்ள தேக்கு மரத்தால் ஆன பிள்ளைக் கொடி மரத்திற்கும் ஆர்டர் கொடுக்கப்பட்டது.

1974 -ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட வேலை 10 மாதமாக நடந்தது. ஒரு பக்கம் கொடி மரக்கல் அனுபவம் வாய்ந்த மேஸ்திரிகளால் செதுக்கப்பட்டு அழகும், கலை அம்சமும் சேர்க்கப்பட்டது. இன்னொரு புறம் பார்வரை தோண்டப்பட்டு கான்கிரீட் கலைவையால் சுவர் போல் மேலே எழுப்பப்பட்டது. இந்த சுவர் தரையிலிருந்து 6 அடி கீழே எழும்பியதும் ஒரு ஆட்டுக்கல் அமைப்புள்ள ஒரு சுவர் தயாரானது. இந்த ஆட்டுக்கல் அமைப்புள்ள சுவரின் துவாரத்தில் கொடிக்கல்லின் அடிப்பாகம் அமரும் படி கல்லை தூக்கி நிறுத்த வேண்டும் என்பது திட்டம். நவம்பர் மாதம் 10-ந் தேதி கல்லை தூக்கி நிறுத்துவதற்கு ஏதுவாக 27 அடி உயரமுள்ள நான்கு பனைமரங்கள்- வெட்டப்பட்டு கல் நிறுத்தப்பட வேண்டிய இடத்தைச் சுற்றி நடப்பட்டன. பனை மரங்கள் இரும்பு கம்பிகளால் பிணைக்கப்பட்டன. நடுவில் ஒரு பலமான கப்பியைக் கட்டி கப்பி வழியாக இரும்பு கம்பிகளை சொருகி மறுமுனையில் கல்லுடன் இணைத்து கல்லை தூக்கி நிறுத்த வேண்டும். இந்த பணி நடந்து கொண்டிருந்தபோது கல் ஒரு பக்கமாகப் புரண்டது. அந்த நொடியில் 33 அடி நீளமுள்ள கல் அடிபாகத்திலிருந்து 7வது அடியில் கீறல் ஏற்பட்டு இரண்டாக உடைந்தது. அதோடு 10 மாத முயற்சியும் தோல்வியில் முடிந்தது. 1975-ஆம் ஆண்டு திருவிழாவின் போது புதிய கொடிமரத்தை பயன்படுத்த முடியாது என்கிற நிலை ஏற்பட்டது. குறிப்பாக பங்குத்

தந்தை ராஜரீகம் அடிகளார் தற்காலிகமாக ஒரு மரத்தை நட்டு கொடியேற்றி விடலாம் என்று அறிவித்துவிட்டார்.

ஆனால் சந்தன சிலுவை நாடார் நம்பிக்கை இழக்கவில்லை. ஏற்கனவே பல லட்சம் ரூபாய்களை இந்த வேலைக்காக செலவழித்து விட்டார். இன்னும் சில லட்சங்களை செலவழித்தாவது எடுத்த காரியத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்று சபதம் எடுத்தார். சபதம் எடுத்ததோடு இந்த பணியில் சம்மந்தப்பட்ட அனைவரையும் முடுக்கிவிட்டார். முதல் வேலையாக, உடைந்த கல்லிற்கு பதிலாக புதிய கல்லை தேர்வு செய்யும் பணியில் கவனம் செலுத்தினார். அதிர்ஷ்டவசமாக முதல் கல்லைக் கொடுத்த வியாபாரியே வேறு ஒரு கல்லைக் காட்ட, அந்தக்கல் தேர்வு செய்யப்பட்டு கிராமத்திற்கு லாரியில் கொண்டு வரப்பட்டது. கல் விற்ற வியாபாரி இந்த இரண்டாவது கல்லிற்கான விலையை வாங்க மறுத்துவிட்டார். இதேபோல் பிள்ளைக் கொடி மரத்திற்கு முன்பணம் பெற்ற வியாபாரி கல் உடைந்த சம்பவத்தை அறிந்து அந்த மரத்தை வேறு ஒருவருக்கு விற்க முயற்சிக்க அந்த முயற்சி வெற்றி பெறாததால் செய்வதறியாது திகைத்து நின்றார். சந்தனச் சிலுவை நாடார் அந்த மர வியாபாரியை அணுகி மரத்திற்கான முழு விலையையும் கொடுத்து அனுப்பி வைக்கச் செய்தார். ஆக, புதியக் கொடிக்கல்லிலும், பிள்ளை கொடி மரமும் நிறுவப்படுவதற்குத் தயாராக இருந்தன. பழைய கல்லை தூக்கி நிறுத்துவதற்காக போடப்பட்ட பனைமரங்களும், கப்பியும் அப்படியே இருந்தன. கொடி மரங்களை தூக்கி நிறுத்தி மீதி வேலையையும் முடிக்க வேண்டியது தான் பாக்கி. அதற்குள் டிசம்பர் மாதம் முடியும் தருவாயில் இருந்தது.

இந்த நிலையில் யாரோ ஒருவர் வருவாய் அதிகாரிகளுக்கு கொடுத்த புகாரின் அடிப்படையில் சாத்தான்குளம் வட்டார வளர்ச்சி அதிகார கிராமத்திற்கு வந்து கொடிக் கம்ப வேலையை நிறுத்தும்படி வாய்வழி உத்தரவிட்டார். பதறிப் போன சந்தனச்சிலுவை நாடார் தனக்குத் தெரிந்த மேல் அதிகாரிகளைப் பார்த்து, நடக்கின்ற பணி கோவில் பணி, இதில் பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று உறுதி கூறினார். அதன் அடிப்படையில் அரசுப் பொதுப் பணித்துறை இஞ்சினியர் ஒருவர் நேரில் வந்து நடக்கின்ற வேலைகளைப் பார்வையிட்டார். பணியில் ஈடுபட்டுள்ள மேஸ்திரிகளையும் கண்டு பேசி எத்தகைய அஸ்திவாரம்

போடப்பட்டுள்ளது என்பதை அறிந்து திருப்தி அடைந்தார். அவருடைய மேற்பார்வையிலேயே 1975-ஆம் ஆண்டு ஜனவரி மாத துவக்கத்தில் பெரிய கொடிக்கல் தூக்கி நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தரைக்கு மேலே கல்லைச் சுற்றி 4 அடி உயரத்திற்கு எழுப்பப்பட்டுள்ள முட்டுக்கல் சுவரும் நிறைவடைந்தது. பிள்ளைக் கொடி மரத்தின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள சிலுவை 3 1/2 அடி உயரம் கொண்டது. பிரத்தியேகமாக செய்யப்பட்டது.

அந்த ஆண்டு புதிய கொடிமரத்தில் கொடி ஏற்றுவதற்கு மறைமாவட்ட ஆயர் வருவதாக இருந்தது. ஏனோ அவர் வரவில்லை. ஆனால் வழக்கத்தைவிட அதிகமாக குருக்கள் வருவதற்கு சந்தனச் சிலுவை நாடார் தன்னுடைய சொந்த செலவில் ஏற்பாடு செய்திருந்தார். அவர்களில் முக்கியமானவர் தந்தை சிலுவை அந்தோணி அடிகளார். ஊர் மக்களின் ஏகொபித்த வேண்டுகோளுக்கு இணங்கி, தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் புதியக் கொடிக் கம்பத்தில் அன்னையின் கொடியை ஏற்றினார். அந்தக் கொடியும் சந்தனச் சிலுவை நாடார் பிரத்தியேகமாக செய்து கொடுத்த மாதாவின் கொடி. அதைத் தொடர்ந்து மாதாவின் திருவிழாவின் போது ஒவ்வொரு ஆண்டும் புதுக் கொடி செய்து கொடுக்கும் வழக்கத்தை தனது இறுதி காலம் வரை செய்து வந்தார்.

நமது கிராமத்தின் புது ஆலயம் முன்னால் அமைந்துள்ளக் கொடிக்கம்பம் உருவாக முழு மூச்சுடன் பாடுபட்டவர் சந்தனச் சிலுவை நாடார். பத்து மாத உழைப்பின் பலன் கிடைக்கும் முன் அது ஒரு நொடியில் நின்றுபோனதைக் கண்டு மனம் தளராமல் மீண்டும் தூக்கி நிறுத்தி ஒரே மாதத்தில் நிறைவு செய்தது அவருடைய இறைபக்திக்கு எடுத்துக்காட்டு. அதற்கான செலவு முழுவதையும் அவரே ஏற்றுக் கொண்டார். அவர் பெயர் பொறித்த நினைவுக் கல்லை கொடிக்கம்பத்தின் முட்டுக்கல் சுவரில் பதிக்க வந்த மேஸ்திரியிடமிருந்து கல்லை பறித்துத் தூக்கி எறிந்த பெருந்தகை அவர். மாதாவிற்கு செய்யும் எந்த நல்ல காரியத்தையும் தனது புகழ் பரப்பும் கருவியாக உபயோகிக்க விரும்பாத அவர் நமக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டு. நமது கிராமத்தில் இந்தக் கொடிக் கம்பம் இருக்கும்வரை சந்தனச் சிலுவை நாடாரின் பெயரும் நிலைத்திருக்கும்.

## பொத்தகாலன்விளையின் உள்ளாட்சி நிர்வாகம்

சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்து அல்லது கிராமம், 11 சிற்றூர்களை உள்ளடக்கியது. அவற்றில் பொத்தகாலன்விளை சிற்றூர் அளவிலும் ஜனத்தொகையிலும் மற்ற சிற்றூர்களைவிட பெரியது. அவை:

- **பொத்தகாலன்விளை**
- **சந்திராயபுரம்**
- **சுப்பிரமணியபுரம்**
- **நரையன்குடியிருப்பு**
- **புதுக்குடி**
- **கொழுந்தட்டு**
- **போலையர்புரம்**
- **வாலத்தூர்**
- **வைரவம்**
- **சௌக்கியபுரம்**
- **கம்மாளன்விளை**



இந்தியாவில் கிராம பஞ்சாயத்து முறை 1957-ம் ஆண்டு அமுல்படுத்தியபோது சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்தும் உருவானது. ஆரம்பத்தில் பஞ்சாயத்து உறுப்பினர்கள் தலைவரை தேர்ந்தெடுக்கும் முறை நிலவியது. பஞ்சாயத்து உறுப்பினர்களை அந்தந்த சிற்றூர் மக்கள் தேர்வு செய்தார்கள். பெரும்பாலும் போட்டிகள் நடைபெறவில்லை. ஊர்மக்கள் கூடிப்பேசி ஒரு மனதாக நியமனம் செய்தார்கள். 1958-ல் நடந்த தேர்விலும் 1961-ல் நடந்த தேர்விலும் பொத்தகாலன்விளை சார்பாக ஞானாதிக்கம் உபதேசியாரும்,பரஞ்சோதி முக்கந்தரும், செட்டியார் என்று அழைக்கப்பட்ட அந்தோணி முத்து நாடாரும் ஒரு மனதாக நியமனம் செய்யப்பட்டார்கள். இந்த உறுப்பினர்கள் கூடி சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த செல்லையா நாடாரை பஞ்சாயத்து தலைவராக தேர்வு செய்தார்கள். அப்போது பஞ்சாயத்துக்கென்று அலுவலகம் ஏதுமில்லை. தலைவரின் வீட்டில் கூட்டம் நடக்கும். 1961-ம் ஆண்டு சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த சாமுவேல் நாடார் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். இவர்தான் பொத்தக்காலன்விளை சிற்றூரின் மேற்குப்புற நாற்ச்சந்தியில் இருந்த நமதூர் கோயில் நிலத்தை தானமாக பெற்று பஞ்சாயத்து அலுவலகத்தைக் கட்ட உதவினார். சுப்பிரமணியபுரத்தில் ஒரு மேல்நிலை

நீர்த்தொட்டிக் கட்டினார். இதுதான் பஞ்சாயத்தில் கட்டப்பட்டமுதல் மேல்நிலைத் தொட்டி. இந்தக் காலக்கட்டத்தில் முதியோர் பென்சன் அறிமுகப்படுத்தப்பட்டது.

1967-ஆம் ஆண்டு பஞ்சாயத்து தலைவரை மக்கள் நேரடியாக தேர்வு செய்யும் முறை அமுல் படுத்தப்பட்டது. அந்த ஆண்டு நடந்த தேர்தலில் கடும் போட்டிக்கிடையே பொத்தக்காலன்விளையைச் சேர்ந்த சுவாமி நாதன் வெற்றி வாகை சூடினார். அவர் பதவி வகித்த ஐந்து ஆண்டுகளில் போலையர்புரத்திற்கும், வாலத்தூருக்கும் இடையே சாலை அமைத்தார். பொத்தக்காலன்விளையில் ஒரு வாசகசாலை மற்றும் மேற்கே நாற்சந்தியில் ஒரு மேல்நிலை நீர்த் தொட்டிக் கட்டினார்.

சாமிநாதனுக்குப் பிறகு கடுமையான போட்டிக்குப் பிறகு தலைவரானவர் சூசைநாதன். இவருடைய பதவிக் காலத்தில் தாமிரபரணி ஆற்றுப் படுகையிலிருந்து நீர் எடுத்து கிராமங்களுக்கு குடிநீர் விநியோகிக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தை தமிழ்நாடு அரசு அமுல்படுத்தியது. அந்த திட்டத்தால் பயன்பெற்ற கிராமங்களில் சாஸ்தாவிநல்லூர் கிராமமும் ஒன்று. இந்த கூட்டு குடிநீர் திட்டம் மூலம் எல்லா சிற்றூர்களுக்கும் தெருக்குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செயல்படுத்தப்பட்டது. மக்கள் குடிநீருக்காக கிணறுகளை உபயோகிக்காமல் தெருக் குழாய்களை உபயோகிக்க ஆரம்பித்தார்கள். இதன்மூலம் காலம் காலமாக பலத் தலைமுறைகளைத் தாண்டித் தொடர்ந்து வந்த ஒரு வழக்கம் ஓலைப்பெட்டி அல்லது வாளியில் கயிறு கட்டி கோவில் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து குடங்களில் நிரப்பி வீட்டில் உபயோகிக்கும் வழக்கம் திடீரென்று நின்று போனது. தண்ணீர் உபயோகத்திற்காக கிராமத்தில் இருந்த 6 பொதுக் கிணறுகளில் இன்று ஒன்று கூட இல்லை. இவருடைய பதவி காலத்தில் ஒரு இடுவையைத் தவிர வேறு சாலையே இல்லாத சந்திராபுரத்திற்கு ஒரு சாலையை அமைத்துக் கொடுத்தார். வசதி படைத்த பலர் கொடுத்த கடும் எதிர்ப்பையும் கடந்து இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டதால், அது ஒரு பெரிய சாதனையாக அன்று கருதப்பட்டது.

சூசைநாதனுக்குப் பிறகு, சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்து பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. ஆகவே மரிய பாக்கியம் என்ற பெண்மணி போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவருடைய பதவி காலத்தில் வீடுகளுக்கு தனி குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மரிய பாக்கியத்தைத் தொடர்ந்து சூசைநாதனின் மனைவி அமல புஷ்பம் பஞ்சாயத்து தலைவியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் இரண்டு முறை பஞ்சாயத்து தலைவியாகப் பணியாற்றினார். இவருடைய பதவி காலத்தில் கிராம சிற்றூர்களின்

உள்சாலைகள் சில சிமெண்ட் சாலைகளாக மாற்றப்பட்டது இவருடைய சாதனையாகக் கருதப்படுகிறது.

2000-ஆம் ஆண்டு சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்து மீண்டும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான பொது பஞ்சாயத்தாக அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த ஆண்டு M.சிங்க ராயன் பஞ்சாயத்து தலைவராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவருடைய 5 ஆண்டு பதவி காலத்தில் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசின் 100நாள் வேலை வாய்ப்புத் திட்டம் முறைப்படி செயல்படுத்தப்பட்டது. சாத்தான்குளம் வட்டாரத்திலேயே சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்தில் மட்டும் தான் ஊழல் இல்லாமல் அரசின் ஒழுங்குமுறைப்படி பணிகள் நடந்ததாக கூறப்படுகிறது. மேலும், கல்லறை தோட்டத்தைச் சுற்றி சுற்றுச்சுவர், அதையொட்டி மீன்/ கறி மார்க்கெட், பேருந்து நிழற்கூடம், மேல்நிலைப் பள்ளி அருகே ஓடையை ஒட்டி சுற்றுச்சுவர், சோனியாநகர், ராஜீவ் நகர் இவற்றிற்கு சாலை அமைத்து குடி தண்ணீர் மற்றும் தெரு விளக்கு அமைத்தல், வாலத்தூரிலும் கொழுந்தட்டிலும் மேல்நிலை நீர்த் தொட்டிகள் இப்படி பல பணிகள் நடந்தன.

2011-ஆம் ஆண்டு முந்தைய தலைவர் சூசைநாதனின் மகன் அந்தோணி ஜார்ஜ் கடும் போட்டிக்கிடையே வெற்றி பெற்று பஞ்சாயத்து தலைவரானார். இவருடைய 5 ஆண்டு பதவிக் காலத்தில் எல்லா சிற்றூர்களிலும் தெருவிளக்குகள் கூடுதலாகப் பொருத்தப்பட்டது. இரண்டு மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டன. 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலைகளின் இரு பக்கங்களிலும் மரங்கள் நடும் பணி தீவிரமாக நடைபெற்றது. 2016-ஆம் ஆண்டு சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்து தலைவர் பதவி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட உள்ளாட்சி முறையால் சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. குறிப்பிட்டுச் சொல்லப் போனால், குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு வசதி இவை 60 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலையோடு இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்தோமானால் ஒரு புரட்சியே ஏற்பட்டுள்ளது எனலாம். இன்னொரு பெரிய உண்மை என்னவென்றால் கடந்த காலங்களில் நடந்த போட்டி தேர்வு எல்லாவற்றிலும் பொத்தக்காலன்விளை சிற்றூரைச் சேர்ந்தவரே தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது நமது கிராமத்திற்கு கிடைத்த பெருமையாகும்.

# பொத்தக்காலன்விளையின் கொழும்பு தொடர்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பொத்தகாலன்விளை கிராமத்தின் இளைஞர்கள் பலர் பனைத்தொழிலை உதறிவிட்டு வெளிநாடு சென்று வியாபாரத்தில் கால்பதிக்க ஆரம்பித்தனர். அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, வெளிநாடு சென்று செல்வம் சேர்க்க வேண்டுமென்ற இயற்கையான ஆவல். இரண்டு, பனைத்தொழிலில் இருந்த சிரமங்களோடு அத்தொழில் பற்றி சமுதாயத்தில் இருந்த தாழ்வு எண்ணம். ஒரு சிலர் பர்மாவில் உள்ள பினாங்கு சென்றனர். பலர் அருகிலுள்ள இலங்கைக்கு சென்றனர். ஆரம்பத்தில் பலர் கள்ளத்தோணியில் சட்டத்திற்கு புறம்பான வழியில் சென்றனர். பின்னால் பாஸ்போர்ட், விசா என சட்டத்தின் எல்லைக்குள் வந்தனர். இரண்டு நாடுகளும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்ததால், இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள போக்குவரத்தில் எந்த கட்டுப்பாடுகளும், சிரமங்களும் இருந்ததில்லை. இங்கிருந்து சென்றவர்கள் பெரும்பாலும் ராமேஷ்வரம் அருகில் இருந்த தனுஷ்கோடியில் இருந்து சிறு தோணிகள் மூலம் பிரயாணமாகி இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் இருந்த தலை மன்னார் செல்வார்கள். அங்கிருந்து தொழில் செய்கிற நகர்களுக்குச் சாலை வழியாகச் செல்வார்கள்.

ஒரு காலக்கட்டத்தில் நமது கிராமத்தின் பெரும்பாலான இளைஞர்கள் இலங்கையில் தொழில் செய்துவந்த நிலை நிலவியது. ஒரு குடும்பத்தில் குறைந்தது ஒருவர், கூடுதலாக நால்வர் என ஏறக்குறைய எல்லாக் குடும்பங்களில் இருந்தும் ஒன்றிரண்டு ஆண்கள் அவ்வாறு தொழில் செய்து வந்தனர். ஒருசிலர் அங்கு தென்னை மரத்திலிருந்து கள் இறக்கும் தொழில் செய்து நல்ல செல்வம் சேர்த்தனர். அங்கே கள் இறக்குவது நமது நாட்டில் உள்ளது போல் ஒவ்வொரு மரமாக ஏறி இறங்க மாட்டார்கள். அங்கே தென்னை மரங்கள் ஒன்றோடு ஒன்று இரண்டு பலமான கயிறுகளால் இணைக்கப்பட்டிருக்கும். கள் இறக்குபவர் ஒரு மரத்தில் ஏறி கள்ளை கீழே அனுப்பி விடுவார். அதன்பின் அடுத்த மரத்திற்கு போக இரண்டு கயிறுகளையும் பயன்படுத்துவார். இவ்வாறு எல்லா மரத்திலிருந்தும் கள் இறக்கியதும், கடைசி மரத்திலிருந்து கீழே இறங்குவார். இவ்வாறு கிடைக்கின்ற கள்ளை தோட்ட உரிமையாளரும், கள் இறக்கும் தொழிலாளியும் ஒப்புக் கொண்ட விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்வார்கள். இது ஒரு ஆபத்தான தொழில். இந்த தொழில் செய்து இலங்கையில் உயிரிழந்த ஒன்றிரண்டு சம்பவங்களும் உண்டு. மற்றவர்கள் பெரும்பாலும் கொழும்பு நகரில் பஞ்சுக்காவத்தை என்ற இடத்தில்

இரும்பு பொருட்கள், மோட்டார் பாகங்கள் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டனர். இதற்கும் ஒரு பின்னணி உண்டு. முதல் மற்றும் இரண்டாம் உலகப்போரின் போது பயன்பட்ட போர்த் தளவாடங்களை அன்றைய பிரிட்டிஷ் அரசு ஏலத்தில் விட்டது. நம்மவர்கள் இந்த தளவாடங்களை குறைந்த விலைக்கு ஏலம் எடுப்பதில் கைதேர்ந்தவர்கள். அப்போது பெரிய போட்டிகள் இல்லை. ஏலத்தில் எடுத்த பெரிய வண்டிகளை பிரித்து, பாகங்களை தனியாக விற்று நல்ல லாபம் சம்பாதித்தார்கள். பெரும்பாலானவர்கள் செல்வம் சேர்த்து ஒரு கட்டத்திற்கு பிறகு நிரந்தரமாக ஊர் திரும்பி விட்டார்கள். நான்கு பேர் மட்டும் இலங்கை பிரஜா உரிமை பெற்று அங்கேயே தங்கி விட்டனர்.

எல்லோரையும் பற்றி இந்தக் கட்டுரையில் எழுதுவது முடியாத காரியம். முக்கிய பிரமுகவர்கள் நான்கு பேரை தேர்வு செய்து அவர்களின் தனிச் சிறப்பைப் பட்டியலிட்டு வாசகர்கள் முன் வைக்கிறோம்.

அன்னக்குருசு நாடார் பற்றிய முழு விபரம் எனக்கு கிடைக்கவில்லை. என்னுடைய கணிப்பில் நமது கிராமத்திலிருந்து இலங்கை சென்ற ஆரம்பக்கால இளைஞர்களில் இவர் ஒருவராக இருந்திருக்க வேண்டும். இவர்தான் மற்றவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார். ஆரம்பத்தில் இவரும் இவருடைய சகோதரர்கள் நான்கு பேரும் கொழும்பு நகரில் இரும்பு வியாபாரம் செய்தனர்.

ஸ்கின்னர்ஸ் ரோட்டில் அமைந்த திரு.ஏசுவடியான் அவர்கள் நிறுவனத்தில் கணக்குப் பிள்ளையாக பணி செய்து, நல்லெண்ண அடிப்படையில் அந்த குடும்பத்திலேயே பெண் கொண்டு, பின்பு தனியாக இரும்புக்கடை வைத்து செல்வம் ஈட்டியவர். ஊர் மக்களால் கணக்கபிள்ளை என்று அழைக்கப்பட்ட வியாக அந்தோணி நாடார். இவரும் 1960 ம் ஆண்டிற்கு பின்னால் கொழும்பு செல்ல முடியாமல் ஈட்டிய செல்வம் ஒரு சிலரால் கைபற்றப்பட்டு பொத்தக்காலன்விளையிலேயே தங்க நேரிட்டது. ஊர் வளர்ச்சிக்கும், ஆலய வளர்ச்சிக்கும் நிதி திரட்டுவது, பங்குத்தந்தைக்கு உதவும் காரியங்களில் ஈடுபட்டு வந்த இவர்தான் ஊரின் நிர்வாகத்தில் முக்கந்தர் உபதேசியாருக்கு அடுத்த கணக்குபிள்ளையாக பஞ்சாயத்து மற்றும் பொது நிர்வாகத்தில் ஈடுபட்டு நடுநிலையாளராக ஒரு நீதிமானாக செயல்பட்டு வந்தார். ஆகவே பல கட்டங்களில் வறியவர் பலர் இவரை அணுகி குடும்ப பிரச்சனைகளை தீர்த்து கொள்வதும் உண்டு. இவரை ஊர் மக்கள் கணக்கு பிள்ளை என்று செல்லமாக அழைப்பதும், வெளியூர் தொடர்பு, பத்திரம் எழுதுவது போன்ற செயல்களும் உண்டு. அந்த வகையில் கொழும்பில் தொழில் செய்து பின்னர் சகோதரர்கள் பிரிந்து சென்று

தனித்தனியே தொழில் செய்த ஐந்து பேரும் நல்ல செல்வம் சேர்த்தார்கள். கிராமத்தில் இருந்த ஒரே மாடி வீடு அன்னக்குருசு நாடாருடையது. அவருடைய பிள்ளைகளைக் குறிப்பிடும் போது மெத்தை வீட்டு இன்னார் என்று குறிப்பிடுவது வழக்கம். இவர் இறைபக்தி அதிகம் கொண்டவர். ஆலயத்திற்கு வந்து, முழந்தாளிட்டு மணிக்கணக்கில் செபம் செய்வார். 1960வாக்கில் இலங்கையை விட்டு தாயகம் திரும்பினார். எப்பொழுது மரித்தார் என்ற விவரம் கிடைக்கவில்லை.

கங்காணியார் என்ற மிக்கேல் நாடார் ஒரு தனிப்பிறவி. இவர் ஆரம்பத்தில் வெளிநாடு சென்றது பர்மாவில் உள்ள பினாங்கு நகருக்கு. அங்கு சில காலம் இருந்துவிட்டு 1914 ஆம் ஆண்டு இலங்கை சென்றார். மற்றவர்கள் எல்லாம் கொழும்பு பஞ்சுக்காவத்தையில் இரும்பு வியாபாரம் துவங்கியபோது, இவர் கொழும்பு நகருக்கு வெளியே தங்கோட்டு என்ற இடத்தில் தென்னந்தோப்புகளைக் குத்தகைக்கு எடுத்து கள் இறக்கும் தொழிலை ஆரம்பித்தார். நமது கிராமத்திலிருந்தும் பக்கத்து கிராமத்திலிருந்தும் ஆட்களை தேர்வு செய்து இலங்கைக்கு கூட்டிச் செல்வார். அவ்வாறு போகும் நபர்கள் மிக்கேல் நாடாருடைய தென்னைத் தோப்புகளில் கள் இறக்கும் தொழிலில் ஈடுபடுவார்கள். இதனால் இவருக்கு கங்காணியார் என்ற பெயர் வந்தது. இவருடைய தனிச்சிறப்பு ஊர்த் திருவிழாவின் போது சப்பரத் தேர்பவனி வரும் ஆறாம் திருநாளுக்கு முன்னாலே ஊருக்கு வந்து தீவட்டிகளுக்கு எண்ணெய் ஊற்றும் பணியை இவரே எடுத்துக் கொள்வார். 35,40 வயதிற்கு உட்பட்ட நம்மூர் இளைஞர் தீவட்டியைப் பார்த்திருக்க மாட்டார்கள். மின்சாரமும், டீசல் எஞ்சினும் இல்லாத அந்த காலத்தில் சப்பரத் தேர்ப்பவனியில் ஒளியூட்டியது இந்த தீவட்டிகள் தான். நீண்ட களைக் கம்பியின் ஒரு நுனியில் இரும்பாலான திரிசூலம் போன்ற நான்கைந்து ஈட்டிகள் பொருத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு ஈட்டியிலும் பருத்தித் துணியிலான பந்து சொருகப் பட்டிருக்கும். இந்தப் பந்தில் புன்னை எண்ணெய் ஊற்றி தீப்பற்ற வைத்தால் பந்தங்கள் எரிந்து ஒளி கொடுக்கும். 30 நிமிடங்களுக்கு ஒருமுறை எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு சப்பரத்திற்கும் பக்கம் ஒன்று வீதம் நான்கு தீவட்டிகளாவது தூக்கி பிடித்து வருவார்கள். தீவட்டிகள் நிரந்தரமாக இருக்கும். ஆனால் தீப்பந்தங்கள் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக செய்ய வேண்டும். புன்னை எண்ணெயும் தயார் செய்ய வேண்டும். இந்த இரண்டு வேளைகளையும் கங்காணியார் தன் செலவில் மிக அற்புதமாக செய்து வந்தார். தீப்பந்தங்களை ஊர்ச் சலவைத் தொழிலாளி உதவியுடன் செய்வார். சுமார் 15- 20 டின்களில் புன்னை எண்ணையை தயார் செய்து வைத்திருப்பார். சப்பரங்கள்

இரவில் பவனி வரும் போது கங்காணியார் இடது கையில் எண்ணெய் நிரம்பிய வெண்கலப்பாத்திரத்தை ஏந்திக் கொண்டு வலது கையால் ஒரு துண்டுத் துணியை எண்ணெயில் முக்கி பந்தங்களில் பிழிவார். அந்த நாட்களில் விரதம் இருந்து உடலையும், உள்ளத்தையும் சுத்தப்படுத்தி பக்தி சிரத்தையுடன் இந்த பணியை செய்வார். மிகவும் கடினமான வேலை. 1960 -ல் இலங்கையை விட்டு இந்தியா வந்த கங்காணியார் மிக்கேல் நாடார் 1978 – ல் காலமானார்.

இலங்கை சென்று செல்வம் சேர்த்தவர்களில் மற்றொரு பிரபலம் சந்தனச்சிலுவை நாடார். இவர் கோயிலுக்கு நிலம் கொடுத்த இரண்டு குடும்பங்களில் ஒன்றான சவரிமுத்து நாடாரின் பேரன். இவர் 1914 – ம் ஆண்டு பிறந்தார். 1935 – ம் ஆண்டு முதன்முதலாக இலங்கை சென்றார். அங்கே கொழும்பு நகரில் தனது இரண்டு சகோதரர்களோடு சேர்ந்து இரும்பு வியாபாரம் செய்தார். இருவரும் பிரிந்து போய் தனியாக வியாபாரம் செய்ய இவர் தனது மைத்துனர் அன்னக்குருசு நாடாரோடு சேர்ந்து அதே வியாபாரத்தை தொடர்ந்தார் 1959 – ம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி நிரந்தரமாக இந்தியா வந்தார். இந்தியா வந்ததும் முதல்வேலையாக திருநெல்வேலி சந்திப்பில் ஒரு கடையை வாடகைக்கு எடுத்து காலணிகள் விற்பனையை ஆரம்பித்தார். இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபட்டு இந்தியா திரும்பி வந்த பிறகும் இந்தியாவில் வியாபாரம் செய்து செல்வம் சேர்த்தவர் சந்தனசிலுவை நாடார் ஒருவராகத்தான் இருக்கும்.
ஆண்பிள்ளைகளை நன்குபடிக்க வைத்ததோடுஅவர்களை வியாபாரத்திலும் பழக்கிவிட்டார். செருப்புக்கடை, துணிக்கடை, மருந்துக்கடை, மதுக்கடை என அவருடைய சாம்ராஜ்யம் விரிந்து பரவியது. நமது கிராமத்தில் ஆலயத்தின் முன்னால் நிறுவப்பட்டிருக்கும் கொடிமரம் 1975 – ம் ஆண்டு அவரால் நன்கொடையாக செய்து கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஊர்த்திருவிழாவின் முதல் நாள் எங்கிருந்தாலும் மறக்காமல் ஆஜர் ஆகிவிடுவார். அவர் தயாரித்தக் கொண்டு வரும் மாதாவின் கொடிதான் கொடிமரத்தில் ஏற்றப்படும். இவர் 1992 – ம் ஆண்டு தனது 78 – வது வயதில் காலமானார்.

நமது கிராமத்திலிருந்து இலங்கை சென்று செல்வம் சேர்த்த பிரபலங்களாக நான் சுட்டிக்காட்டும் நாலாமவர் ஞானப்பிரகாசம் நாடார். இவர் 1921 -ம் ஆண்டு பிறந்தார். நமது கிராமத்து ஆரம்பப்பள்ளியில் சேர்ந்து படித்த முதல் செட் மாணவர்களில் இவரும் ஒருவர். ஆரம்பப் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு சாத்தான்குளத்திற்கு நடந்து சென்று 10-ம் வகுப்பு வரை படித்துள்ளார். 1938 -ம் ஆண்டு முறைப்படி பாஸ்போர்ட் விசா பெற்று இலங்கை சென்றார். கொழும்பு நகரில் ஸ்கின்னர்ஸ் சாலையில் பதுவை புனித அந்தோணியார் ஸ்டோர் என்ற

பெயரில் இரும்பு மற்றும் மோட்டார் பாகங்கள் விற்கும் கடையை ஆரம்பித்தார். அவருடைய அதிர்ஷ்டம் அவர் வியாபாரம் ஆரம்பித்த சில வருடங்களிலேயே உலக யுத்தம் முடிந்து போர் தளவாடங்கள் எல்லாம் ஏலத்திற்கு வந்தன. இப்படி வந்த வண்டிகளை ஏலம் எடுப்பதில் முன்னணியில் இருந்தது ஞானப்பிரகாசம் நாடாரின் பதுவை அந்தோணியார் ஸ்டோர்.இதன் மூலம் நல்ல லாபம் சம்பாதித்தார். இலங்கை அரசுக்கு வருமான வரியும் முறைப்படி கட்டினார். நமது கிராமத்திலிருந்து சென்றவர்களில் அரசுக்கு வருமான வரி கட்டியவர் இவர் ஒருவர் தான். பிற்காலத்தில் அவரது இரண்டு சகோதரர்களும் இலங்கை சென்று சிலகாலம் இவரோடு சேர்ந்து வியாபாரம் செய்தார்கள். இளையவர் குடியுரிமை பெற்று திருமணமாகி அங்கேயே தங்கி விட்டார். ஞானப்பிரகாசம் நாடார் நமது கிராமத்திற்கும், ஆலயத்திற்கும் தாராளமாக நன்கொடை கொடுத்து உதவியுள்ளார். 1956 - 57 -ல் புதிய ஆலயத்தின் கதவுகள், ஜன்னல்களுக்குத் தேவையான நிலைக்கற்களை தானமாகக் கொடுத்து ஆலயப்பணி தொடர்ந்து நடக்க உதவினார். பெரிய வியாழன் அன்று நடக்கும் கால் கழுவும் சடங்கிற்கு தேவையான துணிமணிகள், அப்பங்கள் மற்றும் சீடர்களுக்கு கொடுக்கும் பரிசுப் பொருட்கள் எல்லாம் காலம் காலமாக இன்று வரை அவரது குடும்பத்தினர் கொடுத்து வருகிறார்கள். பாஸ்கா ஞாயிறு அன்று உபயோகிக்கும் மெழுகுதிரி தூத்துக்குடியிலிருந்து வரவழைத்து கோவிலுக்கு எடுத்து வந்ததும் எனது நினைவில் நிற்கிறது. 1977 -ம் ஆண்டு அவர் கொழும்பில் சேர்த்து வைத்த செல்வம் சொத்துக்கள் எல்லாவற்றையும் அங்கேயே விட்டுவிட்டு, இந்தியா திரும்பிய பின்னர் எந்தத் தொழிலும் செய்யாமல் ஓய்வில் இருந்தார். இறுதியாக 1998 – ம் ஆண்டு தனது 77 -வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

பொத்தக்காலன்விளை கிராமத்தின் வரலாற்றில் அதன் இலங்கை தொடர்பு ஒரு முக்கிய சிறப்பான பகுதி எனலாம். அந்தத் தொடர்பு 1890 – ம் ஆண்டு வாக்கில் ஆரம்பித்து 1980 வரை நீடித்தது. ஆரம்பம் மகிழ்ச்சியாக இருந்தது. பலர் செல்வம் சேர்த்தார்கள். ஆனால் இறுதியில் அந்தத் தொடர்பு சோகத்தில் முடிந்தது. காரணம் இலங்கையில், நடந்த இனக்கலவரத்தால் பலர் தாங்கள் சம்பாதித்த செல்வத்தையும், நல்லெண்ணத்ததையும் தங்களுடைய வாரிசுகளுக்கு கொடுக்க முடியாமல் அங்கேயே விட்டு வர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. என்றாலும் அந்த தொடர்பால் கிராமமும் , கிராம மக்களும் பொருளாதார ரீதியில் பலன் பெற்றார்கள் என்பதில் சந்தேகமில்லை.

# பொத்தகாலன்விளையின் மருத்துவர்கள்

ஆங்கில மருத்துவ முறையில் மருத்துவம் பயின்ற மருத்துவர்களும் மருத்துவ வசதிகளும் இல்லாத அந்தக்காலத்தில் பொத்தகாலன்விளை கிராமம் ஒரு மருத்துவ தலமாக திகழ்ந்தது என்று கூறினால் வாசகர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. முதலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் வந்ததே 1966-ல் தான். அதற்கும் முன்னால் நமது கிராமத்தில் பாரம்பரிய நாட்டு வைத்தியத்தில் கைதேர்ந்த பொது மருத்துவர்களும், மகப்பேறு, குழந்தை நலம் மற்றும் தோல் சம்மந்தமான சிறப்பு மருத்துவர்களும் சிறப்பாக சேவையாற்றி கிராமத்திற்கு பெருமை சேர்த்தார்கள். அவர்களைப்பற்றி இந்த இதழில் பார்ப்போம்.

பொது மருத்துவத்தில் நல்ல அனுபவம் உள்ளவர் பச்ச இலை வைத்தியர் என்று அழைக்கப்பட்ட ஏசுவடியான் நாடார். இவர் பாக்கியம் முக்கந்தரின் பேரன். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்து இயற்கை வைத்திய முறையை தானாகவே கற்று எல்லா வகையான வியாதிகளுக்கும் மருந்து கொடுப்பார். கை நாடியைப் பார்த்து துல்லியமாக என்ன வியாதி என்றும் வியாதியின் வீரியம் என்ன என்றும் கணக்கிடுவார். அவர் கொடுக்கும் மருந்துகள் எல்லாமே செடிகளின் இலையிலிருந்தும் அவற்றின் வேர்களிலிருந்தும் தயாரித்ததாக இருக்கும். எல்லா மருந்துகளையும் அவரே தனது வீட்டில் தயார் செய்வார். உள்ளூர் மக்களுக்கு மாத்திரமல்ல, வெளியூர்களிலிருந்தும் மக்கள்அவருடைய வீட்டிற்கு வந்து வைத்தியம் பார்த்துச் செல்வார்கள். வெளியூர்களுக்கும் சென்று வைத்தியம் பார்ப்பதுண்டு. காயாமொழி, திருச்செந்தூர், காயல்பட்டணம், படுக்கப்பத்து போன்ற வெளியூர்களுக்கு அடிக்கடி போவார். காயாமொழியில் ஆதித்தனார் குடும்பத்தின் குடும்ப வைத்தியராகவே செயல்பட்டார். அவ்வாறு நெடுந்தூரம் போக நேரிட்டால், அதிகாலை ஒன்று அல்லது இரண்டு மணிக்கு தோளில் மருந்து பெட்டியோடும், கையில் தற்காப்புக்காக ஒரு பிரம்போடும் புறப்பட்டு வேலையை முடித்துவிட்டு அன்று மதியமோ அல்லது மாலையோ திரும்பி விடுவார். உள்ளூர் மற்றும் வெளியூர் மக்களுக்கு மருத்துவ சேவை செய்து புகழ்பெற்ற பச்சை இலை வைத்தியர் காலரா நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை. 1953?ம் ஆண்டு கிராமத்தில் பரவிய அந்த நோய்க்கு அவரும் பலியானதுதான் கொடுமை. அவருடைய மறைவுக்குப்பின் அவருடைய மூத்த மகன் தேவசகாயம் நாடார் தந்தையிடமிருந்து மருத்துவக்கலையை நன்கு கற்று தந்தையைப் போலவே உள்ளூரிலும், வெளியூர்களிலும் மருத்துவ சேவை புரிந்து பெயர் பெற்றார்.

இதற்கிடையில் ஆங்கில மருத்துவத்தை முறையாகக் கற்று வந்த மருத்துவர்களும் மருத்துவ வசதிகளும் பெருகவே, நாட்டு வைத்தியம் தேவசகாயம் வைத்தியரோடு நின்று போனது.

பொது மருத்துவத்துறையில் பச்சைஇலை வைத்தியர் சிறந்து விளங்கியது போல், குழந்தைகள் நலத்துறையில் மிகப் பிரபலமாக விளங்கியது கொங்கந்தோனி நாடார் குடும்பம். கொங்கந்தோனி நாடார் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருடைய மகன் மரிய அந்தோணி நாடார். 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்து மரித்தவர். இவருக்கு இரண்டு மகன்கள். ஒருவர் ஏசுவடியான் நாடார், இன்னொருவர் அந்தோணிமுத்து நாடார். ஏசுவடியான் நாடாருடைய மக்கள் மரிய உபகாரம் மற்றும் மரிய ஜெபமாலை. அந்தோணிமுத்து நாடாரின் மகன் தாவீது நாடார், அவருடைய மகன் ஜேசுபாலன். ஜேசுபாலனுடைய வாரிசுகளில் ஒன்று கல்யாணி என்ற பெண்மணி. மேற்சொன்ன அனைவருமே குழந்தை வைத்தியர்களாக பெயர் பெற்றவர்கள். இவர்களில் இன்று மரிய ஜெபமாலை மற்றும் கல்யாணி மட்டும் குழந்தை மருத்துவ துறையில் பணி செய்து வருகின்றனர். இவர்கள் நோயாளிகளை கையாளும் முறையே அலாதி. குழந்தை பிறந்த 6 மாதங்களுக்குள் வருகிற வியாதிகளின் அறிகுறிகளை ஆராய்ந்து வியாதியின் தன்மையை கணக்கிடுகிறார்கள். வியாதியை குணப்படுத்த இவர்கள் கையாளும் முறைகளில் முக்கியமானது பார்வை என்று அழைக்கப்படும் மந்திரம். பார்வை பார்ப்பதோடு குழந்தைக்கு மருந்தும் கொடுக்கிறார்கள். மருந்து ஒரு வனசெடியின் வேரிலிருந்து இவர்களே தயார் செய்கிறார்கள். இந்த மருந்து வகைகளையும் பார்வை பார்க்கும்போது உச்சரிக்கும் மந்திரத்தையும் தங்கள் முன்னோர்களிடமிருந்து கற்றுக் கொண்டதாக கூறுகிறார்கள்.

மேற்சொன்ன சிறுபிள்ளை வைத்திய குடும்பம் இந்த சுற்று வட்டாரத்தில் அன்றிலிருந்து இன்றும் மிக பிரபலமான குடும்பம். கடந்த நூற்றாண்டின் நடுவில் அதாவது 1930-50களில் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் வெளியூர்களிலிருந்து சிகிச்சைக்காக வரும் குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமாக இருந்தது. வடக்கே ஆறுமுகநேரி, காயல்பட்டணம் தெற்கே நாகர்கோவில் போன்ற ஊர்களிலிருந்தும் குழந்தைகளை எடுத்துக் கொண்டு சிகிச்சைக்காக வருவதுண்டு. இப்படி வருபவர்கள் ஒரு வாரம், 10 நாட்கள் என இங்கே தங்கி சிகிச்சை பெறுவதற்கு வசதியாக ஒரு கொட்டகையை கட்டி அங்கே சமையல் செய்யும் வசதியும் செய்து கொடுத்துள்ளார்கள். சில சமயங்களில் 10 குழந்தைகளும் அவர்களது பெற்றோர்களும் இருந்து சிகிச்சை பெற்றதாக கூறுகிறார் இன்றைய சிறுபிள்ளை வைத்தியர் மரிய ஜெபமாலை.

இவர்களுக்குள்ளே போட்டியும் நிலவுவதுண்டு. ஆனால் சிகிச்சை பெற வருபவர்கள் ஏற்கனவே கிராமத்தில் உள்ள வைத்தியர்களைப் பற்றி தெரிந்து வைத்திருப்பதால் இந்த போட்டிகள் ஒரு அளவோடு இருந்து வந்துள்ளது.

பாக்கியம் முக்கந்தரின் இன்னொரு பேரனான அ. ஏசுவடியான் நாடாரும், அவரது துணைவி செல்வம் அம்மாளும் உடம்பில் வரும் பரு மற்றும் கட்டிகள் போன்ற வியாதிகளுக்கு சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவர்களாக திகழ்ந்தனர். வேறு வியாதிகளுக்கு இவர்கள் சிகிச்சை அளித்ததில்லை. கட்டி வந்த இடத்தில் மருந்து போட்டு கட்டியை உடைக்கச் செய்து உள்ளே உள்ள சீழை வெளியேற்றுவது இவர்களது சிகிச்சை முறை. மந்திரம் சொல்லி பார்வை பார்ப்பதும் உண்டு. காலை வேளையில் இவர்கள் வீட்டு முன்னால் வெளியூர் ஜனங்கள் சிகிச்சைக்காக காத்திருப்பதை எப்போதும் பார்க்கலாம். வெளியூர்களில் மிகவும் பிரபலமாக இருந்தார்கள். ஏசுவடியான் நாடார் 1956இலும், செல்வம் அம்மாள் 1974இலும் இறந்து போனார்கள். அவர்களுடைய மறைவுக்குப்பின் அவர்களுடைய பிள்ளைகள் யாரும் இந்த தொழிலை தொடரவில்லை.

பெண்களுக்கு மகப்பேரு காலத்தில் சுகப்பிரசவம் ஏற்பட சிகிச்சை அளித்த பெண்மணி கிடாவெட்டி என்று அழைக்கப்பட்ட அந்தோணி முத்து அம்மாள். இவர்கள் நிலமக்காரர் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவர். பள்ளிக்குச் சென்று படித்ததில்லை. செவிலியர், துணைச் செவிலியர் (Midwife) பயிற்சியும் முறையாகப் பெற்றதில்லை. ஆனால் செவிலியர்களுக்கும் துணை நிலை செவிலியர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு அனுபவமும், ஆற்றலும் பெற்றவர். ஏறக்குறைய 25-30 ஆண்டுகள் (1940 முதல் 1972 வரை) நமது கிராமத்தில் பிறந்த எல்லாக் குழந்தைகளுக்கும் பிரசவம் பார்த்தது இந்த பெண்மணியாகத்தான் இருக்கும். அருகில் மருத்துவமனை இல்லாத அந்த காலகட்டத்தில் மகப்பேரு துறையில் கிராமத்தில் பணியாற்றிய ஒரே துணை மருத்துவர் இந்தப் பெண்மணிதான். இவருடைய சிறப்பு குணம் என்னவென்றால் யார் அழைத்தாலும் எந்த நேரத்தில் அழைத்தாலும் தயங்காமல் போவார். எவ்வளவு நேரம் ஆனாலும் பிரசவம் ஆகும் வரை அங்கேயே இருந்து பார்த்துக் கொள்வார். இவருடைய கவனிப்பையும் மீறி பிரசவத்தின்போது தாயும், குழந்தையும் இறந்துபோன சம்பவங்களும் உண்டு. ஆனால் அவை இவருடைய சக்திக்கும், அன்றைய வசதிக்கும் அப்பாற்பட்டவையாக கருதப்பட்டன. அவர் 1972ம் ஆண்டு காலமானார். அவருடைய மறைவுக்குப்பின் அவருடைய பெண்மக்களில் ஒருவரான சந்தனமரியாள் என்பவர் தாயின் பணியைத் தொடர்ந்தார். அவரும் இன்று உயிருடன் இல்லை.

மேலே குறிப்பிட்ட மருத்துவர்கள் நாட்டு மருத்துவத்தில் சிறந்து விளங்கி கிராமத்திற்கு பெருமை சேர்த்தவர்கள். ஆங்கில மருத்துவப் படிப்பை முறைப்படி கற்று பட்டம் பெற்று மருத்துவ சேவை புரிந்த ஒருவரும் உண்டு. அவர்தான் ஐயாகுட்டி நாடாரின் தம்பி டாக்டர் அந்தோணிதுரை. இவர் 1971ல் திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரியில் மருத்துவப் பட்டம் பெற்று ஆப்பிரிக்க நாட்டிற்குச் சென்று மருத்துவ சேவை புரிந்து இறுதியாக நாகர்கோவிலில் சொந்த மருத்துவமனை நடத்தி வந்தார். நமது கிராமத்திலிருந்து நாகர்கோவில் செல்லும் அனைவரும் தங்களுடைய உடல் ஆரோக்கியத்தைப் பற்றி கலந்து பேசி சிகிச்சையும், ஆலோசனையும் மிகக் குறைந்த செலவில் பெற்று வந்தனர். எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற நற்குணம் கொண்டவர் டாக்டர் அந்தோணிதுரை. பிரகாசமான ஒரு எதிர்காலத்தை நோக்கி சென்று கொண்டு இருந்த அவரை 2012ம் ஆண்டு காலன் ஒரு சாலை விபத்தில் பலி கொண்டு விட்டான்.

நான் ஆரம்ப கட்டுரையில் எழுதியிருந்ததுபோல, எனது கிராமம் சிற்றூராக இருந்தாலும், அங்கு சாதனையாளர்கள் பலர் வாழ்ந்து சிறப்பு சேர்த்தார்கள். அதற்கு இந்த மருத்துவர்களே சான்று.

*திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்*
*அமைந்துள்ள புதுமை பொருள் விற்பனை நிலையம்*



# பொத்தக்காலன்விளையின் ஆசிரியைகள்

பொத்தக்காலன்விளை கிராமத்தில் முதன்முதலாக 1926ம் ஆண்டு ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் மாணவர் மாணவியர் இருபாலரும் ஆரம்பப் படிப்பை தொடர்ந்தார்கள். 1930 ஆம் ஆண்டு அருகில் இருந்த கிராமத்தில் பங்குக் குருவாக இருந்த பங்காரு அடிகளாரின் முயற்சியால் புனித அன்னம்மாள் சபை கன்னியர்கள் அவர்களின் இல்லம் ஒன்றை பொத்தக்காலன்விளை கிராமத்தில் நிறுவினார்கள். இந்த இல்லத்திற்கு முதல் கன்னியாஸ்திரிகளாக அருட்சகோதரி T.S. அல்போன்ஸ் மற்றும் அருட்சகோதரி டோனா மரியம்மாள் என்ற இருவர் அடைக்கலாபுரத்தில் இருந்து வந்தார்கள். சாலை வசதி, போக்குவரத்து சாதனம் என்ற எதுவும் இல்லாத அந்த காலத்தில் அந்த இருவரும் அடைக்கலாபுரத்திலிருந்து திருச்செந்தூர் வழியாக கால்நடையாகவே நடந்து வந்தார்கள். இந்த அன்னம்மாள் மடத்தின் முயற்சியால் 1932ம் ஆண்டு பெண்களுக்கென தனியாக இன்னொரு ஆரம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் பெண் கல்விக்கு ஒரு மிகப்பெரிய உந்துதல் கிடைத்தது. 5வது வகுப்பு முடிந்ததும் மேற்கொண்டு படிக்க விரும்பிய மாணவ?மாணவியர் 7 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த சாத்தான்குளத்திற்கு நடந்து சென்று அங்கு இருந்த R.C பள்ளியில் 6, 7 மற்றும் 8ம் வகுப்பு படித்தார்கள். அந்தக் காலத்தில் 8ம் வகுப்பு தேர்வு அரசு பொதுத் தேர்வாக இருந்தது. அதில் தேர்வு பெற்றால் E.S.L.C. என்ற சான்றிதழ் கொடுப்பார்கள். அதன்பிறகு இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி படித்தால் ஹையர் கிரேடு ஆசிரியர்களாக ஆரம்பப் பள்ளிகளில் வேலை பார்க்கலாம். அவ்வாறு நமது கிராமத்திலிருந்து ஆசிரியர் ஆனவர்களில் ஆண்களை விட பெண்கள் மிக அதிகம். அவர்கள் நமது கிராமத்திற்கு ஆற்றிய கல்விப்பணி மகத்தானது. அவர்களைப் பற்றி இந்த கட்டுரையில் பார்ப்போம்.


புனித வளனார் பெண்கள் தொடக்கப்பள்ளி

நமது கிராமத்தில் முறைப்படி பயிற்சி பெற்று முதல் முறையாக ஆசிரியர்களாக வந்த பெண்கள் ஐந்து பேர். அவர்கள் 1. ஒத்தக் காலருடைய மருமகளும், சிவவை மரியான் என்பவருடைய

மனைவியுமான மரிய சிலுவை 2. எனது மூத்த சகோதரியும் தந்தை டென்சில் ராஜாவுடைய அன்னையுமான M. தெரசம்மாள் 3. ஜெபமாலை ஆசிரியரின் மகளான J. மரிய சிலுவை 4. பரஞ்சோதி முக்கந்தரின் மருமகளான P. தெரசம்மாள் 5. பஞ்சு பெட்டியாரின் அண்ணன் மகளான மரிய புஷ்பம். இவர்கள் ஐந்து பேரும் சம காலத்தவர்கள். 1924 முதல் 1926க்குள் பிறந்தவர்கள். அனைவரும் நமது கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பள்ளியின் ஆரம்ப கால மாணவிகள். இவர்கள் 6, 7, 8?ம் வகுப்புகள் படித்தது சாத்தான்குளத்தில். இவர்களில், முக்கந்தர் மருமகளான P.தெரசம்மாளும் ஒத்தக்காலர் மருமகளான மரிய சிலுவையும் ஆசிரியர் பயிற்சி முடித்தது குலசேகரன்பட்டினத்தில். மற்ற மூவரும் ஸ்ரீவில்லிபுத்தூரில் கன்னியர் நடத்தி வந்த ஆசிரியர் பயிற்சி பள்ளியில். ஒத்தக்காலர் மருமகளான மரிய சிலுவையம் எனது மூத்த சகோதரியுமான M.தெரசம்மாளும் ஒரே வயதுடையவர். இருவரும் ஒன்றாகவே படித்துள்ளனர். ஆனால் ஒத்தக்காலர் மருமகள் மரிய சிலுவைதான் முதன் முதலில் ஆசிரியையாக பொறுப்பேற்றுள்ளார். இவரும் சரி, ஜெபமாலை ஆசிரியர் மகளான மரிய சிலுவையும் சரி ஓய்வு காலம் வரை ஆசிரியர் வேலை பார்க்கவில்லை. வெவ்வேறு காரணங்களுக்காக இருவரும் ஆசிரியர் பணியிலிருந்து இடையே விலகி விட்டார்கள். மரிய புஷ்பம் ஆசிரியை திருமணமாகி சாத்தான்குளத்தில் R.C. பள்ளியில் ஓய்வு பெறும்வரை பணியாற்றினார். எனது மூத்த சகோதரி M.தெரசம்மாள் கடகுளத்திலும், மன்னார்புரத்திலும் பணியாற்றி 1982?ல் ஓய்வு பெற்றார்கள்.

முக்கந்தர் மருமகள் P. தெரசம்மாள் முழுவதும் நமது கிராமத்தின் பள்ளிகளில் பணியாற்றி 1984ல் ஓய்வு பெற்றார்கள். இந்த ஐந்து பேரும் இன்று உயிருடன் இல்லை.

அடுத்த கட்டமாக பயிற்சி பெற்று ஆசிரியையாக வந்தவர்கள் 1) ஜெயசீலன் ஆசிரியருடைய அன்னை S.மரிய சிலுவை 2) பரஞ்சோதி முக்கந்தரின் மகள் சந்தனாள் 3) சிஸ்டர் சலேத் 4) வடக்குத் தெரு புஷ்பம். இவர்கள் நான்கு பேரும் ஏறக்குறைய சம வயதுடையவர்கள். 1929?லிருந்து 1932?க்குள் பிறந்தவர்கள். இவர்களில் மரிய சிலுவை, ஆசிரியை தவிர மற்ற மூவரும் இன்று உயிருடன் இல்லை. மரிய சிலுவை, சந்தனாள், புஷ்பம் மூவரும் 6, 7 மற்றும் 8?ம் வகுப்புகள் சாத்தான்குளத்தில் படித்தார்கள். ஆசிரிய பயிற்சியை மரிய சிலுவை ஸ்ரீவில்லிபுத்தூரிலும், சந்தனாள் அடைக்கலாபுரத்திலும், சிஸ்டர் சலேத் தரங்கம்பாடியிலும் படித்தனர். மரிய சிலுவை ஆசிரியை முதலில் கொழுந்தட்டிலும் பின்பு நமது கிராமத்திலும் கல்விப் பணியாற்றி, 1987?ல் ஓய்வு பெற்றார். ஓய்வு

பெற்ற பின்பும் ஆலயத்தில் ஜெபம் செய்வதில் உபதேசியாருக்கு உதவியாக இருந்து வருகிறார்கள். சந்தனாள் ஆசிரியை நமது கிராமத்தின் பெண்கள் பள்ளியில் 1949ம் ஆண்டு முதலில் பணியில் சேர்ந்தார். ஆனால் என்ன காரணத்தினாலோ தொடர்ந்து பணியாற்றவில்லை. விட்டுவிட்டு கொழுந்தட்டிலும் நமது கிராமத்திலும் பணியாற்றி இறுதியாக 1983ம் ஆண்டு விருப்ப ஓய்வில் சென்றுவிட்டார். இவர் 1989ம் ஆண்டு காலமானார். வடக்குத் தெரு புஷ்பம் ஆசிரியை பெரும்பாலும் வெளியூர்களில் வேலை பார்த்தார். மேற்கொண்டு அவர்கள் பற்றியும் சிஸ்டர் சலேத் பற்றியும் விபரம் கிடைக்கவில்லை.

மூன்றாவது கட்டமாக ஆசிரியர் பயிற்சி பெற்று வந்தவர்கள் ஐந்து பேர். அவர்கள் 1) பொன்னம்மாள் 2) சிலுவை அந்தோணி 3) மரிய அலங்காரம் 4) மரிய ரோசாள் 5) ரோஸ்மேரி. இவர்களில் பொன்னம்மாள், சிலுவை அந்தோணி இருவரையும் தவிர மற்றவர்கள் இன்று உயிருடன் இல்லை. மரிய அலங்காரம் 6, 7, 8ம் வகுப்புகள் சாத்தான்குளத்தில் படித்துவிட்டு, ஆசிரியர் பயிற்சியை அடைக்கலாபுரத்தில் முடித்தார். சில ஆண்டுகள் கொழுந்தட்டில் வேலை பார்த்துவிட்டு திருமணத்திற்குப் பின் கணவரின் ஊரில் பணியாற்றி ஓய்வு பெற்றார்கள். மரிய ரோசாள் 6, 7, 8?ம் வகுப்பு சாத்தான்குளத்திலும், ஆசிரியர் பயிற்சி நாசரேத்திலும் முடித்தார். ரோஸ்மேரி 6, 7, 8?ம் வகுப்புகள் அடைக்கலாபுரத்திலும் ஆசிரியர் பயிற்சி தரங்கம்பாடியிலும் படித்துள்ளார். இவரும் சிறிது காலம் நமது ஊரில் வேலை பார்த்துவிட்டு திருமணத்திற்குப் பின் கணவரின் ஊரில் வேலை பார்த்து ஓய்வு பெற்றார். பொன்னம்மாள் 6, 7, 8?ம் வகுப்புகள் அடைக்கலாபுரத்தில் படித்துவிட்டு தரங்கம்பாடியில் ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளார். அதன்பிறகு கொழுந்தட்டில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிவிட்டு நமது கிராமத்து ஆண்கள் பள்ளியிலும், பெண்கள் பள்ளியிலும் மாற்றி மாற்றி பணியாற்றிவிட்டு, 1993?ம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவரும் வேறு இரு பெண்களும் எவ்வாறு தரங்கம்பாடி சென்றார்கள் என்று கேட்டால், புனித அன்னம்மாள் மடத்தில் தாயாராக இருந்த அருட்சகோதரி தமியான் மரி என்பவர் வழிகாட்டி ஆதரவு கொடுத்ததாக கூறுகிறார். சிலுவை அந்தோணி 6, 7, 8?ம் வகுப்புகள் உடன்குடியில் பயின்று அடைக்கலாபுரத்தில் ஆசிரிய பயிற்சி பெற்றுள்ளார். ஆசிரியர் பயிற்சிக்குப்பின், நமது கிராமம் பெண்கள் பள்ளியில் 39 ஆண்டுகள் பணியாற்றி 1995?ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

மேலே குறிப்பிட்ட ஆசிரியர்களோடு E.S.L.C. படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி பெறும்முறை நிறுத்தப்பட்டது. இவர்களுக்குப் பிறகு ஆசிரியர்களாக வந்த பெண்கள் S.S.L.C. (11?வது வகுப்பு) படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி பெற்று செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக பணிக்கு வந்தார்கள். அவ்வாறு முதலில்

வந்தவர்கள் 7 பேர். அவர்கள் 1) சிஸ்டர் லூக்காஸ் மேரி 2) அவிலா 3) சிஸ்டர் சூசன்னா 4) கபிரியேல் 5) தேவ கிருபை 6) லாசர் 7) மதுரம். இவர்களில் முதன் முதலாக செகண்டரி கிரேடு ஆசிரியையாக நமது ஊரிலிருந்து பயிற்சி பெற்று வந்தது எனது சகோதரி சிஸ்டர் லூக்காஸ் மேரி. இவர்கள் 6, 7, 8?ம் வகுப்பு படித்தது சாத்தான்குளத்தில். S.S.L.C. படித்தது தூத்துக்குடி புனித அலாய்சியஸ் மேல்நிலைப் பள்ளியில். அதன்பின் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆசிரியர் பயிற்சி பெற்று சில ஆண்டுகள் நமது ஊரில் பெண்கள் பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணியாற்றிவிட்டு புனித அன்னம்மாள் மடத்தில் கன்னியராக சேர்ந்தார். இப்பொழுது ஆசிரியர் பணியிலிருந்த ஓய்வு பெற்று திருச்சி பெரிய மடத்தில் ஓய்வில் இருக்கிறார். அவிலா 6?வது வகுப்பிலிருந்து 11?வது வகுப்பு வரை சாத்தான்குளத்தில் படித்துவிட்டு அடைக்கலாபுரத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். சில ஆண்டுகள் நரையன்குடியிருப்பில் இருந்த ஆரம்பப் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றிவிட்டு திருமணத்திற்குப் பின் கணவர் ஊர்ப்பக்கம் சென்று விட்டார். லாசர் ஆசிரியை படித்தது 6, 7, 8?வது வகுப்புகள் சாத்தான்குளத்தில், S.S.L.C. முதலூரில், ஆசிரியர் பயிற்சி அடைக்கலாபுரத்தில். திரு. சிங்கராயன் ஆசிரியரை திருமணம் செய்து வெளி ஊர்களில் வேலை பார்த்தார். இறுதியாக 1994?ல் ஓய்வு பெற்று நமது கிராமத்தில் வசித்து வருகிறார். கபிரியேல் ஆசிரியை 6?வது வகுப்பிலிருந்து S.S.L.C. வரை சாத்தான்குளத்தில் படித்துவிட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆசிரியர் பயிற்சியை முடித்தார். முதலில் மன்னார்புரத்தில் ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றிவிட்டு 1997?ல் ஓய்வு பெறும்வரை நமது கிராமத்தில் பெண்கள் பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணியாற்றினார். சிஸ்டர் சூசன்னா, தேவ கிருபை மற்றும் மதுரம் இவர்களைப் பற்றிய விபரம் நம்மிடம் இல்லை. இந்த மூன்று பேரும் இன்று உயிருடன் இல்லை.

இவர்களுக்குப் பிறகு S.S.L.C. முடித்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக பயிற்சி பெற்ற வந்தவர்கள் மிகச் சிலரே. ஆனால் கல்லூரி படிப்பு படித்து பட்டதாரி ஆசிரியர்களாக வந்தவர்கள் ஏராளம். காரணம் போக்குவரத்து வசதிகள் மற்றும் கல்லூரி படிப்புக்கான வசதி வாய்ப்புகள் பெருகி மாணவிகளை மேற்படிப்பு படிக்க உந்தியது. இவ்விதம் மேற்படிப்பு படித்து ஆசிரியர் ஆனவர்களையெல்லாம் இந்த கட்டுரையில் பட்டியலிட முடியவில்லை. ஆனால் இந்த வகையில் வரும் மூன்று பெண்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

முதலானவர், மரிய சிலுவை ஆசிரியையின் இளைய சகோதரி சிஸ்டர் பொனிப்பாஸ். இவர் நமது ஊரில் 6, 7, 8?ம் வகுப்புகள் படித்து தூத்துக்குடி புனித அலாய்சியஸ் மேல்நிலைப் பள்ளியில் S.S.L.C. படித்தார். பின்பு புனித அன்னம்மாள் மடத்தில் கன்னியராகி திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். 1967?ல் பட்டப் படிப்பை முடித்த இவர்தான் நமது



கிராமத்தின் முதல் பெண் பட்டதாரி. அந்த மடத்து நிர்வாகம் நடத்தும் பல பள்ளிகளில் தலைமை ஆசிரியையாக பணியாற்றி இன்று ஓய்வில் இருக்கிறார். 2001?ம் ஆண்டு தமிழ்நாடு அரசு அவருக்கு நல்லாசிரியர் விருது கொடுத்து கௌரவித்தது குறிப்பிடத்தக்கது. இரண்டாமவர் மரிய சிலுவை என்ற சிஸ்டர் குயிண்டின். இவர் சுவக்கின் நாடார் என்பவரின் மகள். பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் முதுகலைப் பட்டம் படித்து அதே கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியையாக பல ஆண்டுகள் கல்விப் பணியாற்றினார். பின்னாளில் மடத்திலிருந்து விலகி இப்பொழுது பணியிலிருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும். மூன்றாமவர் எனது மூத்த சகோதரியின் மகளான சிஸ்டர் புளோரா. இவர் 6, 7, 8?ம் வகுப்புகள் நமது ஊரிலும், S.S.L.C. ராயப்பன்பட்டியிலும் படித்துவிட்டு பெரியகுளம் கல்லூரியில் 1977?ல் பட்டப்படிப்பை முடித்தார். அதன்பின் புனித அன்னம்மாள் மடத்தில் கன்னியராக சேர்ந்து அவர்கள் நடத்தும் பள்ளிகள் பலவற்றில் பட்டதாரி ஆசிரியராக பணியாற்றியுள்ளார். இரண்டு ஆண்டுகள் ஆப்பிரிக்காவில் உள்ள லைபீரியா என்ற நாட்டிலும் ஆசிரியையாக பணியாற்றியுள்ளார். தற்பொழுது திருச்சி அருகிலுள்ள ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இந்த மூவருமே வெளியூர்களில்தான் ஆசிரியைகளாக பணியாற்றியுள்ளார்கள்.

இவர்களைத் தவிர வெளியூர்களிலிருந்து நமது கிராமத்தில் திருமணமாகி கல்விப் பணியாற்றிய பெண்கள் பலர் உள்ளனர். இவர்களுடைய பங்களிப்பை எந்தவிதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாது.

மேலே குறிப்பிட்ட தகவல்களிலிருந்து ஒன்று தெளிவாக தெரிகிறது. நமது கிராமத்திலிருந்து ஆசிரியர்களாக வந்த பெண்கள் அனைவருமே (பின்னாளில் வந்த ஒரு சிலரைத் தவிர) 5?வது வகுப்பிற்குப் பிறகு வெளியூர்களுக்கு நடந்து சென்றோ அல்லது விடுதிகளில் தங்கியோ படித்துள்ளார்கள். ஆசிரியர் பயிற்சிக்கு அனைவரும் வெளியூர்களுக்குத்தான் சென்றுள்ளனர். பெரும்பாலானவர்கள் அடைக்கலாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், தரங்கம்பாடி ஆகிய மூன்று இடங்களில் கன்னியர் நிர்வகித்த பயிற்சிப் பள்ளிகளில் படித்துள்ளனர். இளம் பெண்களை வீட்டிற்கு வெளியே அனுப்ப தயங்கும் பெற்றோர் உள்ள அந்த காலகட்டத்தில் இது எவ்வாறு சாத்திமாயிற்று? இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, கத்தோலிக்க கிறிஸ்துவ சமுதாயத்தில் நிலவிய பெண்கள் பற்றிய முற்போக்கு சூழல். இரண்டு, நமது கிராமத்தில் இருந்த புனித அன்னம்மாள் சபை கன்னியர்களின் ஆதரவு, ஆலாசனை மற்றும் வழிகாட்டுதல். அந்த சபைக்கும், சபையினருக்கும் தலை வணங்குகிறேன்.

# பொத்தக்காலன்விளையின் ஆசிரியர்கள்

நமது கிராமத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்று கல்விப் பணியாற்றிய பெண்கள் பற்றி கடந்த கட்டுரையில் எழுதியிருந்தேன். பெண்களைப் போன்று ஆண்களும் பலர் கல்விப் பணியாற்றியுள்ளனர். எண்ணிக்கையில் பெண்களைப் போல் அல்லாமல் ஆண்கள் ஒரு சிலரே படித்து ஆசிரியர் ஆனார்கள். அதற்குக் காரணம் ஆண்களுக்கு இருந்த கூடுதலான வாய்ப்புகள். அந்நாட்களில் சிறுவர்கள், இளைஞர்கள் பெரும்பாலும் தந்தைக்கு உதவியாக பனைத்தொழிலுக்கு சென்றார்கள். மற்றவர்கள் இலங்கைக்கு சென்று வியாபாரத்தில் ஈடுபட்டனர். இந்த வழக்கத்தை மீறி ஒரு சில இளைஞர்கள் வெளியூர்களுக்கு சென்று கல்வி கற்று ஆசிரியர்களாக நமது ஊரிலும் வெளியூர்களிலும் கல்விப் பணி ஆற்றினார்கள். அவர்களுடைய பங்களிப்பை இந்த கட்டுரையில் பார்ப்போம்.

இவர் பாக்கியம் முக்கந்தரின் பேரன்களில் ஒருவர். பிறந்தது அநேகமாக 1890 வாக்கில் இருக்கும். பிறக்கும் போதே சிறுபிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு ஒரு கால் ஊனமுற்று இருந்தார். அதனால் கம்பு ஊனிதான் நடப்பார். அதனால் நொண்டி வாத்தியார் என்று மாணவர்கள் குறிப்பிடுவார்கள். இவர் படித்தது என்னவோ ஐந்தாவது வரைதான். எங்கு படித்தார், எவ்வாறு ஆசிரியராக அரசு அனுமதித்தது போன்ற விபரங்கள் தெரியவில்லை. 1926?ல் நமது கிராமத்தில் ஆரம்பப்பள்ளி துவங்கியபோது இவருடைய பணியும் துவங்கியிருக்க வேண்டும். எனக்கு இரண்டாவது வகுப்பு பாடம் சொல்லிக் கொடுத்தது நினைவில் உள்ளது. பாடம் சொல்லிக் கொடுப்பதில் மற்ற ஆசிரியர்களைவிட எந்த விதத்திலும் குறைந்தவர் இல்லை. அவர் ஒரு இயற்கை வைத்தியரும் கூட. நோயாளிகளை சோதித்து நாடி பார்ப்பார். நாட்டு மருந்துகள் பற்றி ஆலோசனையும் கூறுவார். வயதில் மூத்த ஆசிரியர் என்பதால், அவருக்கு ஊரில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது. ஊர்ப் பிரச்சனைகள் பற்றி பரஞ்சோதி முக்கந்தர் இவரிடம் ஆலோசனை பெறுவதும் உண்டு. 1953?ல் ஓய்வு பெற்று 1965 வாக்கில் காலமாகியிருப்பார் என்பது என் கணிப்பு.

அடுத்து நமது கிராமத்தில் ஆசிரியராக பயிற்சி பெற்று சிறிது காலம் கல்விப் பணியாற்றியவர் ஞானாதிக்கம் உபதேசியாரின் மகனான சுவாமிநாதன். இவர் 1925?ல் பிறந்தார். நமது கிராமத்தில் ஆரம்பப் படிப்பை முடித்துவிட்டு

சாத்தான்குளத்தில் இருந்த R.C. நடுநிலைப் பள்ளியில் 6, 7, 8?ம் வகுப்புகள் வரை படித்தார். அதன்பின், 9, 10, 11?வது வகுப்புகள் (S.S.L.C.) வடக்கன்குளத்தில் படித்தார். ஆசிரியர் பயிற்சியை சாத்தூரில் படித்துள்ளார். ஆசிரியர் பயிற்சி முடித்ததும் செகண்டரி கிரேடு ஆசிரியராக சாத்தான்குளம் R.C. நடுநிலைப்பள்ளியில் பணியில் சேர்ந்தார். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு என்ன நினைத்தாரோ, பெற்றோர்களிடம் தெரிவிக்காமல் மிலிட்டரியில் சேர்ந்துள்ளார். 6, 7 ஆண்டுகளுக்குப் பிறகு தகப்பனார் மிலிட்டரி அதிகாரிகளிடம் பேசி மகனை ஊருக்கு கூட்டி வந்தார். ஊருக்கு வந்த சுவாமிநாதன் கருவேலம்பாடு கிராமத்தில் இருந்த ஆரம்பப் பள்ளியில் தலைமை ஆசிரியராக மீண்டும் பணியில் அமர்ந்தார். அங்கு பணியாற்றியபோது 1950?ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்திற்குப்பின் ஆசிரியர் பணியிலிருந்து விலகி பள்ளக்குறிச்சியில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பித்து நிர்வகித்து வந்தார். விவசாயத்திலும் கவனம் செலுத்தினார். 1967-70?ம் ஆண்டுகளில் பொத்தக்காலன்விளை கிராமத்தை உள்ளடக்கிய சாஸ்தாவி நல்லூர் பஞ்சாயத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் ஆரம்பித்து சில வருடங்கள் நடத்தினார். இப்பொழுது எல்லா வேலைகளிலிருந்தும் விலகி முழு ஓய்வில் உள்ளார்.

அடுத்து நமது ஊரிலிருந்து ஆசிரியராகி நமது ஊர் பள்ளிகளில் பல ஆண்டுகள் கல்விப் பணியாற்றிவர் எனது சகோதரரான ஆரோக்கியம் ஆசிரியர். இவர் பிறந்தது 1929?ம் ஆண்டு. ஆரம்பப் படிப்பை நமது கிராமத்தில் முடித்துவிட்டு 6, 7, 8?ம் வகுப்புகள் சாத்தான்குளத்தில் படித்தார். அதன்பிறகு திருச்சியில் ஆசிரியர் பயிற்சியை முடித்து சாத்தான்குளத்தில் தன் கல்விப் பணியை ஆரம்பித்தார். இரு ஆண்டுகளுக்குப் பிறகு நமது கிராமத்தின் ஆண்கள் ஆரம்பப் பள்ளியில் பணியைத் தொடர்ந்தார். ஹையர் கிரேடு ஆசிரியராக பணியைத் துவங்கியவர், இடையில் தனியாக S.S.L.C. தேர்வு எழுதி செகண்டரி கிரேடு ஆசிரியர் என்ற தகுதியும் பெற்றார். சில காலம் கொழுந்தட்டிலும் வேலை பார்த்தார். சொந்த ஊரில் ஆசிரியர் வேலை பார்க்கும் ஒரு ஆண் ஆசிரியருக்கு பள்ளியில் மாணவர்களுக்கு பாடம் சொல்லி கொடுப்பதோடு பணிமுடிவதில்லை. ஊர் சம்மந்தப்பட்ட எல்லா பிரச்சனைகளிலும் தலையிட்டு வம்புகளை விலை

கொடுத்து வாங்குவதோடு, கோயில் சார்ந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்து பங்கு குருவானவருக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்பது எழுதப்படாத ஒரு நியதி. இதை செம்மையாக செய்தார் ஆரோக்கியம் ஆசிரியர். அவர் மாத்திரமல்ல, அவருக்கு பின்னால் வந்த மற்ற ஆண் ஆசிரியர்களும் இதை பிறந்த மண்ணுக்கு செய்யும் ஒரு சேவையாக கருதி திறம்பட செய்தனர். இதற்காக இந்த கிராமம் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. ஆரோக்கியம் ஆசிரியர் 1987?ம் ஆண்டு பணியில் இருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றபின் கிராமத்தில் உள்ள கூட்டுறவு கடன் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினராகவும் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கத்தை வழி நடத்தினார். சில ஆண்டுகள் உபதேசியாராகவும், சக்கிறிஸ்டனாகவும் பணியாற்றி பங்குக் குருவானவருக்கு உதவி செய்தார். இறுதியாக 2012?ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

நமது ஊரிலிருந்து ஆசிரியராகி நமது ஊரிலேயே கல்விப் பணியாற்றிய இன்னொருவர் சவரிராயன் நாடார் மகன் ஜோசப். 1945?ல் பிறந்த இவர் 8?வது வரை படித்தது நமது ஊரில். அதன்பின் சாத்தான்குளத்தில் உறவினர் ஒருவருடைய வீட்டில் தங்கி T.D.T.A. புலமாடன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் S.S.L.C. முடித்தார். பாளையங்கோட்டையில் ஆசிரியர் பயிற்சி முடித்துவிட்டு, பத்தினாதர்புரம், வடக்கன்குளம், ஏரல் போன்ற வெளியூர்களில் பணியாற்றி உள்ளார். 1968 வாக்கில் நமது கிராமத்து பள்ளிக்கு மாற்றலாகி வந்து ஓய்வு பெறும் காலம் வரை இங்கேயே பணியாற்றினார். சில வருடங்கள் கொழுந்தட்டிலும் பணியாற்றினார். ஆரோக்கியம் ஆசிரியர் போல் இவரும் கோயில் சார்ந்த நிகழ்வுகள் அனைத்திலும் ஆர்வத்துடன் பங்கெடுத்து ஊருக்கும் கோயிலுக்கும் பெருமை சேர்த்தார். ஒரு சமயம் கோயில் உபதேசியார் திடீரென பணியிலிருந்து நின்றதும் ஜோசப் ஆசிரியர்தான் தற்காலிக உபதேசியாராகவும் சக்கிறிஸ்டனாகவும் பணியாற்றினார். நான் பணியின் நிமித்தம் வெளியூர்களில் இருந்தபோது கிராமத்து நடப்புகளையும் செய்திகளையும் அவ்வப்போது எனக்கு தெரியப்படுத்துவார். நான் தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்கில் சேர்மனாக இருந்தபோது அடிக்கடி என்னை சந்தித்து ஊர் பிரச்சனைகளப் பற்றி விவாதிப்பார். ஊரில் இருந்த இளைஞர்கள் மற்றும் சிறு வியாபாரிகளுடைய தேவைகள் பற்றி என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்து வர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு காரணமாக இருந்த நல்ல

உள்ளம் கொண்டவர் ஜோசப் ஆசிரியர். 2003 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற அவர் 2009 ஆம் ஆண்டு திடீரென மாரடைப்பால் இறந்து போனார்.

இவர்கள் தவிர நமது கிராமத்தில் இருந்து ஆசிரியர்களான ஆண்கள் சிலர் நமது ஊர் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் பணிக்கான இடங்கள் இல்லாததால் வெளியூர்களில் பணி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். இந்த வகையில் சிங்கராயன், சந்தன திரவியம், தேவதிரவியம், அவரது தம்பி தேவதாசன், சந்திரபோஸ் இவர்களைக் குறிப்பிடலாம். மேலும் மூவர் தஞ்சாவூர் அருகில் உள்ள திருவையாறு சென்று தமிழ் வித்வான் பட்டம் பெற்று, தமிழ் ஆசிரியர்களாக பணியாற்றினார்கள். அந்த மூவர், சந்தனபாண்டி என்ற சந்தனசவரிமுத்து, சந்தனச்சிலுவை, மற்றும் பிதேலிஸ். இவர்களும் வெளியூர்களில்தான் ஆசிரியர் வேலை செய்தார்கள். திரு. மாதவடியான் கதை தனிக்கதை. இவர் 5?வது வகுப்பு வரை நமது ஊரில் படித்துவிட்டு 6 ஆண்டுகள் சாத்தான்குளத்திற்கு நடந்து சென்று S.S.L.C. முடித்தார். அதன்பின் தன்னுடைய சுய முயற்சியால் இந்தி மொழியை கற்றுபட்டப்படிப்பு நிலைக்கு முன்னேறினார். முதலூர் உயர்நிலைப் பள்ளியில் இந்தி ஆசிரியராக சில ஆண்டுகள் பணியாற்றினார். 1967?ம் ஆண்டு தமிழ்நாடு அரசு இந்தி மொழியை பாடத்திட்டத்தில் இருந்து அகற்றியதும் இந்தி ஆசிரியர் பதவியும் ஒழிக்கப்பட்டது. அதன்விளைவாக மாதவடியான் ஆசிரியர், ஆசிரியர் பதவியிலிருந்து விலகி ஓமியோபதி மருத்துவரானார். வெளியூரிலிருந்து நமது கிராமத்திற்கு வந்து கல்வி பணியாற்றி நமது கிராமத்திலேயே குடியேறிவிட்ட சந்தனமரியான் ஆசிரியரையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இவர்களுக்குப் பிறகு ஆசிரியர்களானவர்கள் பெரும்பாலும் கல்லூரிக்கு சென்று பட்டப்படிப்பும் அதற்கு மேல் முதுகலை பட்டப்படிப்பும் படித்த பட்டதாரி ஆசிரியர்கள்.அவர்களில் இருவர் பரஞ்சோதி முக்கந்தரின் பேரன்களான ஸ்டீபனும்,சேவியரும் வெளியூர்களில் பணியாற்றி இன்று ஓய்வு பெற்றுவிட்டார்கள். அரிசி வியாபாரி செல்லத்துரை நாடாரின் மகன் ராஜா, கணக்குப்பிள்ளை என்ற அற்புதராஜின் மகன் மைக்கேல் லியோ, சந்தனாள் ஆசிரியையின் மகன் ஸ்தனிஸ்லாஸ் ஆகிய மூவரும் இன்னும் வெளியூர்களில் கல்விப் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் மைக்கேல் லியோ குறிப்பிடத்தக்கவர். இவர் முதுகலைப் படிப்புக்கும் மேலே ஆராய்ச்சி படிப்பு படித்து முனைவர் பட்டம் பெற்றவர் என்பது

நமக்கு பெருமை சேர்க்கக்கூடிய ஒன்று. நமது கிராமத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் நமது ஊரைச் சேர்ந்த ஆண்கள் மூவர் இன்று ஆசிரியர்களாக பணியாற்றுவது மகிழ்ச்சியை அளிக்கிறது. நமது ஊர் பள்ளிகளில் நமது ஊரைச் சேர்ந்த மூன்று ஆண்கள் ஒரே சமயத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றுவது இதுவே முதல் முறையாகும். மிகவும் வரவேற்கத்தக்கது.

மருத்துவத் தொழிலும் ஆசிரியர் தொழிலும் மிக உன்னதமான தொழில் என்று சொல்வதுண்டு. மருத்துவர்கள் உயிர் காக்கும் மேலான தொழில் செய்கின்றனர். அந்த மருத்துவர்களை உருவாக்குவதே ஆசிரியர்கள்தான். அந்த இரு தொழில்களிலும் சமீப காலமான ஒரு வகையான வியாபாரநோக்கு நுழைந்துவிட்டாலும் அடிப்படையில் அவை உன்னதமான தொழில்தான். அதற்காக நமது கிராமமும், கிராம மக்களும், நமது ஊர் ஆசிரியைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகவும் நன்றிக் கடன்பட்டுள்ளனர். அவர்களின் தன்னலமற்ற சேவையால் பயன் பெற்றோர் ஆயிரம் ஆயிரம் பேர். அவர்களில் நானும் ஒருவன். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கங்களை சமர்ப்பிக்கிறேன்.

புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி
பொத்தக்காலன்விளை



## பொத்தக்காலன்விளையின் அரசு பணியாளர்கள்

நமது கிராமத்தில் படித்த பெண்களும் ஆண்களும் பெரும்பாலும் ஆசிரியர்களாக பணியாற்றினார்கள். ஒருசிலரே அரசுப் பணியைத் தேர்ந்தெடுத்து அரசு அலுவலர்களாக ஆனார்கள். இவர்களில் சிலர் உயர்பதவி பெற்று கிராமத்திற்கு பெருமை சேர்த்தார்கள். அவர்களைப் பற்றி இந்த கட்டுரையில் காணலாம்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு பிரிட்டிஷ் ஆட்சியின்போது இந்திய ராணுவத்தில் சேர்ந்து இரண்டாம் உலகப்போரில் பங்கெடுத்தவர் வேதக்கண் நாடார். இவர் கிராமத்தின் நிலமக்காரர் குடும்பத்தைச் சேர்ந்தவர். எப்போது ராணுவத்தில் சேர்ந்தார் என்ற தகவல் நம்மிடம் இல்லை. ஆரம்பத்தில் சாதாரண சிப்பாயாக சேர்ந்தவர் ஒரு பதவி உயர்வு பெற்றுள்ளார். இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்த பிறகும் ஓரிரு ஆண்டுகள் ராணுவத்தில் இருந்தார். நாடு சுதந்திரம் அடைவதற்கு சிறிது முன்பு ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று ராணுவம் வழியாக கிடைத்த தகவல் சிவில் வேலையையும் உதறிவிட்டு கிராமத்தில் சகோதரர்களோடு சேர்ந்து ஒரு மளிகைக் கடையை ஆரம்பித்தார். அவர் ஆரம்பித்த மளிகைக் கடை இன்றும் கிராமத்தில் அவருடைய வாரிசுகளால் தொடர்ந்து நடத்தப்படுகிறது. வேதக்கண் நாடார் நமது கிராமத்தின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டவர். அவர் 1979ம் ஆண்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இரண்டாம் உலகப்போரின் போது ராணுவத்தில் பணியாற்றிய இன்னொருவர் தந்தை டென்சில் ராஜாவின் தகப்பனார் S.M.S.மாணிக்கம் அவர்கள். இவர் ராணுவத்தில் சிப்பாயாக அல்லாமல், ஒரு எழுத்தராக பணியாற்றினார். உலகப்போர் முடிந்ததும், ராணுவத்தில் இருந்து விலகி விட்டார். பின்பு சில ஆண்டுகள் நமது கிராமத்தின் முனுசீப்பாக பணியாற்றினார். 2001ம் ஆண்டு காலமானார்.

பிற்காலத்தில் சுதந்திர இந்தியா ராணுவத்திற்கு ஆட்கள் எடுத்தபோது ராணுவத்தில் சேர்ந்தவர்கள் பிலிப் மற்றும் மரிய உபகாரம் ஆகிய இருவர். 1934ம் ஆண்டு பிறந்த பிலிப், 6வது வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரை படித்தது சாத்தான்குளத்தில். 1948ம் ஆண்டு சாத்தான்குளம் R.C. பள்ளியில் இருந்து E.S.L.C. எழுதிய மாணவர்களில் தேர்ச்சி பெற்றவர்கள் இருவர் மட்டுமே. அவர்களில் ஒருவர் பிலிப். மிகுந்த சிரமத்திற்கிடையே S.S.L.C. முடித்த பிலிப் 1956ம் ஆண்டு ராணுவத்தில் சாதாரண சிப்பாயாக சேர்ந்தார். மூன்றுமுறை பதவி உயர்வு பெற்று சுபேதார் என்ற நிலைக்கு உயர்ந்தார். 1971ம் ஆண்டு இந்தியா?பாகிஸ்தான் போரின் போது நேரிடையாக போர்க்களத்தில் இறங்கி சண்டையிட்ட பெருமை இவருக்கு உண்டு. பெரும்பாலும் இந்திய எல்லைப் பகுதியான காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம் போன்ற இடங்களில் பணியாற்றினார். 1982ம் ஆண்டு ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றபின் தூத்துக்குடியில் உள்ள ஒரு நிறுவனத்தில் பாதுகாப்பு அதிகாரியாக பல ஆண்டுகள் பணியாற்றி இன்று முழு ஓய்வில் உள்ளார். மரிய உபகாரம் பற்றி முழு விபரம் நம்மிடம் இல்லை.

என்னுடைய சகோதரரான சிங்கராயன் முதலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார ஆய்வாளராக பல ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். நமதூர் நடுநிலைப் பள்ளியிலிருந்து .E.S.L.C பொதுத் தேர்வு எழுதிய முதல் மாணவ குழுவைச் சேர்ந்தவர் சிங்கராயன். மணப்பாட்டில் S.S.L.C. படிப்பை முடித்து காந்தி கிராமத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சியை படித்தார். 1973ம் ஆண்டு சுகாதார ஆய்வாளராக பணியில் சேர்ந்து 1998ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார். 2006 முதல் 2011 வரை நமது கிராமத்தை உள்ளடக்கிய சாஸ்தாவி நல்லூர் பஞ்சாயத்து தலைவராகவும் பணியாற்றினார். பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் நமது கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், ஆதரவற்றோர், விதவைகள் போன்றோருக்கு அரசின் நலத்திட்டங்கள் சேரும் வகையில்

அவர்களோடு சேவையாற்றி வருகிறார். கிராமத்திலுள்ள வின்செண்ட் தே பால் சபையை திறம்பட நிர்வகித்து அந்த சபையின் வழியாக பலர் பயன்பெற உழைக்கிறார். இன்று நமது கிராமத்தில் சமூக சேவைக்காக ஒருவரை அங்கீகரித்து நினைவுப் பரிசு கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவராக இருப்பார்.

வடக்குத் தெரு சவரியப்பன் நாடாரின் மூத்த மகன் கபிரியேல் சேவியர் புதுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தேனி வளர்க்கும் அலுவலராக பணியாற்றினார். ஓய்வு பெறுவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு 1998ல் இறந்து போனார். ராஜமனுவேல் நமது ஊரில் E.S.L.C. படித்துவிட்டு முதலூரில் S.S.L.C. முடித்தார். அதன்பின் காந்தி கிராமத்தில் விவசாயம் சம்மந்தமான படிப்பில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் பெற்றார். 1966ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் விவசாய இலாகாவில் உதவி விவசாய அதிகாரியாக பணியில் சேர்ந்தார். அதன்பின் 1991ல் ஒரு பதவி உயர்வு பெற்று 2001 ல் ஓய்வு பெற்றார். அவரது துணைவியார் எஸ்தர் விஜயா செவிலியர் படிப்பில் முதுகலைப் பட்டப்படிப்பு படித்து அரசு பொது மருத்துவமனையில் செவிலியராக பணியில் சேர்ந்தார். படிப்படியாக பதவி உயர்வு பெற்று சென்னை மருத்துவக் கல்லூரியில் துணை பேராசிரியராக பணியாற்றி 2005ம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப்பின் இன்று வரை பெங்களூரில் ஒரு செவிலியர் கல்லூரியின் முதல்வராக பணியாற்றி வருகிறார்.



வாத்தியார் குடும்பத்தைச் சேர்ந்த பீட்டர் ஜோசப் நமதூர் நடுநிலைப் பள்ளியில் 1961ம் ஆண்டு E.S.L.C. பொதுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். 8 பேர் தேர்வு எழுதி 8 பேரும் வெற்றி பெற்று வரலாறு படைத்தது நமதூர் நடுநிலைப்பள்ளி. ஆனால் அந்த ஆண்டோடு E.S.L.C. பொதுத் தேர்வு முறை நிறுத்தப்பட்டது. E.S.L.C.

பொதுத் தேர்வு எழுதிய பீற்றர் முதலூரில் S.S.L.C. முடித்தார். அதைத் தொடர்ந்து பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். 1970ம் ஆண்டு செர்வீஸ் கமிஷன் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியில் உதவியாளராக சேர்ந்தார். பதவி மூப்பு மூலம் பதவி உயர்வு பெற்று செர்வீஸ் கமிஷன் அலுவலகத்திலேயே அண்டர் செக்ரட்டரி என்ற பதவிக்கு உயர்ந்தார். அந்த பதவியிலிருந்து 2005ம் ஆண்டு ஓய்வு பெற்றார். சென்னைவாழ் பொற்பைநகர் மக்கள் நலச்சங்கம் ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை அதன் ஆலோசகராக இருந்து திறம்பட செயலாற்றி வருகிறார். அவருடைய துணைவியார் மேரி சரோஜா ஒரு முதுகலைப் பட்டதாரி. பட்டதாரி ஆசிரியையாக தனது பணியைத் தொடங்கினார். சென்னையில் அரசு பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியையாக பல ஆண்டுகள் பணியாற்றினார். 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அவரை ஈரோடு மாவட்ட கல்வி அதிகாரியாக நியமித்து பதவி உயர்வு கொடுத்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 2013 ஆம் ஆண்டு அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர்கள் மத்தியப்பிரதேசம் பெர்காம்பூர் மாவட்ட கலெக்டராக பணியாற்றும் ஜரின் சிந்தியாவின் பெற்றோர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஞானாதிக்கம் உபதேசியார் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்டீபன்ராஜ் பீற்றர் ஜோசப்பின் வகுப்புத் தோழன். அவரைப்போலவே ஸ்டீபன் ராஜும் நமது ஊரில் E.S.L.C. படித்து முதலூரில் S.S.L.C. எழுதி பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். செர்வீஸ் கமிஷன் மூலம் போட்டித் தேர்வு எழுதி அதில் தேர்ச்சி பெற்று தமிழ்நாடு அரசுப் பணியில் இளநிலை உதவியாளராக சேர்ந்தார். படிப்படியாக பதவி உயர்வு பெற்று 1995?ம் ஆண்டு மாவட்ட வணிக வரி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2005ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அவருடைய துணைவியார் லூசியா மேரி ஒரு முதுகலை பட்டதாரி. இவரும் கணவரைப்போல்

செர்வீஸ் கமின் மூலம் போட்டித் தேர்வில் வெற்றி பெற்று சென்னை தலைமைச் செயலகத்தில் முதுநிலை உதவியாளராக பணி அமர்த்தப்பட்டார். 2000?ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் துணைச் செயலாளராகவும் முதலமைச்சரின் நேரடி உதவியாளராகவும் நியமிக்கப்பட்டார். 2005?ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப்பின் குடும்பத்தோடு சென்னையில் வசித்து வருகின்றனர்.

பேரின்ப நாடாரின் மகன்களில் ஒருவரான ஜேசுதுரை 1968?ம் ஆண்டு முதலூரியில் S.S.L.C. படித்து முடித்தார். அதன்பின் புனித சவேரியார் கல்லூரியில் பட்டப்படிப்பை படித்து முடித்த கையோடு 1973?ம் ஆண்டு மத்திய அரசின் தொலைத்தொடர்பு இலாகாவில் தொலைபேசி பணியாளராக குன்னூரில் சேர்ந்தார். இரண்டுமுறை பதவி உயர்வு பெற்று திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் பணியாற்றினார். 2012?ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பணியில் இருக்கும்போது சக ஊழியரான பிரேமா என்ற பெண்ணை விரும்பி திருமணம் செய்தார். ஜேசுதுரையைப் போலவே பிரேமாவும் மத்திய அரசின் தொலைத்தொடர்பு இலாகாவில் தொலைபேசி பணியாளராக பணியில் அமர்ந்து இன்று சீனியர் செக்ஷன் மேலாளராக பணியாற்றி வருகிறார். இவர்கள் கோயம்புத்தூரில் வசித்து வருகிறார்கள்.

Y. வியாக அந்தோனி நாடாரின் மகள்களில் ஒருவரும் தொழிலதிபர் ரோக் ஜெயராஜ் அவர்களுடைய சகோதரியுமான எட்வின் நிர்மலா ராமநாதபுரம் அரசு நர்சிங் கல்லூரியின் முதல்வராக பணியாற்றுவது நமது கிராமத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். நிர்மலா தனது ஆரம்பப் பள்ளியில் படிப்பை நமது ஊரிலும், உயர்நிலைப் படிப்பை முதலூரிலும் முடித்துவிட்டு சென்னை அரசு மருத்துவ கல்லூரியில் செவிலியர் பயிற்சியை முடித்தார். 1983?ம் ஆண்டு சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் செவிலியராக பணியில் அமர்ந்தார்.

பணியில் இருக்கும்போது செவிலியர் சம்மந்தமான பட்டப்படிப்பையும் படித்து முடித்தார். அதைத் தொடர்ந்து கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் பயிற்சியாளராக 10 ஆண்டுகள் பணியாற்றினார். இந்த அனுபவத்தை வைத்து தமிழ்நாடு அரசு அவரை 2014?ம் ஆண்டு அரசு நர்சிங் கல்லூரியின் முதல்வராக நியமித்து கௌரவித்தது.

திரு. சிலுவைத் தங்கம் நாடார் ? மரிய ரோசாள் இவர்களுடைய மகனும், கள்ளிக்காட்டாரின் பேரனுமான விக்டர் நமது கிராமத்தின் முதல் இன்ஜினியரிங் பட்டதாரி ஆவார். 1980?ம் ஆண்டு முதலூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் S.S.L.C. முடித்த விக்டர் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தில் விவசாய இன்ஜினியரிங் பாடத்தை விருப்பப் பாடமாக எடுத்து 1986?ல் பட்டப்படிப்பை முடித்தார். படித்து முடித்த உடனேயே தமிழ்நாடு அரசு விவசாய இன்ஜினியரிங் இலாகாவில் உதவி இன்ஜினியராக பணியில் சேர்ந்தார். பல ஊர்களில் பணியாற்றிவிட்டு இன்று கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் அதே இலாகாவில் பணியாற்றி வருகிறார். பணியில் இருந்து கொண்டே மேற்படிப்பு படித்து M.B.A., M.Tech., போன்ற முதுகலைப் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

திரு. சின்ன உபதேசியார் வழி மரபினருடைய பேரன் திரு. **S.**மோகன் அவர்கள் தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் போலீஸ் அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

மேற்கண்ட குறிப்புகளிலிருந்து நமக்கு ஒன்று தெளிவாக தெரிகிறது. அதாவது நமது கிராமத்திலிருந்து அரசு பணிக்கு சென்றவர்கள் பெரும்பான்மையோர் தங்களுடைய சுய முயற்சியில் யாருடைய உதவியும், வழிகாட்டுதலும் இன்றிதான் அரசு பணிக்கு சென்றுள்ளனர். ஆனால் இன்றைய நிலைமை வேறு. வசதியும், வாய்ப்புகளும் பெருகியுள்ளன. வழிகாட்டக்கூடிய பெற்றோர்களும் உள்ளனர். ஆகையால், முன்பைவிட இன்றைய கால கட்டத்தில் அதிகம் பேர் அரசுப் பணியில் சேரலாம். அதற்கு படித்த இளைஞர்கள், இளம்

# நிலமக்காரர் மரிய சவரிமுத்து நாடார்

கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தைத் தழுவி பொத்தக்காலன்விளை கிராமத்தில் குடியேறிய ஆரம்பகால குடும்பங்களில் மரிய சவரிமுத்து நாடார் குடும்பமும் ஒன்று. இவர் ஒரு பெரிய நிலக்கிழார். இவருக்கு பல ஏக்கர் நிலமும், அவற்றில் பனை மர தோட்டமும், புளிய மரங்களும் ஏராளம் இருந்தன. அதனால் அவர் நிலமக்காரர் என் அழைக்கப்பட்டார். இவருடைய துணைவியார், அன்னை மரியாளின் தீவிர பக்தை. இவருக்கு கிராமத்தில் இருந்த அன்னையின் ஓலைக்கோவிலை எடுத்துவிட்டு நல்ல ஒரு கட்டிட ஆலயமாக மாற்றிட வேண்டுமென்ற தீராத ஆசை. தன்னுடைய விருப்பத்தை கணவரிடம் கூற, அவரும் அன்னைக்கு ஆலயம் கட்ட தன்னுடைய நிலத்திலிருந்து ஒரு பகுதியை தானமாகக் கொடுக்க முன் வந்தார். ஊர் மக்களும் இந்த தான நிலத்தை ஏற்றுக்கொண்டு அன்னைக்கு அன்றைய தேவைக்குத் தகுந்தவாறு ஒரு அழகான ஆலயத்தைக் கட்டினார்கள். இப்போது உள்ள ஆலயம் போலவே பலிபீடத்தை ஒட்டி வடக்கும் தெற்கும் இரு அரங்குகளும் பீடத்திற்கு நேரே கிழக்கே நீண்ட மண்டபம் என சுமார் 300 பேர் அமரக்கூடிய அளவுக்கு ஆலயத்தை அமைத்தார்கள். வெளி உதவி எதுவும் இன்றி ஊர் மக்களின் அன்பளிப்பாலும், சிறுவர் முதல் பெரியவர் வரை அனைத்து மக்களின் உடல் உழைப்பாலும் உருவாக்கப்பட்டது. இந்த ஆலயம் 1840லிருந்து 1850ம் ஆண்டு வரையில் உள்ள காலகட்டத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் தேவையைக் கருதி ஆலயத்தைக் ஒட்டி கிழக்குப் பகுதியில் சுமார் 50 பேர் அமரக்கூடிய ஒரு அரங்கும், அதை ஒட்டி கிழக்கே ஒரு மேடையும் கட்டப்பட்டன. ஆலயமணி மேடைக்கு கிழக்கே இருந்த பெரிய புளியமரத்தில் இரண்டு பெரிய மரக்கட்டைகளால் மேடை அமைக்கப்பட்டு, அதில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதை ஒட்டி தெற்குப் பகுதியில் ஒரு கிணறு தோண்டப்பட்டு கோயில் கிணறு என அழைக்கப்பெற்றது. இந்தக் கிணறுதான் ஊரிலுள்ள அனைவருடைய குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்த ஜீவ ஊற்று.

இந்த கிணறுக்கு சில சிறப்பு அம்சங்கள் இருந்தன். அந்தப் பகுதியில் இருந்த கிணறுகளில் எல்லாம் தண்ணீர் துவர்த்து, சுவை குறைந்தாலும் கோயில் கிணற்றின் தண்ணீர் சுவை எந்தக் காலத்திலும் குறைந்ததில்லை. அதேபோல, பெரிய வறட்சி காலங்களிலும் கூட இந்த கிணற்றில் தண்ணீர் வற்றியதில்லை.

கிணற்றின் அடியில் மேற்குப்புறத்திலிருந்து ஒரு நிலத்தடி நீரோட்டம் இருந்ததாகவும், அந்த நீரோட்டத்தின் வேகத்தை கட்டுப்படுத்த ஒரு பெரிய அம்மிக்கல்லை வைத்து அடைத்து வைத்ததாகக் கூறப்படுகிறது. கிணற்றின் மேலிருந்து பார்த்தால் அந்த அம்மிக்கல் தெரியும்.

புதிய ஆலயம் கட்டுவதற்கு நிலம் கொடுத்து உதவிய நிலமக்காரருக்கு ஊர் மக்கள் நன்றிக்கடனாக அவருக்கு கோவில் திருவிழாவின் போது முதல் மரியாதை செலுத்த தீர்மானித்தனர். ஜனவரி மாதத்தில் நடைபெறும் மாதாவின் திருவிழாவின்போது முதல் நாள் மாலையில் கொடியேற்றத்திற்குப் பிறகு ஊர்மக்கள் எல்லோரும் கோவில் மேடையில் கூடுவார்கள். அப்போது அன்னை மரியாளின் நிச்சயதார்த்தத்தை குறிக்கும் வகையில் தமிழர் மரபுப்படி மங்கலமாக எல்லோருக்கும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு கொடுப்பது வழக்கம். அன்று நிலமக்காரருக்கு முதலில் வெற்றிலை, பாக்கு கொடுத்து மரியாதை செய்வது என ஊர் மக்கள் தீர்மானித்தனர். இந்த மரியாதை நிலமக்காரர் மரிய சவரிமுத்து நாடாருக்கு மாத்திரமல்ல, காலா காலத்திற்கும் அவருடைய சந்ததியினருக்கும் கொடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஒரு கட்டு வெற்றிலையோடு ஏழு ராத்தல் (அன்றைய எடை) பாக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த சம்பிரதாயம் 100 ஆண்டுகளுக்குமேல் எந்தவித தடையின்றி கடைபிடிக்கப்பட்டது. ஆனால் 1960 வாக்கில் கிராமத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. நாடு சுதந்திரம் பெற்று ஜனநாயக கொள்கைகளும், சுயமரியாதைக் கொள்கைகளும் அதிகமாகப் பேசப்பட்ட நிலையில் புதிய தலைமுறையினர் இந்த சம்பிரதாயத்தைப் பற்றி கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். நிலமக்காரர் குடும்பத்திற்கு முதல் மரியாதை செய்யும் முறையை நிறுத்த வேண்டும் என்ற கோஷம் படிப்படியாக உயர்ந்து, இறுதியாக 1963 ஆம் ஆண்டு அந்த சம்பிரதாயம் அடியோடு நிறுத்தப்பட்டது.

ஊர் மக்களுக்கு வெற்றிலை, பாக்கு வினியோகிக்கும் பழக்கமும் நின்று போனது. பின்னாளில் 1979 ஆம் ஆண்டு தந்தை நவமணி அடிகளார் பொறுப்பேற்றபின் கொடியேற்ற நாளன்று ஊர் மக்களுக்கு வெற்றிலை, பாக்கு கொடுக்கும் பழக்கத்தை மீண்டும் துவக்கி வைத்தார். ஆனால் அவருக்குப்பின் 1982 -ல் இந்தப் பழக்கமும் நின்று போனது. காலம் காலமாக தலைமுறை தலைமுறையாக தங்களுக்கு கிடைத்து வந்த மரியாதை திடீரென நிறுத்தப்பட்டதும் நிலமக்காரரின் வாரிசுகள் அதிருப்திபட்டு தங்களது எதிர்ப்பை பல வகையிலும்

வெளிப்படுத்தினர் என்றாலும் இறுதியில் கிராமத்தின் பெரும்பாலானோர் விருப்பத்தை மதித்து மாற்றத்தை ஏற்றுக்கொண்ட நிலமக்காரரின் வாரிசுகளை பாராட்டத்தான் வேண்டும்.

நிலமக்காரர் மரிய சவரிமுத்து நாடார் 19?ம் நூற்றாண்டின் இறுதியில் இறந்திருக்க வேண்டும். தன்னுடைய சொத்தில் ஒரு பகுதியை கோவிலுக்கு நன்கொடையாக கொடுத்த பிறகும், ஏராளமான நிலபுலன்களோடு வசதியாக வாழ்ந்தார். அவருக்குப்பிறகு அவருடைய மகன் சூசைமரியான் நாடார் தகப்பனாரின் சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வந்தார். இவருக்கு 5 ஆண்கள், இரண்டு பெண்கள் பிறந்தார்கள். இவர்களில் யாரும் இன்று உயிருடன் இல்லை. இந்த 7 பேர்களின் பிள்ளைகளில் ஒரு சிலரும் அடுத்த தலைமுறை அதற்கும் அடுத்த தலைமுறை (5?வது மற்றும் 6?வது தலைமுறை) என பலரும் நிலமக்காரர் குடும்பம் என்ற அடைமொழியோடு கிராமத்தில் சிறப்போடு வாழ்ந்து வருகின்றனர்.

நிலமக்காரர் கோயில் கட்டுவதற்கு நிலம் அன்பளிப்பாக அளித்த அதே கால கட்டத்தில் இன்னொரு குடும்பமும் (சந்தனச்சிலுவை நாடாரின் முன்னோர்கள்) கோவிலுக்கும், கோவிலைச் சுற்றி வாழ்ந்த குடும்பங்களின் தேவைக்கும் நிலம் அன்பளிப்பாக கொடுத்துள்ளது. அந்த குடும்ப வாரிசுதாரர் ஒருவரின் கூற்றுப்படி, அவருடைய முன்னோர்கள் சுமார் 45 சென்ட் சொந்த நிலத்தையும், அதை ஒட்டி இருந்த நத்தம் நிலத்தையும் கோவிலுக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள். ஆனால் இரண்டு குடும்பங்கள் நிலம் தானம் கொடுத்திருக்கையில், ஒரு குடும்பத்திற்கு மாத்திரம் ஏன் முதல் மரியாதை கொடுக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. என்னுடைய யூகம் என்னவென்றால், நிலமக்காரர் ஆரம்பத்தில் கோவிலுக்கு நிலம் கொடுத்து, அதில் ஆலயத்தை கட்டி ஊர் மக்கள் நிலமக்காரருக்கு முதல் மரியாதை கொடுப்பது என்ற தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும். அதற்குப்பின் பின்னாளில் சந்தனச் சிலுவை நாடார் குடும்பம் நிலமக்காரரின் நிலத்தை ஒட்டி இருந்த தங்களுடைய நிலத்தையும் கோவிலுக்கு கொடுத்திருக்க வேண்டும். ஆக, தற்போது உள்ள ஆலயம், ஆலய வளாகம், பங்கு குருவானவர் இல்லம், கன்னியர் இல்லம், தேர் வீதிகள் மற்றும் வடக்கே உள்ள பள்ளிகள் வளாகம் இவை எல்லாமே மேற்சொன்ன இரண்டு குடும்பங்கள் அன்பளிப்பாக கொடுத்த நிலத்தில்தான் அமைந்துள்ளன.

பழைய கோவில் கட்டியபோது அதைச்சுற்றி கிழக்கிலும் தெற்கிலும் பலர் வீடு

கட்டி குடியிருந்தனர். அப்படி வீடு கட்டி வாழ்ந்த குடும்பங்கள் 25-30 இருக்கும். புதிய ஆலயம் கட்டி முடிந்து வரும் தருவாயில், இந்த குடும்பங்கள் தங்கள் வீடுகளை ஊரில் வேறு இடங்களுக்கு மாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஒருசிலர் தாங்களாகவே முன் வந்து வேறு இடங்களில் மனை வாங்கி சென்று விட்டனர். மற்றவர்களுக்கு கோவில் நிர்வாகத்தால் மாற்று மனை கொடுக்கப்பட்டு அவர்கள் அங்கு குடியேறினர். அந்த மக்களின் இந்த தியாகமும், ஒத்துழைப்பும் மகத்தானது. அவர்களது பூரண ஒத்துழைப்பால் கோவில் வளாகம் சீரமைக்கப்பட்டு, புதிதாக மதில் சுவரும் கட்டப்பட்டது. இதனால் கோவில் வளாகமும், தேர் வீதியும் இன்று அற்புதமாக அமையப் பெற்றுள்ளன. இந்த நிகழ்வுகளிலிருந்து ஒரு கருத்தை உறுதியாகக் கூறலாம். அன்னை மரியாளுக்கும், அவளுடைய ஆலயத்திற்கும் அள்ளிக் கொடுக்கும் குணம் இன்று நேற்று தோன்றியதல்ல. இந்த கிராமத்தில் மக்கள் குடியேறிய நாளிலிருந்து தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு வரும் வழக்கம். இது இந்த கிராம மக்களின் ரத்தத்தில் ஊறிப்போய்விட்டது என்றே கூற வேண்டும்.



**திருக்கல்யாண தாய் திருத்தல வரலாற்று சுவடுகள் :**

***நமது திருக்கல்யாண மாதா ஆலயம் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு. இவோன் அம்புரோஸ் ஆண்டகை அவர்களால் 12.05.2013 அன்று திருத்தலமாக அறிவிக்கப்பட்டது***

# பரஞ்சோதி முக்கந்தர்

ஐரோப்பிய மிஷ்னரிகளான பிஷப் கால்டுவெல் ஜார்ஜ் பெடிட் ( GEORGE PETTITT) மற்றும் பின்னாளில் "தமிழ்நாட்டின் நாடார்கள் வரலாறு " என்ற புத்தகத்தை எழுதிய பேராசிரியர் ராபர்ட் ஹார்டுக்ரேவ் (Robert Hardgrave) இவர்கள் எல்லோரும் தங்களுடையபுத்தகங்களில் ஒரு கருத்தை மிக தெளிவாகவும் உறுதியாகவும் பதிவு செய்துள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள் "19-ம் நூற்றாண்டின் நடுவில் நாடார்கள் வாழ்ந்த திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் மற்றும் நாங்குநேரி பகுதிகளில் பல கிராம மக்கள் முழுவதும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறின. அவ்விதம் மாறினதும் அந்த கிராமத்தின் நிர்வாகத்தை கவனிக்க மிஷ்னரிகளின் உதவியோடு ஒரு குழுவை நிறுவினார்கள். இந்த ஏற்பாட்டின் விளைவாக அந்த கிராமங்களில் ஒற்றுமையும், சமாதானமும் நிலவியது. அந்த மக்களின் நிலையும் சமுதாயத்தில் மேம்பட்டது. இந்த ஒற்றுமையும் மேம்பாடும் பிற நாடார் கிராமங்களில் இருந்ததில்லை" என்று இந்த நிர்வாக ஏற்பாடு பொத்தக்காலன்விளையிலும் நிறுவப்பட்டது. இங்கே நிர்வாக குழுவுக்கு பதிலாக முக்கந்தர் என்ற ஒருவரை தலைவராக தேர்ந்தெடுத்து அவருடைய மேற்பார்வையின் கீழ் ஊர் மற்றும் கோயில் நிர்வாகம் கொண்டு வரப்பட்டது.

ஊர் முக்கந்தராக பொறுப்பேற்பவர் ஊர் மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவராக இருந்தார். அதோடு நிலபுலன்களோடு ஓரளவு வசதி படைத்தவராகவும் இருந்தார். 19-ம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் பாக்கியம் முக்கந்தர் என்பவர் பல ஆண்டுகள் தலைவராக இருந்துள்ளார். இவருடைய கல்லறை இன்றும் அவருடைய வாரிசுகளால் பேணப்பட்டு நினைவுச்சின்னமாக திகழ்கிறது. அவருக்குப் பின்னர் ஒன்றிரண்டு பேர் முக்கந்தராக பொறுப்பேற்றுள்ளார்கள். அவர்களைப் பற்றி சொல்லும்படியாக எதுவும் இல்லை.

1930-35 வாக்கில் பொறுப்பேற்ற பரஞ்சோதி முக்கந்தர் ஒரு பெரிய நிர்வாக திறமைசாலி, சாதனையாளர் எனலாம்.

பரஞ்சோதி முக்கந்தர் பற்றி எழுதும் போது எனக்கு நினைவில் வருவது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தான். அதிகம் படிக்காத காமராஜர் தன்னுடைய இயற்கையான அறிவாலும், திறமையாலும் ஒரு மாநிலத்தின் முதல் மந்திரியாகவும், இந்நாட்டின் ஒரு பெரிய தேசிய கட்சியின் தலைவராகவும் எவ்வாறு வெற்றிக் கொடி நாட்டினாரோ அதே போல பள்ளிக்குச்சென்று படித்து அறியாத பரஞ்சோதி முக்கந்தர் தன்னுடைய நாட்டு அறிவு மற்றும் விவேகத்தின்

மூலம் (Native Wisdom) பொத்தக்காலன்விளை கிராமத்தையும், அதன் மக்களையும் வெற்றிகரமாக பல ஆண்டுகள் நிர்வகித்து வழி நடத்தினார்.

பரஞ்சோதி முக்கந்தர் எந்த ஆண்டு பொறுப்பேற்றார் என்ற விபரம் தெரியவில்லை. ஆனால் பொத்தக்காலன்விளை தனிப்பங்காக அறிவிக்கப்பட்டு தந்தை பங்காரு அடிகளார் பங்குக்குருவாக வருவதற்கு முன்பே, அதாவது 1933 வாக்கில், அவர் முக்கந்தராக பொறுப்பேற்றிருக்க வேண்டும். அவருடைய பணிகளில் முக்கியமானது கோயில் சொத்துக்களை பராமரிப்பது, மற்றும் பங்கு நிர்வாகத்தில் பங்குக்குருவானவருக்கு உதவுவது. அந்தக்காலத்தில் கோயிலுக்கு சொந்தமாக கட்டிடங்களும் புஞ்சை நிலங்களும் இருந்தன, அந்த புஞ்சை நிலங்களில் உடைமரங்கள், பனை மரங்கள், புளிய மரங்கள் நிறைய இருந்தன. இவை எங்கே உள்ளன, எத்தனை உள்ளன என்ற விபரங்கள் பரஞ்சோதி முக்கந்தருக்கு அத்துப்படி. அவற்றை ஒவ்வொரு ஆண்டும் குத்தகைக்கு கொடுப்பது, குத்தகை தொகையை முறையாக வசூலிப்பது எல்லாம் முக்கந்தர் தலைமையில் தான். குத்தகை கொடுப்பதற்கு ஒரு ஒழுங்கு முறையை பின்பற்றினார். அதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமை முன் அறிவிப்பு கொடுத்து கோயில் மேடையில் ஊர் மக்கள் கூட்டம் நடத்தி அந்தக் கூட்டத்தில் ஏல முறையில் குத்தகை கொடுப்பார். இந்த முறையால் எந்தவிதமான குறைபாடுகளும் கூறுவதற்கு வாய்ப்பு இருந்ததில்லை.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் நடைபெறும் ஊர்த்திருவிழாவை தடையின்றி நடத்துவதில் பங்குக்குருவானவருக்கு அடுத்தப்படியான பொறுப்பு முக்கந்தருடையது. திருவிழா செலவை ஈடுகட்ட திருவிழா வரி நிர்ணயித்து அதை வசூலிப்பது, கொடியேற்ற நாளிலிருந்து கொடியிறக்க நாள் வரை நடைபெறுகிற நிகழ்வுகளில் பங்குக்குருவானவருக்கு உதவுவது, திருநாள் கடைகள் ஏலம் விடுவது, சப்பரங்கள் தூக்குவதற்கு ஆள் சேர்த்தல், தேரை ஒழுங்குடன் இழுத்துச் செல்ல தேர்ச்சக்கரங்களுக்கு சக்கை இடுதல், உப்பு போன்ற காணிக்கை பொருட்களை உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லுதல், தேர் சப்பரங்களுக்கு தீ வட்டி கொடுத்தல், காணிக்கை பணத்தை எண்ணி கணக்கு கொடுத்தல் என நுணுக்கமான பல பணிகள் இருந்தன. அந்த காலத்தில் மாதாவின் தேர் சப்பரம் தவிர்த்து ஒவ்வொரு புனிதருக்கும் ஒரு சப்பரம் என சிறியதும், பெரியதுமாக 10 சப்பரங்கள் இருந்தன. அவற்றை அலங்காரம் செய்வதும், தோள்மேல் சுமந்து சென்று பவனியாக தேர் வீதிகளில் கொண்டு வருவதும் ஒரு பெரிய பணி. ஆனால் மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு பணிக்கும் ஒன்றிரண்டு பேரை ஏற்பாடு செய்திருப்பார் முக்கந்தர். அதனால் ஒவ்வொரு பணியும் கன கச்சிதமாக நடைபெறும். அதோடு புதிய ஆலய பணி தொய்வின்றி தொடர்ந்து நடைபெற்று

முடிவு பெறுவதில் பெரும் பங்கு ஆற்றினார். 1957-வாக்கில் ஆலய பணிக்கு நன்கொடை பிரிப்பதற்காக தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் இலங்கை சென்ற போது அவருடன் சென்று அங்கு இருந்த நம் மக்களை திரு.Y.V மூலம் அனைவரையும் சந்தித்து பெரும் நன்கொடை வழங்க தூண்டியதும் முக்கந்தர் தான்.

பரஞ்சோதி முக்கந்தரின் நிர்வாகத் திறமையின் சிகரமாக விளங்கியது அவர் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு கூறும் பாங்குதான் என்றால் மிகையாகாது. ஊரில் நடக்கும் அடிதடி சண்டைகள், பெண்களை பாதிக்கும் சம்பவங்கள், திருட்டுகள், சொத்து தகராறுகள், கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள், குடும்ப சண்டைகள் இவற்றால் ஏற்படும் பிரச்சனைகளை முக்கந்தர் தலைமையில் ஊர் கூடி விசாரித்து தீர்ப்பு கூறுவது, தவறு செய்தவருக்கு தண்டனை கொடுப்பது என்ற பாரம்பரியம் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்தது. பாதிக்கப்பட்ட யாரும் 4 அணா (25 காசு) பீஸ் கட்டி தனக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்கலாம்.

அதைத் தொடர்ந்து முக்கந்தர் ஒரு ஞாயிற்று கிழமையன்று ஊர்க்கூட்டத்தை கூட்டுவார். கூட்டம் பெரும்பாலும் ஊர் நடுவிலுள்ள சாலையோரம் மரத்தடியில் அல்லது ஒரு கட்டிடத்தின் முன் வராண்டாவில் நடைபெறும். சில சமயங்களில் குருவானவரின் பங்களாவிலும் நடைபெறும். பரஞ்சோதி முக்கந்தரின் சம வயதுடைய செட்டியார் என்று அழைக்கப்பட்ட அந்தோணி முத்து நாடார், சிந்தாமணியார் என்று அழைக்கப்பட்ட ராஜகன்னி மரியான் நாடார் இவர்கள் பெரும்பாலும் பிரசன்னமாகிவிடுவார்கள். முக்கந்தருக்கு அடுத்ததாக ஞானாதிக்கம் உபதேசியார், அவருக்கு அடுத்தபடியாக கணக்கபிள்ளை என்று இலங்கையிலும் அதன் பின் ஊர் மக்களாலும் அழைக்கப்பட்ட திரு.வியாக அந்தோணி நாடார் அவர்களும் நியாயம் பேசுவதும், குற்றத்தை விசாரித்து நியாயமான தீர்ப்பு வழங்க துணை நிற்பதும், வறியவர்களுக்கு ஆதரவளித்து நியாயம் பேசுவதிலும் இவர்கள் பங்கெடுப்பார்கள். பாக்கியம் நாடார் என்பவர்தான் முக்கந்தரின் ஏவல்களை நிறைவேற்றிக் கொடுக்கும் உதவியாளர். வழக்கு விசாரணை மற்றும் தீர்ப்பு என்பது ஏறக்குறைய ஒரு நீதிமன்றத்தில் நடப்பது போலவே இருக்கும். பெரும்பாலான வழக்குகள் ஒரு கூட்டத்திலேயே முடிந்துவிடும். ஆனால் சில வழக்குகள் வாரக்கணக்கில், மாதக்கணக்கிலும் இழுத்தடிக்கும். இரு பக்கமும் சூடு தணியட்டும் என்று, வேண்டுமென்றே தீர்ப்பை தள்ளி வைப்பார். சில வேளை சம்மந்தப்பட்ட இருபக்கமும் சம அளவு ஆதரவு இருந்தாலும் தள்ளிப் போகும். தீர்ப்பு பொதுவாக குற்றம் செய்ததாக நிரூபிக்கப்பட்டவர் பொது மன்னிப்பு கேட்க வேண்டும். அல்லது ஒரு தொகையை கோயிலுக்கு அபராதமாக செலுத்த வேண்டும். மிகப்பெரிய

குற்றமாக கருதப்பட்டால் தவறு செய்தவரை மொட்டை அடித்து கரும்புள்ளி குத்தி ஊரைச்சுற்றி வர வேண்டும் என்று தீர்ப்பு கூறுவதும் உண்டு. ஆனால் இந்த தண்டனை மிக அரிது. எந்த தீர்ப்பானாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும், கட்டுப்பாடும் இருந்தது. இது பரஞ்சோதி முக்கந்தரின் நேர்மைக்கும் பாராபட்சமற்ற குணத்திற்கும் சான்று.

இந்த முறையால் கிராமத்தில் குற்றச்செயல்கள் குறைவாக இருந்தன. தவறு செய்பவர்களிடமும் தவறு செய்ய தூண்டுபவர்களிடமும் ஒரு பயம் இருந்தது. கிராமத்தில் கட்டுபாடும் நிலவியது. எல்லாவற்றிற்கும் மேலாக சிறு குற்றச்செயல்களுக்கெல்லாம் காவல் நிலையத்திற்கு செல்வதும், நீதிமன்ற படியேறுவதும் அதனால் ஏற்படும் பணச் செலவும், காலவிரையமும் தவிர்க்கப்பட்டது. பரஞ்சோதி முக்கந்தரின் நீண்ட நெடிய வெற்றிப் பயணம் 1981-ஆம் ஆண்டு ஒரு முடிவுக்கு வந்தது. அந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் தேதி ஒரு திங்கட்கிழமையன்று தன் 97வது வயதில் அவர் காலமானார். எந்த குருவானவரோடு தோளோடு தோள் நின்று 12 ஆண்டுகள் தொடர்ந்து கோயிலின் நிர்வாகத்தை கவனித்தாரோ அதே தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரின் தலைமையில் பல குருக்களும் கன்னியர்களும் வெளியூர் மக்களும் கலந்து கொண்ட முக்கந்தரின் இறுதி யாத்திரை அவரின் செல்வாக்கை பறைசாற்றுவதாக இருந்தது. அவருடைய ஆயுளுக்குப் பின்னால் யாரும் முக்கந்தர் பொறுப்பு ஏற்கவில்லை. அந்த பழைய நிர்வாக முறையும் அவரோடு மறைந்தது. ஆனால் காலம் மாறினாலும் ஆட்கள் மாறினாலும் அன்று பரஞ்சோதி முக்கந்தர் போன்ற பெரியோர்களால் போடப்பட்ட அடித்தளத்தினால் இன்றும் கிராமத்தில் ஒற்றுமை, கட்டுப்பாடு, தலைமைக்கு பணிதல் போன்ற நற்குணங்கள் நிலைத்து நிற்கின்றன.

# ஞானாதிக்கம் உபதேசியார்

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் கத்தோலிக்க கிறிஸ்தவ மதம் இந்தப் பகுதியில் பரவியபோது அந்த மக்களுடைய ஆன்மீக தேவைகளை கவனிப்பதற்கு போதிய குருக்கள் இருந்ததில்லை. அதற்காக ஒவ்வொரு ஊரிலும் உபதேசியார் என்று ஒருவரை நியமித்தார்கள். இந்த உபதேசியார்தான் கோவில் வழிபாடு, திருமுழுக்கு, திருமணம், கல்லறை அடக்கம், ஞான உபதேசம் சம்மந்தமான எல்லா வேலைகளையும் கவனித்து வந்தார். சுருக்கமாக சொன்னால் உபதேசியார் என்பவர் ஊரில் சர்வ வல்லமை பொருந்தியவராக திகழுந்தார். பொத்தக்காலன்விளையைப் பொருத்தமட்டில் உபதேசியாரும் முக்கந்தரும் சம அதிகாரத்தோடு ஊர் நிர்வாகத்தை கவனித்தனர். அந்த நாட்களில் முதல் முறையாக கிறிஸ்தவராக மாறிய ஏசுவடியான் என்பவர் சாத்தான்குளம் அருகில் உள்ள கருங்கடல் கிராமத்தில் உபதேசியராக நியமிக்கப்பட்டார். சில வருடங்களுக்குப் பிறகு அங்கிருந்து வெளியேறி பொத்தக்காலன்விளை கிராமத்தில் குடியேறி முதல் உபதேசியராக பொறுப்பேற்றார். பொத்தக்காலன்விளையில் குடியேறிய ஒரு சில ஆரம்ப கால குடும்பங்களில் இவருடைய குடும்பமும் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இவருடைய காலத்திற்கு பிறகு அவரது மகன் மரிய சவரிமுத்து உபதேசியார் பொறுப்பேற்றார். இவர் மிகவும் புகழோடும் செல்வாக்கோடும் திகழ்ந்தார். இவருடைய காலத்தில்தான் ஓலைக் குடிசையாக இருந்த மாதா கோவில் ஓடு போட்ட கோவிலாக கட்டப்பட்டது. இவருக்குப்பிறகு அவரது மூத்த மகன் ஏசுவடியான் என்பவர் உபதேசியானார். இந்த இரண்டாவது ஏசுவடியான் உபதேசியார் 19-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20-ம் நூற்றாண்டின் துவக்கம் வரை உபதேசியராக இருந்திருக்க வேண்டும். இவருடைய மகன் ஞானாதிக்கம் உபதேசியார். இவரும் பரஞ்சோதி முக்கந்தரும் சம வயதுடையவர் ஆனதால் - அநேகமாக ஞானாதிக்கம் உபதேசியார் 1930 வாக்கில் பொறுப்பேற்றிருக்க வேண்டும். இந்த ஞானாதிக்கம் உபதேசியாரைப் பற்றி இந்த இதழில் பார்ப்போம்.

ஞானாதிக்கம் உபதேசியார் 1885-ம் ஆண்டு பிறந்தார். இளம் வயதிலேயே கொழும்பு சென்று வியாபாரம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. அவரது தந்தையின் சகோதரியை (அதாவது அத்தையை) தெற்கு நரையன்குடியிருப்பைச் சேர்ந்த

நடேசன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள். இந்த நடேசன் என்பவர் கிறிஸ்தவராக மதம் மாறி சற்குணம் என்ற பெயரோடு கொழும்பு நகரில் வியாபாரம் செய்து நல்ல செழிப்போடு வாழ்ந்தார். அவருடைய அழைப்பை ஏற்று இளம் ஞானாதிக்கமும் அவரது தம்பி பரஞ்சோதியும் கொழும்பு சென்றார்கள். அங்கு சில ஆண்டுகள் வியாபாரம் செய்து செல்வம் சேர்த்து ஊருக்கு வந்து போய் இருந்தார்கள். இறுதியாக 1925-30 வாக்கில் ஊர் திரும்பி தந்தையின் வழியில் உபதேசியார் பொறுப்பை ஏற்றார். இவருடைய குடும்பம் மிகப் பெரியது. முதல் தாரத்திற்கு பிறந்தது 5 பிள்ளைகள்- மூன்று ஆண்கள் இரண்டு பெண்கள். ஆண்களில் ஒருவர் இலங்கை குடியுரிமை பெற்று அங்கேயே தங்கி விட்டார். மற்றும் இருவர் இலங்கையில் வியாபாரம் செய்து ஓய்வு காலத்தில் ஊருக்கு திரும்பினார்கள். பெண்களில் ஒருவர் புனித அன்னம்மாள் சபையில் கன்னியாஸ்திரியாக சேர்ந்து அந்த சபையின் உறுப்பினராகவே கடைசி வரை வாழ்ந்தார்கள். உபதேசியாருடைய முதல் தாரம் இறந்த பின், இரண்டாவதாக ஆறுமுகநேரியைச் சேர்ந்த சாந்தம்மாள் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்தார். அவர்களுக்கு மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் பிறந்தனர். ஆண்களில் ஒருவர் வடக்கன்குளத்தில் உயர்நிலைப்பள்ளியில் பயின்று, இடைநிலை ஆசிரியரானார். பின்னாளில் பஞ்சாயத்து தலைவராகவும் ஆனார். இளையவர்தான் பேராசிரியர் ஜேசுதுரை. அவருடைய துணைவியார் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக நியமிக்கப்பட்ட திருமதி.பத்மினி ஜேசுதுரை அவர்கள். இவர்களைப்பற்றி இன்னொரு கட்டுரையில் விரிவாக எழுத நினைத்துள்ளேன். இந்த குடும்பத்தைச் சேர்ந்த பலர் பிரகாசபுரம், ஏரல், கட்டப்பாடு, பழவேற்காடு போன்ற வெளி ஊர்களுக்கும் சென்று அங்கு உபதேசியர்களாக பணியாற்றியுள்ளனர். பாரம்பரியம் மிக்க இந்த குடும்பம் பரந்து விரிந்த பழமையான ஒரு ஆலமரம்போல் காட்சியளிக்கிறது.

ஞானாதிக்கம் உபதேசியார் ஒரு கம்பீரமான தோற்றம் உடையவர். நல்ல உயரம். உயரத்திற்கேற்ற பருமன். குரல் வெண்கலக்குரல். அவரைப் பார்க்கும்போது ஒரு பயம் கலந்த மரியாதை தோன்றும். கோவில் வழிபாட்டின்போது பேசினாலோ அல்லது குழந்தைகள் அழுதாலோ ஒரு குரல் கொடுப்பார். அனைவரும் கப்சிப் ஆகிவிடுவார்கள். அவர் ஜெபம் சொல்லும் பாணியே தனியாக இருக்கும். ஞாயிறு மாலை ஆராதனையின் முன்பு "மிகவும் மிகுந்த மதுரமாயிருக்கிற அர்ச்சிக்கப்பட்ட தேவ நற்கருணையே ஸ்தோத்திரம்" என்று ஆரம்பிக்கிற ஜெபத்தை பாடலாக சொல்ல ஆரம்பித்தால் வெளியில்

இருப்பவர்களும் கோயிலுக்குள் வந்துவிடுவார்கள். அப்படி ஒரு கர்ச்சனையும் பக்தியும் கலந்து இருக்கும். 1935-ம் ஆண்டு பொத்தக்காலன்விளை தனிப்பங்கானதும் உபதேசியாருடைய சுமை ஓரளவு குறைந்தது. அதன்பின் பங்கு குருவானவரோடு இணைந்து தன் பணியைத் தொடர்ந்தார். அதே சமயம் தன் நெல் அரிசி வியாபாரத்தையும் கவனித்து வந்தார். தந்தை பங்காரு அடிகளார் பங்குக் குருவானவராக இருந்த காலம் வரை ஒரு பிரச்சனையும் இல்லாமல் சென்றது. 1949-ம் ஆண்டு தந்தை மஸ்கரனாஸ் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து இருவருக்கும் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றிக்கொண்டே இருந்தன. தந்தை மஸ்கரனாஸ் கொஞ்சம் பிடிவாதக்காரர். எதிலும் தான் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கும். அந்த கால கட்டத்தில் புதிய ஆலயத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டு வேலைகள் மந்தமாக நடந்து சென்றன. அதை துரிதப்படுத்தும் நோக்கத்தோடு 1950-ம் ஆண்டு தன் சொந்த முயற்சியில் சொந்த செலவில் கொழும்பு சென்றார். அங்கு நம்மூர் மக்களை சந்தித்து புது ஆலயப் பணிக்காக நன்கொடை வசூலித்தார். தான் வசூலித்த நன்கொடை பணத்தை பங்குத் தந்தையிடம் கொடுத்தால் அவர் வேறு வகைக்கு செலவழித்துவிடுவார். ஆலயப்பணிக்கு தடங்கல் ஏற்படும் என கருதி பணத்தை பங்குத் தந்தையிடம் கொடுப்பதை தவிர்த்தார். அது மாத்திரமல்ல விஷ்யத்தை முக்கந்தரிடம் கூறி ஆலோசித்து இருவருமாக சேர்ந்து உபதேசியார் கொண்டு வந்த பணத்தைக் கொண்டு புதிய ஆலயத்தின் முன் கோபுரத்தின் அடியில் அஸ்திவாரத்தை பலப்படுத்துவதற்கு செலவழித்தனர்.

இந்த நிகழ்வு தந்தை மஸ்கரனாஸ் அடிகளாரை வெகுண்டு எழச் செய்தது. அவருடைய கோபம் எல்லை மீறியது. விளைவு உபதேசியாரின் பதவி பறிக்கப்பட்டது. அதோடு திருச்சபையிலிருந்தே நீக்கி வைத்தார். அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் பல இன்னல்களை கொடுத்தார். உபதேசியாரின் பிள்ளைகள் பள்ளியிலும் கல்லூரியிலும் பயிலுவதற்கு தடைக்கற்களைப்போட்டார். அருட்சாதனங்கள் கொடுப்பதற்கும் மறுத்தார். உபதேசியார் தன் பங்கிற்கு தானாகவே பதவி விலகுவதாக எழுதிக்கொடுத்தார். இந்த சூழ்நிலையில் முக்கந்தர் ஆரம்பத்தில் நடுநிலையில் இருந்தாலும் இறுதியில் பங்குக்குருவோடு சேர்ந்துக் கொண்டார். பங்கு மக்களில் பெரும்பாலோர் இந்த பிரச்சனையை சாமியாருக்கும் உபதேசியாருக்கும் இடையே நடக்கும் தனிப்பட்ட சண்டை என்றே பார்த்தனர். இந்த சண்டையில் ஊர் பாரம்பரியத்தின்படி அவர்கள் பங்குக்குருவானவருக்கு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் உபதேசியாரின் குடும்பம் பெரிய செல்வாக்கான குடும்பம் ஆனதால் அவருக்கும் ஒரு பகுதியினர் ஆதரவு அளித்தனர். இதனால் ஊர்

இரண்டானது. பதட்டம் தொற்றிக் கொண்டது. இவ்வளவு நடந்து தான் அவமானப்படுத்தப்பட்ட பிறகும் உபதேசியார் வேறு மதத்திற்கு மாறுவது பற்றியோ அல்லது வேறு சபையை நிறுவுவது பற்றியோ யோசிக்கவில்லை. மாறாக தன்னுடைய வியாபாரத்தில் அதிக கவனம் செலுத்தினார். ஊர் விவகாரங்களில் ஆர்வம் காட்டுவதை தவிர்த்தார். அவருடைய பொறுமைக்கு பலன் கிடைத்தது. 1953-ம் ஆண்டு- மஸ்கரனாஸ் சுவாமியார் மாற்றலாகி தந்தை சிலுவை அடிகளார் பங்குத்தந்தையாக பொறுப்பேற்றார். இன்னொரு கட்டுரையில் கூறியிருந்ததுபோல் தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரின் அணுகுமுறையால் சண்டைகள் ஓய்ந்து ஊரில் சமாதானம் நிலவியது.

இந்த நேரத்தில் ஞானாதிக்கம் உபதேசியார் சம்மந்தப்பட்ட ஒரு சுவையான விஷ்யத்தை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் 1992-ம் ஆண்டு தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் சேர்மனாக பொறுப்பேற்றபோது அங்கு எனக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. அந்த வங்கியின் பங்குத்தாரர்களின் பட்டியலில் பொத்தக்காலன்விளை ஞானாதிக்கம் நாடாரும் அவரது தம்பி பரஞ்சோதி நாடாரும் ஆரம்பகால பங்குதாரர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தனர். இதை அறிந்து எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. என்னுடைய கிராமத்திலிருந்து இருவர் வங்கியின் பங்குதாரர்களாக இருக்கிறார்கள் என அறிந்ததும் நான் மேலும் ஒரு அடி உயர்ந்துவிட்டதாக உணர்ந்தேன். வங்கியின் இயக்குனர்களிடமும் மற்ற வங்கி அதிகாரிகளிடமும் இந்த விஷ்யத்தைக் கூறி என்னுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டேன். ஆனால் பங்குதாரர்களின் முழு விபரமும் இல்லாததால் பங்குகள் முடக்கப்பட்டு உயிரற்ற பங்குகளாக கணக்கில் காட்டப்பட்டிருந்தன. நடந்தது இது தான். 1920-ம் ஆண்டு வாக்கில் அந்த வங்கி தொடங்கப்பட்டபோது அதை தொடங்கிய பெரியவர்கள் கொழும்பு நகருக்குச் சென்று வங்கியின் ஆரம்ப மூலதனத்தை பிரிப்பதற்காக அங்கு வாழ்ந்து வந்த நாடார் வணிகர்களை அணுகியுள்ளார்கள். அந்த சமயத்தில் சகோதரர்கள் இருவரும் ஒரு தொகையை கொடுத்து பங்குகள் வாங்கியுள்ளார்கள். ஆனால் இந்த தொகையை நாடார் வங்கி (மெர்க்கண்டைல் வங்கியின் ஆரம்பகால பெயர்) ஆரம்பிப்பதற்கு கொடுத்த நன்கொடையாக கருதி அதை முழுவதும் மறந்துவிட்டார்கள். இதனால் அவர்களுக்கு பங்குதாரர்கள் என்ற உரிமையில் கிடைக்க வேண்டிய உரிமைப் பங்குகள் மற்றும் லாபப்பங்கீடுகள் எதுவும்-கிடைக்காமல் போய்விட்டது. இது என் கவனத்திற்கு வந்ததும் உரிய ஆவணங்களைப் பெற்று பங்குகளை வாரிசுகளுக்கு பெயர் மாற்றம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தேன்.

1953-ம் ஆண்டு புதிய பங்குக் குருவானவர் வந்து சண்டைகள் ஓய்ந்தாலும் ஞானாதிக்கம் உபதேசியார் மீண்டும் அந்த பதவிக்கு வருவதில் எந்த ஆர்வமும் காட்டவில்லை. அவருக்குப் பிறகு உபதேசியார் என்ற பதவியின் அதிகார எல்லையும் முக்கியத்துவமும் தலைகீழாக மாறிப்போய்விட்டது. இந்த மாறிய சூழ்நிலையில் அவர் தன்னுடைய வியாபாரத்தையும் ஓய்வையும் நாடியதில் ஆச்சரியமில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு வியாபாரத்தையயும் விட்டுவிட்டு ஊர் வளர்ச்சிக்கும் ஊரில் நடக்கும் பஞ்சாயத்து மற்றும் அனைத்து காரியங்களிலும் முக்கந்தருக்கு அடுத்தப்படியாக ஞானாதிக்கம் உபதேசியார் அவர்கள் தன் செல்வாக்காலும் வலிமையாலும் அனைவருக்கும் தீர்ப்பு வழங்க உதவியாக இருந்தார். அவரோடு இருவருக்கும் உதவியாக Y. வியாக அந்தோணி நாடார் அவர்கள் கணக்கப்பிள்ளை அந்தஸ்தில் இருந்து ஏழை, எளியவர்களுக்கு ஆதரவாக நடுநிலையோடு பேசுவதும் குற்றங்களை விசாரித்து எடுத்துச்சொல்வதிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு **Y.V** ஒரு நீதிமான் என்று பெயர் பெற்றவர். வழக்கு நடக்கும் ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தினநாள் இரவு ஞானாதிக்கம் உபதேசியார், Y. வியாக அந்தோணி நாடார், பஞ்சுப்பெட்டியார் என்ற பரஞ்சோதி நாடார், சவரியான் நாடார் அனைவரும் திண்ணைகளில் ஒன்றாக அமர்ந்து அடுத்தநாள் வழக்கைப் பற்றி கலந்தாலோசிப்பதும், ஊர் நிலவரங்களையும் வளரச்சிப் பணிகள் பற்றியும் இரவு நெடு நேரம் ஆலோசிப்பதும் உண்டு. அடுத்தநாள் வழக்கு விசாரணை நேர்மையாக நடக்க இது மிகவும் உதவியது. அவருடைய நீண்ட வாழ்க்கை பயணம் இறுதியாக 1974-ம் ஆண்டு மே மாதம் 22-ந் தேதி முடிவுற்றது. ஒரு சில மாதங்களிலேயே அவருடைய துணைவியாரும் அவரோடு சேர்ந்துவிட்டார்கள். அதோடு ஒரு சகாப்தம் முடிவுற்றது.

— — —

**<u>நற்செயல்கள் :</u>**


*நம்மை நேசிக்க யாரும் இங்கு பிறக்கவில்லை என்பது பொய்!!!*

*மற்றவரை நேசிக்க நாம் பிறந்திருக்கிறோம் என்பதே மெய்!!*

*வன்முறை இல்லாமல் கொல்லும் அழகான ஆயுதம்தான் அன்பானவர்களின் பிரிவு*

*அன்பானவர்களை இழந்துவிடாதீர்கள்.*

## கணக்கப்பிள்ளை Y.வியாக அந்தோனி நாடார்



கி.பி.1919-ஆம் ஆண்டில் திரு.ஏசுவடியான்நாடார் அவர்களின் மகனாக பிறந்தவர் திரு.Y.வியாக அந்தோனி நாடார் அவர்கள் அக்காலத்து E.S.C.C படித்து தனது இளம் பருவத்தில் 20 வது வயதில் அதாவது 1939 ஆம் ஆண்டில் பிழைப்பிற்காக கொழும்பு சென்று அங்கு திரு.அன்னகுருசு நாடார் வகையருக்கள் நடத்தி வந்த இரும்பு கடையில் கணக்கு எழுதுவதற்காக சம்பளத்திற்கு வேலையில் சேர்ந்தார். பின்பு இவர்கள் தனியாகப் பிரிந்து கடை ஆரம்பித்த போது திரு.ஏசுவடியான் நாடார் அவர்கள் கடையில் பணி செய்தார். திரு.Y.V.அவர்களோடு பிறந்த இரண்டு பேரில் மூத்த சகோதரர் Y.ஜெபமாலை நாடார் அவர்கள் கொழும்பு சென்ற கையோடு ஊர் திரும்பிவிட்டார். இன்னொரு சகோதரி சொர்ணம்மாளும் சூசையப்ப நாடார் அவர்களும் இரட்டைப்பனை அருகில் அதாவது தற்போது ஆலய கொடிமரம் இருக்கின்ற இடத்தில் ஒரு ஓட்டு வீட்டில் வசித்து வந்தார்கள். இளமையின் வேகமும் , புத்திசாலித்தனமும், நல்ல எண்ணமும் கொண்ட அவர்கள் தன்னுடைய அபார திறமையால் அனைவரிடமும் மதிப்பு மிக்கவராகவும், அனைவராலும் கணக்கபிள்ளை Y.V என்று செல்லமாக அழைக்கப்பட்டார்கள். தன்னுடைய அயராத உழைப்பால் வளர்ந்து NO:10,ஸ்கின்னர்ஸ் ரோடு, சவுத் கொழும்பில் St.அந்தோணி ஹார்டுவேர்ஸ் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்கள். அன்றைய பங்குத்தந்தை M.S.அந்தோணி அடிகளார் ஆலயத்திற்கு நன்கொடை வசூல் செய்ய கொழும்பு சென்று திரு.Y.V அவர்களோடு தங்கி, கொழும்பு நகரில் கணக்கப்பிள்ளை Y.V யோடுதான் சென்று நிதி வசூல் செய்வதுண்டு. தொடர்ச்சியாக வந்த பங்குத்தந்தையர்களோடு நல்ல தொடர்பு கொண்டு இறைபணி செய்ததுண்டு.

திரு.Y.V.அவர்கள் சமூக பணிகளும் மக்களுக்கு ஆற்றி வந்தார். இவர் ஒரு சுதந்திர போராட்ட தியாகி. இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடி சிறை சென்றவர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சுதந்திரப் போராட்டத்தில்

ஈடுபட்டதற்காக நமது கிராமத்திலிருந்து தியாகிகள் பென்சனுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட தியாகியான இவர் தனக்கு வந்த தியாகிகள் பென்சனைக் கூட வேண்டாம் என ஒதுக்கித் தள்ளியவர். நாட்டிற்காக போராடியதற்கு எனக்கு கைம்மாறு தேவையில்லை என ஒதுக்கி தள்ளியவர். பின்பு நாடு சுதந்திரம் அடைந்த பின்பு பெருந்தலைவர் காமராஜர் அவர்களோடு தொடர்பு கொண்டவராய் காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக செயலாற்றினார். ஆதலால் இவருக்கு "காங்கிரஸ் மண்டை" என்ற இன்னொரு பட்டப்பெயரும் உண்டு. இப்படியாக தேவனுக்காகவும் தேசத்துக்காகவும் பணி செய்து வந்த இவருக்கு ஒரு திருப்பம் நிகழ்ந்தது.

திரு.Y.V.அவர்களுடைய சகோதரர் ஜெபமாலை இறந்ததன் விளைவாகவும் சிலரின் தடைகளாலும் கொழும்பு பயணம் ரத்தானது. இதன் விளைவாக நமது கிராமத்திலேயே நிரந்தரமாக தங்கவேண்டிய சூழ்நிலை ஆனது. இந்த நேரத்தில் 1964 ஆம் ஆண்டு அடித்த தனுஸ் கோடி புயலின் தாக்கம் நமது கிராமத்திலும் பலத்த சேதத்தை உருவாக்கியது. தேர்ப்பரை சின்னாபின்னமாகியது. மரங்கள் வீடுகள் என்று உருக்குலைந்து போயிற்று. இதனால் Y.V.அவர்களின் சகோதரி சொர்ணம்மாளின் வீடு மிகவும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் சொர்ணம்மாளும் அவரது கணவர் மற்றும் குடும்பத்தார் அனைவரும் தாங்கள் வாழ்ந்து வந்த இடத்தை நமது கோவிலுக்கு விட்டுவிட்டு சென்னையின் அருகே பழவேற்காடு பகுதியில் நக்கத்துரவூர் என்ற இடத்தில் பிழைப்புக்காக சென்றுவிட்டார்கள். இன்றும் தாங்கள் பிறந்த ஊரை மறவாமல் நமது கிராமத்திற்கு அவருடைய சந்ததிகள் வந்து செல்கின்றனர் என்பதை நாம் அறியலாம். இன்றும் கிட்டத்தட்ட பதினைந்து குடும்பங்கள் அதாவது நமது கிராம மக்கள் பழவேற்காடு பகுதியில் வசித்து வருகிறார்கள். இவர்கள் நமது சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச்சங்கத்தில் உறுப்பினர்களாக செயல்பட்டு வருகிறார்கள். இன்றும் இந்த பகுதியில் வசிக்கும் நமது கிராம மக்கள் நமது ஊரில் பெண் எடுப்பதும் கொடுப்பதும் வழக்கத்தில் உள்ளது. ஆக திரு.Y.V.அவர்களின் குடும்பத்தைச்சாரந்தவர்கள் நமது ஊரின் ஆலயப்பணிக்கு உதவுவதும் நிலங்களை கொடுப்பதும் இன்றுவரை அவரின் சந்ததிகள் மூலமாகவும் நடந்தேறி வருகின்றது என்பதை நாம் அறிய முடிகின்றது. மேலும் நமது கிராமத்தில் நடக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் சமரசம் செய்வதிலும் திரு.Y.V அவர்கள் முக்கிய பங்காற்றி வந்தார். ஊரில் சம அதிகாரத்தில் இருந்த முக்கந்தர் பரஞ்சோதி நாடாரும், ஞானாதிக்கம் உபதேசியாரும் கருத்து வேறுபாடு கொண்டு எதிரும் புதிருமாக பல வழக்குகளில் அடிக்கடி மோதிக்கொள்வதுண்டு.அப்போதெல்லாம் கணக்கப்பிள்ளை Y.V

அவர்கள்தான் நடுநிலையோடு பேசி சமாதானம் செய்து வழக்குகளைத் தீர்த்து வைப்பதுண்டு. ஊரில் Y.Vஅவர்களுக்கு தோளோடு தோள் கொடுத்து உதவியதும், பக்கபலமாக இருந்து செயல்பட்டவர்களில் முக்கியமானவர்கள் திரு.வேதக்கண் நாடார், தேவாமிர்தம் நாடார், மரிய உபகாரம் நாடார், பஞ்சுபெட்டியார் என்று அழைக்கப்பட்ட பரஞ்சோதி நாடார், பண்ணைய முற்றத்தைச் சார்ந்த இருதயம் நாடார், மரிய சவரிமுத்து நாடார் மற்றும் சைக்கிள் கடை திரவியம் நாடார் போன்றோர்.

பல வேளைகளில் குடும்ப சொத்து தகராறு பிரச்சனைகளுக்காக பங்குத்தந்தை சிலுவை அந்தோணி அடிகள் மற்றும் காகு அடிகளார் அவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்க திரு Y.V அவர்களிடம் ஒப்படைப்பது உண்டு. இப்படியாக நமது சாத்தான்குளம் வட்டாரத்திலும் நிறைய குடும்ப பிரச்சனைகளைத் தீர்த்து சமாதானம் செய்து வைப்பது உண்டு. சில சமயம் நடக்கும் வழக்குகளில், தன் சொந்த உறவுகள், மாமன், மச்சான் என்று பலர் பாதிக்கப்படுவதுண்டு. ஆனாலும் Y.Vஒருபோதும் தன்னுடைய நடுநிலையிலிருந்து பின் வாங்கியதில்லை. ஆண்டவருடைய பார்வையில் நீதிமானாக வாழ்ந்து, நல்ல பெயரோடும், புகழோடும் மக்கள் மத்தியில் நிலைத்து நின்றவர். 1970 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் இப்பூவுலகை விட்டு, தான் பெற்ற ஒன்பது பிள்ளைகளையும், குடும்பத்தையும் விட்டு மறைந்தார். இவர் இந்த உலகத்தை விட்டு பிரியும் போது நமது ஊரும் வானமும் அழுதது. அதன் பின்பு மறைந்த நீதிமான் Y.Vஅவர்களுக்கு நமது கிராமத்தில் நினைவுச்சின்னம் கொடிக்கம்பம் போன்றவைகள் அமைக்கப்பட்டன. அந்த நீதிமான் வழியில் அவர் பெற்றெடுத்த பிள்ளைகளும் இன்று நமது கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். Y.Vஅவர்களின் மூத்த மகன் ரோக் அந்தோணி ஜெயராஜ் தன் தந்தையின் மறைவுக்குப்பின் குடும்ப பொறுப்பை ஏற்றுக்கொண்டு எல்லா பிள்ளைகளும் வாழ வழி செய்தார். அது மட்டுமல்லாது ஊர் வளர்ச்சிக்கும், ஆலய காரியங்கள் பலவற்றிலும் எல்லா பங்குதந்தையர்களோடும் இணைந்து இறைபணி ஆற்றி வருகிறார். அருட்திரு.ரெக்ஸ் அடிகளார் முதற்கொண்டு இந்நாள் பங்குத்தந்தை அருட்திரு.ஜோசப் ரவிபாலன் அடிகளாரோடு இணைந்து ஆலய வளர்ச்சிக்கும், ஊர் வளர்ச்சிக்கும்உறுதுணையாக செயல்பட்டு வருகின்றார். அருட்தந்தை ரெக்ஸ் அடிகளார் கட்டிய, இரட்டைக் கோபுர மெர்க்குரி விளக்குகள், முதல் ஆலய ஒளிவிளக்குகள் அமைக்க உதவியவர். நமது கிராமத்தின் மேற்கே நாற்சந்தியில்

திருக்கல்யாணமாதாவின் அற்புத கெபியை கட்டியதோடு அந்த இடத்தையும் கோவிலுக்கு கொடுத்துள்ளார். “அற்புதத் தாயே” என்ற ஒலிநாடாவை வெளியிட்டு அன்னையின் புகழ் பரவ அருட்தந்தை அருள் தனசீலன் அவர்களோடு ஒத்துழைப்பு கொடுத்துள்ளார். அது மட்டுமல்லாது, ஆலய தெற்கு முகப்பு மற்றும் சுற்றுச்சுவர்கள், லூர்து மாதா கெபி, பள்ளிச்சுவர் என பல நிலைகளிலும் அன்றைய பங்குத்தந்தை சேவியர் அருள்ராஜ் அடிகளாரோடு ஒருங்கிணைந்து பல்வேறு பணிகளைச் செய்து முடித்து இருக்கின்றார். இவ்வாறு அனைத்து தரப்பினரின் நல்மதிப்பும் பெற்று சிறந்து விளங்குகின்றவர்.

அதே போன்று திரு.எட்வின் காமராஜ் அவர்கள் நமது கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட முக்கியமான தெருவிளக்குகளை சோடியம் விளக்குகளாக மாற்றியும் ஆலயத்தைச் சுற்றிலும் ஒளிவிளக்குகள் ஆலய ஒலிபெருக்கி வசதிகள் மற்றும் பஸ் ஸ்டாண்ட், தேர்ப்பறை, அசன மண்டபம், பயணிகள் விடுதி, தியான மண்டபம், ஆண்டவரின் நினைவு மண்டபம், ஆலய அலுவலகம், ஆலய பொருட்கள் விற்பனை நிலையம் மற்றும் பல ஆலய பணிகள் செய்ய உதவியுள்ளார். மேலும் பல்வேறு வழிகளில் விளம்பரங்கள்,TV விளம்பரம், பிளக்ஸ் போர்டுகள், ஒலி நாடாக்கள், கொடி கம்பங்கள் போன்று பல வழிகளிலும் நமது ஆலய வளர்ச்சிக்கும் ஊரின் வளர்ச்சிக்கும் உதவியுள்ளார். இவருடைய தொழில் நிறுவனங்கள் மூலம் நமது கிராமத்திலுள்ள வேலையில்லா இளைஞர்கள், ஏழைகள், பாமரர்கள் போன்ற நம் ஊர் மக்கள் வேலை செய்து வருகின்றார்கள். ஒவ்வொருவருமே உழைத்து சம்பாதித்து நல்ல நிலையில் உள்ளனர். இன்றைய நாளில் நமது கிராமத்தின் வளர்ச்சியும் மக்களின் வளர்ச்சியும் பெருமை அடையக் கூடிய நிலையில் இருக்கின்றது என்றால் இதில் முக்கிய பங்கு தம்பி எட்வின் காமராஜ் அவர்களையே சாரும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இவர்களுக்கு உதவியாக இவர்களின் சகோதரர்களும் உறவுகளும் எடுத்துக் கொண்ட முயற்சியும் அளப்பெரியது.

ஆக நமது கிராமம் பொத்தக்காலன்விளையில் பிறந்து இளைஞனாக கொழும்பு சென்று உழைத்து முன்னேறி தனது அன்பினாலும் அறிவாற்றலாலும் நல்ல எண்ணத்தாலும் தொண்டு செய்து நமது கிராம மக்களால் கணக்கபிள்ளை "Y.V"என்று செல்லமாக அழைக்கப்பட்டு நீதிமானாக வாழ்ந்து மரித்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவரை “நமது கிராமமும் நாமும்” என்றும் மறக்காமல் அவர் வழி நடக்க, நாமும் உண்மையோடும், நீதியோடும் நேர்மையோடும், வாழ திருக்கல்யாணமாதா வழியாக இறைவன் நம்மை ஆசீர்வதிக்கட்டும்.

# தாவீது அண்ணாவியார்

பொத்தக்காலன்விளை கிராமத்தின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள ஒரு முக்கந்தரும், கோவில் காரியங்களைப் பார்த்துக் கொள்ள ஒரு உபதேசியரும், இருந்ததைப்போல கிராமியக் கலைகளான நாடகம், இசை, ஒயிலாட்டம், களியாட்டம் மற்றும் சிலம்பாட்டம் போன்றவற்றை பேணிப் பாதுகாக்கவும் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்கவும் அண்ணாவியார் என்ற ஒருவர் இருந்தார். இவர் தமிழ் மொழியை எழுதப்படிக்க தெரிந்தவராகவும், மேற்சொன்ன கலைகளின்பால் ஆர்வமும், ஈடுபாடும் உள்ளவராகவும் இருந்தார். ஒருவர் அண்ணாவியார் என்று அறிவிக்கப்பட்டபின், அவருடைய ஆண் பிள்ளைகளில் ஒருவருக்கு அந்த கலை நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்து, தனக்குப்பின் அந்த தனயன் பொறுப்பேற்க வழி செய்கிறார்.அந்த வகையில் நமது கிராமத்தில் முதன்முதலாக அண்ணாவியாராக அறிமுகமாகிறார் மிக்கேல் அண்ணாவியார். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னால் நல்ல பெயரோடும் புகழோடும் வாழ்ந்திருக்க வேண்டும். அவருக்குப்பின் அவருடைய மகன் பாக்கியநாதன் என்பவர் அண்ணாவியாராக அறிவிக்கப்படுகிறார். பாக்கியநாத அண்ணாவியாருக்குப் பிறகு அவருடைய மகன் தாவீது என்பவர் அண்ணாவியாகிறார். இந்த தாவீது அண்ணாவியாரைப்பற்றி பார்க்கலாம்.

தாவீது அண்ணாவியார் 20-ம் நூற்றாண்டில் வாழ்ந்து சாதனை புரிந்த ஒரு பெரிய கலைஞர்.கிராமியக் கலைகளை கற்றுத் தேர்ந்து கிராமத்தின் இளைஞர்களுக்கு அவற்றைக் கற்றுக் கொடுத்ததோடு வேறு பல துறைகளிலும் தன்னுடைய முத்திரையை பதித்த சகல கலா வல்லவன் எனலாம். இவர் கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பிறந்து 1969-ம் ஆண்டு இறந்தார்.

இளமைக் காலத்தில் இலங்கையிலுள்ள கொழும்பு நகருக்கு சென்று சில காலம் அங்கு வியாபாரத்தில் ஈடுபட்டார். 1940 வாக்கில் தாயகம் திரும்பி வந்து தந்தை வழியில் அண்ணாவி என்ற பொறுப்பை ஏற்றார். அவருடைய முக்கிய பொறுப்பு அன்னை மரியாளின் ஆண்டு திருவிழாவின்போது நடக்கும் புனித செபஸ்தியார் நாடகத்தை கற்றுக் கொடுத்து நடத்திக் கொடுப்பது. புனித செபஸ்தியார் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்து கிறிஸ்துவுக்காகவும் கிறிஸ்தவ மதத்திற்காகவும் தன் இன்னுயிரைக் கொடுத்த ஒரு தியாக புருஸர். அந்நாளில் ரோமாபுரியை ஆண்ட மன்னன் தீயோக்ளேஸியான் ஆதிக்கிறிஸ்தவர்களை

கொடுமைப்படுத்தி அவர்களை கொன்று குவித்த கொடுங்கோலன். அவனுடைய கொடுமைகளுக்கு ஆளானவர் புனித செபஸ்தியார். இந்த உண்மை வரலாற்றை தெருக்கூத்து பாணியில் நாடகமாக பயபக்தியுடன் நடித்து காண்பிப்பார்கள். மூன்று நாட்கள் நடக்கும். ஒரு மாத காலமாக பயிற்சி கொடுத்து திருவிழாவின் கடைசி நாளும் அதற்குப் பிறகு இரண்டு நாட்களும் நாடகத்தை அண்ணாவியார் நடத்தி வைப்பார். இந்த ஒரு மாதமும் அண்ணாவியாரும் மற்ற நடிகர்களும் விரதம் இருந்து பக்தியோடு நடத்துவார்கள். இதை பொழுதுபோக்கு அம்சமாக பார்க்காமல் பக்தியின் ஒரு வெளிப்பாடாகத்தான் பார்த்தார்கள். இதற்குப்பின்னனியும் உண்டு. அந்த காலக்கட்டத்தில் கொடிய நோய்களான காலராவும் அம்மை நோயும் அவ்வப்போது கிராமங்களை தாக்கி உயிர்களை பலி கொள்ளும். இவற்றிலிருந்து தங்களை பாதுகாக்க புனித செபஸ்தியார் உதவுவார் என்ற நம்பிக்கையில் அவரை இந்த நாடகத்தின் வழியாக வேண்டினார்கள்.

இந்த நாடகத்தில் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன. கதாபாத்திரங்கள் தாங்கள் பேசவேண்டிய வசனங்களை பாட்டு இசையோடும் கை கால்களை அசைத்து நடனத்தோடும் பேசுவார்கள். பின்னணி பாட்டும் உண்டு. நாடக வசனங்கள் எல்லாம் பக்குவப்படுத்தப்பட்ட பனை ஓலையில் அழிக்க முடியாத ஒருவகை திரவத்தால் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டுள்ளது. பனை ஓலை 15 அங்குலம் நீளமும் 2 அங்குலம் அகலமும் கொண்டு இரண்டு முனைகளிலும் துவாரமிட்டு தடித்த நூலால் கட்டப்பட்டுள்ளது. இன்றைய நடைமுறை தமிழ் எழுத்துக்களிலிருந்து சிறிது மாறுபட்டுள்ளது. அவற்றைப் படித்து சொல்லிக் கொடுத்து நடத்துவதற்கு தெய்வ அருள்வேண்டும். அந்த அருள் பெற்ற அண்ணாவியாரால் மட்டும்தான் அந்த பனை ஓலை ஏடுகளை கையாள முடியும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. நாடக வசனங்கள் மிகுந்த கருத்தாழமிக்கவை. ஒரு சிறந்த அறிவாளியால்தான் இத்தகைய கருத்தாழமிக்க இசைக்கேற்ற வசனங்களை எழுதியிருக்க முடியும். சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

நாடகம் துவங்குவதற்கு முன்னால் வான தூதர்கள் வந்து தங்களுடைய ஆசீரை எல்லோருக்கும் வழங்கி நாடகத்தை ஆரம்பிக்கும் வசனத்தின் ஒரு பகுதி இதோ படியுங்கள்.

ஆபிரகாம் மகன் ஈசாக்கை
அமலனுக்கு பலியாய் வெட்ட
மேவி வாளை நிறுத்த செய்த
தேவ அதிதூதர் நாமே

இன்னொரு உதாரணம். ரோமாபுரி சக்கரவர்த்தி தீயோக்கிளேஸியானுக்கும் செபஸ்தியான் துரைக்கும் தர்க்க வாதம் நடைபெறுகிறது. அதை வெளிப்படுத்தும் வசனப்பாடல் இதோ :

மன்னன் : பயமே பகரவேண்டாம் என பகர்ந்த நீச பாதகரே
துயர்படவோ நீ பிறந்தாய் சொகுசாயிருந்து பவுசாண்டாய்
சதை அயர அடித்து நீயும் அஞ்சாதிருப்பதென்ன ஆங்காரம் கொண்டவனே குருசில் மாண்டோன் பாங்கில் சேர்ந்தவனே

செபஸ்தியார்: குரிசில் மரித்தார் பாவிகளுக்காய் குருவாம் என் ஏசுநாதர் அரசே நீயும் வணங்குகின்ற அலகைப்பேயால் என்னபலன் மாதர் பிரம்மை கொண்டெழுந்த கல்லுரலில் அடிப்பட்ட பேய்களும் தெய்வமோ கருங்குரங்கு நாய்களும் குருவாமோ

மன்னன் : அடடா செபஸ்தியான் துரையே அதட்டி மிரட்டி பேசுகிறாய்
மட்டிவாய் உனது புத்தியனால் மடயா நீ வஞ்சகனே
இப்போ துடியுடன் உன் உயிர் சடுதியில்
அம்பினால் சூட்டியே எய்யச் செய்வேன்
சீவன்விட மீட்டியே வாதை செய்வேன்

செபஸ்தியார்: வதைப்பேன் என்ற ராசனே கேள் வால்குரங்கு பேய்கள் தம்மை துதிக்கும் கோவே பெண்கள் தன்னை சுமந்த மூதி கடவுளாமோ என்னை சிதைக்கவே அம்பினால் தீதாக வாதை செய்தால் தேவனின் மோட்சம் சேர்வேன் புத்தியில்லாத பூமனே நீ அறிவாய்

இந்த அற்புதமான இலக்கியத்தை எழுதியவர் மிக்கேல் அண்ணாவி என கருதப்படுகிறது. இவர் மணப்பாடு கிராமத்தில் பிறந்த பரதர். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கிருந்து நமது கிராமத்திற்கு வந்து தங்கி இருந்து இந்த நாடகத்தை எழுதியதோடு நமது கிராமத்தைச் சேர்ந்த மிக்கேல் அண்ணாவியாருக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். இந்த இலக்கியம் பாதுகாக்கப்பட

வேண்டும். ஏனெனில் இது நமது கிராமத்தின் பொக்கிசம். இன்று நல்ல காரியம்; நடந்துள்ளது. நமது கிராமத்தைச் சேர்ந்த திரு.செல்லத்துரையுடைய மகன் ராஜா என்பவர் தன்னுடைய முதுகலைப் பட்ட படிப்பின் ஒரு அங்கமாக கிராமக்கலைகள் என்ற தலைப்பில் (Folk lore) இந்த செபஸ்தியார் நாடகப்பாட்டு வசனங்களை புத்தகமாக தயாரித்துள்ளார். அதன் ஒரு பிரதியை நமது ஊர் மேல்நிலைப்பள்ளியின் நூலகத்தில் நிரந்தரமாக வைக்க பள்ளி நிர்வாகம் ஆவண செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

தாவீது அண்ணாவியாரின் பணி செபஸ்தியார் நாடகத்தை கற்றுக் கொடுத்து நடத்துவதோடு முடிந்துவிடவில்லை. ஒயிலாட்டம் சிலம்பாட்டம் களியாட்டம் இவற்றிலும் புலமை பெற்று கிராமத்து சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கற்றுக் கொடுத்தார். களியாட்டம் என்பது எட்டு பேர் சேர்ந்து வட்டமாக நின்று ஆடும் ஒரு கலை அம்சம் கொண்ட ஆனால் கடினமான விளையாட்டு. அதில் பாட்டு முக்கியமானது. அண்ணாவியார் கையில் ஒரு இசைக் கருவியை வைத்து தாளத்துடன் ஒலி எழுப்பி பாடுவார். அந்த பாட்டு இசைக்கேற்றவாறு எட்டு வீரர்களும் தங்கள் கையிலுள்ள இரண்டு கம்புகளையும் தட்டி எழுப்பி கால்களால் தாளம் போட்டு துள்ளல் நடையுடன் சுற்றி வர வேண்டும். எட்டு வீரர்களில் ஒருவர் சிறு தவறு செய்தாலும் குழப்பம் ஏற்பட்டு ஆட்டம் தடைபடும். இதில் பாடப்படும் பாட்டு அந்தந்த காலத்திற்கேற்றவாறு அமையும். கிறிஸ்துமஸ் தினத்திற்கு ஒரு பாட்டு புத்தாண்டு தினத்திற்கு ஒரு பாட்டு திருமண நிகழ்ச்சிகளுக்கு ஒரு பாட்டு என வேறுபடும். பார்ப்போரை பரவசப்படுத்தி அவர்களுடைய கை கால்களையும் ஆட வைக்கும் அற்புதமான கிராமக்கலை. 1950-களில் தாவீது அண்ணாவியாரின் முயற்சியாலும் உழைப்பாலும் அன்றைய சிறுவர்கள் எல்லோரும் இந்தக் கலையை கற்றார்கள். அவ்விதம் கற்ற அன்றைய சிறுவர்களில் அடியேனும் ஒருவன்.

தாவீது அண்ணாவியாரின் மற்றொரு பங்களிப்பு கோவில் பாடகர் குழுவை வழி நடத்தியது. தந்தை மஸ்கரனாஸ் பங்குக்குருவானவராக இருந்தபோது கோவிலில் ஆர்மோனியம் வாசித்து பாடகர் குழுவை நடத்தியவர் கூத்தங்குழியைச் சேர்ந்த ஒரு ஆசிரியர். அவர் மாற்றலாகி தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் பொறுப்பேற்றதும் ஆர்மோனியத்தை கையில் எடுத்தவர் தாவீது அண்ணாவியார். அந்தக் காலக் கட்டத்தில் கோயில் ஜெபமும் பாட்டுகளும் பெரும்பாலும் லத்தீன் மொழியில் இருந்தன. அவை தமிழ் எழுத்தில் அச்சடிக்கப்பட்டு புத்தகமாக பாடகர்

குழுவின் கைகளில் இருந்தது. அதிகம் படிக்காத தாவீது அண்ணாவியார் இந்தப் பாடல்களையும் ஜெபங்களையும் படித்ததோடு மற்றவர்களுக்கு கற்றும் கொடுத்தது இன்றும் எனக்கு வியப்பாக உள்ளது. அண்ணாவியாரின் இன்னொரு சிறப்பான பணி தேர் சப்பரங்களை அழகாக எல்லோரும் வியக்கும் வண்ணம் அலங்கரிப்பது. 1953 வரை அந்தக்கலையில் முடிசூடா மன்னனாக திகழ்ந்தவர் சீமோன் நாடார். இவருடைய வீட்டின் மேல்மாடி முழுவதும் ஜோடனைப் பொருட்களால் நிறைந்திருக்கும். பொத்தக்காலன்விளையில் இருந்த தேர் சப்பரம் மாத்திரமல்ல திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டங்களில் உள்ள எல்லா ஊர்களிலும் தேர் சப்பரம் அலங்காரம் செய்வது நமது கிராமத்தைச் சேர்ந்த சீமோன் நாடார் தான். 1953-ம் ஆண்டு ஸ்ரீவைகுண்டம் கோவிலுக்கு தேர் சப்பர அலங்காரத்திற்காக சென்ற இவரை காலரா என்ற கொடிய தொற்றுநோய் தொற்றிக் கொண்டது. நோயோடு ஊருக்கு வந்தவர் அந்த நோயிலிருந்து மீளவே இல்லை. அதன்பிறகு இந்தப் பணியை ஏற்றது தாவீது அண்ணாவியார். அவர் இறக்கும் வரை இந்தப் பணியைத் தொடர்ந்தார்.

இத்தனை துறைகளில் எப்படி அவரால் சிறந்து விளங்க முடிந்தது. எவ்வாறு இந்தக் கலைகளை அந்தக்காலத்தில் கற்றுக்கொண்டார். எனக்குத் தோன்றுவது இது தான். நாடகக்கலையை தனது தந்தையிடமிருந்து கற்றுக்கொண்டிருக்க வேண்டும். மற்ற கலைகளையெல்லாம் தன்னுடைய சுய முயற்சியால் கற்றுத் தெளிந்திருக்க வேண்டும். இந்த இடத்தில் ஒரு கசப்பான உண்மையை எழுதித்தான் ஆகவேண்டும். இந்தக் கலைகள் அந்தக் கலைஞனுக்கு போதிய வருமானத்தை கொடுக்கவில்லை. அண்ணாவியாருடைய குடும்பம் பெரிது. ஆறு ஆண்கள், ஒரு பெண். தன்னுடைய குடும்ப செலவுகளை சரிக்கட்ட பனை சீசனில் பனைத் தொழிலும் செய்தார். அவர் இறந்தபின் அவருடைய பிள்ளைகளில் யாரும் ‘அண்ணாவி’என்ற இடத்தை அடையவில்லை. நாடகத்தை விரும்பும் மக்களின் விருப்பத்தை ஏற்று தாவீது அண்ணாவியாரின் இரண்டாவது மகன் செல்வராஜ் சிறிது இடைவெளிக்குப் பிறகு நாடகத்தை கற்றுக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். இந்த ஏற்பாடு எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்று கூறமுடியாது. அன்னையின் அருள் இருந்தால் அவளுடைய வழிகாட்டுதல்படி, தொடர்ந்து நாடகத்தை நடத்துவேன் என்கிறார் அவர். காலம்தான் பதில் சொல்லும்.

# தந்தை சிலுவை அந்தோணி அடிகளார்

பொத்தக்காலன்விளை தனிப்பங்காக அறிவித்த பிறகு தந்தை ஸ்தனிஸ்லாஸ் பங்காரு அதன்பின் தந்தை மஸ்கரனாஸ் இவர்களுக்குப் பிறகு மூன்றாவது பங்குக்குருவாக பொறுப்பேற்றது தந்தை M.S.அந்தோணி அடிகளார். 1948-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் குருப்பட்டம் பெற்று சில ஆண்டுகள் சாத்தான்குளத்தில் துணைப்பங்குக் குருவாக பணியாற்றிய பின் 1953-ம் ஆண்டு பொறுப்பேற்றார். தொடர்ந்து 12 ஆண்டுகள் ஒரே பங்கில் திறம்பட பணியாற்றி யாரும் சாதிக்காத ஒரு சாதனை படைத்தவர் தந்தை M. சிலுவை அந்தோணி அடிகளார். அவரைப் பற்றி சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் "அவர் நம்மிடையே வாழ்ந்த ஒரு புனிதர்" எனலாம். நாம் வணங்கும் புனிதர்கள் பலருடைய திருஉருவச்சிலைகளை நம் கோவில்களில் காண்கிறோம். அவர்களை ரத்தமும் சதையுமாக நாம் பார்த்ததில்லை பேசியதில்லை. ஆனால் இந்த பொத்தக்காலன்விளையில் நம்மோடு ஒருவராக வாழ்ந்து பேசி மகிழ்ந்து உறவாடி நமக்கு எல்லாம் வழிகாட்டியாக ஒரு புனிதர் இருந்தார் என்று கூறினால் அது மிகையாகாது.

தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரின் 12 ஆண்டு கால சாதனைகளை முழுமையாக புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் பொறுப்பேற்ற காலக்கட்டத்தில் பொத்தக்காலன்விளை கிராமம் எந்த நிலையில் இருந்தது என்பதை தெரிந்து கொள்வது மிக அவசியம். அவர் பொறுப்பேற்ற 1953 ம் ஆண்டுவாக்கில் இன்று நாம் பார்க்கின்ற எந்த போக்குவரத்து வசதியோ தொலைத்தொடர்பு சாதனங்களோ கிடையாது. சாத்தான்குளத்திற்கு தெற்கேயும் கிழக்கேயும் சாலைகள் கிடையாது. முதலூர் வரை கல் சாலையும் அதற்கு அப்பால் மண் சாலைகள் தான் இருந்தன. தூத்துக்குடியில் இருந்து முதலூர் வரை தினமும் ஒரு பேருந்து மட்டும் உண்டு. துணைப் பங்குகளான நவமுதலூர், கொழுந்தட்டு மற்றும் வாலத்தூர் சிற்றூர்களுக்கு சாலைகள் கிடையாது. அங்கு பங்குக்குருவானவர் செல்ல வேண்டுமானால் மாடுகள் பூட்டிய வில் வண்டியில் செல்ல வேண்டும் அல்லது நடந்து செல்ல வேண்டும்.

அந்த சிற்றூர்களில் தங்குவதற்கோ ஒரு அவசர தேவைக்கு ஒதுங்குவதற்கோ வசதிகள் கிடையாது. பெரும்பாலான மக்கள் பனைத்தொழிலை நம்பி இருந்ததால் வருடத்தில் 6 மாதங்கள் ஆண்களும் பெண்களும் சிறுவர்

சிறுமியர் அனைவரும் முன் காலை முதல் பின் மாலை வரை பனங்காட்டில் இருந்துவிடுவார்கள். மூன்று மாதங்கள் பனங்காட்டுக்குள்ளேயே குடிசை அமைத்து இரவும் தங்கிவிடுவார்கள்.மிகப் பெரும்பாலான வீடுகள் பனை ஓலையால் வேயப்பட்ட கூரை வீடுகள். அதே போன்று குருவானவர் தங்கியிருந்த வீடும் பனை ஓலையால் வேயப்பட்டது. மின்சாரம் கிடையாது. வீடுகளில் மண்ணெண்ணை விளக்குகள் தான் ஒளி தந்தன. கோவிலில் மட்டும் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் உபயோகத்தில் இருந்தன. பள்ளிக்கூடம் ஆரம்பப்பாட சாலை மட்டும். 6ம் வகுப்பு படிக்க விரும்பினால் சாத்தான்குளத்தில் இருந்த நடுநிலை பள்ளிக்கு நடந்து செல்ல வேண்டும். இந்த சூழ்நிலையில் பொறுப்பேற்கும் பங்குக் குருவானவர் ஆன்மீகப்பணியோடு உலகப்பணியையும் ஆற்றவேண்டிய கட்டாயத்தில் இருந்தார். குறிப்பாக சிறுவர் சிறுமியர் பெற்றோர்களோடு பனங்காட்டுக்கு செல்வதை தடுத்து பள்ளிக்கூடத்திற்கு திருப்பி விடுவது முதல் ஆரம்பப்பள்ளி – நடுநிலைப்பள்ளி படிப்பு முடிந்ததும் உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி என மேற்படிப்பு படிக்க வழிகாட்டுவது வரை சகல உலகப் பணிகளையும் ஆற்றினார்கள் தந்தை அவர்கள். அவற்றின் பலன் பல இளைஞர்கள் இளம்பெண்கள் முதன் முதலாக தூத்துக்குடியிலும் பாளையங்கோட்டையிலும் கல்லூரிகளின் வாசலைத் தொட்டார்கள். அந்தக் காலக்கட்டத்தில்தான் பலர் ஆசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் அரசு ஊழியர்களாகவும் டாக்டராகவும் உருவெடுத்து ஊருக்கு பெருமை சேர்த்தார்கள்.

தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரைப் பற்றி எழுதும்போது ஊரில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்வைப் பற்றி எழுதாமல் இருக்க முடியாது. தந்தை மஸ்கரனாஸ் காலத்தில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்து ஊரே இரண்டுபட்டு கிடந்தது. முக்கந்தர் கோஸ்டி உபதேசியார் கோஸ்டி என ஊரே இரு பிரிவுகளாக பிரிந்து ஒற்றுமை இழந்து எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற பதட்டமான சூழ்நிலை நிலவியது. தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் பொறுப்பேற்றதும் பிரிந்து நிற்கும் ஊரை ஒன்றாக்குவதையே தன் முதல் கடமையாக கருதினார். தன்னுடைய பேச்சாலும் அணுகுமுறையாலும் எல்லோரிடமும் வேறுபாடு இல்லாமல் பிரியமாக பழகும் பாங்காலும் எல்லா மக்களையும் தன்பால் ஈர்த்தார். அதன் விளைவாக பகை விலகி ஊர் ஒன்றானது. இதை எழுதும்போது தூத்துக்குடி மறைமாவட்டத்தில் பல பங்கு ஊர்களில் இந்த வித ஊர் சண்டைகளால் ஒற்றுமை இழந்து ஒருசாரார் வேறு மதங்களுக்கு மாறிய சம்பவங்கள் நினைவுக்கு வருகிறது. ஆனால் பொத்தக்காலன்விளை கிராமத்தில் தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரின்

அணுகுமுறையால் அத்தகைய அசம்பாவிதங்கள் நடக்கவில்லை என்று நினைக்கும் போது பெருமையாகவும் இருக்கிறது. தந்தையை நன்றியுடன் நினைக்கத் தோன்றுகிறது.

பொத்தக்காலன்விளையில் வான்நோக்கி எழும்பியுள்ள அன்னையின் புதிய ஆலயத்தை கட்டி முடிப்பதில் பெரும் பங்கு வகித்தவர் தந்தை சிலுவை அந்தோணி அடிகளார். அவர்கள் பொறுப்பேற்றபோது ஆலயபணி அஸ்திவாரத்தோடு நின்றிருந்தது. மேற்கொண்டு பணி நடக்க வேண்டுமானால் அதிக நிதி தேவைப்பட்டது. அதை உள்ளூரிலேயே திரட்டுவது முடியாத நிலை. தந்தை அவர்கள் ஒரு திட்டம் தீட்டினார்கள். அந்தக் கால கட்டத்தில் ஊரிலுள்ள பல இளைஞர்கள் பனைத்தொழிலை தவிர்க்க வேண்டும், அதே நேரத்தில் வெளிநாடு சென்று பெரும் செல்வம் சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இலங்கை சென்று கொழும்பு நகரிலும் மற்ற இடங்களிலும் பலவிதமான தொழில்கள் துவக்கி நல்ல வசதியோடும் செல்வத்தோடும் வாழ்ந்தார்கள். அவர்களை அணுகி நிதி புரட்டுவதற்காக கொழும்பு சென்றார்கள். அங்கு தந்தை அவர்களுக்குக் கிடைத்த வரவேற்பு வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அந்தக்கால மதிப்பில் பெரும் தொகை என மதிக்கப்பட்ட ரூ.5000 வசூலானது. அந்த தொகையை மறைமாவட்டம் வழியாக முறையாக இந்தியாவுக்கு கொண்டு வந்து ஆலய பணியை மீண்டும் ஆரம்பித்தார்கள். அதற்கு ஏற்றார்போல் அந்நாளில் கொழும்பில் பெரும் வணிகராக விளங்கிய திரு.ஞானபிரகாசம் நாடார் அவர்கள் ஆலய கதவுகள் ஜன்னல்களுக்கு தேவைப்படும் நிலைக் கற்களை நன்கொடையாக கொடுப்பதாக அறிவித்தார்கள். விளைவு ஆலய பணி மீண்டும் வீறுபெற்று சுவர்கள் எழுப்பப்பட்டன. சுவர்கள் வளரந்து கூரை நிலையை அடைந்தது. அப்போது வெடித்தது ஒரு பெரிய பிரச்சனை. அது என்ன பிரச்சனை அதை பின்னால் வந்த குருவானவர் எவ்வாறு சமாளித்தார் என்பதை பின்னால் எழுதுகிறேன்.

தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரின் ஆன்மீகப் பணியின் சிகரமாக விளங்கியது ஊரில் நற்கருணை பக்தியையும் மாதா பக்கதியையும் பரப்பி மக்களின் ஆன்மீக தாகத்திற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்தது எனலாம். தனது பேச்சின் மூலமாகவும் நற்கருணை வீரர் சபையின் மூலமாகவும் திருப்பலியில் ஆண்கள் நற்கருணை அருந்தும் பழக்கத்தை உருவாக்கினார், மாதா பக்தியை பரப்பும் வகையில் வீடுகளில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஜெபிக்கும் குடும்ப ஜெபமாலை பக்தியை பரப்பினார். அதற்கு அந்நாட்களில் மிகவும் பிரபலமாக விளங்கிய தேன்கூடு மாணவர் இளைஞர் இயக்கத்தை

பயன்படுத்தினார். இந்த இயக்கத்ததின் உறுப்பினர்கள் ஒரு நாள் ஒரு வீடு என்ற கணக்கில் கிராமத்திலுள்ள எல்லா வீடுகளுக்கும் சென்று குடும்ப உறுப்பினர்களோடு சேர்ந்து குடும்ப ஜெபமாலை சொல்லி இந்த பழக்கத்தை கிராமத்தில் ஆழமாக பதியச் செய்தார்கள். இன்று இந்த கிராமத்தைச் சேர்ந்த பலர் தொழில் வியாபாரம் மற்றும் உத்தியோகம் காரணமாக வெளியூர்களுக்குச் சென்று அங்கே புதிய ஆலயம் கட்டுவது புதிய பங்குகள் நிறுவ உதவுவது போன்ற ஆன்மீக காரியங்களில் முன்னிற்கிறார்கள். அதற்கு அடிப்படை காரணம் தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் காலத்தில் போடப்பட்ட மேற்சொன்ன அடித்தளம் தான்.

தந்தை அவர்கள் தொடர்ந்து 12 ஆண்டுகள் இறைபணி ஆற்றி மறக்க முடியாத ஒரு முத்திரையை பதித்துவிட்டு 1965-ம் ஆண்டு பணிமாற்றம் செய்யப்பட்டார்கள். அழகப்பபுரம், வடக்கன்குளம், இடிந்தகரை போன்ற பெரிய ஊர்களில் பெரிய குருவாக பணியாற்றிவிட்டு ஓய்வுற்றிருந்த காலத்தில் 2010-ம் ஆண்டு மே மாதம் தன்னுடைய 89-வது வயதில் இறைவனடி சேர்ந்தார். பொத்தக்காலன்விளை கிராமமும் கிராம மக்களும் தங்களுடைய குடும்பத்தில் ஒருவர் இறந்ததாகவே கருதி கண்ணீர் சிந்தினர். அந்த புனிதரின் இறுதி யாத்திரையில் இந்த கிராம மக்கள் திரளாக சென்று தங்களுடைய நன்றிக் கடனையும் வணக்கத்தையும் செலுத்தியது மறக்க முடியாதது.



# தந்தை லூர்துமணியும் புதிய ஆலயமும்



என்னுடைய முந்தைய கட்டுரை ஒன்றில் புதிய ஆலயப்பணி தொடர்வதில் ஏற்பட்ட ஒரு பெரிய சிக்கல் பற்றியும் அதை பின்னால் வந்த பங்குக்குருவானவர் எவ்வாறு சமாளித்தார் என்பது பற்றியும் அடுத்து வருகிற கட்டுரையில் எழுதுகிறேன் என்று குறிப்பிட்டிருந்தேன். இதோ அதன் தொடர்ச்சியை படியுங்கள்.

1961-1962 ம் ஆண்டுகளில் பதிய ஆலயப்பணி தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரின் மேற்பார்வையில் மிக வேகமாக வளர்ந்தது. கட்டிட சுவர்கள் கூரை மட்டத்தை எட்டின. ஆனால் சிறிது காலத்திலேயே கட்டிட சுவர்களிலே ஆங்காங்கே வெடிப்பும் கீறல்களும் தோன்ற ஆரம்பித்தன. பதறிப்போன தந்தை ஆலயப்பணியை அப்படியே நிறுத்திவிட்டு இது சம்மந்தமாக பலரிடமும் ஆலோசனை கேட்க ஆரம்பித்தார். ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆலோசனை கூறினார்கள். அதற்குள் தந்தையுடைய பணிக்காலம் முடிந்து வேறு ஊருக்கு மாற்றலாகி போகவேண்டியதாயிற்று. 1965-ம் ஆண்டு தந்தை லூர்து மணி அவர்கள் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றார்கள். தந்தை லூர்துமணி ஒரு இளைஞர் துடிப்பானவர் இளைஞர்களை கவரும் வண்ணம் மிக அழகாக சொற்பொழிவாற்றுவார். எந்தப் பிரச்சனையானாலும் துணிச்சலுடன் நேரடியாக சந்திப்பார். கடின உழைப்பாளி. அந்த கால கட்டத்தில் அவர் பங்குக் குருவானவராக பொறுப்பேற்றது நமது கிராமத்தின் பாக்கியம் என்றே கூற வேண்டும். அவர் பொறுப்பேற்றதும் நின்றுபோன ஆலயப்பணியை தொடர்ந்து ஏற்று நடத்தி முடிக்க வேண்டுமென்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். அதற்காக பல எஞ்சினியர்களிடம் ஆலோசனை கேட்டார்.மறைமாவட்ட ஆயர் அனுப்பிய எஞ்சினியர் ஒருவர் சுவர்களை எல்லாம் இடித்துவிட்டு புதியதாக சுவர் எழுப்பும்படி ஆலோசனை கூறினார். மறைமாவட்ட ஆயர் தாமஸ் பெர்னான்டோவும் இதே கருத்தைக் கூறினார். ஆனால் தந்தை லூர்துமணியோ சுவர்களைப் பலப்படுத்தி மேற்கொண்டு வேலையை தொடர்வதையே விரும்பினார். அதற்கு வலுசேர்க்கும் வகையில் வேறு ஒரு எஞ்சினியர் கொடுத்த ஆலோசனை அவருக்குப் பிடித்திருந்தது. அந்த எஞ்சினியர் கொடுத்த ஆலோசனையின்படி கட்டிட சுவர்களின் மேல்பகுதியில் நாலுபுறமும் இரும்புக் கம்பிகளால் இறுக்கி பிணைத்து அதன்மேலே இரண்டு அடி உயரத்திற்கு காங்கிரீட் போடப்பட்டது.இதன் விளைவாக சுவர்களின் உயரம் இரண்டடி

கூடுதலானதோடு வெடிப்புகளினால் ஏற்பட்ட பலவீனம் குறுக்குக் கம்பிகள் வைத்து சரி செய்யப்படட்டது. ஆலயப்பணியின் அடுத்த முக்கியமான கட்டம் பலி பீடத்தின்மேலே அமைய வேண்டிய டோம் கட்டுவது. இது சவாலான வேலை. அந்த சவாலையும் சமாளிப்பதற்கு தயாரானார் தந்தை லூர்துமணி. 1968-ம் ஆண்டில் ஒரு நாளை நிர்ணயம் செய்து அன்று ஒரே நாளில் டோம் வேலையை முடிக்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கு ஏதுவாக எல்லா முன் ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. சாரம் அமைப்பது முதல் காங்கிரீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களையும் சேகரித்து வைப்பது வரை எல்லா வேலைகளும் திட்டப்படி நடந்தேறியது. நிர்ணயித்த நாளில் முதலூரைச் சேர்ந்த ஏசா என்ற கொத்தனாரின் தலைமையில் தந்தை லூர்துமணியின் நேரடி மேற்பார்வையில் ஊர் ஜனம் அத்தனைபேரின் பங்களிப்போடு விடியற்காலையில் ஆரம்பித்த வேலை அன்று இரவோடு முடிவுற்றது. காங்கிரீட் கலவைக்குத் தேவையான தண்ணீர் கோயில் கிணற்றிலிருந்தும் மேற்கே இருந்த நரம்பர் தோட்டத்து கிணற்றிலிருந்தும் தெற்கே உபதேசியார் வீட்டு கிணற்றிலிருந்தும் எடுக்கப்பட்டது. ஆலயப்பணிக்காக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆண்களும் பெண்களும் கட்டாயம் வீட்டிற்கு ஒருவர் என அனைவரும் திரண்டது இரண்டு முறை. முதலில் கோயிலின் கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் நிலைக்கற்களை தூக்கி நிறுத்தும்போது. இரண்டாவது முறை டோம் கட்டுவதற்கு காங்கிரீட் போட்ட நாளில். காங்கிரீட் போட்ட மறுநாள் நல்ல மழை இதனால் காங்கிரீட் மேல் தண்ணீர் ஊற்ற வேண்டிய அவசியம் இல்லாமல் போனது.

டோம் கட்டி முடித்ததைத் தொடர்ந்து ஆலயத்தின் மேல் கூரையும் போடப்பட்டது. இனி கோயில் தரைக்கு சிமெண்டோ அல்லது பளிங்கோ போட்டால் புதிய ஆலயத்தை அர்ச்சித்து ஆராதனைக்கு திறந்துவிடலாம் என்ற நிலையில் தந்தை லூர்துமணி இடமாற்றம் செய்யப்பட்டார். 1970-ல் புதிதாக பொறுப்பேற்ற தந்தை மரியகாகு அடிகளார் புதிய ஆலயத்தை உடனே திறப்பதில் குறியாக இருந்தார். ஆனால் கிராமத்தில் ஒரு பகுதியினர் ஆலயப் பணிகள் முழுவதும் முடிவதற்கு முன்பு ஆலயத்தை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர் என்றாலும் மறைமாவட்ட நிர்வாகத்தின் ஆலோசனைப்படி 1971-ம் ஆண்டு தரை வேலை முடியும் முன்பே ஆலயம் அர்ச்சிக்கப்பட்டு பொதுமக்களின் உபயோகத்திற்கு திறந்துவிடப்பட்டது. தரையில் மக்கள் அமருவதற்கு வசதியாக ஆற்று மண் நிரப்பப்பட்டிருந்தது. இது நடந்த சிறிது காலத்திலேயே (1972-ல்) அதே தந்தை மரியகாகு காலத்தில் தரைப்பணியும் முடிவுற்று இன்று இருக்கும் தோற்றம் பெற்றது. எஞ்சியருந்த முன் கோபுரப்பணி மற்றும் முன் மண்டபப்பணி எல்லாம் காலப்போக்கில் ஒவ்வொன்றாக நிறைவுப் பெற்றன. முன் கோபுரங்கள் 1992-ல்

கட்டி முடிக்கப்பட்டது. அவற்றை கட்டி முடிக்க உதவி புரிந்தவர் உபதேசியார் குடும்பத்தைச் சேர்ந்த திரு.சுவாமிநாதன். இரு கோபுரங்களின் உச்சியில் பொருத்தப்பட்ட சிலுவைகள் முன்னால் பஞ்சாயத்து தலைவர் திரு.சூசைநாதனால் நன்கொடையாக கொடுக்கப்பட்டது. கோபுரங்களின் பாதுகாப்பு கருதி 1994-ல் ஒரு இடிதாங்கி பொருத்தப்பட்டுள்ளது. இந்த இடிதாங்கி செம்பு உலோகத்தால் செய்யப்பட்டது. இதை நன்கொடையாக கொடுத்தவர் நரையன்குடியிருப்பை சேர்ந்த திரு.தனசேகர பாண்டியன். முன் மண்டபம் 1995-ம் ஆண்டு தந்தை சேவியர் அருள்ராஜ் காலத்தில் கட்டப்பட்டது.

ஆலயத்தின் முன்னால் இரு கோபுரங்களின் நடுவில் அமைந்துள்ள திரு.இருதய ஆண்டவர் சுரூபத்தின் பின்னணியில் ஒரு வரலாறு உள்ளது. அந்த சுரூபம் தைலாபுரம் கோயில் டோம் மேலே நிறுவுவதற்காக செய்யப்பட்டது. அதனுடைய எடை சுமார் 400 கிலோ. இந்த அளவு எடை உள்ள சுரூபத்தை டோம் தாங்குமா என்ற சந்தேகம் எழுந்ததால் அந்த சுரூபம் அங்கே நிறுவப்படாமல் ஓரமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. 1992-ம் ஆண்டு ஒருநாள் பங்குத் தந்தை ரெக்ஸூம் அவரது உதவியாளர் பெட்டி பிரான்சிஸூம் அங்கே சென்றிருந்தபோது இதைப்பார்த்ததும் பொத்தக்காலன்விளை ஆலயத்திற்கு தரும்படி அங்கிருந்த பங்குத்தந்தை ரெக்ஸ் லூமிடம் கேட்டிருக்கிறார்கள். அவரும் மனம் உவந்து சுரூபத்தை எடுத்துச் செல்ல அனுமதித்துள்ளார். அந்த சுரூபம் தான் இன்று பொத்தக்காலன்விளை திருக்கல்யாணத்தாய் ஆலயத்தின் முகப்பை அலங்கரிக்கிறது.

இந்த வேளையில் ஒரு விஷயத்தை மிக அழுத்தமாக பதிவு செய்ய வேண்டியுள்ளது. இந்த ஆலயம் கட்டி முடிப்பதற்கு ஏறத்தாழ 26 ஆண்டுகள் எடுத்தன. நான்கு பங்குக்குருக்கள் வந்து போயினர். கட்டிடம் கட்ட உபயோகித்தது வெள்ளைக் கற்கள். அவை அருகிலுள்ள பன்னம்பாறை கிராமத்திலிருந்து மாட்டு வண்டிகளிலும் லாரிகளிலும் கொண்டு வரப்பட்டு சாலை வசதி இல்லாததால் மேற்கே குறுக்கு ரஸ்தாவில் கொட்டப்பட்டன. அவற்றை அங்கிருந்து கோயில் வளாகத்திற்கு தலைச்சுமையாக கொண்டு வந்தது சிறுவர் (நான் உட்பட) சிறுமியர் பெண்கள் ஆண்கள் என அனைத்து கிராம மக்களும்; கதவுகள் ஜன்னல்களுக்கு தேவையான பாரமான கருங்கற்கள் லாரிகளில் கொண்டு வரப்பட்டு ஆங்காங்கே இறக்கி விடப்பட்டன. அவற்றை கடப்பாறை கம்பிகளால் நெம்பி நகர்த்தி கோயில் பக்கம் கொண்டு வந்தது மனித கரங்கள்.அவற்றை கதவு ஜன்னல் நிலைகளில் தூக்கி நிறுத்தியதும் மனித கரங்கள் தான்.

கட்டிடத்திற்கு தேவையான கலவையை தயார் செய்ய உபயோகித்தது சிமெண்ட் அல்ல சுண்ணாம்பு பொடி. இந்த சுண்ணாம்பு பொடியை தயாரிக்க

பங்களாவிற்கு வடமேற்கில் தனியாக ஒரு சுண்ணாம்பு சூளை நிறுவப்பட்டது. அங்கிருந்து சுண்ணாம்பு பொடியை சுமந்து வந்தது சிறுவர் சிறுமியர். கலவைக்குத் தேவையான ஆற்றுமண் ஓடையிலிருந்து தலைச்சுமையாக எடுத்துவரப்பட்டது. கலவை சாந்து தயாரிக்க தேவையான தண்ணீரை கோயில் கிணற்றிலிருந்து பெண்கள் எடுத்து வந்தனர். கலவை சாந்து தயார் செய்ய பழைய கோயிலுக்கு மேற்கே பங்களாவிற்கு தெற்கே எண்ணை,செக்கு போன்ற ஒரு அமைப்பு செய்யப்பட்டிருந்தது. அதில் சுண்ணாம்பு பொடி, மண் மற்றும் தண்ணீரை ஊற்றி செக்கு கல்லை மனித கரங்களால் சுற்றி வந்தால் கலவை தயார் ஆகும். இந்தக் கலவையையும் கற்களையும் கொத்தனாரிடம் கொண்டு செல்ல ஆண்கள் தயாராக இருப்பார்கள். இதற்காக ஒவ்வொரு குடும்பமும் கோயில் வரியோடு இத்தனை ஆட்களை வேலைக்கு அனுப்ப வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டன. வேலை செய்ய ஆள் இல்லாத குடும்பங்கள் சம்பளம் கொடுத்து வெளி ஆட்களை நியமித்துக் கொள்ளலாம். இந்த உடல் உழைப்பு தானத்தை மேற்பார்வையிட்டு நெறிப்படுத்தியது பெரும்பாலும் பரஞ்சோதி முக்கந்தர்தான். நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்கு வரியும் நன்கொடையும் வசூலிக்கப்பட்டது. இலங்கையில் வசித்த இந்த கிராம மக்களின் கடைகளில் ஒரு உண்டியல் வைக்கப்பட்டு அதில் ஒவ்வொரு விற்பனையின்போதும் ஒரு தொகையை போட்டு மொத்தமாக ஆலயப்பணிக்கு கொடுக்கும் பழக்கமும் கடைபிடிக்கப்பட்டது. வெளி ஆட்களிடமிருந்தோ மறைமாவட்டத்திலிரந்தோ எந்த நிதி உதவியும் பெறவில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால் நான்கு குருக்களின் மேற்பார்வை, ஊர் மக்கள் அனைவரின் 26 ஆண்டுகால உழைப்பு, அவர்களின் வரிப்பணம் மற்றும் நன்கொடை இவற்றால் உருவானது தான் பொத்தக்காலன்விளை திருக்கல்யாணத்தாய் ஆலயம்.

1982-ம் ஆண்டு மீண்டும் இரண்டாவது முறையாக தந்தை லூர்துமணி பொத்தக்காலன்விளை கிராமத்தின் பங்குக்குருவாகப் பொறுப்பேற்றார். சாதாரணமாக ஒரு குருவானவர் இரண்டாவது முறையாக ஒரே ஊரில் பங்குக்குருவாக பொறுப்பேற்பது மிக அரிது. ஆனால் அந்த அரிதான காரியம் பொத்தக்காலன்விளையில் நிகழ்ந்தது. அதுவும் நமது கிராமத்தின் பாக்கியம் என்றே கூற வேண்டும். அவர் இம்முறை வந்த போது ஊரிலிருந்த தேர்ச் சப்பரம் 70 ஆண்டுகளாக பயன்பட்டு பழுதாகி தளர்ந்துபோய் இருந்தது. தேர் வீதிகளில் இழுத்து வருவது ஆபத்து என்ற கருத்தும் இருந்தது. இதனால் 1983-ம் ஆண்டு தேர் பவனி நடைபெறவில்லை. இந்த நவீன காலத்தில் தேர்ச்சப்பரம் அவசியமில்லை இருக்கிற தேர் சப்பரத்தை பிரித்து எடுத்து விடுங்கள் என்று மறைமாவட்ட நிர்வாகமும் சில குருக்களும் ஆலோசனைக் கூறினார்கள். ஆனால் தந்தை லூர்துமணி பழைய தேர்சப்பரத்தைப் போன்றே புதியதாக ஒரு தேர் சப்பரத்தை செய்வதில் உறுதியாக இருந்தார். இதற்காக மரத்தை தேர்வு செய்ய தன்

உதவியாளருடன் நாகர்கோவிலில் உள்ள மரக்கடைகளுக்கெல்லாம் ஏறி இறங்கினார். இறுதியாக ஒரு கடையில் ஓரமாக கிடந்த ஒரு பெரிய மரத்தை தேர்வு செய்து விலை பேசினார். மரக்கடைகாரருக்கு மகிழ்ச்சி. பழுதாகி விலை போகாமல் கிடந்த மரத்திற்கு ஒருவர் விலை பேசுகிறாரே என நினைத்து தந்தை கேட்ட குறைந்த விலைக்கே அந்த மரத்தைக் கொடுத்தார்.

அதை ஊருக்கு கொண்டு வந்து அறுத்தபோதுதான் தெரிந்தது அந்த மரம் ஒரு சிறு பகுதியைத் தவிர மற்ற பெரும்பகுதி வைரம் பாயந்த தேர் சப்பரம் செய்வதற்கு ஏற்ற உறுதியான மரம் என்பது. 1983-ம் ஆண்டு இறுதியில் தூத்துக்குடியிலிருந்து 10 தச்சு தொழிலாளர்களை வரவழைத்து ஊரிலே தங்க வைத்து புதிய தேர் சப்பரம் செய்ய பணித்தார். புதிய தேர் சப்பரம் மூன்று கட்டங்களாக செய்யப்பட்டது. முதல் கட்டமாக தரையிலிருந்து மேலே மாதா சுரூபம் முகப்புவரை செய்யப்பட்டது. இரண்டாவது கட்டமாக அதற்கு மேலே வரவேண்டிய கூண்டு போன்ற அமைப்பு தனியாக செய்யப்பட்டது. இது ஏறக்குறைய 800 கிலோ எடை இருந்தது. இதை மேலே தூக்கி முதல் கட்டத்தில் செய்த பகுதியோடு இணைக்க வேண்டும். இதை பொருத்துவதில் சிரமம் இருந்ததால் தச்சு தொழிலாளர்கள் பணியை கைவிட்டுவிட்டு ஊர்போக தயாரானார்கள். ஆனால் தந்தை லூர்துமணி அவர்களை தடுத்து நிறுத்தி சில அதிரடி உத்தரவுகளைப் போட்டார். அதன்படி நான்கு பனை மரங்கள் வெட்டி எடுக்கப்பட்டு முதல் கட்ட தேர் பகுதி இருந்த இடத்தில் நடப்பட்டன. அவற்றின் உச்சியில் நாலுபுறமும் கட்டி இணைத்து கப்பி கட்டி இரும்பு கம்பிகள் மூலம் இரண்டாம் கட்ட தேர் பகுதி மேலே இழுக்கப்பட்டு முதல் பகுதியோடு இணைக்கப்பட்டு தேர் முழு உருவம் பெற்றது. இதை செய்து முடிக்க எடுத்துக்கொண்ட கால அவகாசம் 6 மாதங்கள். செலவு ஏறக்குறைய ரூ.250000. ஆரம்பத்தில் 4 சக்கரங்கள்தான் பொருத்தப்பட்டன. பின்பு 6 சக்கரமாகியது. அதே போன்று சக்கரங்களுக்கு இரும்புப் பட்டையும் பின்னாளில்தான் பொருத்தப்பட்டது. இவ்வாறு தந்தை லூர்துமணியின் நேரடி மேற்பார்வையில் உருவான 48 அடி உயரமுள்ள புதிய தேர் 1984-ம் ஆண்டு அன்னையின் திரு உருவத்தைத் தாங்கி தேர் வீதிகளில் பவனி வந்தது.

தந்தை லூர்துமணியின் துணிச்சலான முடிவுகளால் நமது கிராமத்தின் புதிய ஆலயப்பணி வேகமெடுத்து முடிவுற்றதோடு கிராமத்திற்கு ஒரு புதிய தேர் சப்பரத்தையும் கொடுத்தது. இத்தனை சாதனை படைத்த அந்த பெரிய மனிதர் பங்குப் பொறுப்புகளிலிருந்து ஓய்வு பெற்று இருந்த நிலையில் 2010-ம் ஆண்டு காலமானார். இந்த உலகை விட்டுபிரிந்தாலும் நமது கிராம மக்களின் நினைவில் அவர் என்றும் இருப்பார்.

# கல்வித்தந்தை பீற்றர் ராஜா

பொத்தக்காலன்விளை கிராமம் தனிப்பங்காக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை 17 குருக்கள் பங்குக்குருவாக பொறுப்பேற்று அரும்பணியாற்றியுள்ளார்கள். தந்தை சிலுவை அந்தோணி அடிகளாரைப் பற்றியும் தந்தை லூர்துமணி அடிகளாரைப் பற்றியும் நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். இந்த வரிசையில் பொத்தக்காலன்விளை கிராமமும் அதன் மக்களும் என்றும் நினைவில் கொள்ளும் விதத்தில் ஒரு இமாலய சாதனை படைத்து நம் முன்னே காட்சி அளிக்கிறார் தந்தை பீற்றர் ராஜா. கிராமத்தில் இருந்த நடுநிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி அதற்குரிய அரசு அனுமதியையும் பெற்று அந்த காலக்கட்டத்தில் யாரும் சாதிக்க முடியாத ஒரு சாதனையை செய்து தந்துள்ளார் நமது கிராமத்திற்கு. அந்த மாமனிதரைப்பற்றி அறிந்து கொள்வது நமது கடமை.

தந்தை பீற்றர் ராஜா மிகவும் எளிமையானவர். அன்றும் இன்றும் ஒரு துறவி போலவே வாழ்பவர். அவர் 1932-ம் ஆண்டு நமது அண்டை கிராமமான சொக்கன்குடியிருப்பில் பிறந்தார். அவருடைய பெற்றோர்களுக்கு 7 குழந்தைகள். இவர் இரண்டாவது குழந்தை. ஒரு சகோதரி கன்னியாஸ்திரியாக சென்றுள்ளார். தன்னுடைய ஆரம்பப் படிப்பை சொந்த ஊரில் முடித்துவிட்டு மணப்பாட்டில் உயர்நிலைப்படிப்பை முடித்தார். ஒரு குருவானவராகி கத்தோலிக்க திருச்சபைக்கும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கும் ஆன்மீக பணியாற்ற வேண்டும் என்ற ஆவலினால் உந்தப்பட்டு குருமடத்தில் சேர்ந்தார். 1963-ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.குருவானவராக வருவதற்கு அவருக்கு வழிகாட்டியாக இருந்தது அவரது ஊரைச் சேர்ந்த தந்தை ஸ்தனிஸ்லாஸ் பாண்டியன் என நன்றியுடன் நினைவு கூறுகிறார்.

குருப்பட்டம் பெற்றப்பின் முதன் முதலாக தூத்துக்குடி பெரிய கோவில் பங்கில் உதவி பங்குக்குருவாக பொறுப்பேற்றார். அங்கு ஒரு ஆண்டு பணியாற்றியபின் மணப்பாடு வடக்கன்குளம் என ஒன்றன்பின் ஒன்றாக 14 ஊர்களில் குருவாக பணியாற்றி மறைமாவட்டத்தில் ஒரு ரெக்கார்டை ஏற்படுத்தியுள்ளார். வடக்கன்குளத்தில் பணியாற்றிய 11/2 ஆண்டுகளில் பிரிந்து சென்ற 220 குடும்பங்களை மீண்டும் கத்தோலிக்கத் திருச்சபைக்கு கொண்டு வந்தார். இது அவருடைய இறைபணியில் ஆற்றிய மிகப்பெரிய சாதனைகளில் ஒன்று என கருதுகிறார். அவருடைய மேய்ப்புப்பணியில் மிகவும் சவாலாக விளங்கியது உவரியிலும் கூத்தங்குழியிலும் பணியாற்றிய காலம். பலாத்காரத்திற்கும் குண்டுயெறி கலாச்சாரத்திற்கும் பெயர்போன கூத்தங்குழி கிராமத்திற்கு பங்குக்குருவானவராக மறை மாவட்ட நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டபோது அவர் உயிருடன் திரும்பி வருவாரா என்ற சந்தேகம்

எழுந்தது. ஏனெனில் அந்த நாட்களில் அங்கு நான்கைந்து கொலைச் சம்பவங்கள் நடந்தேறி எந்தக் குருவானவரும் அங்கே பணியாற்ற தயாராக இல்லாத நிலையில் சில காலத்திற்கு குருவானவரே இல்லாத நிலை இருந்தது. ஆனால் தந்தை பீற்றர் ராஜா எல்லா பாரத்தையும் இறைவன்மேல் போட்டுவிட்டு தைரியமாக கூத்தங்குழி சென்றார். சென்றது மாத்திரமல்ல தொடர்ந்து 8 ஆண்டுகள் அங்கு இறைபணியாற்றி பங்கு மக்களிடையே நற்பெயரோடு திரும்பினார்.

1985 ம் ஆண்டு பொத்தக்காலன்விளையில் பங்குப் பொருப்பு ஏற்றார். அவர் பொருப்பேற்றதும் அவர் கவனத்தை ஈர்த்தது கிராமத்தில் இருந்த பள்ளிகளின் நிலைதான். ஒரு ஆரம்ப பள்ளியும் ஒரு நடுநிலைப்பள்ளியும் கிராமத்தில் இருந்தன. நடுநிலைப்பள்ளியானது 1952 முதல் இயங்கி வந்தது. அதன் பிறகு 33 ஆண்டுகளாக எந்த மாற்றமும் இல்லை. இதனால் மாணவ மாணவிகள் 8-ம் வகுப்பிற்குப் பிறகு மேல்படிப்பை தொடர வேண்டுமானால் அருகிலுள்ள ஊர்களுக்கு நடந்து சென்று படிப்பை தொடர வேண்டியிருந்தது. இதன் விளைவாக பல மாணவ மாணவிகள் 8-ம் வகுப்பிற்கு பிறகு படிப்பை நிறுத்திவிடும் நிலையும் ஏற்பட்டது. இதைத் தவிர்க்க ஊரிலுள்ள நடுநிலைப்பள்ளியை ஏன் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தக்கூடாது? இந்த சிந்தனைதான் தந்தை பீற்றர் ராஜாவின் சிந்தனையில் ஓடி இரவும் பகலும் சிந்திக்க வைத்தது.

தந்தை பீற்றர் ராஜா வடக்கன்குளத்தில் பணியாற்றிய போது அந்த ஊரைச் சேர்ந்த தொழில் அதிபரும் ஈகிள் பிரஸ் அதிபருமான திரு.பிரதாப்சிங் அவருக்கு அறிமுகமாகியிருந்தார். அவருக்கு அப்போது தமிழ்நாடு மாநிலத்தின் கவர்னராக இருந்த பி.சி.அலெக்ஸாண்டர் அவர்களோடு தொடர்பு உண்டு என்பதையும் அறிந்திருந்தார். எனவே அவரை அணுகி இது சம்மந்தமாக ஆலோசனைப் பெறலாம் என நினைத்தார். உடனே சென்னை சென்று திரு.பிரதாப்சிங்கை சந்தித்து விசயத்தைக் கூற அவரும் உதவுவதாகக் கூறி தந்தையை நேராக கவர்னரிடமே அழைத்துச் சென்றார். தந்தையுடைய விண்ணப்பத்தைக் கேட்டறிந்த கவர்னர் அவருடைய உதவியாளரும் கல்வித்துறையை கவனித்து வந்த அதிகாரியுமான திரு.பத்மனாபன் என்பவரிடம் அனுப்பி வைத்தார். திரு.பத்மனாபனிடம் தந்தை கோரிய விண்ணப்பம் இது தான். “எங்கள் ஊர் கிராமப் பகுதி ஏழை மக்கள் பனைத்தொழில் செய்பவர்கள். மறைந்த பெருந்தலைவர் காமராஜரின் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் ஊர் பிள்ளைகள் உள்ளூரிலேயே படிப்பதற்கு வசதியாக ஊரிலுள்ள நடுநிலைப்பள்ளியை தரம் உயர்த்தி மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அனுமதித்து அரசு உதவியும் கொடுக்க வேண்டும்.”

இந்த பத்மனாபனைப் பற்றி ஒரு பிளாஸ்பேக். இவர் பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது அவரிடம் பணியாற்றியுள்ளார்.

பெருந்தலைவர் மீது பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். அவரது பெயரைக் கேட்டதும் மனம் இளகி விட்டார். அதோடு தந்தையின் எளிய தோற்றமும் கிராமத்துப் பேச்சும் அவரை மிகவும் கவர்ந்துவிட்டது. அந்த நிமிடமே இவருடைய விண்ணப்பத்தை அனுமதிக்க வேண்டும் என்று மனதில் நினத்துவிட்டார்; என்றாலும் தந்தையின் வேண்டுகோளை கவனிப்பதாகவும் அதற்குரிய ஆரம்ப வேலைகளை செய்யுமாறும் பணித்து இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு தன்னை வந்து பார்க்கும்படியும் அனுப்பி வைத்தார்.

அரசு அனுமதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடு ஊருக்கு திரும்பி வந்த தந்தை மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி யோசிக்க ஆரம்பித்தார். மேல்நிலைப்பள்ளிகளுக்கு தகுதியான இடத்தை தேர்வு செய்ய வேண்டும். அதில் பள்ளிக் கட்டிடம் கட்ட வேண்டும். இதற்கு நிதி தேவை. யாரிடம் கேட்பது? இந்த சிந்தனைகளோடு பஞ்சாயத்து தலைவரிடம் விசயத்தை எடுத்துரைத்தார். அவருடைய ஆலோசனையின் பேரில் ஊர்க்கூட்டம் கூட்டப்பட்டது. ஆனால் யாரும் நிதி கொடுத்து உதவ முன்வரவில்லை. ஊரிலிருந்து நிதி எதுவும் எதிர் பார்க்காமல் பங்குத்தந்தையின் முயற்சியால் மேல்நிலைப்பள்ளி கொண்டு வருவதானால் வரட்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தந்தைக்கு இது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. என்றாலும் மனம் தளரவில்லை. ஆரம்பத்தில் யாரிடமாவது சிறு தொகையை கடனாக பெற்று கட்டிட வேலையை ஆரம்பித்துவிட்டு போகப் போக நிதியை திரட்டி விடலாம் என நினைத்தார். அதன்படி ஊரிலுள்ள ஒரு நபரிடம் கடனாக ரூபாய் ஒன்றரை லட்சம் பெற ஏற்பாடு செய்தார். மேற்கொண்டு ஒரு தொண்டு நிறுவனத்திடமிருந்து ரூ.30000/- பெறவும் ஏற்பாடு செய்தார். பள்ளிக்கட்டிடத்தை கோவில் வளாகத்தில் கன்னியர்களின் மடத்தை ஒட்டி கிழக்கே கட்டுவது எனவும் தீர்மானித்தார்.

இந்த திட்டத்தோடு மீண்டும் சென்னை சென்று திரு.பத்மனாபனை சந்தித்தார். பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கான விண்ணப்ப நகலை கேட்டபோது தான் இன்னும் விண்ணப்பமே எழுத்தில் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்தார். ஆனால் திரு.பத்மனாபனோ சிறிதும் தயங்காமல் தொலைபேசியை எடுத்தார். மாவட்ட தலைமை கல்வி அதிகாரியை தொடர்பு கொண்டு அவரிடம் இவ்வாறு கூறினார். பொத்தக்காலன்விளை கிராமத்தில் உள்ள தூய வளனார் நடுநிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக வருகின்ற ஆண்டிற்குள் தரம் உயர்த்த கேட்டு தந்தை பீற்றர் ராஜா வந்துள்ளார். நீங்கள் ஒரு அதிகாரியை அங்கு அனுப்பி தந்தையை சந்தித்து அதற்குரிய விண்ணப்பத்தைப் பெற்று உங்களுடைய சிபாரிசையும் இணைத்து எனக்கு இரண்டு வாரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

அந்த உரையாடலைக் கேட்ட தந்தை பீற்றர் ராஜாவுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. இறைவனுக்கு நன்றி கூறி ஊர் திரும்பினார். ஊர் திரும்பியதும் கால

தாமதம் செய்யாமல் பள்ளிக்கூடத்தை தரம் உயர்த்த அரசிடம் அனுமதி கேட்டு விண்ணப்பம் தயார் செய்தார். அதோடு கடன் தருவதாக கூறிவரிடம் பணத்தைப் பெற்று ஒரு கொத்தனாரை வைத்து பள்ளிக்கூட கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போடுவதற்கும் ஏற்பாடு செய்தார். கட்டிடம் மிகவும் எளிமையாக அதேசமயம் அடிப்படை தேவைகளான 7 வகுப்பறைகள் முதல்வர் மற்றும் அலுவலக அறை, ரசாயன சோதனை அறை, ஆசிரியர்கள் அறை என 10 அறைகளைக் கொண்ட கட்டிடமாக திட்டம் தீட்டப்பட்டது. திரு.பத்மனாபன் கூறியபடி மாவட்டக்கல்வித்துறை அதிகாரி ஒருவர் வந்து விண்ணப்பத்தை பெற்று தந்தையிடம் மேற்கொண்டு விபரங்களையும் பெற்றுச் சென்றார். இந்த விவகாரத்தில் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியாக பணியாற்றிய அழகப்பபுரத்தைச் சேர்ந்த திரு.ஜோசப் அலெக்ஸிஸ் மிகவும் உதவியாக இருந்ததாக தந்தை நினைவு கூறுகிறார். இதைத் தொடர்ந்து தந்தை பீற்றர் ராஜா சென்னைக்கு சுமார் ஒன்பது முறை சென்று வந்து திரு.பத்மனாபனையும் மற்ற அதிகாரிகளையும் சந்தித்து பேசியதாக கூறுகிறார். ஒவ்வொரு முறையும் சென்னை செல்லும் போது குருவானவருக்குரிய வெள்ளை அங்கியும் சிவப்பு கச்சையும் தவிர வேறு உடை அணிவதில்லை. ஹோட்டல்களில் ரூம் எடுத்து தங்குவதில்லை. நமது கிராமத்தைச் சேர்ந்த திரு.ரோக் ஜெயராஜ். இல்லத்தில் மூன்று மாதங்கள் வரை தங்கியிருந்து எல்லா வேலைகளையும் செய்தார். இவருடைய சிறப்பு குணம் என்னவென்றால் எந்த இடத்திற்கு சென்றாலும் அந்த இடத்தில் முழந்தாளிட்டு அந்த நபருக்காக ஜெபித்து விட்டுதான் திரும்புவார். முடிந்தமட்டும் செலவைக் குறைக்க வேண்டும் என்பது அவரது நோக்கம்.

தந்தை பீற்றர் ராஜாவின் விடாமுயற்சியின் பலனாக பள்ளியின் தரம் உயர்த்தும் அரசு அனுமதி 1986-ம் ஆண்டு மே மாதம் கிடைத்தது. அரசு அனுமதி பெற்றதும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அதே ஆண்டில் 9ம் வகுப்பு துவக்கப்பட்டது. புதிய பள்ளிக் கட்டிடம் முடிவு பெறாத நிலையில் 9ம் வகுப்பு பழைய கோவில் கட்டிடத்தில் இயங்கியது. ரூபாய் 3 லட்சம் செலவில் புதிய பள்ளிக் கட்டிடமும் ஒரு வழியாக கட்டி முடிக்கப்பட்டது.இந்த தொகை முழுவதும் தந்தையின் தனி முயற்சியால் நன்கொடையாக பெறப்பட்டது. அதில் பெரும் பகுதி வெளிநாட்டிலிருந்த அவருடைய உபகாரி வழியாக வந்தது. இந்த முயற்சியில் வெற்றி பெறுவதற்கு தந்தை எடுத்துக் கொண்ட கால அவகாசம் ஏறக்குறைய ஆறேழுமாதங்கள்தான். அரசு இயந்திரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நேரில் பார்த்தும் மற்றவர்கள் சொல்லக்கேட்டும் அறிந்த நமக்கு இது ஒரு இமாலய சாதனை என்றே தோன்றுகிறது. அன்று கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடம் பின்னாளில் இடிக்கப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ள பெரிய விசாலமான கட்டிடத்திற்கு பள்ளிக்கூடம் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1991ம் ஆண்டு தந்தை பொத்தக்காலன்விளை பங்கிலிருந்து மாற்றலாகி மறை மாவட்டத்திற்கு பிரச்சனையாக இருந்த பல்வேறு பங்குகளுக்கு

இறைபணியாற்ற அனுப்பப்பட்டார். காவல்கிணறு பங்கில் பணியாற்றிய போது அங்கு பள்ளிக்கூட கட்டிடம் ஒன்றை கட்டிக் கொடுத்தார். இதே போன்று ராஜகிருஸ்ணாபுரத்தில் பல ஆண்டுகளாக கட்டிமுடிக்காமல் இருந்த ஆலயக் கட்டிடத்தை கட்டிக் கொடுத்தார்.

இறுதியாக 2002-ம் ஆண்டு தட்டார்மடம் தனிப்பங்காக அறிவிக்கப்பட்டபோது அதன் முதல் பங்குக் குருவாக நியமிக்கப்பட்டார். தட்டார்மடத்திலும் ஒரு உயர்நிலைப்பள்ளியை நிறுவ உதவினார். 2007-ம் ஆண்டு ஓய்வு பெற்று தூத்துக்குடியில் உள்ள முதியோர் இல்லத்தில் ஓய்வில் இருந்தார். இப்பொழுது சொக்கன்குடியிருப்பு அருகிலுள்ள ஒரு காட்டுப்பகுதியில் சிறு குடிசை வீடு அமைத்து முற்றும் துறந்த முனிவர் போல உண்மையான துறவியாக வாழ்கிறார். ஓய்வு பெற்ற குருக்கள் இல்லத்தில் வாழலாமே எனக்கேட்டால், இந்த வாழ்க்கைதான் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது எனக் கூறுகிறார். "வாழ்க எங்கிருந்தாலும் நலமுடன்" என்று சொல்வதைத் தவிர வேறு வார்த்தை தெரியவில்லை நமக்கு.

## பொத்தக்காலன்விளையின் முதல் பட்டதாரி

இதுவரை பொத்தக்காலன்விளை கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்து வாழ்ந்து சாதனைகள் பல படைத்து அழியா முத்திரை பதித்துவிட்டுச் சென்ற பெரியவர்கள் பற்றி எழுதி வந்தேன். இந்த இதழில் இந்த நூற்றாண்டில் பிறந்து சாதனைகள் புரிந்து இன்றும் நம்மோடு வாழ்ந்து வருகிற பேராசிரியர் ஜேசுதுரை பற்றிய தகவல்களை வாசகர்களிடையே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பேராசிரியர் ஜேசுதுரை அவர்கள் ஞானாதிக்கம் உபதேசியாரின் கடைக்குட்டி மகனாக 1932-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதி பிறந்தார். இவருடைய பிறந்த தேதியைப் பற்றி ஒரு சுவாரசியமான விசயத்தை கூறுகிறார் திரு.ஜேசுதுரை . கிராமத்திதல் இன்றும் பாதுகாக்கப்பட்டு வரும் திருமுழுக்கு பதிவேட்டில் பிறந்த தேதியும் திருமுழுக்கு கொடுத்த தேதியும் 22.5.1932 என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படியானால் பிறந்த அன்றே கோயிலில் போய் பெற்றோர் குழந்தைக்கு திருமுழுக்கு கொடுத்தார்களா. அது தான் இல்லை என அவருடைய தாயாரடமிருந்து அறிந்து வைத்துள்ளார். பின் என்னதான் நடந்தது. ஊரில் குருவானவர் இல்லாத அந்த காலத்தில் குழந்தை பிறந்து நான்கைந்து மாதங்கள் கழித்து பக்கத்து ஊரிலிருந்து குருவானவர் கிராமத்திற்கு வருகின்ற நாளில் எல்லா குழந்தைகளுக்கும் திருமுழுக்கு கொடுக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. பதிவேட்டில் திருமுழுக்கு நாள் குறிக்கப்படும். ஆனால் பிறந்த தேதி குத்துமதிப்பாக நான்கு மாதங்களுக்கு முன்பு என்றோ அல்லது எதுவுமே குறிப்பிடாமலோ பதிவு செய்வார்கள். திரு.ஜேசுதுரை விசயத்தில் பிறந்த தேதியாக எதுவுமே குறிப்பிடாமல் விடப்பட்டுள்ளது. இதனால் பிறந்த தேதியாக திருமுழுக்கு கொடுத்த தேதியையே பள்ளி ஏடுகளில் குறிப்பிட்டு அதுவே வழக்கில் வந்துவிட்டது.

சிறுவன் ஜேசுதுரை பள்ளிப்படிப்பை கிராமத்தில் இருந்த ஆரம்ப பள்ளியில் துவங்கியுள்ளார். அந்தக் காலத்தில் ஐந்தாம் வகுப்பு படித்து முடித்துவிட்டு 6-ம் வகுப்பிற்கு சென்று தொடர்ந்து படிக்க விரும்பினால் சாத்தான்குளத்தில் உள்ள R.C பள்ளியில் படிப்பது வழக்கம். அந்த நடுநிலைப்பள்ளியில் 8-ம் வகுப்பு வரை படித்து முடித்ததும் சாத்தான்குளத்தில் உள்ள TDTA புலமாடன் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில்9,10மற்றும் 11-ம் வகுப்புகள் படித்து S.S.L.C முடித்துள்ளார். பொத்தக்காலன்விளையில் இருந்து சாத்தான்குளத்திற்கு தூரம் 7 கிலோ மீட்டர். மண் சாலை. புத்தகப்பையோடு மதிய உணவு பாத்திரத்தையும் சுமந்து கொண்டு ஒரு ஆண்டு அல்ல இரண்டு ஆண்டு அல்ல 6 ஆண்டுகள் தினமும் போக வர 14 கிலோமீட்டர் நடந்து சென்று படித்துள்ளார் என்றால் அவருடைய ஆர்வத்தையும்

விடா முயற்சியையும் புரிந்து கொள்ளலாம். ஆனால் அதை ஒரு ஜாலியான அனுபவம் என்றே நினைவில் கூறுகிறார். ஏனெனில் சொந்த ஊர் மாணவர்களோடு வழியில் உள்ள மற்ற கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் சேர்ந்து கொள்ள அவர்களோடு நடந்து ஓடி விளையாடி சமயங்களில் சண்டையும் போட்டு சென்று படித்த காலம் ஒரு இனிமையான மறக்க முடியாத காலம் என்கிறார்.

1951-ம் ஆண்டு S.S.L.C முடித்த கையோடு இன்டர் படிக்க கல்லூரியை நாடியபோது தான் ஏற்படுகின்ற தடைகளை உணர்கறார். கிராமத்தில் பங்குக்குருவானவரோடு நடந்த பிரச்சனையால் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியின் கதவுகள் சாத்தப்பட, தென் இந்திய திருச்சபையால் நடத்தப்படும் செயின்ட் ஜான் கல்லூரியை நாடுகிறார். அங்கே கல்லூரியிலும் தங்கும் விடுதியிலும் இடம் கிடைக்கிறது. அங்கே இன்டர்முடித்துவிட்டு சென்னையில் உள்ள விவேகானந்தர் கல்லூரியில் கணக்குப் பாடத்தை முதல் பாடமாக எடுத்து 1955-ம் ஆண்டு பட்டப்படிப்பை முடிக்கிறார். பொத்தக்காலன்விளை கிராமத்திலிருந்து வந்த முதல் பட்டதாரி என்ற பெருமையையும் பெறுகிறார். இதற்கிடையே பொத்தக்காலன்விளையில் நடந்த பிரச்சனை ஓரளவு தீர்ந்ததால் மீண்டும் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரிக்கு வந்து பட்டதாரி ஆசிரியர் பயிற்சி படிப்பை முடிக்கிறார். அதைத் தொடர்ந்து ஒரு ஆண்டு மணப்பாடு உயர்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணி செய்கிறார். என்றாலும் மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்க ஆசிரியர் பணியிலிருந்து விலகி திருச்சி புனித வளனார் கல்லூரியில் முதுகலைப் பட்டபடிப்பை (M.SC) முடிக்கிறார். இது நடப்பது 1960-ல் ஆக பொத்தக்காலன்விளை கிராமத்தில் இருந்து வந்த முதல் முதுகலைப் பட்டதாரி என்ற இரண்டாவது பெருமையையும் பெறுகிறார். இந்த அரிய சாதனையை இன்றைய நடைமுறையோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. 60 ஆண்டுகளுக்கு முன்னால் ஒர இளைஞர் அதுவும் ஒரு கிராமத்திலிருந்து யாருடைய தூண்டுதலும் இன்றி எண்ணற்ற தடைக்கற்களைக் கடந்து M.SC. படித்து வெற்றியோடு வருகிறார் என்றால் அது ஒரு மகத்தான சாதனை என்றே கூறுவேன். M.SC. படித்து முடித்ததும் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியின் கணக்கு பாடத்துறையில் விரிவுரையாளராக பணி ஏற்றார். தொடர்ந்து 24 ஆண்டுகள் பணியாற்றி பெயரும் புகழும் சேர்த்தார்.

1957-ம் ஆண்டு திரு.ஜேசுதுரை அவர்கள் பாளையங்கோட்டை சப்கோர்ட்டில் வக்கீலாக தொழில் செய்து வந்த பத்மினி அவர்களை திருமணம் செய்தார். இந்த பத்மினி என்பவர் பிரகாசப்புரத்தை பூர்வீகமாக கொண்டு பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியில் பேராசிரியராகவும்

பின்னாளில் வேறு ஒரு கல்லூரியின் முதல்வராகவும் பணியாற்றிய டேவிட் மைக்கேல் அவர்களுடைய மூத்த புதல்வியாவார். திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்கள் பாளையங்கோட்டை நீதிமன்றங்களில் அரசு வக்கீலாக 12 ஆண்டுகள் பணியாற்றினார்கள். அவருடைய நேர்மையையும் திறமையையும் அறிந்து தமிழ்நாடு அரசு 1983-ம் ஆண்டு சென்னைக்கு அழைத்தது. அரசு அழைப்பை ஏற்று வந்த திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்களை தமிழ்நாடு அரசு கூடுதல் பப்ளிக் பிராசிக்கூட்டராக நியமித்தது. மூன்று ஆண்டுகள் கழித்து 1986-ம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு.எம்.ஜி.ஆர். அவர்களின் சிபாரிசின்பேரில் மத்திய அரசு அவரை சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக நியமித்தது. இது திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்களின் நேர்மைக்கும் சட்ட அறிவுக்கும் நடுநிலைமைக்கும் கிடைத்த சான்று என்றே எல்லா தரப்பினரும் பாராட்டினார்கள். பொத்தக்காலன்விளை கிராமமோ தனது ஊரின் மருமகளுக்கும் தனக்கும் கிடைத்த பெருமையாக கருதி மகிழ்ந்தது. 1993-ம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும்அவருடைய திறமையையும் நேர்மையையும் கருத்தில் கொண்டு மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் தலைவராகவும் வேறு சில விசாரணை கமிசனின் தலைவராகவும் நியமித்து அரசு அவரை கௌரவித்தது. கடந்த அக்டோபர் மாதம் (2014ம் வருடம்) இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு இறைவனடி சேர்ந்தார். அவருடைய இறுதி யாத்திரையின்போது பல தரப்பு மக்களும் குருக்களும் கலந்து கொண்டு மரியாதை செய்தது நெஞ்சை தொடுவதாக இருந்தது.

1983-ம் ஆண்டு திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்கள் சென்னை வந்ததும் குடும்ப நலனுக்காக திரு.ஜேசுதுரை அவர்களும் சென்னை வந்தார்கள். அங்கே பிரபலமான வைஸ்ணவா கல்லூரியின் கதவுகள் அவருக்காக திறந்தே இருந்தன. அந்த கல்லூரியின் கணக்கு துறையில் பேராசியராக பதவி ஏற்று 1991-ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

அவருக்கு ஒரு மகனும் மூன்று மகள்களும் உள்ளனர். எல்லோரும் உயர்கல்வி பெற்று சகல வசதிகளோடும் வாழ்ந்து வருகிறார்கள். இன்று சென்னையில் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளோடு தனது ஓய்வு காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்துக் கொண்டு இருக்கிறார். ஒரு கிராமத்தில் பிறந்து கிராமப்பள்ளியில் பயின்று பல தடைக்கற்களையும் கடந்து வந்து கல்வித்துறையில் பெரிய பதவியை அடைந்தும் அவரிடம் வீண் டாம்பீகமோ பந்தாவோ என்றும் இருந்ததில்லை. அடக்கம் அவருடைய பெரிய சொத்து எனலாம். பொத்தக்காலன்விளையின் மிகச்சிறந்த சாதனையாளர்களில் ஒருவர் பேராசிரியர் ஜேசுதுரை என்றால் அது மிகையாகாது.

# பொத்தக்காலன்விளையின் சாதனையாளர்

## D.தாசன் & பீற்றர் ஜோசப்



கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக திருக்கல்யாணத்தாய் இதழில் எனது கிராமம் என்ற தலைப்பில் பொத்தக்காலன்விளை கிராமத்தைப் பற்றியும் அங்கு வாழ்ந்து சாதனை படைத்த பெரியவர்கள் பற்றியும் எழுதி வந்துள்ளார் திரு.ஜேசுதாசன் அவர்கள். நமது கிராமத்தின் மிகப் பெரிய சாதனையாளர் அவர். ஆகவே அவரைப் பற்றியும் எழுத வேண்டும் என பலர் வேண்டுகொள் விடுத்துள்ளனர். திரு.ஜேசுதாசனைப் பற்றி அறியாதவர்கள் நமது கிராமத்தில் யாரும் இருக்கமாட்டார்கள் என்றாலும் அவரைப்பற்றிய பல தகவல்கள் இன்றைய தலைமுறையினர் பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே அவரையும் அவரோடு நெருங்கி பழகிய மற்றவர்களையும் பேட்டி கண்டு அவருடைய முழு வாழ்க்கைக் குறிப்பையும் தொகுத்து இந்த கட்டுரையில் அளிக்கின்றோம்.

திரு.ஜேசுதாசன் பாக்கியம் முக்கந்தர் குடும்பத்தில் மரிய வியாகுலம் நாடார்-தஸ்நேவிஸ் அம்மாள் தம்பதியருக்கு ஏழாவது குழந்தையாக 1941-ம் வருடம் பிறந்தார். அவரது ஆரம்பப் படிப்பை கிராமத்தில் இருந்த ஆரம்பப்பள்ளியில் முடித்து அந்தக் காலத்து வழக்கப்படி 6-ம் வகுப்பை சாத்தான்குளத்தில் உள்ள R.C நடுநிலைப்பள்ளியில் பயின்றார். அதே ஆண்டு பொத்தக்காலன்விளையில் இருந்த தூய வளனார் பெண்கள் ஆரம்பப்பள்ளி நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட அடுத்த இரண்டு ஆண்டுகள் பொத்தக்காலன்விளை பள்ளிக்கே திரும்பி வந்து 8ம் வகுப்பு பொதுத்தேர்வு (E.S.L.C) எழுதி வெற்றிபெற்றார். அதன்பின் பங்குத்தந்தை M.S.அந்தோணி அடிகளாரின் வழிகாட்டுதல்படி தூத்துக்குடி சிறுமலர் குருமடத்தில் சேர்ந்தார். 1958-ல் அங்கே உள்ள சவேரியார் உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்தார். அதைத் தொடர்ந்து தூத்துக்குடி வ.ஊ.சி. கல்லூரியில் பி.யூ.சி. படித்துவிட்டு மதுரை குருமடத்தில் ஒரு ஆண்டு லத்தீன் படித்தார். மதுரை குருமடத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது தனக்கு இந்த குருமட வாழ்க்கை ஒத்துவராது என உணர்ந்து அங்கிருந்து வெளியேறி காந்திகிராம பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1963-ம் ஆண்டு பட்டப்படிப்பை முதல் வகுப்பில் முதல் ரேங் எடுத்து தேறினார். அங்கே இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த போது டில்லியில் நடந்த அகில இந்திய பல்கலைக்கழக மாணவர்கள் பேச்சுப்போட்டியில் பங்கேற்று முதல் பரிசு பெற்றார். அந்த பரிசை அன்றைய பாரத பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் கையால் பெற்றதை ஒரு பெருமையாக கருதுகிறார்.

பட்டப்படிப்பு இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கும்போதே மெட்ராஸ் சர்வீஸ் கமிசன் வழியாக தமிழ்நாடு அரசு வேலைக்கு மனு செய்து போட்டித்தேர்வும் எழுதியிருந்தார். விடுமுறைக்கு வரும் வேளையில் அதன் முடிவு வெளியாகி கையில்

வேலைக்காள ஆர்டரும் கிடைத்தது. இதில் ஒரு சுவாரசியம் என்னவென்றால் அவர் மனு செய்திருந்ததோ கீழ்நிலை எழுத்தர் ( L.D.C ) வேலைக்கு ஆனால் ஆர்டர் வந்ததோ மேல்நிலை (U.D.C) எழுத்தர் வேலைக்கு. காரணம் பல்லாயிரக்கணக்கானோர் எழுதிய போட்டித்தேர்வில் முதல் 100 ரேங்க் எடுத்தவர்களுக்ககு ஒரு படி மேலே உள்ள பதவிக்கு தேர்வு செய்து ஆர்டர் கொடுத்தாக சொல்லப்பட்டது. ஒருமாத விடுமுறை கழிந்ததும் 1963 ஜுன் மாதத்தில் சென்னை சென்று அரசு பணியில் அமர்ந்தார். இந்த வேளையில் பட்டப்படிப்பு தேர்வு முடிவு வெளியாகி இருந்தது. அவரது மார்க் விபரங்களைப் பார்த்த காந்திகிராம நிறுவனரும் இயக்குனருமான திருமதி. T.V.S. சௌந்திரம்மாள் (அன்றைய மத்திய மந்திரி) அவரை அழைத்து காந்திகிராம பல்கலைக்கழகத்தில் பயிற்சி விரிவுரையாளராக சேரும்படியும் பின்பு அமெரிக்காவிற்கு அனுப்பி மேற்படிப்பு படிக்க வைத்து மீண்டும் பேராசிரியராக நியமிப்பதாகவும் அழைப்பு விடுத்தார்கள். ஆனால் அவரோ தனது துறை பேராசிரியர் “கையில் உள்ள அரசு வேலையை விட்டுவிட்டு காந்திகிராமத்திற்கு வர வேண்டாம்'' என கூறிய ஆலோசனையை ஏற்று திருமதி.சௌந்திரம்மாளின் அழைப்பை நிராகரித்துவிட்டார். இந்த முடிவு திரு.ஜேசுதாசன் அவர்களின் வாழக்கைப் பாதையை முற்றிலுமாக மாற்றிவிட்டது.

அரசுவேலை கிடைத்ததும் அதோடு திருப்தி அடையவில்லை திரு.ஜேசுதாசன். மாநில அரசு, மத்திய அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் என எல்லாப் போட்டித் தேர்வுகளிலும் பங்கேற்றார். அடுத்த ஆண்டே 1964-ல் ரிசர்வ் பேங்க் சென்னை அலுவலகம் நடத்திய போட்டித்தேர்வில் வெற்றிப்பெற்று நேர்முகத்தேர்விலும் வெற்றி பெற்றார். மாநில அரசு வேலைக்கு குட்பை காண்பித்துவிட்டு சென்னை ரிசர்வ் வங்கியில் எழுத்தராக பணியில் சேர்ந்தார். இன்னும் மேலே செல்ல வேண்டும் என்ற ஆர்வம் இருந்துகொண்டே இருந்தது. அதற்கும் வாய்ப்பு உடனே கிட்டியது. 1966-ம் ஆண்டு ரிசர்வ் பேங்க் அதிகாரிகள் வேலை தேர்வில் அகில இந்திய அளவில் போட்டித் தேர்விலும் நேர்முகத்தேர்விலும் வெற்றிப்பெற்ற 52 பேரில் ஒருவராக அறிவிக்கப்பட்டார். ஆரம்பப் பயிற்சியை சென்னையில் முடித்துவிட்டு பம்பாய்க்கு மாற்றப்பட்டார். அதன்பின் அவருக்கு ஏறுமுகம் தான். தனது கடின உழைப்பாலும் நேர்மையாலும் படிப்படியாக பதவி உயர்வு பெற்றுஇந்தியாவின் பல நகரங்களிலும் பணியாற்றி பொது மேலாளர் (General Manager) என்ற உயர்பதவியைப் பெற்றார்.

1992-ம் ஆண்டு ஹைதராபாத்தில் பணியில் இருந்தபோது திடீரென தலைமை அலுவலகத்தில் இருந்து ஒரு அழைப்பு வந்தது. தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் சேர்மனாக உடனே பொறுப்பு எடுக்க வேண்டும் என்றது அந்த ஆர்டர். அந்த வங்கியின் சேர்மன் பதவி காலியானதும் அதை நிரப்புவதில் சிறு குழப்பம் நிலவியதால் ரிசர்வ் பேங்க் நிர்வாகம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி திரு.ஜேசுதாசனை சேர்மனாக நியமித்தது. தற்காலிகமாக ஆறுமாதத்திற்கு என்று ரிசர்வ் பேங்க் ஆணை கூறியது. அந்த ஆறு மாதத்திற்குள் வங்கியின் நிர்வாகம் தகுதியான ஒருவரை நியமிக்க ரிசர்வ் பேங்க்கு சிபாரிசு செய்ய வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. ரிசர்வ் பேங்க் கவர்னரின் ஆணையை ஏற்று திரு.ஜேசுதாசன்1992-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தூத்துக்குடிக்கு வந்து பொறுப்பை ஏற்றார். ஆரம்பத்தில்

பதறிப்போன வங்கி நிர்வாகம் இது நம்ம ஆள் என தெரிந்ததும் ஒட்டிக்கொண்டனர். அவருடைய நிர்வாகத்திறமையையும் வங்கித்துறை பற்றிய அறிவையும் நேரில் கண்டறிந்த வங்கி இயக்குநர்கள் திரு.ஜேசுதாசன் அவர்களை தொடர்ந்து சேர்மனாக நீடிக்க கேட்டுக் கொண்டதன் பேரில் ரிசர்வ் பேங்கும் அவரை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு பணியாற்ற அனுமதித்தது.

திரு.ஜேசுதாசன் சேர்மன் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளிலேயே வங்கி விஸ்வரூப வளர்ச்சியை எட்டியது. வைப்பு நிதி கடன்கள் லாபம் மற்றும் கிளைகள் என எல்லாமே இரண்டு மூன்று மடங்கு உயர்ந்தன. அதுவரை பெரும்பாலும் தமிழ்நாட்டுக்குள்ளேயே இயங்கி வந்த வங்கி இந்தியா எங்கும் கால்பதிக்க அரம்பித்தது. இந்தியாவில் இயங்கி வந்த தனியார் வங்கிகளில் தரத்தில் முதல் தர வங்கியாக சில ஆய்வு நிறுவனங்கள் ஆய்வு அறிக்கை கொடுத்தன. ஆனால் வங்கியின் முதலீடு மட்டும் மிக குறைவாக ரூ.28 லட்சம் மட்டுமே இருந்தது. பங்குதாரர்கள் எண்ணிக்கையும் வெறும் 1000-த்திற்குள்தான். இவை எல்லாம் சேர்ந்து இந்த வங்கியின் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால் என்ன என்ற எண்ணத்தை பல தொழில் அதிபர்களுக்கு கொடுத்தது. அதோடு வங்கி இயக்குனர்களிடையே ஒற்றுமையின்மையும் சேர்ந்து கொண்டது. விளைவு வட மாநிலத்தை சேர்ந்த ஒரு தொழில் நிறுவனம் இந்த வங்கியின் பெரும்பாலான (67%) பங்குகளை கூடுதல் விலை கொடுத்து வாங்கி குவித்தது. பொதுவாக ஒரு நிறுவனத்தின் பெரும்பாலான பங்குகள் கைமாறும்போது அந்த நிறுவனத்தின் நிர்வாகமும் கைமாறும். ஆனால் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி விவகாரத்தில் இது நடக்கவில்லை. காரணம் வங்கிகள் சம்மந்தப்பட்ட சில சட்ட நெறிமுறைகள்படி கைமாறிய பங்குகளை பெயர் மாற்றம் செய்வதற்கு வங்கியின் இயக்குனர் குழு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதோடு ரிசர்வ் வங்கியும் மாற்றத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

இதற்கிடையில் கைமாறிய பங்குகளை பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்றும் வங்கியின் நிர்வாகம் வெளியாருக்கு போகக் கூடாது என்றும் மதுரை மகாஜன சங்கமும் மற்ற நாடார் அமைப்புகளும் குரல் கொடுக்க ஆரம்பித்தன. சேர்மன் திரு.ஜேசுதாசன் ஒருநிலைப்பாடடை எடுத்தார். அதாவது இந்த வங்கி ஒரு சமூகத்தினரால் அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே அதன் நிர்வாகம் அவர்களிடையே இருப்பதுதான் முறையானது என்ற நிலைப்பாட்டை எடுத்தார். பெரும்பாலான பங்குகளை வாங்கிய நிறுவனமோ சேர்மனின் ஆதரவைப் பெற பல முயற்சிகள் செய்தது. அவருடைய ஆதரவிற்கு விலையாக பல கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டது. பல வகையான நெருக்கடிகளும் அச்சுறுத்துதல்களும் கொடுக்கப்பட்டன. ஆனால் அந்த ஆசை வார்த்தைகளும் அச்சுறுத்துதல்களும் அவருடைய நிலைப்பாட்டை மாற்றவில்லை. சட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்திருந்த திரு.ஜேசுதாசனின் ஆலோசனைப்படி பெயர் மாற்ற விண்ணப்பத்தை வங்கியின் இயக்குனர் குழு நிராகரித்தது. ரிசர்வ் பேங்கும் தன் பங்கிற்கு நிர்வாக மாற்றத்திற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது. அதைத் தொடர்ந்து கைமாறிய பங்குகளை தி ரு ம் ப வு ம் விலைகொடுத்து வாங்கி வினியோகிக்க நாடார் அமைப்புகள் எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்று இன்றுவரை மெர்கண்டைல் வங்கியின் நிர்வாகம் அந்த சமுதாயத்தினரிடமே இருக்கிறது. இந்த அரிய சாதனைக்குரியவர் திரு.ஜேசுதாசன் அவர்களே. 1996 மார்ச் மாதத்தோடு அவருடைய பதவிக்காலம் முடிவுற்றது. அன்றிருந்த சூழ்நிலையில் இனி

தாய் நிறுவனத்திற்கே திரும்பிவிடுவது நல்லது என்று உணர்ந்து ரிசர்வ் பேங்க் சென்னை அலுவலகத்தில் அதன் பொது மேலாளராக பணி ஏற்றுக்கொண்டார்.

1996-ம் ஆண்டு ரிசர்வ் பேங்க் பணிக்கு திரும்பிய திரு.ஜேசுதாசனுக்கு ஒரு சவாலான வேலை காத்திருந்தது. அந்த நாட்களில் நாடுமுழுவதிலும் ரூபாய் நோட்டுக்கும் நாணயத்திற்கும் ஒரு பெரிய தட்டுப்பாடு நிலவியது. அந்த நிலையை சமாளிக்க ரிசர்வ் பேங்க் நிர்வாகம் இரண்டு வெளிநாடுகளில் இருந்து நோட்டுகளையும் நாணயங்களையும் அச்சடித்து இறக்குமதி செய்ய தீர்மானித்தது. அப்படி இறக்குமதியாகும் நோட்டுக்களையும் நாணயங்களையும் கையாளும் பொறுப்பு திரு.ஜேசுதாசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பல லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள நோட்டுக்களை துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறக்கி பாதுகாப்புடன் ரிசர்வ் பேங்கின் பாதுகாப்பு அறைகளுக்கு கொண்டு வந்து எண்ணி கணக்கில் எடுத்து மீண்டும் அவற்றை மற்ற ரிசர்வ் பேங்க் அலுவலகங்களுக்கும், வங்கிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும். மிகவும் ரகசியமாக பாதுகாப்போடு கவனத்துடன் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பான வேலை. அதற்கு முன்னோடியாக அவரை கனடா அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அனுப்பி அங்குள்ள பண வினியோக முறையை அறிந்து வர பணித்தது ரிசர்வ் பேங்க் நிர்வாகம். ஒன்றரை மாதங்களாக அந்த நாடுகளுக்கு சென்று அங்கு எவ்வாறு பண நோட்டுகள் அச்சடிக்கிறார்கள் எவ்வாறு வினியோகிக்கிறார்கள் என்ன பாதுகாப்பு அம்சங்கள் கடைபிடிக்கின்றனர் உபயோகிக்கப்பட்ட பழைய நோட்டுகள் எவ்வாறு அழிக்கப்படுகின்றன என்பன போன்ற வழிமுறைகளை அறிந்து வந்தார். இந்த இறக்குமதி ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் நடந்தன. அந்தப் பணியை எந்தவித குறைபாடும் இன்றி வெற்றிகரமாக முடித்து ரிசர்வ் பேங்க் நிர்வாகத்தின் பாராட்டைப் பெற்றார். அதன் பலனாக 1998-ம் ஆண்டு அவருக்கு முதல் பொது மேலாளர் (Chief General Manager) பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. அதோடு திருவனந்தபுரம் அலுவலகத்திற்கு மண்டல இயக்குனராக (Regional Director) இடமாற்றம் செய்யப்பட்டார். அப்போது கேரளா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் உள்ள அனைத்து வங்கிகளும் அவருடைய மேற்பார்வைக்குள் வந்தன. மூன்று ஆண்டுகள் அங்கு பணியாற்றிவிட்டு 2001-ம் ஆண்டு மே மாதம் சென்னையிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகளின் பயிற்சிக் கல்லூரியில் முதல்வராக பணிமாற்றம் செய்யப்பட்டார். இங்கு அவர் பணியாற்றியது ஏழு மாதங்கள்தான். ஆனால் அந்த ஏழு மாதங்களில் 4 வருடங்களாக பணி முடிக்கப்படாமல் அரைகுறை நிலையில் இருந்த கலை அரங்கம் பணியை முடித்து கவர்னர் விமல் ஜலானிடம் தனிப்பட்ட பாராட்டைப் பெற்றார். அந்த ஆண்டு டிசம்பர் மாதம் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

- ஓய்வு பெற்ற பிறகும் அவருடைய சேவையை நாடியது ரிசர்வ் பேங்க் நிர்வாகம். முதலில் பணப்புழக்கம் பற்றி ஒரு வழிகாட்டி புத்தகம் எழுதிக்கொடுக்கும்படி பணித்தது. எழுதுவதற்கு கொடுத்த காலம் 6 மாதங்கள். ஆனால் திரு.ஜேசுதாசனோ 5 மாதங்களில் அந்த புத்தகத்தை எழுதி அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலையும் வாங்கி அன்றாட உபயோகத்தத்திற்கு அறிமுகப்படுத்தினார். இன்றும் அந்த புத்தகம்தான் ரிசர்வ் பேங்க் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் ரூபாய் நோட்டுகளை கையாளும் வழிகாட்டி

கையேடாக உபயோகத்தில் உள்ளது. அடுத்து வந்த அழைப்பு ஒரு மிகப்பெரிய சர்வதேச பணி சம்மந்தப்பட்டது.

ஆப்கானிஸ்தான் தலிபான் கட்டுப்பாட்டில் இருந்து விலகியதும் புதிய அரசு அந்த நாட்டில் புதிதாக ஒரு ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கவும் ஒரு பணப்புழக்கத்தை அறிமுகப்படுத்தவும் இந்திய ரிசர்வ் வங்கியின் உதவியை நாடியது. இந்திய ரிசர்வ் வங்கி அந்த அழைப்பை ஏற்று பணியை முடிக்க ஒரு வல்லுனர் குழு அமைத்து ஆப்கானிஸ்தான் செல்ல பணித்தது. அந்த குழுவுக்கு தலைவராக திரு.ஜேசுதாசன்தான் தகுதியான வல்லுநர் என தீர்மானித்து அவருக்கு அழைப்பு விடுத்தது. ஆரம்பத்தில் இசைவு கொடுத்த திரு.ஜேசுதாசன் பின்னால் தனது குடும்ப சூழ்நிலையைக் காரணம் காட்டி ஒதுங்கிக் கொண்டார். இந்த பணியை ஏற்று முடித்திருந்தால் அது அவரது சாதனைகளில் மற்றுமொரு மைல்கல்லாக அமைந்திருக்கும்.

1955-ம் வருடம் ஈ.எஸ்.எல்.சி. முடித்து விட்டு 9-ம் வகுப்பு படிப்பதற்காக தூத்துக்குடி சென்ற நாளிலிருந்து இன்று வரை திரு.ஜேசுதாசன் பொத்தக்காலன்விளை கிராமத்தில் நிரந்தரமாக தங்கியதில்லை. ஆனால் தவறாமல் ஒவ்வொரு ஆண்டும் விடுமுறை நாட்களை கழிப்பதற்காக கிராமத்திற்கு வந்துவிடுவார். கிராமத்தில் நடக்கும் எல்லா நிகழச்சிகளிலும் கலந்து கொள்வார். கிராமத்தின் வளர்ச்சியிலும் ஊர் மக்களின் முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை கொண்டவர். கிராமத்திலிருந்து படித்த இளைஞர்கள் பலர் அவருடைய உதவியால் வங்கித்துறையில் வேலைவாய்ப்புகள் பெற்றனர். சுயமாக தொழில் செய்து முன்னேறும் நோக்கத்தோடு பலர் வங்கி வழியாக கடன் பெற்று வியாபாரம் செய்ய உதவினார். கிராமத்திலுள்ள மேல்நிலைப்பள்ளியில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் 3 மாணவர்களுக்கு ரொக்கப் பரிசு கொடுத்து ஊக்குவிக்கும் பழக்கத்தை பல வருடங்களாக செய்து வருகிறார். சமீபத்திதல் பெண்கள் ஆரம்பப்பள்ளிக்கு ஒரு கம்ப்யூட்டரும் மற்ற உபகரணங்களும் அன்பளிப்பாக கொடுத்து உதவினார்.

வங்கிப்பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் பல நிறுவனங்கள் அவரை அணுகி அந்த நிறுவனங்களில் பணியாற்ற அழைத்தனர். ஆனால் அவரோ தன்னுடைய அனுபவமும் அறிவும் மற்றவர்களுக்கு இலவசமாக பயன்பட வேண்டுமேயொழிய வியாபாரத்திற்காக விலைபோகக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இந்த நோக்கத்தோடு ஓய்வு பெற்றதும் பல தொண்டு நிறுவனங்களோடு இணைந்து சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் உள்ள மக்களும் பயன்பெறும் வகையில் தனது நேரத்தை செலவழித்து வருகிறார். இன்றும் பலர் நிதி ஆலோசனை பெறவும் வேலைவாய்ப்பு விசயமாகவும் அவரை அணுகுகின்றனர். அவரும் எந்த பாகுபாடுமின்றி முடிந்த உதவி செய்து வருகிறார். அதோடு சென்னை வாழ் பொற்பைநகர் மக்கள் நல சங்கத்தின் தலைவராக இருந்து அதை வழிநடத்தி செல்கிறார்.

தமிழ்பேசும் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களிடையே இன்னொருவர் இந்திய ரிசர்வ் பேங்கின் உயர்ந்த அதிகாரியாகவும் ஒரு வங்கியின் சேர்மனாகவும் இருந்ததாக நாம் அறிந்ததில்லை. அத்தகைய உயர்ந்த பதவிகளை அடைந்து சாதனை படைத்த உயர்ந்த மனிதர் நமது கிராமத்தைச் சேர்ந்தவர் என்று அறியும்போது நமக்கு பெருமையாக இருக்கிறது. நமது கிராமம் அன்னையின் கோயில் கோபுரம் போல் உயர்ந்து நிற்கிறது.

# பொத்தக்காலன்விளையிலிருந்து ஒரு கலெக்டர்



இன்று கிராமமும் கிராம மக்களும் மிகவும் மாறிவிட்டனர். உயர்கல்வி அதைத் தொடர்ந்து வேலை வாய்ப்புகள் எல்லாம் சேர்ந்து மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி வருகின்றன. மருத்துவக்கல்லூரிகள் இஞ்சினியரிங் கல்லூரிகள் நிர்வாகத்துறை சார்ந்த கல்விக் கூடங்கள் என எல்லா துறைகளிலும் இன்றைய தலைமுறையினர் கால் பதித்துள்ளனர். அதன் ஒரு வெளிப்பாடாக நமது கிராமத்திலிருந்து ஒரு பெண்மணி ஐ.ஏ.எஸ் தேர்வில் வெற்றிப்பெற்று கலெக்டராக உள்ளார் என்று கூறினால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இதோ மேற்கொண்டு படியுங்கள்.

பொத்தக்காலன்விளை கிராமத்தில் ஏசுவடியான் உபதேசியார் குடும்பத்தில் பிறந்தவர் ஹேப்பி ஏசுதாசன் நாடார். இவர் கொழும்பு நகருக்கு சென்று வியாபாரம் செய்து செல்வம் சேர்த்தவர். அவருடைய மூத்த மகன் பீட்டர்ஜோசப். இவர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் பட்டப்படிப்பு பயின்று மெட்ராஸ் சர்வீஸ் கமிசன் மூலம் அரசு ஊழியராக பணியாற்றி இன்று சென்னையில் வாழ்ந்து வருகிறார். அவருடைய மகள் **ஜரின் சிந்தியா.** இவர் தான் இந்தக் கட்டுரையின் தலைப்பிற்கு சொந்தக்காரார்.

ஜரின் சிந்தியா 1982-ம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பப்படிப்பை சென்னை பெரம்பூரில் உள்ள தூய மரியன்னை மெட்ரிகுலேசன் பள்ளியில் துவங்கி அதே பள்ளியில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வை 1999-த் ஆண்டு எழுதி 1120 மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றார். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால் அந்த ஆண்டு ஒருவகை விசக்காய்ச்சல் கண்டு அதன் பக்க விளைவாக கால் வலியால் அவஸ்தைப்பட்டு நடக்க முடியாத நிலையிலும் தேர்வு எழுதியது மறக்கமுடியாதது என நினைவு கூறுகிறார் ஜரின் சிந்தியா. அதன்பின் சென்னை ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியில் சேர்ந்து 2002-ம் ஆண்டு பி.காம் முடித்தார். பி.காம் முடித்த கையோடு சென்னை பல்கலைக்கழகத்தில் நுழைவுத்தேர்வில் வெற்றிப்பெற்று எம்.பி.ஏ முதுகலைப்பட்டத்தையும் பெற்றார். இதை சாதாரணமாக பெறவில்லை. பல்கலைக்கழகத்திலேயே முதல் ரேங்க் பெற்று அதோடு தங்கப் பதக்கத்தையும் தட்டிச்சென்றார். இது அவர் கல்வியில் பெற்ற சிறந்த சாதனையாகும்.

2004-ல் முதுகலைப் பட்டப்படிப்பை முடித்த கையோடு ஓய்ந்து இருக்கவில்லை. எம்.காம். என்ற மற்றொரு முதுகலைப் பட்டத்தையும் பெற்றார். இரண்டாம் முதுகலைப் பட்டப்படிப்பை தொடர்ந்த வேளையில் படிப்பிற்கேற்ற வேலை தேடுவதிலும் மும்முரமாக ஈடுபட்டார். உயர் கல்வி ஆழ்ந்த அறிவுக்கூர்மை அதோடு தனித்து நின்று சாதனை படைக்க வேண்டுமென்ற தணியாத ஆர்வம் எல்லாம் சேர்ந்ததால் அவர் விரும்பிய வேலைகள் எல்லாமே தேடிவந்தன. அவ்வாறு வந்த வேலைகளில் முதல்முதலில் வந்தது சென்னை அக்கவிண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தில் தணிக்கையாளர் வேலை. அங்கே ஒரு வருடம் பணிசெய்தபின் கைவசம் வந்தது பம்பாயில் பங்கு மார்க்கட்டை கட்டுப்படுத்தும் செபி (SEBI) அலுவலகத்தில் அதிகாரி வேலை. சில மாதங்கள் கழித்து இந்திய ரிசர்வ் வங்கியில் அதிகாரி வேலை. இப்படி வரிசைக்கட்டி வேலைகள் தேடி வந்தன. இந்திய ரிசர்வ் வங்கியில் அதிகாரி வேலை என்பது சாதாரணமானது அல்ல. மிக அபூர்வமானது. அகில இந்திய அளவில் இரண்டு கட்டமாக போட்டித் தேர்வு எழுதி பின்

நேர்முகத்தேர்விலும் வெற்றி பெற்று லட்சத்தில் ஒருவராக நுழையக்கூடிய கடினமான ஒன்று. ஐ.ஏ.எஸ். தேர்வைக்காட்டிலும் கடினமானது ரிசர்வ் வங்கி அதிகாரிகள் தேர்வு என்று கூறுவோரும் உள்ளனர். அத்தகைய பெரிய சாதனையை படைத்தார் ஜரின் சிந்தியா.

நான் இந்திய ரிசர்வ் வங்கியில் உயர் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றிருப்பது வாசகர்கள் பலருக்கும் தெரிந்திருக்கும். எனது கிராமத்தில் இருந்து ஒரு இளம்பெண் எனது வழியைப் பின்பற்றி இந்திய ரிசர்வ் வங்கியில் அதிகாரியாக தேர்வானது அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் சிந்தியாவின் எண்ணமும் நோக்கமும் வேறு திசையில் சென்றன. எப்படியாவது ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்று கலெக்டராகி சாதாரண மக்களும் பயன்பெறும் வகையில் பணியாற்ற வேண்டும் என்ற இளம்வயது ஆசை அவரிடம் சுடர்விட்டு எரிந்துகொண்டேயிருந்தது. ரிசர்வ் பேங்க் பணிக்கு விண்ணப்பித்திருந்த நேரம் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கும் விண்ணப்பம் செய்து தேர்வுகள் எழுதிக் கொண்டிருந்தார். அதற்கும் பலன் கிடைத்தது. 2008-ம் ஆண்டு நடந்த ஐ.ஏ.எஸ். இறுதித் தேர்விலும் ஜரின் சிந்தியா வெற்றி பெற்றதாக அறிவிப்பு வெளியானது. இது அவர் பெற்ற மூன்றாவது பெரிய சாதனை.

இனி எங்கு செல்வது எந்த துறையை தேர்ந்தெடுப்பது என்று தீர்மானிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை. அந்த நிலையில் நான் இருந்திருந்தால் ரிசர்வ் பேங்க் பணியையே தேர்ந்தெடுத்திருப்பேன். ஆனால் சிந்தியாவோ எந்த தயக்கமுமின்றி ஐ.ஏ.எஸ். யை தேர்ந்தெடுத்தார், 2008-ம் ஆண்டு இறுதியில் ரிசர்வ் பேங்க் வேலையை உதறிவிட்டு டேராடூனில் உள்ள ஐ.ஏ.எஸ். பயிற்சி அக்காடமியில் சேர்ந்தார். அங்கே ஆரம்ப பயிற்சி முடிந்ததும் மத்திய பிரதேசம் மாநிலம் சத்னா மாவட்டத்தில் உதவி கலெக்டராக பணி அமர்த்தப்பட்டார். அந்தப்பணியை வெற்றிகரமாக முடித்ததும் அதே மாநிலத்தில் வளர்ச்சி திட்ட இயக்குனராக ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் அதே மாநிலத்தின் பெர்காம்பூர் மாவட்ட கலெக்டராக நற்பெயருடன் பணியாற்றி வருகிறார் . 2011-ம் ஆண்டு சக ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு.எஸ். வி.நாதனை திருமணம் செய்து ஒரு ஆண் குழந்தைக்கு தாயாகவும் திகழ்கிறார்.

இந்த இடத்தில் ஒரு விசயத்தை மீண்டும் கூற விரும்புகிறேன். ஜரின் சிந்தியா விண்ணப்பித்த வேலைக்கான போட்டி பரீட்சைகளில் எதிலுமே தோல்வி அடையவில்லை. கட்டுரையில் குறிப்பிட்டுள்ள போட்டி தேர்வுகள் மாத்திரமல்ல SBI, IDBI, TNPSC போன்ற அமைப்புகளின் போட்டித் தேர்வுகளிலும் பங்கேற்று வெற்றிக் கண்டுள்ளார். இத்தனை வெற்றிகளுக்கும் சாதனைகளுக்ககும் என்ன காரணம் யார் ஆலோசனை வழங்கி வழிகாட்டியது. சிறப்பு பயிற்சிகள் பெற்றதுண்டா என்ற கேள்விகளுக்கெல்லாம் அசராமல் இயற்கையாக பதில் கூறுகிறார் சிந்தியா. சிறப்பு பயிற்சி என்று பெரியதாக எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்கிறார் மிகச்சாதாரணமாக. எல்லாமே சொந்த முயற்சிதான். எல்லா வெற்றிகளுக்கும் அவரது தந்தை பீற்றர் ஜோசப்பே மூலக்காரணம் எனக்கூறும் அவர் தந்தையை முன்மாதிரி ஆக பாவிக்கிறார். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே தனது தந்தையின் ஆலோசனைபடி எல்லாப் போட்டித் தேர்வுகளிலும் பங்கேற்றுள்ளார். இதனால் கேள்விகள் கேட்கப்படும் விதம் எதிர்பார்க்கின்ற பதில்கள் ஒவ்வொரு கேள்விக்கும் எடுத்துக் கொள்ள வேண்டிய நேரம் இவை பற்றி நல்ல அனுபவம் கிடைத்துள்ளது. அதோடு ஒவ்வொரு தேர்வுக்கும்முன்னால் மனதை ஒன்றுபடுத்தி தேர்வு ஒன்றையே குறி வைத்து தினமும் 4 மணி நேரம் ஒதுக்கி தயார் செய்துள்ளார். இவை எல்லாம் சேர்ந்து தான் ரிசர்வ்பேங்க் மற்றும் ஐ.ஏ.எஸ் போன்ற போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற வைத்தது என நினைவு கூறுகிறார்.

சிந்தியாவின் வெற்றிப்பயணம் தொடர வேண்டும். இன்னும் பல சாதனைகளை புரிந்து மீண்டும் ரிசர்வ் பேங்குக்கே அதன் கவர்னராக செல்ல வேண்டும் என்ற என் விருப்பத்தை அட்வான்ஸாக தெரிவித்துக் கொள்கிறேன்.

# பொத்தக்காலன்விளை கிராமத்தின் இன்றைய தொழிலதிபர்கள்

பொத்தக்காலன்விளை கிராமத்தின் ஆரம்ப காலத்தில் அதாவது 200 ஆண்டுகளுக்கு முன்னால் மக்களுடைய பிரதான தொழில் பனைத்தொழிலாக இருந்தது என்று முந்தைய கட்டுரைகளில் கூறியிருந்தோம். 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் அதாவது 100 ஆண்டுகளுக்கு முன்னால் பல இளைஞர்கள் பனைத் தொழிலை விட்டுவிட்டு இலங்கை சென்று வியாபாரத்தில் ஈடுபடத்தொடங்கினர். இந்நிலை 20-ம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது. 1983-ல் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தைத் தொடர்ந்து இலங்கை சென்ற நம்மவர்கள் ஒவ்வொருவராக தாயகம் திரும்பத் தொடங்கினர். இலங்கை குடியுரிமை பெற்ற ஒன்றிரண்டு பேரைத் தவிர இன்று இலங்கையில் நம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. இந்தக் காலக்கட்டத்தில் நாடார் சமுதாயத்திலும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. படித்து வேலை தேடி அலையாமல் சுயமாக சம்பாதிக்கும் நோக்கத்தோடு சிறு வியாபாரத்தை எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் துவங்க ஆரம்பித்தார்கள். இது எந்த அளவுக்கு சென்றதென்றால் மளிகைக்கடை வியாபாரத்தை நாடார் சமுதாயத்தோடு இணைத்துப் பார்க்கும் நடைமுறை மற்ற சமுதாயத்தினரிடம் பரவலாக தோன்றியது. மளிகைக்கடை என்றாலே அண்ணாச்சி கடை (நாடார் கடை) என்று அழைக்கும் அளவுக்கு சென்றது. இதன் தாக்கம் பொத்தக்காலன்விளை கிராம இளைஞர்களையும் தொற்றிக்கொண்டது. அதன் விளைவு நமதூர் இளைஞர்கள் தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் குடியேறி மளிகைக்கடை ஆரம்பித்து தங்களது உழைப்பால் உயர்ந்தார்கள். மளிகைக்கடையில் ஆரம்பத்து இரும்புக்கடை உற்பத்தித் தொழில் கட்டுமானம் கான்டராக்ட் ரியல் எஸ்டேட் மொத்த ஏஜென்சிஸ் என பல துறைகளிலும் கால் பதித்தார்கள். அவ்வாறு வெளியூர்களுக்கு சென்று வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்கள் சுமார் 300 பேர் இருக்கலாம் என கணக்கிடுகிறோம். இவர்களில் விற்பனை நிலவரம் சொந்த வீடு/கடை வருமானம் மற்றும் வருமான வரி செலுத்துதல் போன்ற அடிப்படையில் 22 தொழில் அதிபர்களை தேர்வு செய்தோம்.

தெரிவு செய்த 22 தொழில் அதிபர்களையும் பேட்டி கண்டு அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக கொடுத்திருக்கிறோம். அவர்கள் எல்லோருமே தங்களை தொழில் அதிபர்கள் என அழைக்க விரும்பவில்லை. உழைப்பால் உயர்ந்து நிற்க துடிக்கும் தொழில் நிறுவனர்கள் என்பது சரியாக இருக்கும். இவர்களில் ஒருவரும் பெற்றோரின் பக்கப்பலத்தால் தொழிலில் முன்னேறவில்லை. தங்களது பல்லாண்டு கால சொந்த உழைப்பால் முன்னேறியவர்கள். கிடைத்த வாய்ப்புகளையும் உதவி கரங்களையும் பற்றிக் கொண்டு எந்த கெட்ட பழக்கங்களும் இன்றி உழைப்பை மட்டுமே முதலீடாகக்

கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்களை முன்னிறுத்துவதன் மூலம் அவர்கள் பட்ட கஷ்டங்கள், சோதனைகள் இவற்றை வெளி உலகிற்கு கொண்டு வருவது எங்கள் நோக்கம். இவர்களைப் பின்பற்றி இன்னும் பலர் நமது கிராமத்திலிருந்து பெரிய தொழிலதிபர்களாக உருவாக வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

**V.R.A. ஜெயராஜ்:**



ஒய்.வி. என்று அழைக்கப்பட்ட ஒய். வியாக அந்தோணி நாடார்-மரியபாக்கியம் தம்பதியரின் மூத்த மகனாக 1954-ல் பிறந்தவர் V.R.A.ஜெயராஜ்.இவர் S.S.L.C படிப்பை முதலூர் உயர்நிலைப்பள்ளியிலும் P.U.C படிப்பை பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலும் படித்தார். மேற்கொண்டு படிப்பை தொடராமல் 1972-ல் வேலை தேடி சென்னை வந்தார். சென்னையில் அவரது மூத்த சகோதரி திருமணமாகி குடும்பத்துடன் இருந்தது அவருக்கு கைகொடுத்தது. துவக்கத்தில் அமைந்தகரை பகுதியில் ஒரு பெட்டிக் கடையில் உதவியாளராக வேலையில் சேர்ந்தார். என்றாலும் சொந்தமாக தொழில் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருந்துகொண்டே இருந்தது. அந்த ஆர்வத்தால் 1975 வாக்கில் கட்டுமான தொழிலுக்கு தேவையான மணல், கருங்கல், ஜல்லி, செங்கல் போன்ற பொருட்களை சப்ளை செய்யும் தொழிலை சிறிய அளவில் ஆரம்பித்தார். இந்த தொழில் ஓரளவு கைகொடுக்கவும் படிப்படியாக லேபர் கான்ட்ராக்ட் வேலைகளையும் எடுத்து செய்து வந்தார். Raj Earth Movers என்ற பெயரில் கட்டுமான தொழிலுக்குத் தேவையான தொழிலாளிகளை அமர்த்துவது போக்குவரத்து காண்ட்ராக்ட் பெரிய வாகனங்களை அமர்த்திக் கொடுப்பது என தொழில் பல வகைகளில் முன்னேறியது.Raj Construction and Movers என்ற நிறுவனத்தின் பெயரில் பல அரசு குத்தகைப் பணிகளை டெண்டர் எடுத்து ஏ-1 காண்ட்ரக்டர் என்ற பெயர் எடுத்தார். அதற்குரிய சான்றிதழை 1995-ல் அன்றைய முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் கையால் பெற்றதை பெருமையாகக் கருதுகிறார். அவர் பங்கு பெற்று செய்து முடித்த பெரிய அரசு வேலைகளில் முக்கியமானவை தென்காசி அணைக்கட்டு கடையநல்லூர் அணைக்கட்டு, பருத்திப்பட்டு கூவம் சீரமைத்தல், நகராட்சி பணிகள் போன்றவை. அரும்பாக்கத்தில் சொந்தமாக வீடும் அலுவலகமும் கட்டியுள்ளார். வீடுகள் கட்டி வாடகைக்கும் விட்டுள்ளார். ரோக் ஜெயராஜ்க்கு பொது வாழ்வில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அரும்பாக்கம்-மேத்தா நகர் பங்குக்கோயில் நிர்வாகத்தில் பல பொறுப்புகள் வகிக்கிறார். மேத்தா நகர் விண்ணேற்பு ஆண்டவர் ஆலய பங்கு

பேரவை உறுப்பினராக செயல்படுகின்றார். பங்கில் உள்ள 30 அன்பியங்களை ஒருங்கிணைக்கும் அமைப்பு தலைவராக செயல்பட்டு வருகின்றார். மேலும் ஒரு சமூக சேவகராகவும் தொண்டு செய்து வருகிறார். இவருடைய இத்தனை உயர்வுக்கும் காரணம் இவருடைய தந்தை Y.V அவர்களின் நேரிய வழிகாட்டுதலே காரணமாகும். சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச்சங்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவராகவும் அதன் துணைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

**தாசன் :**



திரவியம் நாடார்-ஞானப்பூஅம்மாள் இவர்களின் மூத்த மகனாக 1949-ம் ஆண்டு பிறந்த தாசன் 8வது வகுப்பு வரை பொத்தக்காலன்வினை நடுநிலைப்பள்ளியில் படித்துவிட்டு 9 மற்றும் 10 வது வகுப்பை முதலூரில் படித்தார். அதற்கு மேல் படிக்க ஆர்வம் இல்லாமல் 1963ம் ஆண்டு வேலை தேடி சென்னை சென்றார். சென்னை சென்ற அவர் 14 வருடங்களாக ஒரு பாத்திரக்கடையில் உதவியாளராக வேலைப்பார்த்தார்.. 1978 ம் ஆண்டு சொந்தமாக ஒரு தராசு கடையை ஆரம்பித்தார். இரண்டு ஆண்டுகள் கழித்து எண்ணை வியாபாரத்தில் கால்பதித்தார். பெட்ரோல் மற்றும் டீசல் எண்ணை வாங்கி விற்று 12 ஆண்டுகள் சம்பாதித்த பணத்தைக் கொண்டு சென்னை கவரப்பேட்டையில் AVM ஸ்டோர்ஸ் என்ற பெயரில் ஒரு மளிகைக் கடையை சொந்தமாக ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து A.V.M ஹார்டுவேர்ஸ் மற்றும் மாதா ஸ்டோர்ஸ் என்ற மேலும் இரண்டு கடைகளை ஆரம்பித்து இன்று கவுரப்பேட்டையில் பெயர் சொல்லும் அளவுக்கு உயர்ந்துள்ளார். மளிகைச் சாமான்களை மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்வதோடு வீடுகட்டுவதற்கு தேவையான அனைத்து பொருட்களை விற்கும் பெரிய வியாபார நிலையமாகவும் திகழ்கின்றன அவரது நிறுவனங்கள். அவரது இரண்டு சகோதரர்களும் அவருடன் சேர்ந்தே தொழில் செய்கின்றனர். சொந்தமாக வீடுகளும் கடைகளும் கட்டி சிலவற்றை வாடகைக்கும் விட்டிருக்கிறார். இவை போக ஒரு நிதிக் கம்பெனியும் சீட்டு கம்பெனியும் நடத்தி வருகிறார். கும்மிடிப்பூண்டி நாடார் சங்கத்தின் தலைவராகவும் சென்னை வாழ் பொற்பைநகர் மக்கள் நலச் சங்கத்தின் பொருளாளராகவும் செயல்பட்டு பொதுவாழ்விலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். வளர்ச்சிக்கு ஏற்றவாறு முறைப்படி வருமானவரி கணக்குகளையும் சமர்ப்பித்துள்ளார்.

**ஜெரோம் குயின்டின்:**



செல்வராஜ் நாடார் – சந்தன சூசை அம்மாள் இவர்களின் மகனாக 1971 – ல் பிறந்தார் ஜெரோம் குயின்டின். பிறந்தது தட்டார்மடம் ஆனாலும் தாயின் ஊர் பொத்தக்காலன்விளை. திருமணம் செய்திருப்பதும் பொத்தக்காலன்விளையில் தான். இவர் தனது ஆரம்பப் படிப்பை தட்டார்மடம் நடுநிலைப்பள்ளியில் படித்தார். அதன்பின் திசையன்விளை மேல்நிலைப் பள்ளியிலும், திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியிலும் படித்தார். குடும்ப சூழ்நிலை காரணமாக பட்டப்படிப்பை இறுதி ஆண்டு பாதியிலேயே நிறுத்திவிட்டு 1991 ஆம் ஆண்டு சென்னை சென்றுள்ளார். சென்னையில் இரண்டு ஆண்டுகளுக்கு நிரந்தரமாக எந்த தொழிலையும் செய்யாத இவருக்கு 1993 ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அந்த ஆண்டு திருமணம் ஆனது. அதே ஆண்டு குடும்பத்து சொத்துக்கள் சிலவற்றை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தைக்கொண்டு சென்னை – கவரப்பேட்டையில் ஒரு கட்டிடத்தை கட்டினார். அதில் கேபிள் டி.வி.கம்பெனி ஒன்றை ஆரம்பித்து கவரப்பேட்டை பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு டி.வி.சேவையை ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து அடுத்த 6 மாதத்தில் ஒரு பாத்திரக் கடையை அங்கே ஆரம்பித்தார். 1998 ல் பெப்சி குளிர்பானக் கம்பெனியின் வினியோக உரிமையைப் பெற்றார். இவ்வாறு அடுத்தடுத்து ஆரம்பித்த தொழில் முயற்சிகள் அவருக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தன. பெப்சி கம்பெனியின் வினியோக உரிமையை தக்க வைத்துக்கொள்வதில் பிரச்சனை எழுந்தபோது, அந்த கம்பெனியில் ரமேஷ் என்ற அதிகாரி மிகவும் உதவி செய்ததாக நினைவு கூறுகிறார். இன்று 50 ஊழியர்களோடு 15 கோடி ரூபாய் டர்னோவர் என்ற அளவுக்கு முறைப்படி வருமான வரி கணக்குகளையும் காட்டி வருகிறார்.

**சவரிமுத்து நாடார்:**



85 வயது ஆகும் சவரிமுத்து நாடார்தான் நமதுார் இளைஞர்களுக்கு வெளியூர் சென்று வியாபாரத்தில் கொடிகட்டி பறக்கும் வித்தையை கற்றுக் கொடுத்த ஆசான் எனலாம். இலங்கையின் கொழும்பை தவிர பிற இடங்களை அறியாத நமது ஊர் இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு செல்லாமல் தமிழ்நாட்டிற்குள்ளேயே பிற இடங்களுக்கு சென்று வியாபாரம் செய்து முன்னேறலாம் என்ற உண்மையை வெளிக் கொணர்ந்தவர் இவர். நிலமக்காரர் குடும்பத்தில் பிறந்த இவர்

1955 – ம் ஆண்டு, அதாவது 60 ஆண்டுகளுக்கு முன்னால், அவரது உறவினர் ஒருவரோடு சேர்ந்து திண்டுக்கல் அருகே உள்ள ஒட்டஞ்சத்திரத்தில் கொழும்பு ஸ்டோர் என்ற பெயரில் மளிகைக் கடை ஒன்றை ஆரம்பித்தார். சில்லரை வியாபாரத்தில் ஆரம்பித்து காலப்போக்கில் மொத்த வியாபாரத்திற்கு மாறினார்.தொழிலில் முன்னேற்றமும் நல்ல அனுபவமும் கிடைத்தது. அவற்றை முதலீடாக வைத்து 1985 – ல் தனியாக மேரி ஸ்டோர் என்ற பெயரில் மளிகை சாமான்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யும் தொழிலை ஆரம்பித்தார். இன்று தன் மூன்று மகன்களோடும் ஒன்றாக சேர்ந்து தொழில் செய்கிறார். இவர்கள் தவிர மேலும் பல ஊழியர்கள் கடையில் வேலை செய்கிறார்கள். வீடும், கடையும் அவரது சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. 85 வயது ஆகும் சவரிமுத்து நாடார் கடந்த தலைமுறையை சேர்ந்தவர். இன்று நமது கிராமத்தின் தொழிலதிபர் வரிசையில் கடந்த தலைமுறைய சேர்ந்தவர் இவர் ஒருவராகத்தான் இருக்கும். நமது கிராமத்திலிருந்து வெளியேறி உழைத்து முன்னேற வேண்டும் என்று வருகிற இளைஞர்களுக்கு ஆதரவு கொடுத்து உதவும் நல்ல உள்ளம் கொண்டவர். அவ்விதம் வந்த இளைஞர்கள் பலர் ஒட்டஞ்சத்திரம் கொழும்பு ஸ்டோரில் வேலை செய்து அனுபவம் பெற்று அந்த ஊரிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் மளிகைக் கடைகள் ஆரம்பித்து முன்னேறி வருகிறார்கள். கிறிஸ்தவ ஆலயம் இல்லாத அந்த ஊரில் ஒரு ஆலயத்தை கட்டி தனிப் பங்கையும் அமைத்து கொடுத்த பெருமை சவரிமுத்து நாடாருக்கு உண்டு.

**தாமஸ்:**



மிக்கேல் நாடார் அந்தோணி அம்மாள் தம்பதியரின் மூத்த மகனாக 1964–ம் ஆண்டு பிறந்தவர் தாமஸ். பிறந்தது நந்தன்குளம் கிராமம். ஆனாலும் திருமணத்தின் மூலம் பொத்தக்காலன்விளை கிராமத்தோடு இணைந்துவிட்டார். தாமஸ் அதிகம் படிக்கவில்லை. 3–வது வகுப்போடு படிப்பை முடித்துகொண்ட அவர் 11வது வயதில் திருநெல்வேலியில் ஒரு இரும்புக் கடையில் உதவியாளராக வேலையில் சேர்ந்தார். ஒரு ஆண்டுக்கு பிறகு அதாவது அவரது 12வது வயதில் உறவினர் ஒருவர் அவரை சென்னைக்கு கூட்டிசென்றார். சென்னை சூளை பகுதியதில் இயங்கி வந்த ஒரு அலுமினிய தொழிற்சாலையில் 25 ரூபாய் சம்பளத்தில் வேலையில் சேர்ந்தார். அங்கு சலிக்காமல் தொடர்ந்து 18 ஆண்டுகள்பணியாற்றி அலுமினிய உலோகம் சம்மந்தப்பட்ட தொழில்

நுணுக்கங்களையும் கற்றறிந்தார். 1993-ல் அங்கிருந்து விலகி அம்பத்தூர் பாடி ஏரியாவில் சொந்தமாக ஒரு உலோகக்கடையை ஆரம்பித்தார். அலுமினியம், காப்பர், ஸ்டீல் போன்ற உலோகப் பொருட்களை வாங்கி விற்று நல்ல வருமானம் கண்டார். இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு சில்லறை வியாபாரத்தை விட்டு விட்டு அரும்பாக்கத்தில் பெரியதாக கடை ஆரம்பித்து மொத்த வியாபாரத்தில் இறங்கினார். கடந்த 20 வருடங்களாக TMS மெட்டல்ஸ் என்ற பெயரில் வெற்றிகரமாக தொழில் செய்து வருகிறார். இப்பொழுது அவரது பையனும் தந்தைக்கு உதவியாக இருக்கிறார். மேற்கொண்டு 10 ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். சென்னையிலும் கிராமத்திலும் சொந்தமாக பல வீடுகள் கட்டியுள்ளார். வருமான வரியும் தவறாமல் செலுத்தி வருகிறார். சென்னை வாழ் பொற்பைநகர் மக்கள் நலச் சங்கத்தில் நல்ல ஈடுபாட்டுடன் செயலாற்றி பொது வாழ்விலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார்.

### அந்தோணி ஸ்டாலின்:



ஐயாகுட்டி என்ற சூசை அடைக்கலம் - சின்னராணி இவர்களின் மூத்த மகனாக 1971 - ல் பிறந்த அந்தோணி ஸ்டாலின் ஒரு M.Sc.,B.Ed., இரட்டை பட்டதாரி. மிகக்குறுகிய காலத்தில் ஒரு சிறந்த தொழிலதிபராக உயர்ந்துள்ள ஸ்டாலினின் வாழ்க்கைபற்றியும் அவருடைய சாதனைகள் பற்றியும் எழுத ஆரம்பித்தால் பல பக்கங்கள் தேவைப்படும். நம்முடைய வசதியைக் கருதி சுருக்கமாகக் கொடுக்கிறோம். ஸ்டாலின் 5 வது வகுப்பு வரை பொத்தக்காலன்விளையில் உள்ள ஆரம்பப் பள்ளியில் படித்துவிட்டு 6 முதல் 10 வரை நாகர்கோவில் கார்மேல் உயர்நிலைப் பள்ளியிலும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளை பாளையங்கோட்டை புனித சவேரியார் மேல்நிலைப்பள்ளியிலும் படித்தார். அதைத் தொடர்ந்து இளநிலைபட்டப்படிப்பை புனித சவேரியார் கல்லூரியிலும், முதுநிலை பட்டப்படிப்பை புனித ஜாண் கல்லூரியிலும் முடித்துவிட்டு, தாயின் தூண்டுதலினால் ஆசிரியர் பயிற்சி படிப்பையும் வெற்றிகரமாக முடித்தார். தாயின் விருப்பத்திற்கிணங்க ஆசிரியர் பயிற்சி படிப்பை முடித்தாலும் ஸ்டாலினுக்கு ஆசிரியர் வேலை பார்க்க விருப்பமில்லை. தந்தையைப் போல் சுதந்திரமாக தொழில் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் உள்ளுக்குள்ளே சுடர்விட்டுக் கொண்டிருந்தது. இந்த சமயத்தில் உறவினர் ஒருவர் அரசு ஒப்பந்த வேலைகள் எடுத்து செய்து வந்ததால் அவரோடு சேர்ந்து அந்த துறையில் நல்ல அனுபவம் பெற்றார். காலப்போக்கில் தனியாகவே அரசு கட்டுமான பணிகளை ஒப்பந்த

அடிப்படையில் எடுத்து முடிக்கும் கலையையும் கற்றார். இன்று கட்டுமான தொழிக்கு தேவையான கற்கள் எடுப்பதற்கு இரண்டு கல் குவாரிகள், ஒரு கல் உடைக்கும் தொழிற்கூடம், 30க்கும் மேற்பட்ட பெரிய ரக வாகனங்கள், 100 தொழிலாளர்கள் என ஒரு வளர்ந்து வரும் தொழிலதிபர் என்ற நிலைக்கு முன்னேறியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக பொதுக்காரியங்களுக்கு தாராளமாக உதவும் நற்குணத்தையும் தந்தையிடமிருந்து பெற்றிருக்கிறார். பொத்தக்காலன்விளை கிராமத்தில் ஆலய வளாகத்தில் அவர் செய்து கொடுத்திருக்கும் நற்காரியங்களும், நன்கொடைகளுமே அதற்கு சான்று.

**ரவிஸ்டர்:**



ஜேசுமரியான நாடார்-ஸ்தனிஸ்லாஸ் தம்பதியரின் மூத்த மகனாக 1969-ம் ஆண்டு பிறந்த ரவிஸ்டர் தன்னுடைய ஆரம்பப் படிப்பை தூத்துக்குடியில் படித்தார். மேற்கோண்டு படிக்க விருப்பம் இல்லாமல் உடுமலைப்பேட்டையில் ஒரு மளிகைக்கடையில் இரண்டு ஆண்டுகள் வேலைப் பார்த்தார். அதை விட்டுவிட்டு சென்னையில் ஒரு குளிர்பானக் கடையில் இரண்டு ஆண்டுகள் வேலை செய்தார். பொத்தக்காலன்விளையில் உயர்நிலைப்பள்ளி ஆரம்பித்த போது தந்தை பீற்றர் ராஜாவின் உதவியால் அந்தப் பள்ளியில் கடைநிலை ஊழியராக வேலை செய்தார். அதற்குரிய சம்பளம் கிடைக்காததால் அந்த வேலையை உதறிதள்ளிவிட்டு மீண்டும் சென்னைக்கு சென்றார். சென்னையில் சேகர் எம்போரியத்தில் இரண்டு ஆண்டுகள் வேலை செய்தார். 1994-ல் சென்னை கவரப்பேட்டையில் சொந்தமாக தனது 4 சகோதரர்களோடு சேர்ந்து ஒரு காய்கறி கடையை ஆரம்பித்தார். கடையை சகோதரர்களிடம் கொடுத்துவிட்டு 1995-ல் துபாய் சென்றார். அங்கு 3 ஆண்டுகள் வேலை செய்து ஓரளவு சம்பாதித்தார். திரும்பி வந்த கையோடு ஊரில் ஒரு வீட்டைக் கட்டினார். திருமணத்தையும் முடித்தார். கும்மிடிப்பூண்டி-கவரப்பேட்டை ஏரியாவில் ஒரு உணவு விடுதியும் 3 காய்கறி கடைகளையும் ஆரம்பித்தார். இது தான் அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பு முனை. வியாபாரம் நன்றாகச் சென்றது. இரண்டு கடைகள் மொத்த வியாபாரத்திலும் ஒருகடை சில்லரை வியாபாரத்திலும் கவனம் செலுத்தின. காய்கறிகளை எடுத்து செல்ல இரண்டு வாகனங்களையும் வாங்கியுள்ளார். மூன்றுகடைகளிலும் ஒரு நாளைக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கு விற்பனை நடைபெறுகிறது. இந்த காலக்கட்டத்தில் அவருடைய தாயின் மருத்துவ செலவிற்கு

பெருந்தொகை செலவழித்தும் அவரை பிழைக்க வைக்க முடியவில்லை என்று வருந்துகிறார். சமீபத்தில் நாகப்பட்டினம் வேளாங்கண்ணி அருகே ஒரு இறால் பண்ணை வாங்கி அதையும் நிர்வகித்து வருகிறார். பொது வாழ்விலும் நல்ல ஈடுபாடு உண்டு. கும்மிடிப்பூண்டியில் புதியதாக ஒரு ஆலயம் கட்டுவதற்கு ஆலோசனையும் பொருள் உதவியும் செய்துள்ளார். பொத்தக்காலன்விளை ஆலயத்தில் முதல் சனி ஆராதனையின்போது கொடுக்கப்படும் மதிய உணவிற்கு தேவையான காய்கறிகளை நன்கொடையாக கொடுத்து வந்தார். தற்பொழுது சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச்சங்கத்தின் துணைச் செயலாளராக பொறுப்போடும் அக்கறையோடும் செயல்பட்டு வருகிறார்.

### S.மிக்கேல்ராஜ்



S.சீமோன்- சிலுவைஅந்தோணி இவர்களின் மூத்த மகனாக1973-ல் பிறந்த மிக்கேல் ராஜ் இன்று சென்னையில் வளர்ந்து வரும் ஒரு இளம் தொழிலதிபர். 12வது வகுப்பு வரை பொத்தக்காலன்விளை பள்ளிகளில் படித்துவிட்டு நாகர்கோவிலில் பாலிடெக்னிக் கல்லூரியில் 1995ம் ஆண்டு மின்னியல் பாடத்தில் டிப்ளமோ பெற்றார். டிப்ளமோ படித்து முடித்ததும் சென்னையில் இயங்கிவரும் பிரீமியர் குழுமத்தின் தொழிற்சாலையில் பொறியாளராக பணியில் சேர்ந்தார். 2003-ம் ஆண்டு அந்த கம்பெனியை விட்டு விலகி மறைமலை நகரில் உள்ள இன்னொரு கம்பெனியில் உற்பத்தி மேலாளராக பணியில் சேர்ந்தார். இந்தக் காலக்கட்டத்தில் திருமணம் நடந்தது. மனைவியும் அதே இடத்தில் ஒரு கம்பெனியில் வேலை பார்த்தார். சுமார் 10 ஆண்டுகள் வேலை செய்த பின் தனியாக ஏதாவது ஒரு தொழில் ஆரம்பித்தால் என்ன என்ற எண்ணம் இருவருக்குமே தோன்றியது. அதன் விளைவாக உருவானது AVM Industries, AVM Marketing என்ற இரண்டு நிறுவனங்கள். அதாவது ஹோட்டல்களில் மற்றும் பெரிய நிகழ்ச்சிகளில் உபயோகப்படுத்தும் பேப்பர் பிளேட்டுகள், டீ கப்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து பெரிய ஹோட்டல்களுக்கு, கேண்டீன்களுக்கு சப்ளை செய்வது. இதற்கு தேவையானவை இரண்டு மூன்று மிசின்கள் ஒரு இடம். முதலீடாக இவர்கள் இருவரும் 10 வருடங்களாக சேர்ந்து சம்பாதித்த சேமிப்பு. பின்பு ஒரு வங்கி கொடுத்து உதவிய கடன் மற்றும் சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச்சங்கம் கொடுத்த சிறு கடன் இவைதான் மூலதனம். மேலும் அவர்களது உழைப்பு. இன்று ஹோட்டல்களுக்கு, கேண்டீன்களுக்கு, பேக்கரிகளுக்கு

தேவையான சுமார் 500 வகையான பொருட்களை தயாரித்தும் வெளியில் வாங்கியும் சப்ளை செய்கிறார்கள். இவர்கள் இருவர் தவிர 6 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆரம்பித்த இரண்டு வருடங்களில் மாதத்திற்குள் ரூ.10 லட்சம் டர்னோவர் எடுக்கும் அளவுக்கு முன்னேறியுள்ளனர். இதற்கு மேல் விரிவாக்க திட்டமும் அதற்கு தேவையான வங்கி மூலம் நிதி ஆதாரமும் தயாராக உள்ளன.

### சாலமோன் பீற்றர் ஜெயக்கொடி:



அந்தோணி சவரிமுத்து- மரிய செல்வம் இவர்களின் இரண்டாவது மகனாக 1966- ல் பிறந்த சாலமோன் பீற்றர் ஜெயக்கொடி தன் உழைப்பால் உயர்ந்து நிற்கும் ஒரு பெரு வணிகர். இவருடைய தாய்வழி பாட்டனாருக்கு வாணியர் – வணிகர் என்ற பட்டப் பெயர் உண்டு. அதை உறுதிசெய்யும் வகையில் இன்று பேரன் அந்த நிலையை அடைந்துள்ளார். ஜெயக்கொடி தன்னுடைய ஆரம்பப்படிப்பை பொத்தக்காலன்விளை நடுநிலைப் பள்ளியில் முடித்தார். படிப்பில் படு சுட்டி. வகுப்பில் முதல் மாணவன் என்ற பெயரையும் தட்டிச் சென்றார். மேற்கொண்டு தொடர்ந்து மேல்நிலைப் பள்ளியில் படிக்க ஆர்வம் அதிகமாக இருந்தது. ஆனால் துரதிர்ஷ்டம் 1976 ம் ஆண்டு அவருடைய தந்தை இறந்துபோனார். வீட்டில் வறுமை. இதனால் வேலை தேடி வெளியூர் செல்லும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார் . 1979 ம் ஆண்டு கிராமத்திலிருந்து வெளியேறி ஒட்டஞ்சத்திரத்தில் இருந்த கொழும்பு ஸ்டோரில் கடை ஊழியராக ரூ. 35 சம்பளத்தில் வேலையில் சேர்ந்தார். அங்கு 13 ஆண்டுகள் வேலை செய்தார். பல இன்னல்களிலும், அங்கு வேலை பார்த்த அவரது மூத்த சகோதரனும் மற்றும் சொந்த கிராமத்தைச் சேர்ந்த சிலுவைப் பிச்சை என்பவரும் மிகவும் உதவியாக இருந்ததாக நினைவு கூறுகிறார். அங்கு சம்பாதித்த சிறு தொகையையும் அவரது உழைப்பையும் முதலாகக் கொண்டு முதல் முறையாக 1991 ம் ஆண்டு வெள்ளக்கோயிலில் சொந்தமாக ஒரு மளிகைக் கடையை ஆரம்பித்தார். வியாபாரம் படிப்படியாக பெருகி இன்று மொத்த வியாபாரத்தில் கவனம் செலுத்துகிறார். 35 ரூபாய் சம்பளத்தில் தன்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்த ஜெயக்கொடி இன்று 20 ஊழியர்களோடு சொந்த வீட்டோடும், சொந்த கார் மற்றும் வாகனங்களோடும் வருமான வரியும் கட்டுமளவிற்கு உயர்ந்துள்ளார். வெள்ளக்கோயில் நகரத்தில் நமது ஆலயம் இல்லாத குறையை போக்கும் விதமாக புது ஆலயம் கட்டுவதில் பெரும் பங்களிப்பு அளித்துள்ளார். வியாபாரிகள் சங்க செயலாளர், சிவந்தி ஆதித்தனார் நற்பணிமன்ற தலைவர், பங்குப்பேரவை துணைச் செயலாளர் என்ற பொறுப்புகளோடு பொது வாழ்விலும் ஈடுபட்டுள்ளார்.

## ஜோசப் டோமினிக் ராஜன்



இவர் **''பண்ணயமுத்தம்''** எனும் பாரம்பரியமிக்க குடும்பத்தின் மூத்த வாரிசாகப் பிறந்தவர். இவரது தந்தை பா.அ.ஏ. அந்தோணிமுத்து நாடாரின் மூத்த புதல்வர் இவர். பொத்தகாலன்விளையில் படித்து விட்டு மேற்படிப்புக்காக முதலூர் சென்று படித்துவந்தார்.. படிப்பை பாதியில் விட்டு விட்டு தஞ்சாவூரில் மிஷன் தெருவில் ஒரு மளிகை கடையில் வேலை செய்தார். இரண்டு ஆண்டுகளில் அதே கடயை வாங்கி சொந்தமாக தொழில் செய்தார். பின்னர் தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் பகுதியில் மளிகைக் கடையை மாற்றம் செய்து இருபத்து ஐந்து ஆண்டுகள் சிறப்பாக வியாபாரம் செய்து தன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். இவருக்கு 3 மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். 1996 - ம் ஆண்டு வியாபாரத்தை விட்டு விட்டு பொத்தக்காலன்விளையில் சொந்த வீட்டில் குடியேறினார். அந்த வேளையில் பிரபல அரசு காண்ட்ரக்டர் V.R.A. ஜெயராஜ் அவர்களுக்கு உதவியாளராக சேர்ந்தார். மூன்று ஆண்டுகள் அவரிடம் பணியாற்றி தொழிலை மேம்பட செய்த காரணத்தினால் அரசு அதிகாரிகள் இவரை அரசு ஒப்பந்தக்காரராக பதிவு செய்து தந்தார்கள். அதன்பின் சொந்தமாக தொழில் செய்து வந்தார். தற்சமயம் முதல் வகுப்பு ( I CLASS ) காண்ட்ரக்டராக பொதுப்பணித்துறையில் அரசு பணிகளை செய்து வருகிறார். கி.பி 2000 ஆண்டு முதல் திருக்கல்யாண மாதா ஆலய வளர்ச்சிப் பணிகளை தனது கடமை என முழு மூச்சோடு செய்து வந்தார். ஆலயம் படிப்படியாக உயர ஆரம்பித்தது. **திருக்கல்யாணமாதா புகழ்பரப்பும் பணிக்குழு** என்ற அமைப்பை ஆரம்பித்து நண்பர் திரு. எட்வின் காமராஜ் அவர்கள் உதவியுடன் ஆலயத்திற்கு தேவையான அனைத்து உட்கட்ட அமைப்புகளையும் திறம்பட செய்தார். இவரின் முயற்சியாலும் திரு. எட்வின் காமராஜ் அவர்களின் பண உதவியாலும் தேர்பறை, அசனமண்டபம், திருப்பயணிகள் தங்கும் அறை மற்றும் திருமண மண்டபம், ஆலய வாசல் அருகில் உள்ள அலுவலகம் போன்ற கட்டடங்களை திறம்பட செய்து ஊருக்கும் ஆலயத்திற்கும் பேரும், புகழும் கிடைக்க வழி செய்தார். எந்த வித இன்ஜினியர் உதவி இல்லாமல் இவ்வளவு பெரிய கட்டடங்களை திருக்கல்யாணமாதாவின் உதவியுடனும் ஆசியுடனும் கட்டி முடித்தார். இவரது பணியினால் லூர்து மாதா கெபி புதுப் பொலிவுடன் திகழ்கிறது. இவருக்கு ஆலய பணிகள் செய்து அந்த அழகை மற்றவர்கள் புகழும் பொழுது பார்த்துக் கேட்டு சந்தோசப்படுவதில் அலாதி பிரியம். இன்றளவும் இந்த வாழ்வைத் தந்த மாதாவின் மைந்தனாக வாழ்வதில் பெருமை கொண்டுள்ளார். மாதாவின் புகழ்பரப்பும் பணிகளுக்கு முன்னுரிமை

கொடுப்பார். அரசுப் பணிகளில் நமது ஸ்கூல் வடதுபுறம் நான்கு வகுப்பறைகள் கட்டிமுடிக்கப்பட்டது.மேலும் ஸ்கூலுக்கு பின்புறம் ஓடைக்கறையில் கான்கீரிட் தடுப்புசுவர் கட்டியதும் இவர்தான். இவரது பெருமுயற்சியால் ஊரின் நடுப்பகுதியில் அமைந்துள்ள பஸ்ஸ்டாண்ட் கட்டடம் இவரால் கட்டப்பட்டது. அது போன்று மீன்கடை மற்றும் ஸ்கூல் காம்பவுண்ட் சுவர் போன்றவை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சொந்த செலவில் அமைத்து கொடுத்தார். ஸ்கூல் காம்பவுண்ட் உட்புறம் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை நண்பர் திரு.எட்வின் காமராஜ் அவர்களிடம் பண உதவி பெற்று நல்ல முறையில் அமைத்துக் கொடுத்தார். இன்றளவும் ஆலயத்திற்கு வருபவர்களின் தண்ணீர் தேவைகளை இந்த டேங்க் மூலமே வழங்கப்பட்டு வருகிறது. இவருக்கு இந்த ஆலயம் சிறப்பாக இருக்க வேண்டுமானால் ஊரும் வளர வேண்டும் என்பதில் சிறப்புக் கவனம் செலுத்துவார். திருக்கல்யாண அன்னையின் ஆசியோடு இன்றளவும் நமது ஊரின் வளர்சியிலும், அன்னையின் புகழைப் பரப்பும் பணியிலும் சிறப்பாக செயல்படுவதோடு சிறந்த தொழிலதிபராக திகழ்கிறார்.

**.பிரான்சிஸ்**



சந்தனச்சிலுவை நாடாரின் இரண்டாவது மகனாக 1949-ம் ஆண்டு பிறந்த பிரான்சிஸ் அசருடைய ஆரம்பப் படிப்பைப் பொத்தக்காலன்விளையில் இருந்த நடுநிலைப்பள்ளியில் முடித்தார். அதன்பின் மேல்நிலைபடிப்பை முதலூரிலும் பட்டப்படிப்பை 1973-ல் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியிலும் படித்து முடித்தார். பட்டப்படிப்பை முடித்த கையோடு தந்தையும் சகோதரர்களும் பாளையங்கோட்டையில் செய்து வந்த தொழிலில் இறங்கினார். தொழில் பலதரப்பட்டது. மருந்து கடை, காலணி கடை, துணிக்கடை, மதுபானக்கடை, வட்டிக்கடை என நீண்டு சென்றது. வியாபாரம் குறிப்பாக மருந்துக் கடையும் மதுபான கடையும் உச்சிக்குச் சென்றன. 1996-ல் அவரது தந்தை இறந்து போனார். சில ஆண்டுகள் கழித்து அவரது இளைய சகோதரனும் இறந்தார். இதனால் வியாபாரம் தள்ளாடியது. அதோடு குடும்பத்தினரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றி தொழில்களையும் சொத்துக்களையும் பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவற்றிலிருந்து விடுபட பிரான்சிஸ் பாளையங் கோட்டையிலிருந்து வெளியேறி குடும்பத்தோடு 2006-ம் ஆண்டு சென்னை சென்றார். அங்கு மூன்று ஆண்டுகள் உறவினர் ஒருவரின் தொழிலில் உதவியாக இருந்தார். 2013-ம் ஆண்டு சொந்தமாக St.Mary's Medicals என்ற பெயரில் ஒரு மருந்துகடை ஆரம்பித்தார். அதை ஒட்டி ST.Mary's Clinic என்ற பெயரில் வேறொரு கடையும் மூன்றாவதாக St.Mary's Agency என்ற

நிறுவனத்தையும் தொடங்கினார். இந்த மூன்று நிறுவனங்கள் மூலம் மருந்து மருந்தகம் மற்றும் மருத்துவமனை சம்மந்தப்பட்ட எல்லா பொருட்களையும் விற்பனை செய்யும் தொழில் அதிபராகத் திகழ்கிறார் பிரான்சிஸ்.

**M.ஜோசப் :**



மரிய உபகாரம் - மரிய புஸ்பம் இவர்களின் மகனாக 1951-ல் பிறந்தவர் ஜோசப். தகப்பனாரின் நாட்டு வைத்தியத்தில் போதிய வருமானம் இல்லாததால் 7 வது வகுப்பிலேயே படிப்பை நிறுத்திவிட்டு திருநெல்வேலியில் இருந்த செருப்புக் கடையில் உதவியாளராக சேர்ந்து சம்பாதிக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார். ஒரு வருடத்திற்குப்பிறகு ஊரில் இருந்த வேதக்கண் நாடார் மளிகைக் கடையில் சம்பளம் இல்லாமல் வேலைக்குச் சேர்ந்தார். காலப்போக்கில் அதே கடையில் பங்குதாரராக சேர்ந்து 35 ஆண்டுகள் அந்த மளிகைக்கடையை நடத்தி வந்தார். சில கருத்து வேறுபாடுகள் காரணமாக பங்குதாரர்கள் பிரிய வேண்டிய சூழ்நிலை உருவானது. அதில் கிடைத்த ரூ.30000/-மும் மேற்கொண்டு குடும்ப நகைகளை ஈடு வைத்ததில் கிடைத்த ரூ.1 1/2 லட்சத்தோடும் 2001ல் சென்னை வந்தார். சென்னை திருவான்மியூர் பகுதியில் ஒரு சிற்றுண்டி குளிரபானக் கடையை ஆரம்பித்தார். வியாபாரம் பெரிய அளவில் இல்லை. 5 ஆண்டுகள் மிகவும் கஷ்டப்பட்டதாக நினைவு கூறுகிறார் ஜோசப். அந்த சிறு கடை வியாபாரம் நடந்து கொண்டு இருக்கும் போதே ரவல்காம் சாக்லேட் கம்பெனியின் வினியோக உரிமை கிடைத்தது. அதைத் தொடர்ந்து WIPRO, COCO, COLA போன்ற மேலும் 5 பெரிய கம்பெனிகளின் உற்பத்திப் பொருட்களின் வினியோக உரிமை பெறவும் தொழில் ராக்கெட் வேகத்தில் உயர்ந்தது. சிற்றுண்டி கடையை மூடிவிட்டு முழுக்க முழுக்க 6 கம்பெனிகள் உற்பத்தி செய்யும் பொருட்களின் மொத்த வினியோகம் செய்யும் வேலையை கவனிக்கிறார். J.S Agency என்ற பெயரில் நடைபெறும் இந்த வியாபாரத்தில் அவரது மகன் உதவியாக இருக்கிறார். மேலும் 8 ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். பொருட்களை எடுத்துச் செல்ல 3 வாகனங்கள் உள்ளன. சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் சொந்தமாக அலுவலகமும் வீடும் கட்டியுள்ளார். ஆண்டிற்கு சுமார் 4 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யும் அளவிற்கு உயரக் காரணம் என்ன என்று கேட்டால் தன்னுடைய தெய்வ பக்திதான் காரணம் என்று கூறுகிறார். காலையில் எழுந்ததும் முதல் வேலையாக ஆலயத்திற்கு சென்று திருப்பலியில் பங்குகொள்ளும் பழக்கத்தை இன்றுவரை தவறாமல் கடைபிடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ரோஸ் சேவியர்:**

64 வயதாகும் ரோஸ்சேவியர் தாவீத அண்ணாவியருக்கும் மரிய பொன்னம்மனாளுக்கும் 5 வது மகனாக பிறந்தார். ஆரம்பப் பள்ளியில் 5 வது வகுப்பு வரை படித்தார். வீட்டிலோ வறுமை . இளம் வயதிலேயே வேலைக்குச் சென்று பெற்றோர்களுக்கு சம்பாதித்து கொடுக்க வேண்டிய கட்டாயம். இதனால் சேவியர் தனது 10 வது வயதிலேயே பொத்தக்காலன்விளையில் இருந்த அரிசி ஆலைகளில் எடுபிடி வேலைகளைச் செய்து கிடைக்கின்ற சிறு தொகைளை தந்தையிடம் கொடுத்து குடும்பச் செலவுக்கு உதவினார். இப்படி 4 வருடங்கள் கழிந்தன. அதன்பின் கோயம்புத்தூர் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் சகோதரர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு மளிகைக் கடையை ஆரம்பித்தார்கள். ஓரளவு வருமானம் கிடைத்தது. திருமணத்திற்கு பிறகு மைத்துனர்களின் உதவியுடன் சென்னை சென்று பாடி-கொளத்தூர் பகுதியில் ஒரு கடையை வாடகைக்கு எடுத்தார். அதில் பழைய பிளாஸ்டிக் பொருட்களை சில்றையாக வாங்கி பெரிய வியாபாரிகளிடம் விற்கும் தொழிலை ஆரம்பித்தார். 3 வருடங்களில் ஓரளவு சம்பாதிக்க ஆரம்பித்தார். அதைக் கொண்டு அதே இடத்தில் ஒரு இடத்தை வாங்கி கொட்டகை போட்டார். அதில் இரண்டு பிளாஸ்டிக் அரைக்கும் மெசின்களைப் பொருத்தினார். வாங்கும் பழைய பிளாஸ்டிக் பொருட்களை அரைக்கும் மெசினில் அரைத்து சிறு சிப்ஸ்களாக ஆக்கும் தொழிலை ஆரம்பித்தார். நல்ல முன்னேற்றம் தெரிந்தது. 15 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று வங்கிக்கடன் உதவியோடு இரண்டுமாடிக் கட்டிடத்தை கட்டி மேலும் இரண்டு அரைக்கும் மெசின்களை நிறுவி பிளாஸ்டிக் சிப்ஸ்களை உற்பத்தி செய்கிறார். உற்பத்தி செய்யும் சிறு பிளாஸ்டிக் துகள்களை பெரிய கம்பெனிகளுக்கு விற்பனை செய்கிறார். தன்னுடைய நிறுவனத்திற்கு லெவின் பிளாஸ்டிக் என பெயரிட்டுள்ளார். அவருடைய இரண்டு மகன்களும் எஞ்சினியரிங் மற்றும் கணக்கு பாடங்களில் பட்டப்படிப்பு படித்து தொழிலில் தந்தைக்கு உதவியாக இருக்கின்றனர். தொழிற்கூடத்தில் 40 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இரண்டு போக்குவரத்து வாகனங்கள் உள்ளன. அம்பத்தூர் பகுதியில் சொந்தமாக நான்கைந்து வீடுகள் கட்டி தானும் வாழ்ந்து சில வீடுகளை வாடகைக்கும் விட்டிருக்கிறார் இந்த படிக்காத தொழிலதிபர்.

**ஜேசுதுரை**



வியாகப்பன்-மரியம்மாள் இவர்களின் மூத்த மகனான ஜேசுதுரை 1967-ல் பிறந்தார். 5வது வகுப்பு வரை பொத்தக்காலன்விளையில் ஆரம்பப்படிப்பை முடித்தார். அதோடு படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு தனது 10 வது வயதிலேயே சென்னை வந்தார். சென்னை வந்த அவர் 15 ஆண்டுகள் தாம்பரத்தில் உள்ள அவரது உறவினர் கடையில் உதவியாளராக

வேலை செய்தார். 1996-ல் வான்மதி என்பவரை கரம் பிடித்து திருமணம் செய்தார். மனைவியின் ஆலோசனைப்படி அவருடைய நகைகளை அடமானம் வைத்து ரூ.15000 புரட்டி தாம்பரம் காமராஜ்புரத்தில் சொந்தமாக ஒரு காய்கறி கடையை ஆரம்பித்தார். வியாபாரம் நன்றாக வளர்ச்சியடைந்தது . 2008 ம் ஆண்டு வியாபாரத்தை விரிவாக்கம் செய்யும் நோக்கத்தோடு சில்லறை வியாபாரத்தோடு மொத்த வியாபாரத்தையும் கையில் எடுத்து வெற்றி கண்டார். 2009ம் ஆண்டு மேல் மாடியில் ஒரு வீடும் கீழ்த்தரையில் இரண்டு கடைகளும் உள்ளடக்கிய கட்டிடத்தை சொந்ததமாக கட்டி முடித்தார்.காய்கறிகளை மொத்தமாக கோயம்பேடு மார்க்கெட்டிலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகவும் கொள்முதல் செய்கிறார். இதனால் லாப விகிதம் கூடுதலாக கிடைப்பதாக கூறுகிறார் ஜேசுதுரை. வியாபாரத்தில் அவருக்கு உதவியாக இரண்டு கடை ஊழியர்கள் இருந்த போதிலும் அவரது மனைவியும் முழு அளவில் ஈடுபடுகிறார். தனது இன்றைய வளர்ச்சிக்கு முழுக்காரணம் தனது மனைவி தான் என்று அடித்து கூறுகிறார். ஒரு மாதத்தில் சுமார் 10 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரை விற்பனை செய்யும் ஜேசுதுரை முறைப்படி வருமான வரி கணக்கும் தவறாமல் தாக்கல் செய்கிறார்.

**தொம்மை அந்தோணி:**



பேரின்ப நாடார் - பிச்சையம்மாள் இவர்களுடைய இரண்டாவது மகனாக 1951 - ம் ஆண்டு பிறந்த தொம்மை அந்தோணி சென்னையில் ஒரு பெருவணிகராக திகழ்கிறார். தொம்மை அந்தோணி பொத்தக்காலன்விளை நடுநிலைப்பள்ளியில் 7ம் வகுப்பு வரை படித்தார்.அதன்பின் சென்னையில் அயனாவரம் பகுதியில் அவரது உறவினர் ஒருவரின் மளிகைக் கடையில் உதவியாளராக வேலை செய்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பின் அங்கிருந்து விலகி சைதாப்பேட்டையில் இன்னொரு மளிகைக் கடையில் உதவியாளராக சேர்ந்தார். அங்கும் மூன்று ஆண்டுகள். 1973 ல் சைதாப்பேட்டையில் சொந்தமாக ஒரு மளிகை கடை ஆரம்பித்து 10 ஆண்டுகள் நடத்தி வந்தார். அந்த சம்பாத்தியத்தில் வலசரவாக்கத்தில் சொந்தமாக ஒரு கடையை விலைக்கு வாங்கி வியாபாரத்தை பெருக்கினார். 1989 ம் ஆண்டு ராமாவரத்தில் குடியேறினார். நான்கு ஆண்டுகள் கழித்து தான் வியாபாரம் செய்து தங்கி இருந்த கட்டிடத்தை விலைக்கு வாங்கி தொழிலை மேம்படுத்தினார். இன்று கட்டடத்தின் தரைத் தளத்தில் விசாலமான பெரியதொரு மார்க்கட்டை உருவாக்கியிருக்கிறார். அதே கட்டிடத்தில் ஒரு கோடவுனும், மூன்று குடும்பங்கள் வசதியுடன் வாழ்வதற்கான வசதிகளும் செய்துள்ளார். தொம்மை அந்தோணியும்அவரது இரண்டு மகன்களும் ஒற்றுமையுடன் வியாபாரத்தைக் கவனித்துக் கொள்கிறார்கள். மூவரும் வருமான வரி கட்டும் அளவுக்கு வளந்துள்ளார்கள். வீட்டிலுள்ள பெண்கள் ராமாவரம்

கிறிஸ்து ஜோதி ஆலயப் பங்கில் பங்குப்பேரவை உறுப்பினர்களாகவும், அன்பியங்களில் பொறுப்பாளர்களாகவும் பங்காற்றுகின்றனர். மகன்கள் அந்தோணி அண்டன் மற்றும் மரிய மில்டன் தூய வின்சென்ட் பவுல் சபையிலும், அப்பகுதி மக்கள் நல சங்கத்திலும் முக்கிய பொறுப்புகள் வகித்து பொதுப்பணியும் ஆற்றி வருகிறார்கள்.

**A.ராஜேந்திரன்:**

நிலமக்காரர் குடும்பத்து அந்தோணிமுத்து நாடார் – மரியநேசம் தம்பதியரின் மூத்த மகனாக 1950 – ல் பிறந்தவர் ராஜேந்திரன். பொத்தக்காலன்விளை கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நன்கு அறிமுகமாகியிருக்கும் ராஜேந்திரன் ஒரு B.A. பட்டதாரி. அவர் தன்னுடைய ஆரம்பப் படிப்பை பொத்தக்காலன்விளையிலும், உயர்நிலைப்படிப்பை முதலூரிலும் முடித்தார். அதன்பின் P.U.C. பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூயிலும், பட்டப்படிப்பை தூத்துக்குடி காமராஜர் கல்லூரியிலும் முடித்தார். பட்டப்படிப்பு படித்தாலும் ஏனோ வேலை தேடி அலையாமல் சுதந்திரமாக தொழில் செய்வதில் கவனம் செலுத்தினார். இரண்டு ஆண்டுகள் பம்பாய் சென்று அங்கு எவர்சில்வர் பாத்திரங்கள் தயாரித்து சென்னையில் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டார். ஆனால் அதில் அதிக முன்னேற்றம் இல்லை. அதனால் அதை விட்டுவிட்டு ஊருக்கு வந்து மளிகை வியாபாரம் செய்தார். பின்பு சகோதரியின் எண்ணை ஆலையை நிர்வகித்து வந்தார். இவை எல்லாம் அவருக்கு பெரிய முன்னேற்றத்தைக் கொடுக்கவில்லை. 1985 ம் ஆண்டு திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் வீடியோ எடுக்கும் தொழிலை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் ஒரு படப்பிடிப்பு கருவியைத்தான் வைத்திருந்தார். படிப்படியாக முன்னேறி இன்று ராஜேஷ் வீடியோஸ் என்ற பெயரில் பல புதிய நவீன கருவிகளையும் கம்ப்யூட்டர்களையும் நிறுவி வீடியோ காட்சிகள் எடுப்பதில் ஒரு சாதனை படைத்துள்ளார், இன்று இந்த தொழிலுக்கு மேலும் பலர் வந்திருந்தாலும், நமது வட்டாரத்தில் வீடியோ காட்சிகள் எடுத்து அவற்றை சீரமைத்து போட்டோ படங்களாக மாற்றிக் கொடுக்கும் நவீன விஞ்ஞான வித்தையை அறிமுகப்படுத்தி பிரபலப்படுத்தியது ராஜேந்திரன் தான்.

**டேவிட் ராஜேந்திரன்:**

சல்லிமுக்கந்தரின் மகன் அந்தோனிமுத்து நாடார் – ஞானம்மாள் இவர்களின் மகனாக 1948 – ல் பிறந்தவர் டேவிட் ராஜேந்திரன். இவர் 8வது வகுப்பு வரை பொத்தன்காலன்விளை நடுநிலைப்பள்ளியில் படித்தார். அதன் பின் மேற்கொண்டு படிக்க குடும்ப சூழ்நிலை அனுமதிக்கவில்லை. 1965 ம் ஆண்டு மதுரை திருமங்கலம் சென்று அவருடைய உறவினர் ஒருவரது மளிகைக் கடையில் உதவியாளராக சேர்ந்தார். 7 ஆண்டுகள் கழித்து உறவினர் உதவியுடன்

சொந்தமாக ஒரு மளிகைக் கடையை திறந்து நடத்தி வந்தார். 9 ஆண்டுகள் இவ்வாறு சென்றன. ஆனால் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணவில்லை. அதனால் அந்தக் கடையை மூடிவிட்டு கோயம்புத்தூர் சென்றார். 4 ஆண்டுகள் அங்கு ஒரு கடையில் உதவியாளராக வேலை செய்துவிட்டு 1986 – ம் ஆண்டு மேலும் மூன்று நண்பர்களோடு சேர்ந்து ஒரு பாத்திரக் கடை ஆரம்பித்தார். இந்த வியாபாரமும் நஷ்டத்தில் முடிந்ததால் அதை விட்டுவிட்டு திருவண்ணாமலை சென்றார். அங்கு நண்பர் ஒருவருடைய ஆலோசனையின் படி ஒரு சத்து உணவு தயாரிக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். அந்த தொழில் நன்றாக சென்றது. தொழில் முன்னேற்றத்தைக் கருதி தொழில் கூடத்தை திருவண்ணாமலையிலிருந்து சேலம் நகருக்கு மாற்றினார். AVM Health Food என்ற சத்து உணவோடு AVM Hair Oil என்ற பொருளையும் தயாரித்து விற்பனைக்கு விட்டார். இரண்டு பொருட்களும் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்று தொழில் நன்றாக வளர்ந்து வருகிறது. திருமங்கலத்தில் இருந்தபோது அங்கே சிதறிக் கிடந்த 30 கத்தோலிக்க கிறிஸ்துவ குடும்பங்களை ஒன்றிணைத்து ஒரு பொது இடத்தில் வைத்து ஞாயிறு நாட்களில் திருப்பலி நிறைவேற்ற ஏற்பாடு செய்தார் ராஜேந்திரன். மேலும் அவருடைய முயற்சியால் கப்புச்சின் குருக்கள் திருமங்கலத்தில் ஒரு தளம் அமைக்கவும், அங்கு புதியதாக ஒரு ஆலயம் கட்டவும் ஏற்பாடு செய்தார். அதைத் தொடர்ந்து 1978 ம் ஆண்டு திருமங்கலம் ஒரு தனிப் பங்காக அறிவிக்கப்பட்டது. முதல் பங்குக் குருவாக வந்த தந்தை மத்தியாஸ் ராஜேந்திரனின் முயற்சியால் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பொத்தக்காலன்விளை ஆண்டு திருவிழாவின் போது நவநாள் மறைஉரை ஆற்றவும் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சவரிராயன் ஜேசுராஜ்:**

சூசை மரியேந்திரன் நாடார் – மரிய மங்கள சிநேகப்பூ தம்பதியரின் இரண்டாவது மகனாக 1950 – ல் பிறந்த சவரிராயன் ஜேசுராஜ் இன்று திருமங்கலத்தில் வளர்ந்து வரும் ஒரு தொழிலதிபராக காட்சியளிக்கிறார். அவர் தனது ஆரம்பப் படிப்பை பொத்தக்காலன் விளையில் உள்ள நிடுநிலைப் பள்ளியில் முடித்துவிட்டு முதலூர் மேல் நிலைப் பள்ளியில் 10 வது வரை படித்தார். அதற்கு மேல் படிக்க விருப்பமில்லாமல் 3 ஆண்டுகள் அவருடைய குடும்ப விவசாயப் பண்ணையில் வேலை செய்து உதவினார். ஆனால் இந்த வேலையில் அவரது மனம் ஒன்றவில்லை. வெளியூருக்கு சென்று சுதந்திரமாக தொழில் செய்ய வேண்டுமென்ற எண்ணம் மனதில் வேரூன்றி இருந்தது. 1969 ல் ஒரு நாள் திடீரென்று யாரிடமும் தெரிவிக்காமல் கையில் கிடைத்த 13 ரூபாயை எடுத்துக் கொண்டு பஸ் நிலையத்திற்கு சென்றார். கண்ணில் பட்ட முதல் பஸ்ஸில் ஏறி அமர்ந்த பிறகுதான் தெரிந்தது. அந்த பஸ் உவரிக்கு செல்லும் பஸ் என்று. உவரியில் இறங்கி புனித அந்தோணியாரை வணங்கிவிட்டு அந்த திருத்தலத்திலேயே இரவைக் கழித்தார். மறுநாள் உவரியை விட்டு கிளம்பி

நாகர்கோயில் சென்றார். கோட்டாறு புனித சவேரியார் ஆலயத்தில் சவேரியாரை வணங்கிவிட்டு மதுரை செல்லும் பஸ்ஸில் ஏறினார். பஸ்ஸில் ஏறிய பிறகு தான் நினைவு வந்தது மதுரை அருகே திருமங்கலத்தில் நமது ஊரைச் சார்ந்த டேவிட் ராஜேந்திரன் தொழில் செய்வது. திருமங்கலத்தில் இறங்கிய சவரிராயனுக்கு டேவிட் ராஜேந்திரன் அடைக்கலம் கொடுத்து ஒரு மளிகைக் கடையில் மாதம் ரூ.15 சம்பளத்தில் உதவியாளராக சேர்த்து விட்டார். 7 ஆண்டுகள் கடினமாகவும், உண்மையாகவும் உழைத்தன் பயன், கடை முதலாளி ஒரு உணவு விடுதியை ஆரம்பித்து சவரிராயன் பொறுப்பில் கொடுத்தார். காலப்போக்கில் ஹோட்டல் தொழில் வளர்ந்து ஒரு பெரிய இனிப்பு கடையாகவும், பேக்கரியாகவும் இன்று உருமாறி இருக்கிறது. அனைத்து வகையான இனிப்புகள், பிஸ்கட், ரொட்டி மற்றும் கேக் வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகிறது. ஒரு குளிர்பான கடையும் உள்ளது. கடந்த 40 ஆண்டுகளாக இந்த தொழில் செய்து வரும் சவரிராயன் பல மாடி கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும் சொந்தக்காரராகத் திகழ்கிறார். தனது பெயரிலும், மக்கள் மனைவி பெயரிலும் வருமான வரி கணக்குகள் சமர்ப்பித்துள்ளார். தனக்குக் கிடைக்காத உயர்கல்வியை பிள்ளைகள் பெற வழி செய்துள்ளார். திருமங்கலம் பங்கு பேரவையில் பொறுப்புகள் வகித்து ஆலயத்திற்கு பல உதவிகளும் செய்து வருகிறார்.

**ஜஸ்டின் :**




திரு. சிங்கராயன் – திருமதி. சேசம்மாள் இவர்களின் மூத்த மகனாக 1969ம் ஆண்டு பிறந்த ஜஸ்டின் வளர்ந்து வரும் தொழில் அதிபர்களில் ஒருவர். இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியை ( 8ம் வகுப்பு வரை ) பொத்தக்காலன்விளையில் முடித்துவிட்டு ஒரு ஆண்டு தூத்துக்குடியில் படித்தார். அதோடு படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு, ஒட்டஞ்சத்திரத்தில் இரண்டு ஆண்டுகளும் அந்தமானில் இரண்டு ஆண்டுகளும் மளிகை கடையில் உதவியாளராகப் பணியாற்றிவிட்டு 1989ம் ஆண்டு நாகர்கோவிலில் சொந்தமாக ஒரு மளிகைக் கடையை ஆரம்பித்தார். 1996ல் அதை மூடிவிட்டு அடுத்த ஆண்டு ஒரு வட்டிக்கடையை ஆரம்பித்தார். 2000-ம் ஆண்டு வட்டிக் கடையை நடத்திக் கொண்டே, கட்டுமானப் பொருட்கள் வினியோகிக்கும் நிறுவனத்தையும் ஆரம்பித்தார். இதில் வியாபாரம் பெருக ஆரம்பித்தது. ஆரம்பத்தில் சிறு நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் விற்பனை செய்து வந்த நிலை மாறி இன்று IVRCL Infrastructure Ltd., SPL Infrastucture P.Ltd.,போன்ற பெரிய நிறுவனங்களுக்கு கட்டுமான பொருட்களும், வாகனங்களும் தொடர்ந்து விநியோகிக்கும் அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஏறக்குறைய 40 தொழிலாளர்கள் மற்றும் பல வாகனங்கள் என தொழில் பல முனையில்

முன்னேற்றம் கண்டுள்ளது. நாகர்கோவிலிலும், சொந்த கிராமத்திலும் சொந்தமாக வீடுகள் கட்டி முறைப்படி வருமான வரியும் கட்டி வளரும் தொழிலதிபராக திகழ்கிறார் ஜஸ்டின்.

**பட்டு ராஜன்:**

ஆரோக்கியம் ஆசிரியர் - சவரியம்மாள் இவர்களின் நான்காவது குழந்தையாக 1966- ம் ஆண்டு பிறந்த பட்டுராஜன் ஒரு B.Com. பட்டதாரி. இவர் தனது ஆரம்பகால பள்ளிப் படிப்பை பொத்தக்காலன்விளை, தூத்துக்குடி மற்றும் சாத்தான்குளத்தில் முடித்தார். அதைத் தொடர்ந்து ஸ்ரீவைகுண்டத்தில் கல்லூரிப் படிப்பை முடித்து 1987 ல் இளநிலை பட்டப்படிப்பை நிறைவு செய்தார். பட்டப்படிப்பை முடித்த கையோடு வேலை தேடி ஹைதராபாத் சென்றார். அங்கு உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கி வேலைதேடி அலைந்தவருக்கு ஒரு நிதி கம்பெனியில் கணக்குகள் எழுதும் வேலை கிடைத்தது. தனது வருமானத்தை பெருக்கும் எண்ணத்தோடு நிதி கம்பெனியில் வேலை செய்து கொண்டே ஒரு கடலை மிட்டாய் கம்பெனியில் பகுதிநேர விற்பனையாளராகவும் வேலையில் சேர்ந்தார். அந்த பகுதிநேர வேலையோடு அதிர்ஷ்டமும் சேர்ந்து வந்தது. கடலை மிட்டாய் கம்பெனி நடத்தி வந்த முதலாளிக்கு ஏனோ தொழிலை தொடர்ந்து நடத்த விருப்பமில்லாமல் இருந்தது. துடிப்பான இளைஞன் ஒருவன் பட்டுராஜன் ரூபத்தில் வந்திருப்பதை அறிந்து அவனிடமே கம்பெனியையும் கம்பெனி நிர்வாகத்தையும் ஒப்படைத்துவிட்டு ஒதுங்க முடிவெடுத்தார். இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி பட்டுராஜன்தான் பார்த்து வந்து நிதி கம்பெனி வேலையை உதறிவிட்டு 1991 ல் முழுநேர வேலையாக கடலைமிட்டாய் கம்பெனி நிர்வாகத்தை கையில் எடுத்தார். தான் பெற்ற கல்வி அறிவும் மூன்று ஆண்டுகள் பெற்ற அனுபவமும் கைகொடுத்தது. புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேர கடலை மிட்டாய் தொழில் கலை கட்டியது. அதோடு மெர்க்கண்டைல் வங்கி கடன் கொடுத்து உதவ முன் வந்தது. இவ்வாறு 10 ஆண்டுகள் சம்பாதித்த பணத்தைக் கொண்டு 2001 ல் ஹைதராபாத்தின் புறநகர் பகுதியில் புதிதாக ஒரு இடத்தை சொந்தமாக வாங்கி தங்கி இருக்க வீடும் தொழில் செய்ய தொழிற்கூடமும் கட்டி முடித்தார். புதிய இடத்தில் கடலை மிட்டாயோடு பூந்தி மற்றும் மிக்சர் உற்பத்தியும் தொடங்கி பெரிய வியாபாரிகளுக்கு மொத்தமாக சப்ளை செய்யும் திட்டதை அமுல் படுத்தினார். இதனால் உற்பத்தியும் வியாபாரமும் பல மடங்கு பெருகியது. 2015 முதல் தொழிற்கூடத்தை வேறொரு புதிய விசாலமான இடத்திற்கு மாற்றி உற்பத்தியை மேலும் பெருக்கியுள்ளார். இன்று 10 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். பட்டுராஜனும்



திரு.ஆரோக்கியம்



# பொத்தக்காலன்விளை கிராமத்தில் தோன்றிய குருக்கள்

பொத்தக்காலன்னிளை கிராமத்தில் பிறந்து துறவறத்தை ஏற்று ஏசுவுக்காகவும், பிறருக்காகவும் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து பணியாற்றுகின்ற இளைஞர்கள் பலர் உள்ளனர். இவர்களில் சிலர் தாங்கள் பெற்ற கிறிஸ்துவ மதத்தை மற்றவர்களுக்கு பரப்புவதற்காக வெளி மாநிலங்களில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். இவர்களை நினைக்கும் போது பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் வெளி நாடுகளிலிருந்து இந்தியா வந்து இங்குள்ள மொழிகளைக் கற்றுத் தேர்ந்து நமக்கு வேதம் கற்றுக் கொடுத்த மிஷனரிகள் நினைவுக்கு வருகிறது. அவர்களை பாராட்டும் விதமாக, இங்கே அவர்கள் பெயரை பட்டியலிட்டுள்ளோம்.

1. **தந்தை ஜான் போஸ்கோ**
   குருப்பட்டம் பெற்றது 1984. தற்போது பணியாற்றுவது – நொச்சிக்குப்பம், தூத்துக்குடி மறைமாவட்டம்.
2. **தந்தை டென்னிஸ் ராஜா**
   குருப்பட்டம் பெற்றது 1990. தற்போது பணியாற்றுவது – தூத்துக்குடி மறைமாவட்டம்.
3. **தந்தை சிலுவைத்தங்கம்**
   அகமதாபாத் மறைமாவட்டம், குஜராத் மாநிலம்.
4. **தந்தை ஸ்டாலின்**
   குருப்பட்டம் பெற்றது – 2012 தற்போது பணியாற்றுவது – திருமூலநகர், தூத்துக்குடி மறைமாவட்டம்.
5. **தந்தை ஜோசப் பாக்கியராஜா**
   குருப்பட்டம் பெற்றது – 2013. தற்போது பணியாற்றுவது பேட்டையா மறைமாவட்டம், பீகார் மாநிலம்.
6. **தந்தை மரிய இருதய அருள்செல்வன்**
   குருப்பட்டம் பெற்றது – 2016. தற்போது பணியாற்றுவது – கோவா மாநிலம், பனாஜி மறைமாவட்டம்.
7. **தந்தை கிங்க்ஸிலின் ஜாண் அமலன்**
   குருப்பட்டம் பெற்றது – 2016 தற்போது பணியாற்றுவது – குஜராத் மாநிலம், காந்திநகர் மறைமாவட்டம்.

# பொத்தக்காலன்விளை கிராமத்தில் தோன்றிய அருட்சகோதரிகள்

1. ***அருட்சகோதரி தேவநேசம்,*** திருச்சி அன்னம்மாள் சபை 2. ***அருட்சகோதரி சலேத்*** திருச்சி அன்னம்மாள் சபை 3. ***அருட்சகோதரி சூசன்னா,*** திருச்சி வியாகுல மாதா சபை 4. ***அருட்சகோதரி லூக்காஸ் மேரி,*** திருச்சி அன்னம்மாள் சபை 5. ***அருட்சகோதரிபொனிப்பாஸ் மேரி,*** திருச்சி அன்னம்மாள் சபை 6.***அருட்சகோதரி மெர்சி,*** திருச்சி அன்னம்மாள் சபை 7. ***அருட்சகோதரி ஜெசிந்தா,*** திருச்சி அன்னம்மாள் சபை 8. ***அருட்சகோதரி புளோரா,*** திருச்சி அன்னம்மாள் சபை 9. ***அருட்சகோதரி பெமிலா,*** திருச்சி அன்னம்மாள் சபை 10. ***ஜோஸ்பின் பொக்கிஷம்***, திருக்குடும்ப சபை 11. ***அருட்சகோதரி மல்லிகா,*** திருச்சி அன்னம்மாள் சபை 12. அருட்சகோதரி கத்ரீன் நிர்மலா திருச்சி அன்னம்மாள் சபை 13. மேரி ஜெனட் மெஜல்லா, காணிக்கை மாதா சபை 14. அருட்சகோதரி கபிரியேல் லிசினால் இறை பராமரிப்பு சபை, ரோமாபுரி 15. அருட்சகோதரி பெயிட்டா சலோமி மேரி 16. அருட்சகோதரி வாலன்டீனாள் 17. அருட்சகோதரி விஜோ அருள்செல்வி

# 27. பொத்தக்காலன்விளை திருத்தலமான வரலாறு



பொத்தக்காலன்விளை கிராமத்தில் அன்னை மரியாளின் நினைவாக ஆரம்பத்தில் பனை ஓலைகளால் வேயப்பட்ட சிறிய ஆலயம் ஒன்று நிறுவப்பட்டு ஜெப வழிபாடு நடந்து வந்தது. 1850 வாக்கில் கற்களால் சுவர் எழுப்பப்பட்டு மேற்கூரையில் ஓடுகள் பதித்து புதிய ஆலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயம் உபகார மாதா ஆலயம் என்று திருச்சபையால் அறிவிக்கப்பட்டாலும் மக்கள் அதை திருக்கல்யாண மாதா ஆலயம் என்றே அழைத்து வந்தனர். மாதாவின் திருமண ஒப்பந்த நாளை குறிக்கும் விதமாக ஜனவரி மாதம் நடக்கும் மாதாவின் திருவிழாவின் முதல் நாளன்று கொடியேற்றத்திற்குப்பின், மக்கள் அனைவருக்கும் வெற்றிலை பாக்கு வினியோகிக்கும் சடங்கு காலம் காலமாக நடந்து வந்தது. ஐரோப்பாவில் உள்ள பிரான்ஸ் நாட்டில் இதே போன்று அன்னை மரியாளின் திருமண ஒப்பந்த நாள் நினைவாக ஒரு ஆலயம் இருப்பதாகவும், அதைப் பின் பற்றியே பொத்தக்காலன்விளை கிராமத்தில் உள்ள ஆலயமும் திருக்கல்யாண மாதா ஆலயம் என அழைக்கப்பட்டதாக ஒரு வாய்வழி வரலாறு உண்டு. இந்த ஆலயத்திற்கு திருமண வரம் வேண்டியும் குழந்தை பேறு வேண்டியும் மக்கள் வந்து வழிபட்டனர். பலருக்கு அவர்களது வேண்டுதல்கள் நிறைவேற்றப்பட்டு அவை வாய்மொழியாக பரவியதால் மக்கள் வருகை அதிகரித்தது. ஆலய வழிபாட்டில் 'உபகார மாதா' 'திருக்கல்யாண மாதா' என்ற இரண்டு சொற்றொடர்களும் உபயோகத்தில் இருந்தன. 1949-ம் ஆண்டு பங்குக்குருவானவராக வந்த அருட்தந்தை மஸ்கரனாஸ் அவர்கள் முறைப்படி மறைமாவட்டத்திற்கு எழுதி அனுமதி பெற்று திருக்கல்யாண மாதா ஆலயம் என்று அறிவித்தார். அவருடைய மறைச் செய்திகளிலும் பிரார்த்தனைகளிலும் 'திருக்கல்யாணத்தாய்' என்ற சொற்றொடரை உபயோகித்து அதைப் பிரபலப்படுத்தினார்.

பின்நாட்களில் பங்குத்தந்தையாக வந்த அருட் தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆலயத்திற்கு வரும் பக்தர்களை நேரடியாக சந்தித்து அவர்களின் வேண்டுதல்களைக் கேட்டு அவர்களுக்காக அன்னையிடம் ஜெபிக்கும் வழக்கத்தை அறிமுகப்படுத்தினார். இதனால் பகல் வேளையில் ஆலயத்திற்கு வரும் மக்கள் கூட்டம் பெருகியது. குறிப்பாக பிற மதத்தினர் இந்த காலகட்டத்தில் ஆலயத்திற்கு வந்து வேண்டுதல் வைப்பது பெருகியது. இவ்விதம் வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களுக்காக மாதத்தின் முதல் சனிக்கிழமையன்று மாலையில் ஆலயத்தில் திருப்பலியும் சிறப்பு பிரார்த்தனையும் நடப்பதற்கு ஏற்பாடு செய்தார் தந்தை அருள்

தனசீலன். அவருக்குப்பின்னால் பங்குக் குருவானவராக வந்த அருட் தந்தை பபியான் ஜோசப் அதில் மாற்றம் செய்தார். மாலையில் சிறப்பு பிரார்த்தனை நடப்பதால் வெளியூர் பக்தர்கள் பிரார்த்தனையில் கலந்து கொண்டு திரும்பி செல்வதில் சிரமம் இருப்பதை உணர்ந்தார். இதனால் மாதத்தின் முதல் சனிக்கிழமையன்று நடக்கும் சிறப்பு பிரார்த்தனையை காலை 10 மணிக்கு மாற்றினார். பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் வழக்கத்தையும் அறிமுகப்படுத்தினார்.

இந்த பக்தி முயற்சியை வெளி உலகிற்கு எடுத்துச் செல்லும் நோக்கத்தோடு, வானொலியிலும் ஒளித்திரையிலும் விளம்பரம் செய்யப்பட்டது. தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோயில் போன்ற நகரங்களில் அறிவிப்பு தட்டிகள் விளம்பரங்கள் வைக்கப்பட்டன. கேரளாவைச் சேர்ந்த பகுதிகளில் மலையாள மொழியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன். இந்த விளம்பர முயற்சி முழுவதும் பொத்தக்காலன்விளை கிராமத்தைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. எட்வின் காமராஜ் மேற்பார்வையில் நடந்தது. இதன் விளைவாக முதல் சனிக்கிழமை நடைபெறும் சிறப்பு வழிபாட்டில் கலந்து கொள்ள வரும் பக்தர்கள் கூட்டம் பலமடங்கு பெருகியது. குறிப்பாக அண்டை மாவட்டங்களிலிருந்தும் கடற்கரை கிராமங்களிலிருந்தும் கேரளாவிலிருந்தும் பலர் வாகனங்களில் வந்து செல்ல ஆரம்பித்தனர். அவ்விதம் முதல் சனிக்கிழமை நடைபெறும் சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டியது. விளம்பரத்தை விட, பயன் பெற்றோர் கூறும் சாட்சிய அனுபவங்கள் மிக சக்தி வாய்ந்த கருவியாக விளங்கியது. இதனால் பக்தர்களின் வருகையோடு, அவர்களின் வேண்டுதல்களும் பெருகின. காணிக்கையும், திருப்பலி நேர்ச்சையும் பல மடங்கு பெருகின.

2010 ஆம் ஆண்டு பொத்தக்காலன்விளை பங்கின் பவள வழா (75 ஆம் ஆண்டு) கொண்டாடப்பட்டது. அப்போது பங்குத் தந்தை அருட்திரு பபியான் ஜோசப், பொத்தக்காலன்விளை திருக்கல்யாணமாதா ஆலயம் ஒரு திருத்தலமாக அறிவிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என அறிவித்தார். அறிவித்ததோடு அதற்கு தேவையான எல்லா வேலைகளையும் கையில் எடுத்து வெற்றியும் பெற்றார். அவருடைய முயற்சியால், 2013 - ம் ஆண்டு பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா ஆலயம் ஒரு திருத்தலமாக கத்தோலிக்க திருச்சபையால் பிரகடனம் செய்யப்பட்டது. இன்று உவரி புனித அந்தோணியார் ஆலயம், சொக்கன்குடியிருப்பு மணல் மாதா ஆலயம், மணப்பாடு திருச்சிலுவை ஆலயம், ஆலந்தலை இருதய ஆண்டவர் ஆலயம் இவற்றோடு பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா ஆலயமும் நம் பகுதியில் திருத்தலங்களாக விளங்குகின்றன. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராம மக்களும், தென் கேரள பகுதிகளில் இருந்து வரும் மக்களும் வாகனங்களில் வந்து இந்த திருத்தலங்களை வரிசையாக தரிசித்து அன்னையின் ஆசீர் பெற்று செல்கின்றனர்.

# நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்



நான்கு சந்தி கெபி



பிரதான சாலை



தெற்கு கோயில் சாலை



# நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்



ஆண்கள் ஆரம்ப பள்ளி



மேல்நிலைப்பள்ளி



பெண்கள் ஆரம்ப பள்ளி

# நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்



திருக்கல்யாண மாதா ஆகாய பேலஸ்
(தங்கும் விடுதி)





கிராம கூட்டுறவு சங்க அலுவலகம்



திருத்தல அசன பாத்திர வாடகை நிலையம்

# நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்





மாதாவின் அற்புத கெபி



புனித அந்தோனியார் சிற்றாலயம்



புனித ஜெபஸ்தியார் கெபி

# நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்



திருக்கல்யாண மாதா திருத்தலம்



திருக்கல்யாண மாதா திருத்தலத்தின்
உள் பலிபீடம்

# நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்





லூர்து அன்னை கெபி



திருத்தல அலுவலகம்



திருமறைப் பொருட்கள் விற்பனை நிலையம்



## நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்



திருக்கல்யாண மாதாவின்
அதிசய தேர்ப்பவனி



திருக்கல்யாண மாதாவின்
முதல்சனி சப்பரபவனி



திருக்கல்யாண மாதா திருத்தலத்தின்
முதல்சனி வழிபாட்டில் ஒரு பகுதி

# நமது கிராமத்தின் எழில்மிகு தோற்றம்





திருக்கல்யாண மாதா திருத்தலத்தின்
முதல்சனி ஆராதனையின் ஒரு பகுதி



திருக்கல்யாண மாதா திருத்தலத்தின்
முதல்சனி வழிபாட்டில் அன்னையின் ஆசீர் பெற்ற
உணவு வழங்கும் காட்சி




திருத்தலத்தின் தெற்கு வாயில்

திருமணவரம் & குழந்தைவரம் தரும்

# திருக்கல்யாண மாதா திருத்தலம்

பொத்தக்காலன்விளை




## மாதத்தின் முதல்சனி வழிபாட்டு நிகழ்வுகள் :

காலை 9.00 முதல் 10.00 மணி வரை திவ்விய நற்கருணை ஆராதனை

காலை 10.00 முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி

பகல் 11.00 முதல் 12.00 மணி வரை சப்பர பவனி

நண்பகல் 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி தொடர்ந்து மதிய உணவு

மாலை 4.00 மணிக்கு தமிழில் திருப்பலி

மாலை 6.15 மணிக்கு ஆங்கில மொழியில் திருப்பலி நடைபெறும்